உ

திருச்சிற்றம்பலம்.

கண்ணுடையவள்ளல்

திருவாய்மலர்ந்தருளிய

ஒழிவிலொடுக்கமூலமும்,

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த உரையும்,

சிறப்புப்பாயிரச்செய்யுளுக்கு

சி-இராமலிங்கபிள்ளை அவர்களாற்

செய்த உரையும் அடங்கியுள்ளன.

சுத்தப் பதிப்பு.

இவை ஆ-எதிராஜமுதலியாரால்

தமது

சென்னை - சூளை:

"பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கலாயின.

1906.

PRINCE OF WALES PRESS

T. N. JAYAVELU,
ANTIQUARIAN BOOKSELLER,
49, VENKATACHALA MUDALY ST.,
MADRAS-7, S. INDIA.

Digitized by Google

Digitized by Google

PL4758
.9
.K344 O4

சிறப்புப்பாயிரம்.

வள்ளல்குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த்தாடலைமேல் வைத்துரைத்தா-னுள்ள
தழிவிலடக்குந்தேனை யன்பரெலா முண்ண [த்
வொழிவிலொடுக்கநூ லோர்ந்து.

**இச்செய்யுள் கருதிற்றியாதோவெனின்
இந்நூன்முகத் தாசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து
நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல்
கருதிற்றென்க.**

வள்ளல்குருராயன் வாதுவென்ற சம்பந்தன்-வள்ளன் மலர்த் தாடலைமேல் வைத்து—எ-து. வள்ளலாரென்னுந் திருப்பெயருடையவர் ஞானாசாரிய ரூபராகிச் சமைய வாதிகடருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருணெறியான் வெற்றிகொண்டு சீகாழியென்னுந் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறி விளங்க வீற்றிருந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண்ணோர் பொன்முடியாக வணிந்து.

ஓர்ந்து - உள்ளத் - தழிவிலடக்குந்தேனை யன்பரெலா முண்ண - வொழிவிலொடுக்க நூலுரைத்தான்—எ - து. அத்திருவடிகளி னருட்டுணையாற் றத்துவங்களனைத்துஞ் சடமென் றோர்ந்துணர்ந் தவற்றைக்கடந்து தற்காட்சியோடு திருவருட்காட்சியுஞ் செய் தங்ஙனம் வாதனையா னசைந்தெழும் போதந்தோற்றா ததனையத்திருவரு ளொளியினடக்கியாண்டு மேன்மேலு மெழாநின்ற சிவானந்தத்தேனைத் தாமநுபவஞ்

0C471
Digitized by Google

செய்தவா றதன்கணைன்புள்ள பக்குவருஞ் செய்தற்
டச்சிவானந்தாநுபவ வந்தரங்கமெல்லாம் வெளிப்பட
ங்க வொழிவிலொடுக்க மென்றே ருபதேசமுறையை
த்தருளினார் என்றவாறு.

(வள்ளலென்னும் பெயர்.)

ஆசிரியர்க்குத் தாமுன்னிருந்த கிரியாசாரிய
ண்ணவ்வாசாரிய மரபின்வழித்தாய் வந்தகாரண வ
சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம் பின்னர் ஞான
கிலக்கட் டமதருண்ஞான நோக்கானியைந்த கண்ணு
வென்னுங் காரணவிசேடண மேற்கொண்டுநின்ற வி
லென்னும் பெயரீண் டவ்விசேடண மிசையெச்ச நி
ற்ப நின்றதெனினு மமையுமென்க. இஃது வினை பண்
லியவடுத்த தொகைநிலைச் சொற்றொடராகாது தொக
யாய்த் தனித்தொடர் பயனிலை யண்மைப்பொருளை
யின்றி யிடையிட்டு நிற்கத் தான் செய்யுண்முதற்கட் ட
திருந்தமையி னற்றலின்றலோ வெனின், அற்றன்று -
டைமடங்குறித்த குணங்காரணமாக வந்த விவ்வள்ள
னும்பெயர் தன்னுறுப்புகளுட் கொடை குணம் புக ழ
மென்னு நல்வகைக்குறித்த பல்பொருட் பகுதியாய வ
யென்னு முதலுறுப்பா னசிரியர்க்குளவாய வக்கொடை
லிய வருட்குணங்களைக் குறிப்பிற்புலப்படவிரித்தலிற் செ
ளாற்ற லுண்டென்க. அல்லதூஉம்-இப்பெயர் உயர்பொ
கிடனு யுடனிலைக் கூட்டாய் ஒருநெறியசைத்தா யோ
தழூவிப் பல்வகைக் குறிப்பிற்படர்ந்து முற்றியையுவண்
பெருஞ் சொல்லாக நிற்றலிற் சொல்லாற்றலு முண்டெ

ஆயினிவ் வாசிரியர்பெய ரிச்செய்யுளி னிடைகடை
னென்றி னிறுத்தாது முதலடிமுதற்சீ ரேதுகைத் தொ
கணிறுத் ததிற்குறித்ததியாதோவெனின், ஒன்றிரண்டெ
கொண்டுறு மறையாகம நன்றிருமுடிபி னடுநிலை நடாஅய்

Digitized by Google

ம்பெறு தத்துவசீயதியிற்போந்துண் மலக்தெறுமறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரியர் சன்மார்க்கமுதலிய மார்க்க நான்கனுட் டலைமையிற் றலைமையாய வுத்தமசன்மார்க்கத்தின ரென்பது குறித்ததென்க. இங்ஙன முத்தம சன்மார்க்கத்தின ரென்பதை யாசிரியர் கூறிய இதுவென்றதெல்லாம் பொய்யென்றுனென்னுந் திருவெண்பாவாற் காண்க:—இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

குருராயரென்பது - திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயராய்நின்று ஓதியுணர்ந்துபன்னூட் பலசாதனங்களின் முயன்றுமுயன் றாசாரியத்தன்மை யொருவாறறிதிற் கிடைப்பப்பெற்று மோரோர்காலங்களி னவத்தைவயப்பட்டு மயங்கு மற்றையாசாரியர்போலா தோதாமல் வேதாகமாதிகளை முற்றுமுணர்ந் திறைப்போது மோர் சாதனங்களின் முயன்றலின்றி ஞானாசாரிய வருளிலக்கணங்களனைத்துந் தாமேதம்பாணிரம்பிநிற்ப வமர்ந்தனரென்பதூஉம் ஓதியுணர்ந்த வவ்வாசாரியர்க்கெல்லா மவரவரறிவின்கணருளுருவாய் நின்றறிவித்து மாசாரிய உருவாய் வெளிநின்றனுக்கிரகித்தும் நின்றனரென்பதூஉம் - திருநோக்கஞ் செய்தன் முதலிய வறுவகைத் தீக்கையானுமின்றித் தமது திருவுருவைக்காண்ட லினைத்தன்மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெறுகின்ற திருவருட்பெருமைய ரென்பதூஉங் குறித்ததென்றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதியுணர்ந்தமை முதலியவற்றை யாசிரியர் கூறிய தன்மையுமுன்னிலையுமென்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம் - குருராய னென்பது வாதுவென்ற சம்பந்த னென்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக்குறிப்பாற் பிள்ளையா ரிவ்வவதாரத்தின் மேனின்ற வவதாரத்தினுங் குமாரசற்குருவா யானார்க்கு மகத்தியனார்க்கு முபதேசித்தருளிய வாசாரியத் தலைமையுங் குறித்ததெனக்கொள்க. (அருணகிரி

Digitized by Google

நாதர்) தென்னவனங்கனஞ் சூழ்காத்திரிநக சூலகரத், தென்னவனங்கனந் தப்பதநீட்டினன் செல்வமுன்பின், றென்னவனங்கனன் னீற்றுற்றிருத்திய தென்னவின்னனந், தென்னவனங்கனங் கைச்சிலைக்கூனையுந் தீர்த்தருளே. என்றதனு பிள்ளையா ரிவ்வவதாரத்திற்கு மேனின்ற வவதாரத்திற் குமாரசற்குரு வென்பது காண்க. (கல்லாடம்) உழன்மதிற் சுட்ட முனைகைப்பெருமான் வணங்கின்றேத்தக், குருமொழிவைத்தோய் குறுமுநிதேற நெடுமறைவிரித்தோய் (சித்தியார்) அருமறையா கமமங்க மருங்கலை நூறெரிந்த, வகத்தியனுக் கோதுரைக்கு மருட்குருவாங் குருளை, என்பவைகளா லானார்க்கு மகத்தியனுர்க்கு முபதேசித்த வாசாரியத் தலைமையை யுணர்க.

ஆயிற் குருவேந்தனென்னுது குருராயனென்ற தெது குறித்தற்கோவெனின் நான்கன் வேற்றுமையா னடுத்து மிக்குயர்நெறிப் பொருண்மையின் வந்தகாரகச் சிறப்பொருதலைத் தொடர்மொழிப் பெயராய விக்குருராய னென்பதன் கட் குருவென்பதன் முதனிலையெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் ராயனென்பதன் முதனிலையெழுத்துத் தமிழியல் விதியின்றி யாரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும்வந் திருவகையியலுங் கோடலி னிதனைத் தமபெயராகவுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் வடநூலென்னு மிருவகைநூற்கு முரியாரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் மறைப்புலவன் றமிழ்க்குரிசில் சீகாழிச் சம்பந்தனென்றதனு லிருவகை நூற்கு முரியாரென்பது காண்க வென்க. அல்லது உம் - பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டுநின்ற குருராய னென்பது தன்னையுள்ளுன்றி நோக்கினர்க் கிலைமறை காய்போல் ஜாவென்னு முயிர் மெய்யோடிருந்த தன்முன் வடிவமுட்கொண்டு விளங்கக் காட்டி நிற்கின்றதாகலி னிதனையுடைய பிள்ளையாருந் தமது ...மை வேறுபடா துத்தமபுருட வுருவங்கொண்டு

Digitized by Google

ன்ற தம்மை யன்பா லுள்ளூன்றி நோக்கினார்க்குக் குமார சற்குரு வென்னும் பெயர்கொண் டளவிகந்த சூரியருதயம் போன் றொளிவீசுந் தம்முன்னுருவாய தெய்வத் திருவுருவுட் கொண்டு விளங்கக்காட்டிநின்றனரென்று குறித்தற்கென்பது மாமென்க.

(ஆளுடையபிள்ளையார் புராணம்) மறையவர் திருவே வைதிகநிலையே வளர்ஞானப், பொறையணிமுகிலே புகலி யர்புகலே பொருபொன்னித், துறைபெறுமணியே சுருதியி னொளியே வெளியேவந், திறையவனுமையா ளொடருட்ர வெய் தினையென்பார்.

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக் கண்டு சீகாழியுள்ளார் வியந்துகூறியவாறுமிச்செய்யுளால் உள்ளூன்றி நோக்கினார்க்குத் தம்முன்னுருவைக்காட்டி நின் றனரென்பது காண்கவென்க.

இனி யின்றியமையாக் காட்டுளதேற் காட்டுவதன்றி மற் றைய விரிக்கிற் பெருகுமென்க.

அல்லது உம் - குருவென்பத னீற்றுயிர்மெய்யோடு ராய னென்பதின் முதலுயிர்மெய்புணராப் புணர்க்கையாய் நின்ற தாகலி னிங்ஙன மானந்த வடிவாகிய பிள்ளையாருந் தாங் கொண்டருளிய மாளிடத் திருவுருவோடு புணராப் புணர்க் கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பதுமாமென்க.

அல்லது உம் - குறிலிணைக் கெதிர்நெடில் குறிலெண் ணீடாகநிற்பவு மீற்றினவ் வெண்ணீடின்றி யொற்றுநிற்பவுந் தொடர்ந்த மொழியாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப் பொருளாயு மதிபக்குவர்க் கநுபவப்பொருளாயு மிவ்விரண்டி னுங் கலவா ததீதப்பொருளாயு நின்றன ரென்று குறித்தற் கென்பதுமா மென்க. இங்ஙனம் குருராயனென்பதிற் குவ்

Digitized by Google

வென்பது இருள், ருவ்வென்பது அருள், ராயனென்பது விவ ங்கச்செய்கின்றோன் பொருளாம்; இதனால் குவ்வென்னு மச த்தாவத்தையி னின்றோனை ருவ்வென்னுஞ் சுத்தாவத்தையிற் றும்வின்ற வண்ண மிறுத்துகின்றோர் குருவாவர். இச்சுத்தா வத்தைக் காதாரனாகியு மதீதனாகியும் விளங்கி யிவ்வவத்தைய் னின்று மக்குருவாயினோர் தாழாத வண்ணம் அருள்செய்து நின் றதீதப்படுத்துகின்றோன் ராயனவன், ஆகலி னிதனாலு முணர்கவென்க.

எழுத்தாதிப் பல்வகைக்குறிப்பிற் பொருணெறிப் பற்றி நின்றநோக்கஞ் செறிவு நுட்ப மிங்கித மின்பங் கம்பீரஞ் சிற ப்புறுதி முதலிய நற்குணந் தழீஇய சொற்புண ரீதென்றே யாசிரியரும் சரிதாதி நான்கினுக்கு மென்னுந் திருவெண்பா வினிடைக்கட் குருராயனென் றிதன்பெருமை தோன்றவைத் தனரென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

வாதுவென்ற சம்பந்த னென்பதிற் பொதுவானே வாது வென்ற வென்ற தென்குறித்தோவெனின் எண்வகைக் குன் றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்க ளொருங்கேகூடித் தென்மதுரைக்கட் செந்தமிழ்ப் பாண்டி யனை முன்னிட்டுச் செருக்காற் செய்தசுரவாதம் அனல்வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வெ ன்று திரள்கொண்டமையன்றியும் பரசமைய கோளரியென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் றெய்வப் பேரொலி கேட்டுளம்பொறு தெதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தந ந்தியின் பொய்த் தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழிய வும் பின்னருள்ளது போன் றில்லதைப்பற்றிச் சாக்கியக் குழு வுட் டலைவனாய சாரிப்புத்தன் சிற்சிலவகையாற் செய்த சமய வாதந் தலைதடுமாறவுஞ் செந்தமிழ்வேதத் திருமுறைதாங்கி மேம்படுமறிஞான் வெற்றிகொண்டமையும் திருவோத்தூரி ன்கண் ணாணுக்கிடுபனை யாண்பனையாயிற்றேயென் றசதியா

Digitized by Google

டிய வமணக்குழூஉக்களின் வாய்வாதங்கண் மண்பட்டொழி யத்தாங் திருவாய்மலர்ந்த திருக்கடைக்காப்பு னோர்மொழி யானே யவ்வாண்பனை பெண்பனையாகச்செய்து விறல்கொ ண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம்-வாதென்பதி லக்கணையாகக்கொண்டு பெரு மணநல்லூரின்கட் டிருமணநல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட்கெல்லாங் தொன்றுதொட் டிடைவிடா துடனிழற் போற் சூழ்ந்துள பிறவிப்பெருவாதக வினைத்தும் வென்றதூ உம்-திருப்பாச்சி லாச்சிரமத்தின்கண் மழவன் மகளார்க்கடு த்த முயலகவாது வென்றதூஉம் - மருகறகண்ணோர் வசியனு க்கடுத்த விடவாது வென்றதூஉம்-இவைமுதலியவுங் குறித்த தெனினுமாமென்க. வெற்றிகொண்ட பொருட்டிறன்முதலிய வற்று ளொன்றேனுந் தோன்றக்கூறுதிலேசீனே வாதுவெ ன்ற வென்றதென் குறித்தோவெனின் பிறர்க்கிங்ஙனம் வேற ல் தம்மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பலவகையின் முயற்சிசெயினு முற்று தெனினும் பிள்ளையார்க்குச் செந்த மிழ்பொழியுந் திருவாக்கானே யாண்டாண் டவ்வேறன்முற்றி யதென்பது குறித்தென்க. வாது என்பது குருராயனென்பத னோடுஞ் சம்பந்த னென்பதனோடுஞ் சாராது நடுநின்றமை யின் அத்துவித நெறியினுஞ் சேராது துவீத நெறியினுஞ் சாராதுநின்ற பதிதவாதிகளதுபய னில்வாதமெனினுமமையு மென்க. எதிரேற்கப்பட் டெதிர்வினை கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின்வந்த வெல்லென்னும் பிறவினை ப்பகுதியா னடுத்தவென்ற வென்னும் பெயரெச்சஞ் சம்பந்த னென்னும் பெயர்கொண்டு முடிந்து இங்ஙனம் வெற்றிகொ ண்டபருவம் பிள்ளையார்க் கிளங்குமாரப் பருவமெனக் குறித் ததென்க. என்னை எச்சமென்ப திளஞ்சேய்மேற்றாகலின்.

சம்பந்தனென்பது பிள்ளையார்க்கு மூவகைவைக்கண் மூவு லகும்புகழப் பொற்பொடுபுணர்ந்த வற்புதத் திருப்பெய ராக

Digitized by Google

வின் ஆண்டு பெருமானருளப் பிராட்டியாரளித்த சிவஞானத் தெள்ளமுதருந்தி யச்சிவஞானத்திற் குரிமை பூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயிற் சிவஞான சம்பந்த னென்னாது சம்பந்த னெனவைத்த தென்கொலோவெனின், சிவஞானமு மன்றிச் சிவாநந்த மானந்தாதீதமென்பவைக்கு முரிமைபூண்ட தலைமைபற்றியும் அவற்றையுலகுயிர்க் கிங்ஙனமென் றுணர்த்தி யுரிமைசெய்விக்கு மாட்சிபற்றியுமங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம் - சுருங்கச் சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சமபந்தனென வுரிமைச்சிறப்பு வழக்காற்றானே தோன்றுமென வைத்ததெனினுமாமென்க. எங்ஙனமெனின் இந்திரனென்பது இறைமைச்சிறப்பு வழக்காற்றேவேந்திரனையும் உடையானென்பது பொருட்சிறப்பு வழக்காற் பொன்னுடையானையுங் குறிக்குமாகலினென்க. வள்ளன்மலர்த்தாளென்னும் ஒருவகைவனப் பிருவகைச்சந்தி மூவகைமொழித்தொகைச் சொற்றொடர்க்கண் வள்ளலென்னுங் குணிப்பெயர். வினைமுதற் றொழிற்பய னுறப்படு முடைமைக் குணப்பெயராய்நின்று பிள்ளையாரது திருவடிகடம்மை யடைந்தோர்க்குவரையாதானந்தப் பேற்றையளித்து அவரைத்தாங்கிக் கோடலைக் குறித்ததென்றுணர்க.

அஃதே லாநந்தப்பேற்றைத் தருதற்குந் தாங்கிக்கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றோ வங்ஙன மிருப்பத் திருவடிகட்கிங்ஙனங்கூற லெங்ஙன மெனிற் றிருவடிகடம்மை வழிபடுவோர்க்கிறங்கி யின்பமீதற் பொருட் டெழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ்வழிபடுவோர் பால் வருவித்தலானும் ஞானதீக்கை பண்ணுங்காலவர்சென்னியிற் சூட்டப்பட் டைக்கியம் வருவித்தலானு நித்தியானந்தப்பேறு வாய்க்குமாகலி னிங்ஙனமென்க.

அல்லதூஉம் - வாட்டமிலருளுங் கோட்டமில் குணனு மசையாநிலையு நசையாமனனும் வெகுளாப்பண்பும் விடாப்

Digitized by Google

பேரன்புஞ் செவ்வியின்மரீஇ யெவ்வெவ ரெவ்வகை வேட்ட னரவ்வகை விருப்பொடுகுறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன் மை என்பவாகலி னிவ்வள்ளற் றன்மையைத் தம்பாலடைந் தோரிடை யடைவித்தருளுங் கருணைபற்றி யங்ஙனங் கூறிய தெனினு மமையுமென்க. அஃதேல் வள்ளற்றன்மைவழங்கு மலர்போலுந் திருவடியென்றன்றோ வுரைவிரித்தல் வேண்டு மங்ஙனமின்றி வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் தாளென விரித்திருக்கின்றதே யெனின் அங்ஙன மடைவித்தலும் வள் ளற்றன்மையே யாகலினுமுடைய தொன்றன்றே யுதவப்படு மாகலினு மிங்ஙனம் விரித்த லங்ஙனங் கூறற்கு மமைதியா மென்க.

அல்லது உம் - அருளின்றி யமையாத வள்ளற்றன்மைக் கவ்வருளே முதற்காரணமா மாகலின் ஆனந்தவடிவராகிய பிள் ளையா ரவ்வானந்தப் பேற்றையளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற்காரணமாகிய திருவருட்சத்தியே திருவடியென்று குறி த்தற்குக் காரணத்தைக் காரியமாகவே பெசரித்ததெனினு மமையுமென்க.

அல்லது உம் - எமது திருவடிகளை வழிபடின் வீட்டின் பமெளிதிற் றருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய வருள் விதிப்படியறிந்து வழிபடி னவவழிபாட்டா னவ்வீட்டின்பந் தரப்பெறுத லுண்மையாகலி னவ்வுண்மை நோக்கி யீண்டு கூறியதெனினும் பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத் தன்மைப் பூரணமாகலி னதனையறிவிக்க வீண்டுகூறிய தெனி னுமமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்ப து உம் - ஆசிரியர்பெயராய வள்ளலென்பது உம் அடியிணை எதுகைத் தொடையாய் எழுத்தசை சீரொலி பொருளாதிக ளானேற்றுமைகொண்டு நின்று பிள்ளையாரது திருவடித்தீக் கைக்கு மாசிரிய ரதிபக்குவத் தன்மைக்குமுள்ள வொற்று மைப் பொருத்தம் விளக்கினவென்க.

Digitized by Google

வள்ளலென்பது - பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப்
பெயராகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறி
னித்துணைச் சிறப்பின்றென்று மறுக்க என்னெனின் அவய
வச்சிறப்பா னவயவிக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலு
மின்பமாகலி னென்க. இதனைப் போற்றி மாலுநான்முகனுங்
காணாத புண்டரீகம் என்பதனாற் காண்கவென்க. வள்ளமலர்
த்தாளெனப் பாடமோதி வள்ளம்போலுங் குவிந்த வாய்மல
ரெனமலர்க்கடையாக வுரைவிரிப்பாருமுளர். அங்ஙனம் விரி
த்தலினித்துணைப்பேறும் பயனின்றெனமறுக்க. இங்ஙனமின்
னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலரென்பது - வள்ளற்றன்மையி னருகுவைத்தமையின்
ஈண்டு விரைதலுங் குறைதலுமாயுள்ள நீர்நிலைக்கட்டோன்றி
யுமழிந்தும் விரிந்துங்குவிந்தும் வாடியுநின்று வண்ணமுநறை
யும் வாசமுஞ்சிறிதே சிறுபோதுகொண்டு பறித்தலாடிய சிறு
தொழிற் படுமலர்களை நீக்கி ஆண்டுதிரிபிலாத் தெய்வத்தெண்
ணீர் நிலைக்கண்ணொழியா மலர்ச்சியு மழியாமணமும் பொன்
னிறப் பொலிவும் இன்னறவொழுக்கு மென்மையுந் தன்மை
யும் வியப்புறு முருவுங்கண்டோர் கண்கவர் காட்சியுமாட்சி
யுங் கொண்டு முக்காலமுங் குன்றா மலரைக் குறித்தமைகா
ண்க. என்னெனிற் பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ்ஞான
விளக்கமா யருண்மணம் வீசிப் பொன்னிறம்பொலிந்து ஆநந்
தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண்ணெனக்குளிர்ந்து கரிசிந்
கின்றோர் வியப்புறுமுருவா யவாது விருப்பநோக்கம் பரவவெ
ன்று மொருதன்மையவா யிருக்கின்றமையி னென்க. ஆயி
ன் மலர்போலுந் தாளென் றுவமை விரிந்தபடி நிற்றற் கிடங்
கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின் அத்தெய்வத்தி
ருமலர்தனைக் கண்டோற்குச் சிறியவிடயானந்தந் தருதலே
யன்றித் திருவடிபோற் சிவாநந்தந் தரமாட்டாச் சிறுமைநோ
க்கியென்க.

Digitized by Google

அல்லதூஉம் - சுபவடிவாய் எவ்வகைச்சுபங்கட்கு முன்னின்றதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாருமேற்கொண் டணியப்படுவதாய் நிற்கு நன்மலர்போலு மெனக் கூறினுமமையும். என்னெனின் திருவடிகள் அருள்வடிவா யானந்தப்பேற்றிற்கு முன்னின்றளிப்பதா யறிவுடையோர்தந் தலைமேற்கொண் டணியப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம் - மலரையடைந்த வண்டுகள் தனது தேனுண்டு களிகொள்ளுதல்போற் றிருவடிகளையடைந்தோரும்அருளாநந்தம்பெற்றிறுமாத்தலி னிங்ஙனங்கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமை யணியாகக்கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக் கூட்டி யற்புதத்தொகை யுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாருமுள ரவர்கூறுங் கூற்றிற் பெரும்பய னின்றென மறுக்க இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்றபொருள் வெளிப்படாமைக்கு மதனை வெளிநின்றோ ருட்சென்று கவரப்படாமைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மணிதற்கணியி னிருகடையு மிணைத்துநிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனாகிவந்த பலபொருளொருசொல்லாகலின் திருவடிகள் தம்மையடைந்தோரை யாநந்த நிலையுட்சேர்த்தலுமங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டுமவ்வாநந்த நிலையினின்றும் போதவலைவுதோற்றி வெளிப்படாமைக்கு மவத்தைகளுட்சென்று தாக்கிக் கவரப்படாமைக்குங்காப்பாக வருளுருவாய தன்முன்னிற்றலுஞ் சிவத்துடன் சீவனையிடையின்று கூட்டுவித்தலுங் குறித்ததுகாண்க. இக்குறிப்புணர்த்தவன்றே மலர்க்காலென்னாது மலர்த்தாளென்றதென்றுணர்க.

தலைமேல்வைத்து என்பது - ஆசிரியர் - தம்மாசாரியராகிய பிள்ளையார் திருவடித் தீக்கை செய்யத் தாம் பெற்றமை

Digitized by Google

குறித்தது காண்க. அஃதேல் வைக்கப்பட்டு எனச்செயப் பாட்டு வினையெச்சத்தா னிருத்தற்பாலதன்றோவெனின் ஆசிரியர்க் கத்திருவடிக் கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமைதோன்ற விங்ஙனமின்ற ங்ஙனங் குறித்ததென்க. இதற்கு இவ்வாறன்றித்தலைமேற் பாவனையான் வைத்ததெனக் குறித்ததென்று கூறுவாருமுள ராலோவெனின் அவ்வாறு கூறிற் பிள்ளையா ரிந்நூலாசிரியர்க்கு ஞானாசாரியரென்பது மிவர்ஞானதீக்கை யுடையாரென்பதும் விளங்குதலின்றி மற்றை யாசிரியர்போ லெடுத்த நூ லினிதுமுடிதற் பொருட்டுப் பாவனையான் வழிபடுகடவுட் பழிச்சினரென் றிலேசிற்கருதப் படுமாகலி னங்ஙனங்கூறன் மரபன்றென்க. தலையில்வைத்து என்னாது தலைமேல்வைத்து என்றமையான் மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற வச்செல்வத் திருவடியின் சீர்மைதோன்றிற்றென்க.

ஓர்ந்து என்பதில் - ஓர் என்னும் பிறவினை முதனிலை அறிவு தனக் கெதிரிட்ட வுணர்ச்சிப்பொருட்கண் ணெதிரிடுவதுபோன் றெதிரிடாதுள் ளாழ்ந்தவப் பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடை பெயர்ச்சியு மெதிரிட்டபின்னர் விகற்பியா தெதிர்க்குந்தொறு மெதிரிடப்பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந் தவ்வுணர்ச்சி விகற்பியாது தேறிநின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனாரு மோர்த்துள்ளமுள்ள துணரினென்றாரென்றறிக.

உள்ளத்திழிதவி லென்பதிலுள்ள மென்பதன் பகாப்பதவியிற்றுப் பகுபதப் பொருளி னிடவாகு பெயரா யனுப்பொருட்கண் வந்தவுள்ளென்னும் பகுதி யுட்புறத்து மப்போதமெழுஞ்சிற்றசைவும் பேரசைவுங் குறித்ததுகாண்க.

உள்ளமென்பது வாதனையா னுள்ளெழும்போர்தத்திற்காகுபெயராயது - வள்ளலென்பதுபோன் றொழுகிசையாய் வர

Digitized by Google

வுள்ளவழிவிலென்னது பொறுத்திசையாய்வர உள்ளத்தழிவி லென்றதென்கொலோவெனின், வேற்றுமை வழியாகலினும் போதவசைவு சார்பின்றியமையாமை குறிக்கவேண்டு மாகலினும் சாரியையோடு புணர்த்தி யங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழி யென்னும் பொதுவினைப்பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்ன ரோர்காலத்து மோரிடத்து மின்றிக் கெடுதற்பெயர்ச்சிக்கண் வந்ததாகலி னப்போதநிகழ்ச்சி பின்னரெக்காலத்தும் உட்புறமென்னு மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றியொடுங்கியவாறு குறித்ததென்றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தி னசைவற்ற விடத்தெனப்பொருள் கூறுவாரு முளராலோவெனின், மனத்தினசைவு போதவசைவிற்றானே யறுமாகலினு மஃதறுத விடத் திஃதெவ்வாற்றானு மறுதாகலினு மதுபொருந்தாதென்க. இதனை ஆசிரியர் கூறிய பற்றறுது போதும் பதறுமென்னுந் திருவெண்பாவாற் காண்கவென்க.

அடுக்குந் தேனென்பதி லடுக்குமென்பது - அடுத்தலென்னுந் தொழிற்பெயர்க்கட் டல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடுநீங்க வெதிர்காலப் பெயரெச்சவிடை நிலையும்மை ககரமெய்ச்சாரியையூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற்றுண்டு நின்றிறையு மிடப்பாடுதோற்றாது செறிதற்பெயர்ச்சியும் அடுக்கலென்னுந் தொழிற்பெயர்க்கண்ணல் விகுதி நீங்க வவ்வெதிர்காலப்பெயரெச்ச விடைநிலை யும்மை விகுதி நீங்கநின்று தன்வரவுகண் டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண்ணேறிநின் றிறையுமிடைப்போ தின்மைபடாது பன்முறை மேன்மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக்கொண் டிருவகைப் பகுதியொருவகை யெச்சமாக நிற்றலின் சிறிதுமிடத்தானுங் காலத்தானும் பிரிவுதோன்றாது செறிந்த பன்முறை மேன்மேலெழு மானந்தத்தேனென்று குறித்ததென்றுணர்க.

உள்ளத்தழிவி லடுப்பது ஆநந்தமாகலிற் றேனென்பதை யுவமக்குறிப்பாற் சிவாநந்தத் தேனென்றதென்றுணர்க.

Digitized by Google

தேனுண்டவன் டசைவின்றி யத்தேன் மயமாயிருத்தல் போல, ஆநந்தாநுபவத்தர் போத வசைவின்றி யிவ்வாநந்தமயமாயிருத்தலி னுவமையாகக் குறிக்கப்பட்ட தென்றுணர்க. இதனை யொப்புமைக்கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாருமுளராலோவெனி னவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையி னொருவாறமையுமென்க. போதவசைவின்கட் டோற்றல் விடயானந்த மாகலிற் போதவொழிவின்கட் டோற்றல் சிவாநந்தமெனக் குறித்தற் குள்ளத் தழிவிலடுக்குந் தேனென்றதென் றுணர்க. எங்ஙனமெனின், உள்ளத்தழியாமையி னடாத்தேனென் றெதிர்மறுக்கப் படுதலினென்க. மதுரம்பற்றித் தேனை யாநந்தத்திற் குவமைகூறுவாருமுளராலோவெனின் அது நாவிடையமா யிறைப்போதுசிற்றலி னித்துணைச்சிறப்பின் றென்க.

அன்பரொலாமுண்ண வென்பதில், அன்பர் - என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவாநந்த மென்னுளடைதுமென் றிடைவிடா ததனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்ததென்றுணர்க. எலாமென்பது சரிதாதி கன்மமார்க்கங்களைக்கூறும் பிறநூல்களெல்லாம் பருவநோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரைச்சிறுவியு மதிகரித்தல் போலாது அச்சாதி சமயாதிகளி னுயர்ந்தோர் தாழ்ந்தோ ரியாரேனும் பருவத்தராயி னிந்நூற் குரியராவரென்பது குறித்ததென் றுணர்க.

உட்கொளவென்னும் பொருளுட் கொண்டு பொருட்டுப் பொருளிற்போந்த உண்ணவென்னும் வினையெச்சம் ஆநந்தாநுபவத்திற்கு விடாத விலக்கணை யாயிற்றென் றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசிநீங்கல்போல் ஆனந்தாநுபவத்திற் பசுத்துவ நீங்கலினென்க. பயன் காரணம்பற்றி வந்துவொழிவிலொடுக்க நூலென்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கந் தருநூலென விருவழிக்கும் பொது

Digitized by Google

வாய சந்தியான் வந்தமையிற் றன்னை வேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்ததென்றுணர்க.

ஒழிவிலொடுக்க நூலுரைத்தா னென்பதில் வேற்றுமை சாரியை யுருபு முதலியவொன்றும் விரியாதுவிற்றலின் ஞானாசாரமன்றிக் கருமாசாரமொன்றும் விரியாத விந்நூலி னின் மலத்தன்மை தோன்றிற்றென் றுணர்க. உரைத்தானென்பது — ஒருவர் மதிநுட்பத்தாற் றாங்கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் றன்மையைப் பிறருமறிந்து பயன்கோடற்குக் கட்டளைக்கல்லி னுரைத்துக் காட்டல்போற் சுருதிகுரு வநுபவத்தாற் றாமநுபவித்தறிந்த சிவானந்தப்பேற்றின் றன்மையைப் பக்குவருமறிந்து பயன்கோடற் பொருட்டு நூற்கணுரைத் துக் காட்டினுனொன்று குறிப்புறுத்திற்றென்றுணர்க.

என்னெனி லுரையென்பது பொன்னுரையும் பொருளாகக் கேடலினென்க. உரைத்தான் என்னும் பயனிலை — செயப்படுபொருளி னிறுதியி னியையாது செயப்படு பொருட்குங் கருவிப்பொருட்கு மேற் றடலைமேல் வைத்து என்பத னிறுதியிற் றொடர்ந்து நின்ற தென்னெனிற் சிவஞானத் தீக்கையுடையரா யுரைத்தா ரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடிசான்றாகத் தாங்கண்ட வநுபவத்தை விளங்க வுரைத் தாரென்பதுங் குறித்தற்கென்க என்னை.

தாடலைமேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானேயமையு மாகலின் - தலைமேல்வைத்து என்பதன் பின்னிற்கக் கடவதாய் ஓர்ந்து என்பது செயப்படு பொருட்டி னிறுதி நிலையாய் நின்றதென்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங் குறைந்து ஞானமேலிடுத லுண்மை குறித்தற கென்க. எங்ஙனமெனின் அவ்வோர்ந்து என்பது வினைக்கு றையாகலிலென்க. உள்ளத் தழிவிலடுக்குந்தேனை யன்பரெ லாமுண்ண வொழிவிலொடுக்கநூ லோர்ந்துரைத்தான எனக்கொண்டு போதவொழிவின்கண்ணடுப்பதாய வாநந்தத்தை

Digitized by Google

யன்பரெல்லா மநுபவிக்கும் பொருட்டு வேதாகமுடிபான ஞா
னநெறியையாராய்ந்து ஒழிவிலொடுக்க மென்றோர் நூலையுரை
த்தார் எனப் பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின்
ஆசிரியர் பரஞானமுடையாரென்பது தோற்றாது. அபரஞா
னமுடையராகப் பொருள்படு மாகலினும் அபரஞானத்தாற்
கூறப்பட்டநூல் மிகச்சிறவாமையானு மதுபொருந்தாதென்க.

இந்நூலியற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்பு
ப்பாயிர விலக்கணத்துளாக்கியோன் பெயரேயென முதனிறு
த்தப்பட்ட நிமித்தகாரணச் சிறப்புடைமையும் இச்செய்யுண்
முடிபுக் கெழுவாயாந் தலைமையுடைமையும்பற்றி வள்ள
லென முதனிறுத்தியதென்க. இந்நூலாசிரியர்க் காசிரிய ரிவ
ரென்பது தோன்றற்கு அவ்வள்ளலென்ப தன்புடைகுருராய
னென்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம் ஆசாரியரென்பவர்
பிள்ளையாரென்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்
தல் வேண்டுமாகலின் அந்தஞானத்தைக் குறிக்கும் பாசவெற்
றியாய வாதுவென்ற வென்பது முன்கூட்டிச் சம்பந்தனென
வதன்புடை நிறுத்தியதென்க.

இரண்டாமடிக்கட் பிள்ளையார் தாள்க ணிறுத்தத் தொ
டங்கி முன்னர் அத்தாள்களி னியற்கை யருளென்று குறிக்க
வள்ளலென்றும் அதன் வடிவ மாநந்தமென்று குறிக்க மலரெ
ன்று முறையேவைத்து வள்ளன் மலர்த்தாளென நிறுத்திய
தென்க. தாள்களன்றியும், பிள்ளையாரும் அருளியற்கையரே
யென்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சத்தந்தோற்றியவு
டன் வள்ளற்சத்தந் தோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம்
நிறுத்தியவை - சொற்பொருண்முறைநிலை - தாளென்பதற்
குந் தலையென்பதற்குமுள்ள சொற்பொருட்சம்பந்த வின்பம்
பற்றித்தாடலையென்றும் தலையென்பதற்கும் மேலென்பதற்கு
முள்ள உரிமைநோக்கம்பற்றித் தலைமேலென்றும் மேலென்
னு மிடப்பொருட்கு வைத்தற்றொழில் சிறந்ததுபற்றி மேல்
வைத்து என்றும் வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்

Digitized by Google

நும் இறுதியுமுதலு மினமாதல்பற்றி வைத்துரைத்தானென் றும் முறையேசிறந்தியதென்க. இங்ஙனம் சிறந்தியவை சொன்முறைநிலையும் சொற்பொருண்முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்றுமுறைநிலை கூறப்புகின் மிகப்பெருகு மாகலி னொருவாறு காட்டினம். மற்றையவு மிவைகொண்டு ணர்கவென்க. இச்செய்யுட்பொருள் ஆசிரியர் தருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத் திணையுட் சால்பு முல்லைப்பொருளின் பாற்பட்டதென்க. என்னை, சால்பு முல்லைப்பொருள் - வான் றோயுமலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத்தன்று என்பவாக லின் இச்செய்யுள் தன்னுட் செயப்படுபொருளாய்நின்ற நூற் சிறப்பைத் தன்றொனுந் தன்னுறுப்புக்களானுங் குறிப்பாற்குறித் துநின்ற நன்னூக்குடைச் செய்யுளென்றுணர்க. அங்ஙனங் குறித்தவை யெங்ஙனமெனின்.

இச்செய்யுள்தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா வெ ன்னு முப்பாவினுஞ் சிறந்த வெண்பாவாகலி னிக்குறிப்பால் இந்நூல் சரிதைநூல் கிரியைநூல் யோகநூல் என்னு மூந்நூலி னுஞ் சிறந்த ஞானநூலென்று குறித்ததென்க. தான் ஈரசை யானுசிட்டிருவகைத்தளைதழீஇ யொழுகிசைச்செப்பலோசை யான்வந்ததாகலி னிக்குறிப்பா லிந்நூல் ஆகமமுடிவும் வேத முடிவுங்கூறு மிருவகைநெறியு மொருவகை நெறியாத் தழீஇக்கொண்டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்த விரட்டைமுப்பத்தா றெழுத்துக்களைக் கொண்டு நிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் பாசமொன்றடுத்த தத்துவ முப்பத்தாறென்று மம்முப்பத்தாறன் றன்மையிவை யென்று பகுதறிதல்வகையு முணர்த்துவதெனக் குறித்ததெ ன்க. தான் நான்கடுத்த முப்பத்தாறசைகளை யசைத்துநிற்ற லி னிக்குறிப்பானிந்நூல் அத்தத்துவ முப்பாத்தாறனையு நிய திகளைத் தன்முளையை யுணர்த்துவதெனக் குறித்ததென்க.

Digitized by Google

அஃதேன், முப்பத்தாறன்மே ஞன்கடுத்த தென்னெனின் ஆன்மதத்துவத்தின் வன்மைதோன்றற்கோரசையும் வித்தியா தத்துவத்தின் வலிதோன்றற் கோரசையு நாததத்துவத்தின் பெருமைதோன்றற் கோரசையு மிருந்தனவென்க. தான் - பதினைந்துசீர் சீர்கொளநிற்றலி னிக்குறிப்பானிந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன்மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உபதேசத்தன்மை பக்குவத்தன்மை யோகநிவர்த்தி கிரியைநிவர்த்தி சரிதை நிவர்த்தி விரத்திவிளக்கந் துறவுத்தன்மை யருளவத்தைத்தன்மை வாதனைமாண்டார் தன்மை நிலையியல்பு என்னுமிப்பதினைந்தனையுஞ் சீர்பெறக்கொண்டதெனக்குறித்ததென்க.

தானெழுவகைத்தளையி னியைந்ததாகலி னிக்குறிப்பானிந்நூல் ஆன்மதரிசனம் அருட்டரிசனம் பரைதரிசனம் பரையோகம் பரையோகநீக்கம் போதவொழிவு இன்பப்பேறு என்னும் எழுவகைநிலையு மறிவிப்பதெனக் குறித்ததென்க. தான் தனிச்சொல்பெற்று நான்கடியுட னடந்ததாகலி னிக்குறிப்பானிந்நூல்கூறு மொப்பற்ற ஞானமும் சுத்தச்சரிதை சுத்தக்கிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என்நான்குபாதத்தோடு நடப்பதெனக் குறித்ததென்க. தான் - ஒரூஉத்தொடையொடு முத்தொடையானியன்றதாகலி னிக்குறிப்பா னிந்நூற் சுருதி குரு அனுபவமென்னு மூன்று மொத்தியன்றதெனக் குறித்ததென்க.

அல்லதூஉம் - இச்செய்யுளடி நேரடியாய் விதித்தவெழுத்தெல்லையி னிகவாதுநிற்றலி னிக்குறிப்பானிந்நூல் மெய்வீட்டினெறித்தா யவ்வீட்டினெறிக் கெல்லையாய ஞானத்தினிகவாது நின்றதெனினுமாமென்க. எல்லை என்னெனிற் பத்தெழுத்தென்ப நேரடிக்களவே யொத்த நாலெழுத்தோற்றலங்கடையேயென்பவென்க. இங்ஙனங் குறித்தற்கன்றே இச்செய்யுளீற்றடியி னூற்பெயரை வேறடைகொடாது தனிமையினிறுத்தியதென்க.

Digitized by Google

இச்செய்யுள் சிறப்புப்பாயிரத்ததாயி னப்பாயிரத்திலக் கண மிதனுளிருந்தவா றெங்ஙனமெனின், வள்ளலென்பத னூலாசிரியர்பெயரும், குருராயன் வாதுவென்றசம்பந்தன் வள் ளன்மலர்த்தாடலைமேல் வைத்துரைத்தா னென்பதனான் ஞா னாசாரியராகிய பிள்ளையாரருளுபதேச வழித்தென வுட்கொ ளப்படுதலின் வழியும், இந்நூற்றொடர் தமிழ்த்தொடராக லி னித்தமிழ்வழங்குநிலமே யிந்நூல்வழங்குநிலமெனக் கருதப் படுதலினெல்லையும், ஒழிவிலொடுக்க நூலென்பதனானூற்பெ யரும், ஒழிவிலொடுக்கமென அன்மொழித் தொகைப்பெயர் மாத்திரையி னில்லாது நூலென விரித்தமையி னிந்நூலுந் தொகைவிரியுடையதெனக் கருதப்படுதலின் யாப்பும் உள்ளத் தழிவிலென்பதனாற் கருதிய பொருளும், அன்பரொலா முண் ணவென்பதினால் அன்பரொலாமுணற் பொருட் டிஃதியற்று கவென் றுள்ளெழுந் தெதிரிட்டுநின்ற தாசிரியரது பெருங்கரு ணையெனக் கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத்தழிவில டுக்குந் தேனென்பதனாற் பயனும் புலப்படுமாகலி னவையிருந் தவாறிங்ஙனமென்க.

இப்பாயிரச்செய்யுள் முற்காலத்தது.

இவ்வுரை

சி-இராமலிங்கபிள்ளையவர்களாற்

செய்யப்பட்டது.

Digitized by Google

சிவமயம்.

ஒழிவிலொடுக்கம்.

காப்பு.

விநாயகர் தோத்திரம்.

நிம்பநிழற்பா-லும்பன்முகத்தார்
செம்பதுமத்தா-ளம்புகருத்தே.

சுப்பிரமணியர் தோத்திரம்.

ஒழிவிலொடுக்கத் துரைவரநா யேற்குச்
செழிவி லொடுங்கருணை சேர்க்கு-முழுதின்பப்
பண்டைவள நாட்டும் பரமகுருப் போரூரன்
றண்டைவள நாட்டுதிருத் தாள்.

திருஞானசம்பந்தசுவாமிகள் தோத்திரம்.

வள்ளலுரைத்த வழிவிலொழி வில்லொடுக்கத்
தெள்ளுமுறை யெல்லாந் தெரிவிக்கு-முள்ளமே
யெம்பந்தநீக்கு மிறைவன் றமிழ்க்காழிச்
சம்பந்தன் பூஞ்சதங்கைத் தாள்.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணாடு.

"உள்ளவுரைநாயேற் குறச்செய்யும்" என்று பாட மோதலுமுண்டு.

ஈண்டு - இத்தோத்திரச் செய்யுட்கள் உரையாசிரியரால் இந்நூற்கு உரை இனிது முடிதற்பொருட்டு இயற்றப் பட்டன.

Digitized by Google

உ

திருச்சிற்றம்பலம்.

ஒழிவிலொடுக்கம்.

உரைபாடம்.

முதலதிகாரம்.

வேதாகமப்

பொதுவிலுபதேசம்.

ஆசாரியர் அநாசாரியர் இலக்கண முதலியவற்றையும் இந்நூலிற் கூறிய கருத் தெல்லாவற்றையும் தொகுத்துப் பொதுவான் உபதேசமாகக் கூறினமையான், இவ்வதிகாரத்திற் குப் பொதுவில் உபதேசம் என்று பெயராயிற்று.

வெண்பா.

வேதாக மப்பவுரி வீசுங் களாசநிலை
ஆதார வெற்பி லபிடேகம் - போதத்
திருளிலெழு பானு வெனவொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

(இதன்பொருள்.) எனது ஒழிவு இல் இன்பக்கருணை பொழி வான் எடுத்த கை எ-து,—எனது போதாகாசத்தின் கண்ணே அருளானந்தத்தைப் பொழியாநின்ற பிள்ளையார் உயர எடுத்துச் சுட்டோடு மெய்ப்பொருளைக் காட்டிய திருக்கரமானது;

Digitized by Google

வேதாகமப் பவுரி வீசும் களாசனிலை எ-து,—வேதாகமங்களினது பவுரிக்கூத்தினைப் பிரம்போடுங் கைவாரங்கொண்டு வீசி நிறுத்தும் ஓர் உண்மைநிலை;

ஆதாரவெற்பில் அபிடேகம் எ-து,— ஆறுதாரங்களாகிய பொருப்பனையன் முடியிற் சூட்டும் ஓர் மகுடம்;

போதத்து இருளில் எழுபானு எ-து,—ஆன்மபோதத்தின் கண்ணதாகிய ஆணவ இருளைக் கிழித்து எழாநின்ற ஞானசூரியன், என்றவாறு.

அரங்கின்கண் நடிக்கின்ற கூத்தர்பலருக்கும் முதல்வனாகிய கூத்தன் வந்து கூத்தைக் கைவாரங்கொண்டு நிறுத்தி, அவ்வரங்கின்கண் உள்ள குறுமன்னியர்கட்கெல்லாம் முதல்வனாகிய மகாமன்னியனையே புகழ்ந்து சுட்டி நின்றாற்போல, வேதாகமங்கள் கூறிய பல சமய நெறிகளையும் அச்சமயங்கட்குரிய கடவுளரையும் கடந்துநின்று, அக்கடவுளருக்கெல்லாம் முதல்வனையே பிள்ளையார் பரஞானக்கண்ணினால் உணர்ந்து புகழ்ந்து சுட்டி நின்றமையால், "வேதாகமப்பவுரி வீசுங் களாசனிலை" என்றும், நிராதாரமாகிய அருளினின்று மீதானமாகிய மெய்ப்பொருளில் சுட்டோடும் அதீதப்பட்டு நின்றமையால், "ஆதாரவெற்பிலபிடேகம்" என்றும், ஆன்மபோதத்தைமறைத்த ஆணவ இருளை நீக்கிச் சிவத்தை அறிவிக்குந் திருவருளைப்போல் இறைவனைப் பிறருக் கறிவித்தமையால், "போதத்திருளி லெழுபானு" என்றுங் கூறினார்.

(உதாரணம்.) "தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக், காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன், ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த, பீடுடையபிர மாபுர மேவிய பெம்மானி வனன்றே" என்னுந் திருக்கடைக்காப்பால் மெய்ப்பொருளைத்தரிசித்துச் சுட்டிப்புகழ்ந்து நின்றபோது திருவுள்ளம் மெய்ப்பொருள் கிருபாநோக்கம் வைக்க அக்கிருபாநோக்கத்தின்

Digitized by Google

வழித்தாய்ச்சென்று சிவத்தில் அதீதப்பட்டு நின்றார் என்பதும் பிறர்க்கறிவித்தார் என்பதும் "எனதுள்ளங் கவர்கள்வன்". என்பதனாலும் "பெம்மானிவனன்றே" என்பதனாலுங் காண்க இத்திருக்கடைக்காப்பு பிள்ளையார் ஞானபோனகம் உண்டருளியபோது அருளிச்செய்யப்பட்டது. பிரளயாகலர்க் கநுக்கிரகித்தலும், இது வேதாகமங்களை முதற்பொருளாக்கி அவை ஒன்றோடொன் றொவ்வாது கூறும் பலபேத சமயநெறிகளைக் கூத்தாக்கினார். ஆதாரம் ஆறையும் ஊடுருவிநின்ற சுழுமுனையை மேருவென்றும், இடைபிங்கலைகளை அதனை வலம்வருஞ் சூரிய சந்திரரென்றும், யோகிகள் கூறுவார் ஆகலின் "ஆதார வெற்பு" என்றார். முடிகூறினமையால் வெற்பென்னும் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது. "கை" என்பதைமூன்றிடத்துங்கூட்டுக. "கைவாரங்கொள்ளுதல்" =கூத்தை நிறுத்தற்பொருட்டு ஓகோ என்னும் அடுக்குமொழி கூறிக் கரம் உயரயெடுத்து வீசுதல். "களாசம்"=பிரம்பு. பிரம்போடும் வீசுமெனக் கூட்டுக.

இத்திருவெண்பா குருஸ்தோத்திரம். (௪)

தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான் சற்குருவாம்,—மன்னுபெருஞ் சீய மதயானை - தன்னடைமேல்,—சொப்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்,—நிற்பதுபோற் பாரா னெனின்.

(இ-ள்.) சற்குரு ஆம் மன்னு பெரும் சீயம் மதயானை தன் நடைமேல் சொப்பனத்தே தோன்றி எ-து,—ஞானாசாரியனாகிய அருள் நிலைபெற்ற பெரியசிங்கம்போல் வான் சீடனாகிய மதயானையினது மேலாம் பக்குவத்தால் பிரபஞ்சமாகிய சொப்பனத்தின்கண் தோன்றி;

துடிப்பு அற்றுக் கேவலம் ஆய் நிற்பது போல் எ-து,—மதம்பொழியாநின்ற யானையினது சொப்பனத்தின்கண் சிங்கந் தோன்ற அதனது மதசெர்விதம் யாவுங்கெட்டு மருட்கேவல

Digitized by Google

ப்பட்டுநின்றாற்போலச் சீடனாகிய யானையினது உட்புறனாய்ச் சிவியாநின்ற போதப் பதைப்பெல்லாம் அற்று அருட்கேவல மாய் நிற்கும்படி;

பாரான் எனின் எ-து,—அப்போதத்திற்கும் உட்புறனாகிய கிருபாநோக்கஞ் செய்யானாயின்;

தன் இழப்பை என்ன கற்றுச் சாதிப்பான் எ-து,—ஒருவன் தற்போத ஒழிவைச் சாத்திரங்களைக் கற்று அவற்றுள் கூறிய வாறே தனது போதத்தால் வீட்டைகூடி எங்ஙனஞ் சாதித்த டைவான், எ-று.

போத ஒழிவின்கண் மெய்ப்பொருள் இருத்தலின் மெய்ப் பொருளை, "தன்னிழப்பு" என்றார். மெய்ப்போதத்தால் பொய்ப்போதம் அழிவதன்றி இதனை இதனாலழிக்கத் தொடங்கின் மேன்மேல்வளர்ச்சியாய் அழிவுகூடாமையின், "தன்னிழப்பை யென்ன கற்றுச் சாதிப்பான்" என்றார். யானையைச் சிங்கம் கொல்வதுபோல ஞானத்தால் அஞ்ஞானத்தைக் கெடுத்த லின், "சற்குருவா மன்னுபெருஞ் சீயம்" என்றும், ஞாதுரு, ஞானம், ஞேயம் ஆய இவைகள் ஒன்றுந் தோன்றாது ஆன்மா அப்பார்வையால் சிவத்தில் அதீதப்படுதலின், "கேவலமாய் நிற்பதுபோற் பாராமெனனின்" என்றுங் கூறினார். "குருவாஞ் சீயம்" என்றமையால் சீடனாம் யானை என்று வருவிக்கப்பட் டது. "துடிப்பற்றுக் கேவலமாய் நிற்பதுபோல்" என்று உவ மையாகக் கூறினமையால் ஈண்டும் யானையும் சிங்கமும் வரு விக்கப்பட்டன. சிங்கம் போல்வான் பாரானாயின் எங்ஙனஞ் சாதிப்பானென முடிக்க. நடை, பக்குவம், மேலாயபக்குவம் என மாறுக. சீயம் பாராமெனனின் எனமுடிந்தது, இராசசிங் கம் வந்தான் என்பதுபோலக் கொள்க.

இத்திருவெண்பாவால் அதிதீவிர பக்குவர்க்காயினும் ஞானா சாரியரால் அன்றிப் போதநாசங் கூடாதென்று கூறியவாறு காண்க. (உ)

Digitized by Google

கூலித் தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்ற, குரு,—வேலைப் பகடிகளை மேவாதே - காலம்போல் பார்த்திருக்க வைத்த பரமகுரு வைப்பரவ,—வார்த்தையிலை தீண்டா மனம்.

(இ-ள்.) கூலித் தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்ற குரு வேலைப் பகடிகளை மேவாதே எ-து,—வேலைசெய்து கூலி வாங்கிக்கொள்ளுங் கூலித்தொழிலாளரையும் ஓர் பொருளைக் கொண்டு ஓர் பொருளைவிற்கும் வணிகரையும் போன்று, பிறர்க்குக் கிரியைகளைச் செய்து காட்டியும், உபதேசங்களைக் கூறியும், அவர்கையில் அருத்தம் பறிக்கும் தமக்கியையாத குருவென்னும் பெயர்கொண்ட தொழில் செய்யும் பகடிக்கூத்தாடிகளை மாணு! நீ மெய்க்குருவென்று அடையாதே;

காலம்போல் பார்த்திருக்கவைத்த பரமகுருவைப் பரவவார்த்தை இலை தீண்டா மனம் எ-து,—கதிர் வலம் வருதலால் கணம், நாழிகை, நாள், மாதம், இருது, வருடம், யுகம் முதலிய காலங்களும் அக்காலங்கள்தோறும் தோன்றும் பிரபஞ்சங்களும் அநந்தபேதமாய்த் திரியவும் தனக்கோர் திரிவின்றி அவற்ருேடும் தாக்கற்றிருந்த காலதத்துவம்போல, மாயையில் தோற்றிய கருவிகளும் இக்கருவிகளால் காரியப்பட்ட பிரபஞ்சங்களும் அநந்தபேதமாய்த் திரியவும் தனக்கோர் திரிவின்றி இவற்ருேடும் தாக்கற்றிருந்த அருளே வடிவாகக் கிருபாநோக்கம் வைத்து மாணக்கனைச் சுட்டற்றிருக்கவைத்த மேலாகிய ஞானசாரியனைத் தோத்திரம் பண்ண ஓர் வசனமும் இல்லை. தியானிக்க எனின் மனமும் அவனைத் தீண்டாது, ஆகலின் அக்குருவை அடைதி, எ-று.

கதிர்வலம் வருதலால் கணமுதலிய கால பேதங்களும் பிரபஞ்ச பேதங்களும் நாளுவாய்த் தோற்றினும் அவைகள் தோற்றற்கும் அது வலம் வருதற்கும் காலதத்துவம் ஏதுவாஞற்

Digitized by Google

போல, மாயையில் கருவிகளும் பிரபஞ்சங்களும் நானுவாய்த் தோற்றினும் இவை தொழிற்படுதற்கும் இவை மாயையில் தோற்றுதற்கும் திருவருள் ஏதுவாயிற் றென்பதுங் காண்க. பரமகுரு சூக்குமவாக்கும் தற்போதமும் கடந்த சிவமென் றறிவிக்கவேண்டி "வார்த்தையிலே தீண்டா மனம்" என்ருர்.

இத்திருவெண்பாவால் ஆசாரியனையும் அநாசாரியனையு மாணுக்கனுக் கறிவித்தவாறு காண்க. (கூ)

குட்டித் திரட்கரடி யாறொழுகக் கோன்குதித்துக்,
கட்டிப் புதைந்த கதையாகும் - துட்டமலப்,—பித்தி
லே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்குப்,—
புத்திபோற் காட்டும் பொருள்.

(இ-ள்.) துட்ட மலப் பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்குப் புத்திபோல் காட்டும் பொருள் எ-து,— கொடிதாகிய மும்மலப் பைத்தியத்தால் முதிர்ந்த ஆசாரியர் அல்லார் ஓர்காற் கூறியது ஓர்காற் கூருது பேய்பிடித்தாற் போலும் பிதற்றுகின்ற அபக்குவர்க்கு உபதேசம் போலுங் கூறிய அருத்தம்;

குட்டித்திரள் கரடி ஆறு ஒழுகக் கோன் குதித்துக் கட்டிப் புதைந்த கதை ஆகும் எ-து,—பலகுட்டிகளோடுங் கரடியானது நதிவெள்ளத்தோடுஞ் செல்ல அதனது கரைக்கண் நின்ற ஓரிடையன் அதனை ஆடெனக் கருதி அந்நீற் குதித்து அதனைப்பற்ற அஃது இவனைப்பற்ற அஃதும் இவனும் அவ்வெள்ளத்து ஆழ்ந்தனரென்று உலகத்தார் கூறுங் கதைபோல ஆகும், எ-று.

பரஞானம் என்பது சிறிதும் இல்லாதார் அபரஞானங்களைக் கற்றுக்கொண்டு, மனைவிமுதலிய குடும்பவெள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கின்றபேர் சிலர் இடம்பநிமித்தங் கேட்க, அவர்க்கு அருத்த நிமித்தம் உபதேசிக்க, அந்த உபதேசப்பொருளால்

Digitized by Google

இருவருக்குந் தோஷமேலிட்டுப் பிறவிச்சாகரத் தாழ்வர் ஆக லின், இக்கதையை இப்பொருளுக்கு உவமையாகக் கூறினர். இடையன் காடியை ஆடென்றும் காடி இவனை நதிகடத்தும் புணையென்றும் கருதினதுபோல், அபக்குவனைப் பக்குவனெ ன்றும் அநாசாரியனை ஆசாரியனென்றும் இருவரு மாறுபா டாக்கருதினர் என்பதுமாம்.

இத்திருவெண்பாவால் அநாசாரியனுக்கும் அவனிடத்து உபதேசங்கேட்ட அபக்குவனுக்கும் குற்றம் வருமென்று அறி வித்தவாறு காண்க. (ச)

குருட்டரிப்ப னுர்க்குங் குபேரனென்று பேரோ
கருப்பிரத மோத்தையோ காட்டும் - அருட்டரித்த
ஆசானைப் போல்வரோ வாறுறுக் கப்புறத்தே
பேசா திருத்தவல்லாப் பேர்.

(இ-ள்.) குருட்டு அரிப்பனுர்க்கும் குபேரன் என்று பேரோ கருப்பிரதம் மோத்தையோ காட்டும் எ-து,—பிறவி அந்தகனு கிய அரிப்பாளனுக்கும் குபேரனென்று பெயருண்டுகொலோ கரும்பினது இரசத்தை மோத்தை ஆடு அறிந்து கூறுமோ அவைபோலும்;

ஆறுறுக்கு அப்புறத்தே பேசாது இருத்த அல்லாப் பேர் அருள் தரித்த ஆசானைப் போல்வரோ எ-து,—அருள் வடிவம் அல்லாத மாயாவடிவங் கொண்ட அநாசாரியரானுர் முப்பத் தாறு தத்துவங்களையுங் கடந்துநின்றசிவத்தோடு மாணுக்கனை இரண்டறக் கலப்பித்து மௌனமாய் வைக்க அருளே திரு மேனியாகக்கொண் டெழுந்தருளி வந்த ஞானசாரியரைப் போலு மாவாரோ, எ-று.

குருட்டரிப்பனுக்குக் கைப்பரிசமே அன்றிக் கட்பார்வை இன்மையால் பொற்பொடியே தோன்றுது, அங்ஙனம் இரு ப்ப அவனையும் செல்வத்தால் அளகேசன் என்று கூறக்கூடு

Digitized by Google

மோ, அதுபோல அநாசாரியருக்குக் கிரியைத் தொழிலன்றி ஞானமேயில்லை. அங்ஙனம் இருப்ப அவரையுங் குரு என்று கூறப்படுமோ என்றும், மோத்தையாடு கொழுந்தாடை தின்பதே அன்றிக் கரும்புதின்ன அறியாதாதலின் அதனது இரசத்தை அறிந்து இங்ஙனமென்று தனது குட்டிக்குக் காட்ட அறியுமோ, அதுபோல, அநாசாரியர் ஆகமங்கள் கூறும் மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலைகளுள் உபதேசகலையைவிட்டு இருவகைக்கலைகளை ஆராய்ந்து அவற்றுள் கூறிய சரியையாதிகளைச்செய்து அவற்றான் வரும் விடயாநந்தானுபவம் பெறுவதே அன்றிச் சிவாநந்தானுபவம் அணுவளவேனும் அறியார், அங்ஙனம் இருப்பப் பிறர்க்கு அச்சிவாநந்தானுபவம் எங்ஙனங் கூறுவார் என்றும் இந்த உவமைகளால் அறிவித்தவாறுகாண்க.

அஃதன்றியும் ஆடோகாட்டும் என்னும் எதிர்மறை ஒகாரம் அவ்வாட்டை மறுத்து யானையைக் காட்டிநின்றதாகலின் கருப்பந்தோட்டத்தைப்போல் சிவாகமம், அதனுட் புகுதும் ஆடு யானைபோல் இதனுட் புகுதும் கிரியாகுரு, ஞானகுரு. ஆடு கரும்பைவிட்டு இலையைத்தின்று அதனது சுவையைத் தானும் அறிந்து தனது குட்டிக்குங் காட்டுதல்போலவும், யானை இலையைவிட்டுக் கரும்பைத் தின்று அதனது சுவையைத் தானும் அறிந்து தனது கன்றுக்குங் காட்டுதல்போலவும், கிரியாகுரு, மந்திர தந்திரகலைகளை ஆராய்ந்து அவற்றுள் கூறிய சரியாதிகளை அநுட்டித்து அவற்றான் வரும் விடயாநந்தத்தைத் தானு மனுபவித்துத் தன்னை அடைந்த சீடனுக்கும் அவ்வுபதேசங்களால் அவ்வாநந்தத்தை வருவிப்பனென்பதும், ஞானகுரு மந்திர தந்திர கலைகளைவிட்டு உபதேசகலையை ஆராய்ந்து அதனுள்கூறிய ஞாநாநந்தத்தைத் தானும்பெற்றுத் தன்னை அடைந்த பக்குவனுக்கும் அந்த ஞாநாநந்தத்தை வருவிப்பனென்பதுங் காண்க.

(உ-ம்.) பிரபுலிங்கலீலை "புறம்புகாண்குவன் புல்லியனீசனை, அறிந்தஞானி யகமுறக்காண்பனால், எறும்பி காண்குறி

Digitized by Google

யின்கரும் பேகொளும், செறிந்தவாடிலே தின்பண வென்பவே'' அஜகஜாந்தரம் என்னுங் கிரந்தசமாதியும், அது. குருட்டறிப்பதென்பதை "குருட்டறிப்பளுர்" என்று இழிபின்கண் பன்மையாகக் கூறினர். கட்பார்வை இன்மைபோல் ஞானமின்மை, கைப்பரிசம் அறிதல் போல் கிரியைகளைச்செய்தல், என்பதுங் காண்க.

இத்திருவெண்பாவால் அநாசாரியர் இலக்கணமும் ஆசாரியர் இலக்கணமுங் கூறியவாறு காண்க. (௫)

தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச்சி யப்பயனைச்
சொன்னபிழை கெட்டேன் றொலைப்பரோ-முன்னே
நடவா வழியொருவன் சொல்ல நடந்து
தடுமாறி நொந்தறியா தார்.

(இ-ள்.) தன் அறிவு சாட்சி அல்லால் சாயுச்சியப் பயனைச் சொன்ன பிழை கெட்டேன் தொலைப்பரோ எ-து,—சிவானுபவம் நன்ருய் விளங்கிற்று என்பதற்கும் அஃது இன்றென்பதற்கும் தனக்குத் தன்னறிவுதானே சாட்சியாயிருக்கவும் பயனைக்குறித்து மயக்கத்தால் அந்த அநுபவந் தனக்குண்டுபோற் காட்டிப் பிறருக்கு வீடடையும் நெறியான உபதேசப்பொருளைக் கூறிய பாவங்களைக் கெட்டேன்! எந்தக்காலம் நீக்கிக் கொள்வரோ;

முன்னே நடவாவழி ஒருவன் சொல்ல நடந்து தடுமாறி நொந்து அறியாதார் எ-து,—அஃதன்றியும் தாம் முன்செல்லாத ஒரூர்க்குப் பின்செல்லுங்கால் அவ்வூரடையும் நெறியாதென்று அந் நெறிக்கண் தான் முன்நடவா வொருவனைக் கேட்ப, அவன் அதன்கட் சென்ருன்போன்று நெறி அல்லா நெறிகூற, ஈது உண்மையெனக் கருதி அந்நெறிக்கட் சென்று முன்னிருந்த ஊரும் பின்னடையும் ஊரும் அன்றி நடுவிடைத் தடுமாறி மனம் உடல் வருந்தி அறிந்தவரலர், எ-று.

Digitized by Google

ஐயன், காளி, சந்நிதிகளில் அசத்தியங் கூறினோர்க்கும் இம்மைக்கண்ணே துன்பம் வருதலின் பூரணசிவத்தின் சந்நிதியில் அசத்தியங் கூறிய பாவந் தொலையாது ஆகலின், "கெட்டேன் றொலைப்பரோ" என்றும், வாக்கால் கேட்டறிந்து காயத்தால் சென்றடையும் ஊர்க்கு நெறி அறியா ஒருவன் நெறி கூறக்கேட்டு அதன்கட் சென்றதனுன் வரும் இடர் அநுபவித்தறிந்தவர் மனத்தானுஞ் சென்று கூடுதற்கரிய வீடடையுநெறியைத் தாம் அறியாதிருந்தும் அறிந்தார்போன்று பிறருக்குக் கூறூர் ஆகலின், இங்ஙனம் உவமை கூறினார். செறலின்கண் 'தம்' என்னும் பன்மை 'தன்' என்னும் ஒருமையாய் வந்தது. "அல்லால்" என்பதை மயக்கத்தாலெனக் கொள்க. "முன்னே" என்பதை இரண்டிடத்துங் கூட்டுக. "கெட்டேன்" என்பது இரக்கக் குறிப்பின்கண் வந்த வழக்கச்சொல்.

இத்திருவெண்பாவால் சாத்தியனே அன்றி சாதகன் ஞானோபதேசம் பண்ணுதல் குற்றமென்று அறிவித்தவாறு காண்க. (௬)

பொய்போகப் போகப் பொருந்திப் பொருடானும்
சையோக போக தரங்கத்தில் - நையும்
பரிபாகங்கண்டு பதையாமற் பார்க்கும்
குருவேகாண் ஞானக் குரு.

(இ-ள்.) பொய் போகப் போகப் பொருந்தி எ-று,—பொய்யாகிய கருவிகள் முப்பத்தாறும் நீங்க நீங்கவே அவைகளைப் பகுத்தறிந்து நீங்கின்ற அறிவு தானென்றுதன்னை அருளால் உள்ளபடி கண்டு பின்பு அருள்தரிசனம், பரைதரிசனம், பரையோகம், என்னும் இவற்றை அடைந்து;

பொருள் தான் ஆம் சையோக போக தரங்கத்தில் நையும் பரிபாகம் கண்டு பதையாமல் பார்க்கும் குருவே ஞானக் குரு எ-று,—மெய்ப்பொருள் தானாகிய அநுபவசத்தியில் தோன்

றும் ஆநந்தபோக சமுத்திரத்து அலையில் அவன் கரைந்து போகுந் தீவிரதர பக்குவம் ஈதென்று கண்டு மாணுக்கனது போதம் அனுவளவேனும் பதையாது அடங்கக் கிருபாநோக்கம் வைக்கும் ஆசாரியனே ஞானசாரியனுவான், எ-று.

சிவகரணம் பரையோகமெனவுந் தொடர்தலின், "பொய் போகப்போக" என்ருர். "சையோகம்" என்றது அனுபவசத்தி. அது பரையோகத்திற்கும் சுகாதீதத்திற்கும் இடையே தோன்றும் ஆநந்தப்பேற்றிற் கிடம். "போகதரங்கத்து" என்றமையால் சமுத்திரம் வருவிக்கப்பட்டது. "தரங்கம்" ஆனந்தமேலிடல்.

அவ்விடத்து ஆன்மபோதங் கெடும் ஆகலின், "கையும்" என்ருர். அடிதொடங்கி அநுபவமுற்றுங் கூறினமையால் இவ்வநுபவமுற்றும் பெறுமவன் அதிதீவிரபக்குவன் என்பதுங் காண்க. காண் — அசை.

இத்திருவெண்பாவால் ஞானசாரியர் ஆயினும் பக்குவனை அறிந்து போதியார் ஆயின் அவரையும் ஆசாரியர் அல்லர் என்றுங் கூறியவாறு காண்க. (எ)

தேனுண் டுமிழுந் திறம்போற் சிவாநந்த
மோனந் துளும்பி மொழிகாலத் - தேநின்று
தோன்றிருது போலுமொன்றைச் சுட்டாது கேட்ப
கான்றதவம் வேத மது. [வர்கட்

(இ-ள்.) தேன் உண்டு உமிழும் திறம்போல் சிவாநந்தமோனம் துளும்பி மொழி காலத்தே எ-து,—தேனை நிறைய உண்டு அதனை மீட்டும் கக்குந்தன்மைபோல் உட்புறனும் எங்கும் நிறைந்து மௌனமாயிருந்த சிவாநந்த வெள்ளம் காருணியத்தால் ததும்பி ஞாநாசாரியர் உபதேசமொழிகளைக் கூறுங்காலத்தளவும்,

னின்று தோன்று இருதுபோலும் ஒன்றைச் சுட்டாதுகேட் பவர்கட்கு ஆன்ற தவம் வேதம் அது எ-து,—பணிவிடைசெ ய்துநின்று தோன்றப்பட்ட இருதுகாலம்போலும் அது இது என்று ஒன்றையுஞ் சுட்டாது பதைப்பற இருந்து அதனைக் கேட்பவர்களுக்கு மாட்சிமைப்பட்ட தவமுடிவும் வேதமுடி வும் அங்ஙனம் னின்று கேட்குங் கேள்வியாம், எ-று.

ஆசாரியர் மாணக்கனது பக்குவம் அறிந்து வலியக்கூறு தலே அன்றி அவனையும் இவன் வலியக் கேட்கலாகாது ஆக லின், "மோனந்தனும்பி மொழிகாலத்தே" என்றும், இருது வில் பத்திரப்புட்ப பலாதிகள் தோற்றினும் அவ்விருது விகா ரம் இன்றி இருந்தாற்போலக் கருவிகளோடுங் கூடியிருந்தும் அவற்றுள் தாக்கற்றுனின்று கேட்கவேண்டும் ஆகலின், "இரு துபோலுஞ் சுட்டாதுகேட்பவர்கள்" என்றுங் கூறினர்.

மோனந்தனும்பி மொழிகாலத் தென்றமையானும், ஒன் றைச் சுட்டாது கேட்பவர்க ளென்றமையானும், சொல்லாமற் சொன்னதென்றும் கேளாமற் கேட்டதென்றும் ஆயிற்று. சுட் டறநிற்க வந்தது தவப்பயன் ஆகலின் அதனைத் தவம் என் றும், அங்ஙனம் னின்று கேட்கும் மொழி ஆகலின் அதனை வேதம் என்றும், கூறினர். அங்ஙனஞ் சொல்லுவதும் இங் ஙனம் கேட்பதும் சாம்பிரதாயம்.

இத்திருவெண்பாவால் ஆசாரியன் உபதேசங் கூறுமாறும் மாணக்கன் ஏற்றுக்கொள்ளுமாறும் அறிவித்தவாறு காண்க.

இருளிற் சுடரென்ன விந்திரவி யென்ன
அருளைக் கடந்தபரா னந்தர் - திருவாக்
கமுதமழை யம்பரச்சொ னன்ணிப்பித்த மாங்கே
மமதையிரா தென்றே மதி.

(இ-ள்.) இருளில் சுடர் என்ன இந்து இரவி என்ன் அருளை க்கடந்த பராநந்தர் திருவாக்கு எ-து,—பூத இருளின்கண்

Digitized by Google

தோற்றம் விளக்குப்போலும் சந்திரன்போலும் சூரியன்போலும் பிரகாசித்து ஆணவ இருளைநீக்கும் திருவருளையுங்கடந்து சிவாநந்தமயமாய் எங்கும் நிறைந்துள்ள ஞானசாரியாது அழகிய வசனம்,

அமுத மழை அம்பரச்சொல் நல் நிமித்தம் ஆங்கே மமதை இராது என்றே மதி எ-து,—அமுதமழைபோலும் ஆகாச வாக்குப்போலும் நல்ல நிமித்தம்போலும் ஆம் அன்றி அதன்கண் சிறிதேனும் அகங்காரம் உண்டாகாதென்று அறிதி, எ-று.

அருள் தோற்றுங்கால் மூவிதமாய்த் தோற்றலானும் ஒன்றற்கொன்று அதிகமாய்ப் பிரகாசிக்கையானும் விளக்காதி முச்சுடரையும் உவமையாகக் கூறினர்.

(உ-ம்.) தத்துவப்பிரகாசம் 'பொறிகரணங் களையுயிர்ப் போற் போதம்போ தத்தைப், பொருந்திநடத் திடுஞ்செயலாற் போதவுணர் வுணர்ந்தே, அறிவினது செயலோநா மெனவுணர்வுற் றிருப்ப வப்போது விளக்கெனவு மருணன்மதியெனவும், கறைவிடியுங் காலமென வொளிவந்துற் பவிக்கும்' என்பதனுற் காண்க.

நீர்மழை கைம்மாறின்றிப் பொழியினும் உற்பத்தி நாசம் உளவாகலின் அம்மழையை உவமை கூறுமல் 'அமுதமழை' என்றும், ஆகாசவாக்கு உண்மை அறிவித்தல்போல் உண்மையாகிய சிவத்தை அறிவித்தலின் 'அம்பரச்சொல்' என்றும், நல்ல நிமித்தங் கேட்டோர்க்குத் தாங் கருதிய பொருள் கைகூடல்போல் இதனைக் கேட்டோர்க்குத் தாம் கருதிய வீடு கைகூடுதலின் 'நன்னிமித்தம்' என்றுங், கூறினர்.

தற்போதத்தால் கூறும் சொற்கட்கெல்லாம் மமதை இருத்தலின் 'ஆங்கே மமதையிராது' என்றார். (கூ)

சரியா புருடனைப்போ லாநந்த மேதடித்த
மாயா வயிரி மனமாண்ட - நேயவுரை

Digitized by Google

ஆவேசர் வீர ராசர் மடலாளர்
சாவாநந் தர்க்குச் சரி.

(இ-ள்.) சாயா புருடனைப்போல் ஆநந்தமே தடித்த மாயா வயிரி மனமாண்ட நேய உரை எ-து,—வடிவம் இன்றிய ஆகாயத்தில் வடிவம்போல் தடித்த சாயாபுருடனைப்போல் வடிவம் இன்றிய பேராநந்தந் தானே காருணியத்தால் வடிவம்போற் காட்டி எழுந்தருளிவந்த மாயைக்கு ஓர் வயிரியான ஞானசாரியரது மனாதீதமான கிருபாவசனம்;

ஆவேசர் வீரர் அரசர் மடலாளர் சாவு ஆநந்தர்க்குச் சரி எ-து,—ஆவேசம் ஏறினோர் மாவீர ராயினோர் ஒரு குடைக்கீழ் ஆளும் அரசர் மடல் எடுத்தவர் தாம் சாவது இன்பமாய்க் கருதினோர் ஆகிய இவர்களது மொழிகட்குச் சரியாம், எ-று.

ஆவேசமேறினோர் தற்செயல் இன்றிக் கூறுதல்போல முக்கரணங்களையும் தமதிடத் தடக்கிக்கொண்டு அருளாய் நின்று கூறினமையானும், மாவீரராயினோர் எதிர்த்தாரைக் கொல்வதே கருத்தாகக் கூறுதல்போல் அறிவுக்கெதிரீடாய்த் தோற்றுவன எல்லாம் அதனைக் கொல்வதே கருத்தாகக் கூறுதலானும், ஓர்குடைக்கீழ் ஆளும் அரசர் கூறியமொழிப்படி இம்மைப்பயனுகுதல்போல் இவர் கூறியமொழிப்படி மறுமைப்பயனுகுதலானும், மடலாளர் மற்றொன்றையுங் கூறாது தாம் நச்சிய மாதினையே புகழ்ந்து கூறுதல்போலச் சரியாதிகளைக் கூறாது தமது ஞானாநந்தத்தையே புகழ்ந்து கூறுதலானும் சாவாநந்தர் தாம் சாவதே இன்பமாகக் கூறுதல்போலத் தற்போத வொழிவையே இன்பமாகக் கூறுதலானும், ஆவேசமேறினோர் முதலிய ஐவர் மொழியையும் உவமையாகக் கூறினர். அவரது மொழிக்கு உவமை கூறினமையால் இவரது மொழி வருவிக்கப்பட்டது.

இவ்விரண்டு திருவெண்பாவானும் ஞானசாரியரது திருவாக்குச் சிறப்புக் கூறியவாறு காண்க. (௬0)

Digitized by Google

சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன் - சுத்தன்
தமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பான்
எமக்கருளிச் செய்த திது.

(இ-ள்.) சத்தியநிர்வாணத்தால் தற்போதத்தாக்கு அறுத்து வைத்து வழிகாட்டும் எ-து,—சத்திய நிர்வாணத் தீக்ஷையால் எனது போதத்தை ஒன்றேனும் பற்றாது ஒழித்துச் சிவத்தோடு இரண்டறக் கலக்கவைத்து என்பால் வந்தடைந்தோர்க்கும் எனதுள்ளே தாமே நிறைந்திருந்து முத்திநெறியை அறிவிக்கும்;

மறைப்புலவன் சுத்தன் தமிழ்க்குரிசில் சீகாழிச் சம்பந்தன் என்பான் எமக்கு அருளிச்செய்தது இது எ-து.—வேதங்களையெல்லாம் ஓதாமல் உணர்ந்த ஞானப்புலவர், மும்மலங்களையுங் கடந்து நின்ற நின்மலர், தமிழினது இலக்கணமெல்லாம் அளவிட்டறிந்த தமிழ் வேந்தர், சீகாழி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருந்த திருஞான சம்பந்தப் பிள்ளையாரென்று யாவரும் புகழாநின்ற சுவாமிகள், எம்போல்வார் வீடடைந்து உய்யும் நிமித்தம் அருளிச்செய்தது இந்நூலின் அருத்தம், எ-று.

இந்நூல் பிறர்க்கு உபகாரமாகக் கூறினமையால் 'வழிகாட்டும்' என்பது பிறர்க்கெனக்கொள்க 'மறைப்புலவன்.' 'தமிழ்க் குரிசில்' என்றமையால் உபய கலைகளையும் உடையானென்றறிக.

இத்திருவெண்பாவால் நூன்மரபு கூறியவாறு காண்க. ()

தாக்கற்ற பூரணத்தே சந்தற்ற தம்மைமலம்
நீக்குந் துயரகல நேசித்தோர் - பார்க்கும்
வழிபலநாம் பைமறித்த வாறுநீ மாளா
ஒழிவி லொடுக்கமுறைப் போம்.

Digitized by Google

(இ-ள்.) தாக்கு அற்ற பூரணத்தே சந்து அற்ற தம்மை மலம் நீக்கும் துயர் அகல நேசித்தோர் எ-து,—எல்லாவற்றோடும் கூடிநின்றும் அவைகள் ஒன்றோடும் தாக்கற் றிருந்த பரிபூரண சிவத்தோடு ஆணவம் நீங்கியவிடத்து இரண்டறக் கலந்து விளங்காநின்ற தம்மை அந்த ஐக்கியத்தைத் தெரிய வொட்டாது மறைத்து இரண்டு படுக்கும் அவ்வாணவமலத் துன்பம் அகன்று ஏக அன்புகொண்டோர்;

பார்க்கும் வழிபல நாம் பை மறித்த ஆறு நீமாளா ஒழிவில் ஒடுக்கம் உரைப்போம் எ-து,—ஆராய்ந்தறியும் சாத்திரநெறிகள் பற்பல உளவாம் அவைபோலும் மறைத்துக் கூறாது நாம் பையைவிரித்து அதனுள் இருந்த பொருள் ஈதென்று காட்டுமாறு மாணுக்கனே! நீ ஒழியாமல் ஒழியுமிடத்து ஒடுங்கும் நெறியைக் கூறுவாம், எ-று.

ஆன்மாவிற்குச் சிவத்தோடு ஐக்கியம் மலமறைப்பால் தெரியாதிருத்தலின், 'நீக்குந்துயரகல நேசித்தோர்' என்றார். 'பார்க்கும் வழிபல' என்றது பேதம் அபேதம் பேதாபேதங்களாய்க் கூறுநெறிகள். அநுபவரகசியமெல்லா மறையாமல் கூறினமையால் 'பைமறித்தவாறு' என்றார். ஆன்மா கெடாது அதனதுபோதங் கெடுதலின் 'மாளாவொழிவில்' என்றார். அவ்விடஞ் சுகாதீதம்; அதனுள் ஒடுங்கும் நெறி இதனுள் கூறினமையால் 'ஒழிவிலொடுக்க முரைப்போம்' என்றார்.

இத்திருவெண்பாவால் நூற்பயன் கூறியவாறு காண்க. ()

சுருதி குருவாக்குச் சுவாநுபவ மூன்றும்
சரியொத்த போதமுனே சார்வைத் - தெரிய
உரைத்தநூற் பேர்கே ளொழிவி லொடுக்கம்
விரித்தநூற் கெல்லாம் விதை.

(இ-ள்.) குருவாக்கு சுருதி சுவானுபவம் மூன்றும் சரிஒத்த போதமுனைச் சார்வை எ-து,—ஞானசாரியர் அருளிச்செய்த

Digitized by Google

உபதேசமொழிகளும், இம்மொழிகள்மேல் ஐயம் பிறவாது இவற்றைத் தெளிவிக்கும் வேதாகமங்களும், இவ்விருவகை மொழிகளின் அருத்தப்படியே தம்முள் தோன்றுஞ் சுவாநுப வமும் ஆகிய மூவகையுஞ் சரியொத்த இடத்தில் தோன்றும் பேரறிவாகிய பதியையும் அவற்றான் இப்பதியை அறியும் பசு வையும் இப்பதியைப் பசுவிற்கு அறியவொட்டாது மறைத்து நின்ற பாசத்தையும்;

தெரிய உரைத்த நூல்பேர் கேள் ஒழிவிலொடுக்கம் விரித்த நூற்கு எல்லாம் விதை எ-து,—உள்ளபடிவிளங்கக்கூறிய இந் நூற்பெயரை மாணாக்கனே! நீ கேட்டி, ஒழிவிலொடுக்கம் என்பதாம், இம்முப்பொருளையும் பற்பலவாய் விரித்துக் கூறி ய நூல்கட் கெல்லாம் இஃது ஓர் வித்தாம், எ-று.

குருமொழியே அமையும் எனினும் தீவிரதரபக்குவம் இன் றிய மற்றைய மூவர்க்கும் அதன்மேல் ஐயம்பிறக்கும் ஆகலின் சுருதிவேண்டிற்று; குருவும் சுருதியும் உண்டாய்ச் சுவாநு பவம் இன்றாயின் அது பரஞானமன்று ஆகலின், இம்மூன் றுஞ் 'சரியொத்தபோதம்' என்றார்.

இக்குறிப்பால் இந்நூலும் இம்மூன்றும் ஒத்துக் கூறிய தெ ன்பது ஆயிற்று.

முப்பொருளினது இலக்கண விரிவையெல்லாம் சுருக்கித் தற்போத ஒழிவிற்கு உபாயமே விரித்துக் கூறலானும், போத வொழிவில் யாவுமொடுக்கிப் போதவிரிவில் யாவும் விரித்த லானும் இதனை 'விரித்தநூற்கெல்லாம் விதை' என்றார்.

இத்திருவெண்பாவால் நூற்பெயர் கூறியவாறு காண்க. ()

தந்த்ரகலை மந்த்ரகலை சார்பமுந்தச் சாற்றுமது
மந்த்ர சரியாதி மார்க்கமிது - முந்தைத்
தபதி,விரத்தியரைச் சார்பழியச் சாற்றும்
உபதேச மென்றே யுணர்.

(இ-ள்.) தந்திரகலை மந்திரகலை சார்பு அழுந்தச் சாற்றும் அது மந்திர சரியையாதி மார்க்கம் எ-து,—குண்டமண்டல வேதிகாதிகளைக் கூறுந் தந்திரகலைகளும், கிரியைகட்கு உரித்தாகிய மந்திரங்களைக் கூறும் மந்திரகலைகளும், ஆன்மாவை மேன்மேலும் மலச்சார்போடு அழுந்தக் கூறும் அக்கலைகள் மந்திர தந்திர கிரியா பாவனைகளாற் செய்யும் சரியை கிரியா யோகநெறிகளாகும்;

இதமுந்தைத் தபதி விரத்தியனைச்சார்பு அழியச் சாற்றும் உபதேசம் என்றே உணர் எ-து,—இந்நூல் முற்பவங்களில் நிட்காமிய தவம்பண்ணின தபோதனர்க்கும் அத்தவத்தால் உட்பற் றறுதியுடையோர்க்கும் மலச்சார்ப்பு அறும்படிகூறும் ஞானோபதேசம் என்று நீ அறிதி, எ-று.

அக்கலைகளால் போதவிரிவே அன்றி ஒழிவின்மையால் 'சார்பழுந்தச்சாற்றும்' என்றார். இது 'தபதி விரத்தியனைச் சார்பழியச் சாற்றும்' என்றமையால் மற்றையர்க்கு ஆகாதென்பது ஆயிற்று.

இத்திருவெண்பாவால் இந்நூல் உபதேசகலையென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூலொத்து
விடிற்புலிதீப் பாம்பினில்வீழ் வார்க்காம் - சுடர்ச்சுடி
வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா [னும்
றேழைக்கா காத திது.

(இ-ள்.) உடற்கு உயிர்போல் கட்கு இமைபோல் ஊசிநூல் ஒத்துவிடின் புலி தீ பாம்பினில் வீழ்வார்க்கு ஆம் எ-து,— உடம்பை உயிர் அபிமானித்தல் போலும் கண்ணை இமையானது காத்தல்போலும் ஊசி சென்ற இடந்தோறும் சரடு பின் சேறல்போலும் ஞானசாரியரைப் பிரியாது நின்று அவர்திருமேனியை அபிமானித்தும் பாதுகாத்தும் அவர் திருவுள்ளக்

குறிப்பின்படியே சென்றும் வழிபட்டு அவர்பார்த்துப் புலி,தீ, பாம்பாதிகளிற் செலுத்தினும் பின்னிடையாது அவைமேல் விழும் அதிபக்குவர்க்கே இந்நூல் கொடுக்கலாகும்;

சுடர் சுடினும் வாழைக்கு ஆகா வேதி மட்கலத்துக்கு ஆகா ஆறு ஏழைக்கு ஆகாதது இது எ-து,—மிகுந்த அக்கினியாற் சுடினும் வாழைத்தண்டைச் சுடக்கூடாதவாறு போலும் பரிசனவேதி மட்கலத்திற் பரிசித்துப் பொன்னாக்கக் கூடாதவாறு போலும், அங்ஙனம் ஆசாரியனை வழிபடமாட்டாத அபக்குவர்க்கு இந்நூல் கொடுப்பினும் அநுபவஞ் சித்தியாது, எ-று.

உயிரானது உடம்பைத் தானாய் அபிமானித்துத் துன்பந்துடைத்தல் ஒப்பனைசெய்தல் முதலிய உபசாரங்களை அதற்குச் செய்வதுபோலும், அவர் திருமேனியைத் தம்தேகமாய் அபிமானித்துச் செய்யவேண்டும் உபசார மெல்லாஞ் செய்யவேண்டும் ஆகலின் 'உடற்குயிர்போல்' என்றும், இமையானது கண்ணைவிட்டு நீங்காதிருந்து அதன்கண் துரும்பாதி வந்து சார்வதற்கு முன்னே நின்று பாதுகாத்தல்போலும், இரவும் பகலும் விட்டு நீங்காதிருந்து அவனைத் துட்டமிருக முதலிய வந்து சார்வதற்கு முன்னே நின்று பாதுகாக்க வேண்டும் ஆகலின், 'கட்கிமைபோல்' என்றும், கூறினார்.

அதிபக்குவர் தேகாபிமானம் விட்டு அவனை மெய்ப்பொருளாகக் கருதினவர் ஆகலின், புலியாதிகண்மேற் செலுத்தினும் வீழ்வாரென்பது ஆயிற்று.

அக்கினிக்கும் பரிசனவேதிக்கும் விறகைச் சுடுதற்கும் உலோகங்களைப் பொன்னாக்குதற்கும் கூடுமே அன்றி வாழைத்தண்டையும் மட்கலத்தையும் அங்ஙனஞ் செய்யக் கூடாததுபோல், இந்நூலால் பக்குவர்க்கு ஞானம் விளங்குமே அன்றி அபக்குவர்க்கு விளங்காதென்பது அறிக.

Digitized by Google

இத்திருவெண்பாவால் இந்நூற்கு அதிகாரிகளின் இலக்கணம் அறிவித்தவாறு காண்க. (௧௫)

ஆலிங் கனத்திலை யைந்திணையும் பாடுவோன்
மாலின்ப வாரி மறிதிரைபோல் - காலப்பூக்
கிண்கிணிவாய்ச் செய்ததுபோற் கின்னரிப்பாட் டுல்
கொண்டவர்போற் கண்டவர்க் காகும். [லாசம்

(இ-ள்.) ஆலிங்கனத்திலே ஐந்திணையும் பாடுவோன்மால் இன்பவாரிமறி திரைபோல் எ-து,—மாதர் கூட்டரவிற்செய்யும் ஐவகை ஆலிங்கனத்தால் வரும் இன்பம் ஐந்திணையும் அநுபவித்தறிந்து ஒருவன் கூறிய பாட்டினைப் பாடும் ஓர் விடனுக்கு அக்கவி அருத்தத்தான் அவ்வின்பம் பெற்றான்போன்று உளத்தின் அம்மயக்க இன்பவாரி எழுந்து அலை மறிவதுபோலும்;

காலப்பூக் கிண்கிணிவாய்ச் செய்ததுபோல் எ-து,—உதயகாலத்துத் தாமரை அரும்பு கிண்கிணிவாய்ச் செய்து அலர்ந்தாற்போலும்;

கின்னரிப்பாட்டு உல்லாசம் கொண்டவர்போல் கண்டவர்க்கு ஆகும் எ-து,—மற்றொன்றினையுங் கேளாது ஒருவன் பாடும் கின்னரிப்பாட் டோசையையே உல்லாசமாய் உட்கொண்டவர்போலும் இந்நூலைக் கேட்டறிந்தோர்க்கே ஞானாநந்தம் உளதாம், எ-று.

ஐந்திணையும் பாடுவோனுக்கு அதனைப் பாடுந்தோறும் அவ்வின்பம் பெற்றான்போன்று உளத்து இன்பம் மேன்மேலெழுதலின் 'மறிதிரை' என்றார். அவனைப்போல் இந்நூல் கேட்குந்தோறும் இவர்க்கும் சிவாநந்தம் பெற்றார்போன்று உள்ளத்தில் மேன்மேல் சந்தோஷம் தோன்ற வேண்டும் ஆகலின், 'மாலின்பவாரி மறிதிரைபோல்' என்றும், முகமலர்ச்சி தோன்றவேண்டும் ஆகலின் 'காலப்பூக் கிண்கிணிவா

Digitized by Google

ய்ச் செய்ததுபோல்' என்றும், மற்றொன்றையுங் கேளாது இதனையே கேட்கவேண்டும் ஆகலின் 'கின்னரிப்பாட்டில்லாசங் கொண்டவர்போல்' என்றும் இங்ஙனம் உவமை கூறினார். ஆலிங்கன பரிசபேதத்தால் சுகமும் ஐந்து பேதப்பட்டதெனக் கொள்க. அஃது ஐந்தென்பது 'ஆலிங்கனம் ஐந்தும் அதரபானம் பதினொன்றும்' என்னுங் காமநூலிற் காண்க.

இத்திருவெண்பாவால் இந்நூல் கேட்கும் இலக்கணங் கூறியவாறு காண்க. (கசு)

வணங்காவுரைக்கு வணக்கமிலைத் தீங்கை
வணங்கிவாழ்த்தென்னில் வளமியா-வணங்குகினும்
எல்லார்க்குநன்றா யிருப்பதிலை யாதொன்றும்
எல்லார்க்கும் பொல்லா திலை.

(இ-ள்.) வணங்கா உரைக்கு வணக்கம் இலைத் தீங்கை வணங்கி வாழ்த்து என்னில் வளம் யா எ-து,—போதம் அடங்காது ஏமாப்பாற்கூறும் நூலுக்கு அடக்கமே இல்லை, தீமைகளைச் செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அடக்கங் கூறி இதனை இகழாது புகழுங்கள் எனின் அதனால் வரும் நன்மை யாதொன்றும் இல்லை;

வணங்குகினும் எல்லார்க்கும் நன்று ஆய் இருப்பது இலை யாது ஒன்றும் எல்லார்க்கும் பொல்லாது இலை எ-து—நன்மைகளைச் செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அடக்கங் கூறினும் யாவர்க்கும் நன்றாயிருப்பது இல்லை, இவைகள் அன்றி மற்றியாதோர் நூலாயினும் யாவர்க்கும் பொல்லாங்காய் இருப்பதும் இல்லை, எ-று.

அடங்காவுரையெனவே அடக்கங் கூறினும் அடக்கம் அன்றென்பது ஆயிற்று. தீங்கினைச் செறித்து அடக்கங்கூறிப் புகழ்ச் சொன்னமையால் வரும் நன்மை ஒன்றும் இன்றாயி

Digitized by Google

ற்று. நன்மைகள் யாவுஞ்செறித்து அடக்கங் கூறினும் பொருமை முதலியவற்றால் சிலரால் இகழப்படுதலின் 'எல்லார்க்கும் நன்ருயிருப்பது இலை' என்றும், பயன் இன்ருய்க்கூறும் யாதோர் நூலாயினுஞ் சிலர் அங்கீகரித்தலின் 'எல்லார்க்கும் பொல்லாதிலை' என்றுங் கூறினர். தீமைநன்மைகளை முற்கூறினமையால் 'யாதொன்றும்' என்பது இவைகட்குப் பொதுவாயிருந்த உலககதைகளைக் கூறும் நூல் எனக் கொள்க.

'உறை, என்பதுந் 'தீங்கு, என்பதும் ஆகுபெயர். 'தீங்கு' என்றமையான் நன்மை என்று வருவிக்கப்பட்டது. 'வணக்கம்'=அடக்கம். 'வளமியா' என்பது இகரக் குறுக்கம் ஆதலின் தளைதட்டாது என்பது காண்க.

இத்திருவெண்பாவால் இவைகள் இங்ஙனம் இருப்ப யாம் எங்ஙனம் அவையடக்கங் கூறுமாறென்று குறிப்பால் அவையடக்கங் கூறியவாறு காண்க. (கஎ)

அறைந்த பறைகுழற்கு மாடினர்க்கு மேற்க
மறந்தழுவார் வாய்ப்பாட்டு வாரா-திறங்கேளீர்
கூடக் கரைவதலாற் கூறிற் பயனில்லாப்
பாடற்கார் பார்ப்பார் பயன்.

(இ-ள்.) அறைந்த பறை குழற்கும் ஆடினர்க்கும் ஏற்கமறந்து அழுவார் வாய்ப்பாட்டு வாரா எ-து,—கரத்தால் அறையப்பட்ட மத்தளத் தொனிக்கும் இத்தொனிக்கு ஏற்பஊதுங் குழல் ஓசைக்கும் இவைகட்கு ஏற்ப நடனமிடுவோர்க்கும் ஏற்பத் தம்மை மறந்து அழும் மகளிரது அவ்வழுகையாகிய வாய்ப்பாட்டு ஒத்துவாராதது போலும் இந்நூல் தற்போதம் இழந்து நின்று கூறியது ஆகலின் எழுத்துமுதலிய ஐந்து இலக்கணங்களோடு ஒத்து வாராது. அஃது அங்ஙனம் ஆயினும் அதன்கட்கூறிய பொருள்தான் நன்குளதோ எனின்;

Digitized by Google

திறம் கேளீர் கூடக் கரைவது அலால் கூறின் பயன் இல்லாப் பாடற்கு ஆர் பயன் பார்ப்பார் எ-து.—இந்நூலின் பொருள் திறமையை நீர் கேட்பீராக, அஃதெங்ஙனம் எனின் இப்பொருளைக் கேட்போர் இப்பொருளோடுங் கூடத் தாமும் கரைந்து போவதேயன்றிச் சொல்லுமிடத்துத் தாமுந் தமக்கு வரும் இம்மை மறுமைப் பயன்களும் இல்லாத பாடற்கு யாவர் அருத்தம் பார்ப்பார், எ-று.

தாளமும் ஓசையுஞ் சரியொத்த நடனத்திற்குத் துன்பமேலீட்டால் தம்மை மறந்து அதன் மயமா யிருந்து அழுவார் அழும் ஓசை அவற்றோடு ஒவ்வாததுபோல் இன்பமேலீட்டால் தம்மை மறந்து இதன் மயமாயிருந்து கூறிய இப்பாடல் இலக்கணத்தோடு ஒவ்வாது என்பது குறிப்பால் அறியும்படி கூறினார். இதனது அருத்தம் போத வொழிவும் சிவானந்தப் பேறும் ஆகலினும் 'கூடக்கரைவது' என்றும், பயன் பெறும் போதம் ஒழிவதனால் 'பயனில்லாப்பாடல்' என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் சத்தத்திற்குப் பஞ்சவதிகார வழுவுண்டாயினும் அருத்தம் எல்லா நூல்களினது அருத்தங்கட்கு முடிவென்று கூறியவாறு காண்க.

போதவொழிவையுரை போய்த்தீண்டா பூதலத்தோர்
பாதமனங் கண்போலப் பற்றுமோ - நீதெளியின்
கண்ணாடி யிற்கடலைக் கைவசமாக் காட்டுதல்போல்
கண்ணாரி சன்னையைப் போற் காண்.

(இ-ள்.) போத ஒழிவை உரை போய்த் தீண்டா பூதலத்தோர் பாதம் மனம் கண்போலப் பற்றுமோ எ-து,—ஆன்ம போத ஒழிவில் தானாய் இருந்துள்ள சிவத்தை வேதாகம சாத்திரங்களால் அளவிட்டறியக் கூடாது, அஃதன்றிக் காலால் நடந்து சென்றும் மனத்தால் நினைத்தும் கண்ணால் பார்த்தும் இப்பூதலத்தோர் ஒரோர் பொருளை அறிந்து பிடிப்பதுபோல்

Digitized by Google

கருவிகளாலும் அதனை அறிந்து பிடிக்கக்கூடாது ஆதலின், அங்ஙனம் அறிந்து பற்றுவது அன்றி;

நீ தெளியின் கண்ணாடியில் கடலைக் கைவசமாக் காட்டுதல்போல் கண் நாரி சன்னையைப்போல் காண்க எ-து,— நீ அச்சிவத்தை அறியுமிடத்துச் சிறிதாகிய கண்ணாடியில் பெரிதாகிய கடலை மகவுக்குப் பிரத்தியக்ஷமாகக் காட்டுமாறுபோலும், ஓர் நாரி ஓர் புருடனுக்குக் கண் சைகையால் கலவிக்கு இடங்காட்டுமாறுபோலும் யாம் அதனை அறிவிக்குங் குறிப்பால் நீ அறிதி, எ-று.

போத ஒழிவை அப்போதத்தான் அறியும் கலைகளானும் கருவிகளானும் அறியக்கூடா தாகலின் 'உரைபோய்த்தீண்டா' என்றும், 'பாதமனங்கண்போலப் பற்றுமோ' என்றுங், கூறினார். பரிபூரண சிவத்தின் இலக்கண மெல்லாம் நன்றாய் விளங்கும்படி வேதாகம முடிவிற் கூறிய சில உபதேசமொழிகளை யெடுத்து இந்நூலிற் கூறுதலின் 'கண்ணாடியிற் கடலைக் கைவசமாக் காட்டுதல்போல்' என்றும் பூரணநோக்கம், மௌனமுத்திரை முதலிய குறிப்பான் அச்சிவத்தை அடைதற்கு உபாயம் அறிவித்தலால் 'கண்ணாரி சன்னையைப்போல்' என்றுங் கூறினார். (கக)

ஆனைக்கை போலபின வத்துவிதா நந்தமாம்
மோனத்தை வாக்குமன முட்டுமோ-ஞானத்தால்
காக்கை யிருந்தமனை கைமேற் பிறையென்ற
லாற்கருதி னீசிவமா வை.

(இ-ள்.) ஆனைக்கை போல் அபின அத்துவிதாநந்தம் ஆம் மோனத்தை வாக்கு மனம் முட்டுமோ எ-து,—பரிசம் அறியுங் கையும் கந்தம் அறியும் நாசியும் ஒன்றாயிருக்கின்ற யானையினது துதிக்கைப்போன்று பின்னம் இன்றிச் சிவமும் ஆன்மாவும் இரண்டற்றிருந்த அத்துவித மாகிய மோனாநந்தத்தை வாக்காற் கூறுங்கலைகளும் மனோபாவனைகளுந் தீண்டுமோ;

Digitized by Google

காக்கை இருந்த மனை கைமேல் பிறை என்றலால் ஞானத்தால் கருதின் நீ சிவம் ஆவை எ-து,—ஓர் மனையையும் பிறையையும் ஒருவனுக்கு ஒருவன் அறிவிக்குங்கால் காக்கையிருந்த மனையென்றும் கைவிரல்மேற் பிறையென்றும் இங்ஙனம் அறிவித்தலான் அவன் அறிவது போலும் யாம் சிவத்தைக் குறிப்பான் அறிவிக்கும் உபதேசங்களை ஞானத்தால் கூர்ந்து விசாரித்து அறிதியெனின் நீயும் அச்சிவம் ஆவை, எ-று.

கை நாசி என்று இரண்டுறுப்பாய் இரண்டு விடயங்களையும் வேறு பிரித்து அறிவதாயிருந்தும் பிரிபடாது அதுவே இதுவாய் இதுவே அதுவாய் இருப்பதுபோலச் சிவமென்றும் ஆன்மாவென்றும் இரண்டு பொருளாய் இரண்டு ஞானங்களும் வேறாயிருந்தும் ஐக்கியத்துப் பிரிபடாது அதுவே இதுவாய் இதுவே அதுவாய் இருத்தலின் 'ஆனைக்கைபோ லபினவத்துவிதம்' என்றார்.

மனைகள் பலவற்றையுங் கடந்து சென்று காக்கையிருந்த மனையை நீ யடைதி என்று ஒருவன் அறிவிக்க அறிதல்போல், கருவிகள் பலவற்றையுங் கடந்துசென்று நாததத்துவத்தில் முடிவில் நின்ற சைதன்னியம் நீ என்று அறிவிக்க அறிதலால், 'காக்கையிருந்தமனை' என்றும், ஒருவனுக்கு ஒருவன் பிறையை அறிவிக்குங்கால் விரல்மேற் பிறை என்று சுட்டிக்காட்டி அறிவிக்க அவ்விரல் நேரேநோக்கி அப்பிறையைத் தரிசித்தல்போல், நாதாந்தத்தின் முடிவில் நின்று நீ திருவருளை முன்னிட்டுக்கொண்டு சிவத்தைத் தரிசிக்கவேண்டும் என்று அறிவிக்க அம்முறையே சென்று சிவத்தைத் தரிசித்தலால், 'கைமேற் பிறை' என்றுங், கூறினார்.

கண்போலும் ஆன்மா, விரல்போலுந் திருவருள், பிறைபோலுஞ் சிவம், எனக் கொள்க.

இவ்விரண்டு திருவெண்பாவானும் மெய்ப்பொருளை அறிவித்ததற்கு உபாயங் கூறியவாறு காண்க. (உ0)

Digitized by Google

மூலையுண்ணி நீருண்ணு மோட்டெருமை மூடர்
சலமின்றிச் சந்துரைப்பார் தர்க்கர்-பலதாரை
வட்டிலே போலுமவர் மாயோக வாசகத்தைக்
கிட்டி னரகங் கிடீர்.

(இ-ள்.) மூலை உண்ணி நீர் உண்ணும் மோட்டெருமை மூடர் சலம் இன்றிச் சந்து உரைப்பார் தர்க்கர் எ-து,—பசுவினது விம்மிச்சுரந்த மூலையில் கடித்த உண்ணிபோலும், தடாகத்தில் நீர் அருந்தும் முதிர்ந்த எருமைபோலும், அறிவேதும் இன்றிய மூடர்போலும், நீர் இன்றிச் சந்தனம் உரைப்பார் போலும் ஆவார் தருக்கராயினோர்;

பல தாரை வட்டிலே போலும் அவர் மாயோக வாசகத்தைக் கிட்டின் நரகம் கிடீர் எ-து,—பல்தொளை வட்டிலைப் போலும் பலபடக் கூறுகின்ற அவரது மாயைக் கூட்டரவாகிய மொழிகளைக் கேட்பினும் நிரயம் என்று அறிவீர், எ-று.

மூலை உண்ணி பால் உண்ண அறியாது உதிரம் அருந்தல் போல் நூலால் சிவானந்தப்பேறு அடையாது இம்மைப் பயன் கோடலான் 'மூலை உண்ணி' என்றும், தடாகத்தில் தன் தாகந் தீர்க்கும் நீர் அருந்தாது அதனுள் வீழ்ந்து சேறுக்கிச்செல்லும் எருமைபோல் ஞானிகள்பாற் செல்லினும் அவர்கூறும் ஞானமொழிகளைக் கொள்ளாது தருக்கமாடி அவர் சித்தத்தைக் கலக்கிச் சேறலான், 'எருமை' என்றும், மூடர் யாவரேது நன்கு கூறினும் தாம் பிடித்தபிடி விடாது விற்றல்போல் தீதாயினும் தருக்கவலியால் தாம்பிடித்த பிடியை முற்றுஞ் சாதித்தலின் 'மூடர்' என்றும், சலம் இன்றிச் சந்துரைப்போர்க்குக் கைவருத்தமே அன்றிப் பயன் இன்றாவதுபோல் இவர் பலரோடுந் தருக்கமாடலான் வருதல் வாய் வருத்தமே அன்றிப் பயன் வேறு இன்றாகலின் 'சலம் இன்றிச் சந்துரைப்பார்', என்றும், பலதாரை வட்டிலின் நீர் தாரைகள்தோறுஞ் சேறல்

Digitized by Google

போல் ஓர்நெறி கூறுங்கால் அதனை முற்றுப்பெறக் கூடாது பல்நெறியாய் மலைவுபெறக் கூறலின் 'பலதாரைவட்டில்' என்றும், திருவருட்போதம் அன்றி மாயா போதத்தால் கூறலின் 'மாயோக வாசகம்' என்றுங் கூறினர்.

இதனால் கல்வி உடையோரேனும் பிரபஞ்சிகளினும் கேடென்பது ஆயிற்று. கல்வி பொருள் என்னும் இரண்டு செல்வங்களும் நல்லோர்பால் வரின் நன்மையும், தீயோர்பால் வரின் தீமையும், மேன்மேல் வளர்தலின் இவர் தீயர் என்பது ஆயிற்று. இவரது மொழிகளை உண்மையாகக் கொள்வோர்க்கும் தீதுவரும் ஆகலின் 'கிட்டினரகம்' என்றார்.

இத்திருவெண்பாவால் தருக்கவாதிகள் துர்க்குணமும் அவரது மொழிகளைக் கேட்கல் ஆகாது என்பதும் அறிவித்தவாறு காண்க. (உக)

குன்றழலி னொந்துநீர் தேடுங் குருடனைப்போல்,
கன்றுபசு வைப்பார்க்குங் காலம்போல் - ஒன்றொன்
றில்,—வேட்டவதி மோகி விடயம்போற் சற்குரு
வைத்,—தேட்டமதி பக்குவமாய்த் தேர்.

(இ-ள்) குன்று அழலின் நொந்து நீர் தேடுங் குருடனைப் போல் கன்று பசுவைப் பார்க்கும் காலம்போல் ஒன்று ஒன்றில் வேட்ட அதிமோகி விடயம்போல் எ-து,—முதிர் வேனிற் காலத்து மலைக்கண் படும் தீவெப்பத்தால் மெய்வருந்தி நீர் எங்குளதென்று தேடும் அந்தகனைப் போலும், ஆவின்கன்று தன் தாயைத்தேடும் காலம்போலும், விடயங்கள் பலவற்றுள்ளும் ஓரோர் விடயத்தை நச்சிய மிகுந்த அந்த விடயமோகி போலும்,

சற்குருவைத் தேட்டம் அதிபக்குவம் ஆய்த் தேர் எ-து ஞாநாசாரியர் எங்குளர் என்று தேடும் தேட்டமே அதிதீவிர தர பக்குவம் என்று அறிதி, எ-று.

Digitized by Google

அழலின் நொந்த குருடர் வெப்பத்துன்பந் தணிப்பான் நீர் தெரியாது தேடுமாறுபோல் மிகுந்தபக்குவர்க்குப் பிறவித்துன் பமாய்த் தோற்றலின் இத்துன்பந்துடைப்பான் ஆசாரியனை த்தெரியாது தேடலின் 'நீர்தேடுங் குருடரைப்போல்' என்றும் கன்று காலை மாலை ஆகிய காலத்துத் தன்தாயை மிகுந்த அன் போடுத் தேடல்போல் முற்காலம்போல் அன்றி இக்காலத்தில் பிரபஞ்சம் பொய்யாய்த்தோற்றி மிகுந்த அன்போடு ஞானா சாரியனைத் தேடலின், 'கன்றுபசுவைப் பார்க்குங்காலம்போல் என்றும், ஓர் விடயத்தை நச்சிய அதிமோகி அதனால் வரும் இன்பத்தைக் கருதிக் கருதி அவ்விடயம் என்று கிடைக்கு மோ என்று அதனையே தேடல்போல் பேரின்பத்தைக் கரு திக்கருதி இதனைக் கொடுக்கும் ஞானாசாரியனை என்றைக்கு அடைவோம் என்று அவனையே தேடலான், 'அதிமோகி விடயம்போல்' என்றுங் கூறினார், விடயமோகி போல் என் று கூட்டுக.

இத்திருவெண்பாவால் பக்குவ இலக்கணங் கூறியவாறு காண்க.

பதி நிச்சயங் கூறல்.

பெண்ணாணலியாய்ப் பிறந்து வளர்ந் தேயழியும்
எண்ணாத பேத மியல்பின்றிப்-பண்ணுங்கால்
காரணகத் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூல்
ஆரணமு மாகமமு மாம்.

(இ-ள்.) இயல்பு இன்றி எண்ணாத பேதம் பெண் ஆண் அலி ஆய்ப் பிறந்து வளர்ந்தே அழியும் பண்ணுங்கால் காரண கத்தா ஒருவன் உண்டு எ-று,—ஓர் இயல்பு இன்றி அந்த பேதங்களாயும் பெண்வடிவமாயும் ஆண்வடிவமாயும் இவ்வி[illegible] வகையும் கூடிய அலிவடிவமாகியும் தோன்றிநின்று அழிய[illegible] பட்ட இத்தேகாதி பிரபஞ்சத்திற்குத் தற்சுதந்தரம் இன்[illegible]

Digitized by Google

யால் தானே காரியப்பட மாட்டாது, ஆகலின், இதனை அநாதியிலே படைத்தற்கு நிமித்தகாரணனாகிய கருத்தன் ஒருத்தன் உண்டு; (அஃது எங்ஙனம் எனின்)

அவனைக் காட்டும் நூல் ஆரணமும் ஆகமமும் ஆம் எ-து,— அக்கருத்தனை அறிவிக்கும் நூல்கள் வேதாகமங்கள் ஆகும், (இவற்றான் அறிந்துகொள்ளுதி) எ-று.

காரியங்கள் உண்டாவதற்குக் காரணம் முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்று வகையாயிருக்கும். இவற்றுள், முதற்காரணம் மண், துணைக்காரணம் தண்டசக்கரம், நிமித்தகாரணம் குலாலன். நிமித்தகாரணனாகிய குலாலன், முதற்காரணமாகிய மண்ணைத் துணைக்காரணமாகிய தண்டசக்கரங்களைக்கொண்டு, கட கலசாதி காரியங்களை உண்டாக்குவன். அதுபோல், குலாலன் போலும் நிமித்த காரணனாகிய சிவன், மண்போலும் முதற்காரணமாகிய மாயையைத் தண்ட சக்கரம்போலுந் துணைக்காரணமாகிய தனது கிரியாசத்தியால், தநு கரண புவன போகங்களாகிய காரியங்களை உண்டாக்குவன். ஆகலினும், கட கலசாதி காரியங்களைக்கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் குலாலன் ஒருவன் உளனென்று அறிவதுபோலும் தநு கரணாதிகளைக்கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் கருத்தா ஒருத்தன் உளனென்று அறியவேண்டும். ஆகலினும், 'பண்ணுங்காற் காரணகத்தா ஒருவன் உண்டு" என்றார். மற்றைய நூல்கள் இவற்றைப்போல் உண்மையாய் அவனை அறிவிக்கமாட்டா ஆகலின், 'அவனைக்காட்டுநூலாரணமு மாகமமுமாம்' என்றார். பெண்ணாண் என்னும் பன்மைபோல் அலியையும் பன்மையாகக் கூறினமையால் பெண்ணாணுக்குரிய குறிகள் இருவகையும் இன்றிய புல்முதலியனவும் புழுமுதலியனவும் 'அலி' எனக்கொள்க. 'பண்ணுங்கால்' என்னும் எழனுருபை நான்கனுருபாகக்கொள்க.

Digitized by Google

(உ-ம்.) சித்தியார்,—'காரியங் காரணங்கண் முதற்றுணை நிமித்தங் கண்டாம், பாரின்மண் டிரிலக பண்ணு மவன்முதற் றுணை நிமித்தம், தேரின்மன் மாயையாகத் திரிகைதன் சத்தியாக, ஆரியன் குலால ஞய்நின் ருக்குவ னகிலமெல்லாம்,' என்பதனுற்காண்க.

இத்திருவெண்பாவால் பதி ஒன்று உளதென்று அறிவித்தவாறு காண்க. (உ௩)

தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா
துன்னிலொழி வாமுதிப்பீ றொன்றமிலைச் - சந்நிதிக்
அஞ்சுதொழி லாமதனை யாநந்த வாக்காலே [கே
கிஞ்சளவு கேட்கலுமா கும்.

(இ-ள்.) தன்னை அறியாது வேறு உண்டாய்த் தான் அறியாது உன்னில் ஒழிவு ஆம் உதிப்பு ஈறு ஒன்றும் இலை எ-து நீர் கூறிய சிவம் தன்னை அறிந்துகொண்டு இருக்குமோ! எனின், மலரகிதமா யிருத்தலின் அது தன்னை அறியாது. மற்றோர் பொருளைத்தான் அறிந்துகொண்டு இருக்குமோ ? எனின், தனது பூரணத்தில் சகலமும் அடங்கியிருக்கும் ஆகலின் தனக்கு வேறாய் ஓர் பொருளுண்டாய் அதனை யறியாது. நினைவோடுதான் கூடி யிருக்குமோ ? எனின், நினைப்பு உண்டெனின் மறப்பு உண்டு ஆகலின், அது நினைப்பு மறப்பும் இன்றிய நிருவிகாரி. அதுதான் ஓர் காலத்து உண்டாயதோ எனின், உற்பத்தி உண்டெனின், நாசமும் உண்டு, அஃது அநாதி நித்தியம் ஆகலின் உற்பத்தி நாசங்கள் ஒன்றும் இல்லை;

இங்ஙனம் மலரகிதமாய்ப் பரிபூரணமாய் நிருவிகாரியாய் அநாதி நித்தியமாய் இருந்துள்ள அச்சிவம் எங்ஙனம் மாயையைக் காரியப்படுத்தும் எனின்,

சந்நிதிக்கே அஞ்சு தொழில் ஆம் அதனை ஆநந்தவாக்காலே கிஞ்சு அளவு கேட்கலும் ஆகும் எ-து,—அச்சிவத்தின் சந்நி

Digitized by Google

திக்கண்ணே பஞ்சகிருத்தியங்கள் உளவாம். அக்கிருத்தியத்தை ஆன்மாக்கண்மேல் வைத்த காருணியத்தால் மௌனநந்தந் தரும்பி அதுகூறும் ஆநந்தவாக்கால் சிறிதளவு கேட்கலும் ஆகும், எ-று.

சூரியன் இச்சா எத்தனம் இன்றி இருக்கவும், அவன் சந்நிதியில் ஒன்று முகையாயும், ஒன்று அலர்ந்தும், ஒன்று உலர்ந்தும், தாமரை முத்தொழிற் படல்போல் சிவசந்நிதானத்திலே மாயையில் சிருட்டியாதி தோற்றலால், 'சந்நிதிக்கே அஞ்சு தொழிலாம்' என்றார். ஆநந்தவாக்கு, வேதாகமங்கள். 'கிஞ்சளவு கேட்கலுமாகும்' என்றமையால், பஞ்சகிருத்தியத்தின் பெருமையை அளவிடக் கூடாதென்பது ஆயிற்று. (உ௬)

உதியா துளதாகி யோங்கிப்பே ராமல்
அதிருக்கு மங்குறைந்தா காமல்-பதையாத
ஆகாய முங்கா லும் போல வசைவற்ற
தேகாண் பரிபூ ரணம்.

(இ-ள்.) உதியாது உளது ஆகி ஓங்கிப்போமல் அதிருக்குமம் குறைந்து ஆகாமல் எ-து,—தான் ஒன்றினால் உற்பத்தியாகாது எக்காலமும் உள்ளதாய்க் கருவிகள் முப்பத்தாறையும் கடந்திருப்பதாய்ப் போக்குவரவு அற்றதாய் நுண்ணிய பொருள்கட்கெல்லாம் நுண்ணிதாய் ஓர்காலத்தில் குறைந்து ஓர்காலத்தில் வளராததாய்;

பதையாத ஆகாயமும் காலும் போல அசைவு அற்றதே பரிபூரணம் எ-து,—முடிவு காலத்தில் சலனம் இன்றாய் வாயுவும் ஆகாயமும் பிரிவற்று ஒன்றா யிருப்பதுபோலச் சடசித்துக்களாய் உள்ள பிரபஞ்சமும் தானும் பிரிபடாது ஒன்றாய் அசைவற்று இருப்பதே அச்சிவத்தினது பரிபூரண சொரூபம், எ-று.

தநுவாதிகளை மாயையில் தோற்றுவிப்பதும், ஆன்மாக்களை அவற்றில் கூட்டுவிப்பதும் அஃதாகலினும்' அதற்கு மேல்

Digitized by Google

மற்றொன்று இன்மையானும், 'உதியாததாகி' என்றும், அசலம் ஆகலின் 'பேராமல்' என்றும், யாவைக்கும் தாரகமாய் உட்புறம்பாய் இருந்தும் ஒன்றோடும் தாக்கற்றிருத்தலின், அதிசூக்குமம்' என்றும், அகண்டாகாரமாய் இருத்தலின், 'குறைந்தாகாமல்' என்றும், ஆகாயத்தில் வாயு சரிக்கும்போது அவ்வாகாயத்தையும் வாயுவையும் இவ் வாயுக்கண் தோன்றும் சீதள உட்டண முதலியவற்றையும் பிரித்துக் காணப்படும். அவற்றின் நடுநின்ற வாயு அந்த ஆகாயத்தில் அசைவற நிற்பின் முன் தோன்றிய பகுப்புகள் இன்றி அவ்வாகாயந் தானாயிருக்கும். அவைபோலும் பெத்தகாலத்து முப்பொருள்கட்கும் நடுநின்ற ஆன்மபோதம் சீவிக்கும் இடத்துச் சிவம் என்றும், பசு என்றும், பாசம் என்றும், பிரித்தறியப்படும். முத்திகாலத்து அவ்வான்மபோதம் சீவியாது சிவத்துள் அடங்கின் முன்தோற்றிய பகுப்புகள் ஒன்றுந் தோற்றாது சிவந் தானாய் இருக்கும் ஆகலின், 'ஆகாயமுங் காலும் போல வசைவற்றதே பரிபூரணம்' என்றுங் கூறினார். காண்—முன்னிலை அசை.

இவ்விரண்டு திருவெண்பாவானும் பதி இலக்கணங் கூறியவாறு காண்க. (௨௫)

பதியானது சடசித்துக்கட்கெல்லாம் இடங்கொடுத்துக்கொண்டு எல்லாம் தானாயிருக்கும் என்றீர்; ஆனால், அட்டமூர்த்த முதலிய வடிவங்களும் அத்திருமேனிகளை வழிபடுவோர்க்கு அது கொடுக்கும் பயன் முதலியவும் யாவை எனின் மேற்கூறுகின்றார்.

எட்டுருவு மைந்தொழிலு மிச்சைவடி வும்பயனும்
சுட்டரிய பூரணமுஞ் சுட்டுதலும்-நிட்டைகளும்
உன்னிழப்பிலின்ப முதித்தொடங்கு மொன்றிரண்டு
தன்னருட்கே யாமத் தனை. [ம்.

Digitized by Google

(இ-ள்.) எட்டு உருவும் ஐந்து தொழிலும் இச்சை வடிவும் பயனும் சுட்ட அரிய பூரணமும் சுட்டுதலும் எ-து,—பிரபஞ்சம் எல்லாம் ஓர்வடிவமாய்க்கொண்டருளிய அட்டமூர்த்தமும் ரூபாரூபமாகிய சதாசிவம் செய்யும் ஐந்தொழில்களும், தமது சுதந்தர இச்சையால் திருமேனி கொண்ட உருவமாகிய மயேசுர வடிவும், இவ்வடிவுகளை வழிபடுவோர்க்கு இவரால் கொடுக்கப்படும் பதப்பிரயோசனங்களும், இவ்வடிவங்கள் எல்லாம் கடந்து ஆன்மபோதத்தால் சுட்டி அறிதற்கு அரிய அருபமாகிய பரிபூரண சொரூபமும், சுட்டி அறியும்படி எழுந்தருளி வந்த குருவடிவும்;

நிட்டைகளும் உன் இழப்பில் இன்பம் உதித்து ஒடுங்கும் ஒன்று இரண்டும் அத்தனை தன் அருட்கே ஆம் எ-து,—வீட்டையும் நெறியாகக்கூறிய உபாய நிட்டைகளில் தோற்றுவனவும், உனது போத ஒழிவில் ஆனந்தந் தோற்ற அதனை அறிந்து அதனுள் அதீதப்படும் அத்துவிதம் என்பதும், இங்ஙனம் அதீதப் படுவதன்முன் தோற்றும் துவிதம் என்பதும் ஆகிய இவை அத்தனையும் அச்சிவத்தினது அருட்சத்தியால் உண்டாம், எ-று.

'எட்டுரு' என்றது, பஞ்சபூதங்களும் சந்திர சூரியரும் ஆன்மாவும் எனக்கொள்க.

இத்திருவெண்பாவால் பதியினது அருட்சத்தி இலக்கணங் கூறியவாறு காண்க. (௨௬)

உனையுணர்த்திற் பாச முதவி யுடையோன்
தனையுணர்த்தி னீயே தலமாம்-கனலை
விறகிடமாய்க் காணிலதன் வெம்மையைவேறாக்கி
அறியகிலாப் போலதுநீ யாம்.

(இ-ள்.) உனை உணர்த்தின் பாசம் உதவி உடையோன் தனை உணர்த்தின் நீயே தலம் ஆம் எ-து,—பசுவாகிய உன்னை

அறிவிக்கு மிடத்தும், உன்னை அநாதியிலே மறைத்து நின்ற பாசத்தை அறிவிக்கு மிடத்தும், பெத்தமுத்தி என்னும் இரண்டு காலத்தும் உயிர்த்துணையாய் இருந்து உனக்கு உபகரிக்கும் பதியை அறிவிக்கு மிடத்தும், நீயே மற்றைய இரண்டிற்கும் இடமாகும்; அஃதெங்ஙனமெனில்,

கனலை விறகு இடம் ஆய்க் காணில் அதன் வெம்மையை வேறு ஆக்கி அறியகிலாப்போல் அது நீ ஆம் எ-து,—அக்கினியைக் காட்டத்தினிடமாய்க் கடைந்து காணின் அவ்வக்கினி வேறு உட்டணம் வேறாய்ப் பிரித்து அறியக் கூடாதது போலச் சுவாநுபவத்தால் மலத்தினை நீங்கி உன்னை உள்ளபடி அறியின் நீவேறு சிவம் வேறாய்த் தோற்றாது ஆகலின், அச்சிவம் நீயாகும், எ-று.

காட்டத்தில் அடங்கியிருந்த தீ கடைந்தபோது தோற்றினாற்போல் முன் மலப்பெத்தத்தால் தோற்றாதிருந்த ஆன்மா இப்போது சுருதி குரு சுவாநுபவத்தால் தோற்றலின், 'கனலை விறகிடமாய்க் காணில்' என்றும், அதில் தோற்றிய தீயில் உட்டணமும் பிரகாசமும் இருத்தல்போல் தன்னை உள்ளபடி கண்ட ஆன்மாவிடத்து ஆநந்தமும் அவ்வானந்தம் மேன்மேல் விளைவதும் இருத்தலின், 'அதன் வெம்மையை வேறாக்கி யறியகிலாப்போல்' என்றும், இரண்டிற்கும் 'நீயேதலம்' என்றுங் கூறினார். அக்கினியைப்போல் பசு, சூடுபோல் சிவம், பிரகாசம்போல் பாசம், என அறிக. ஆநந்தம் சிவம், ஆநந்தத்தை அநுபவிப்பது ஆன்மா, ஆநந்தத்தை விளைப்பது மலம் என அறிக. தத்துவமசி வாக்கியார்த்தமும் இங்ஙனங் காண்க என்று 'அதுநீயாம்' என்றார்.

இத்திருவெண்பாவால் முத்தியிலும் மும்முதலும் பிரிவற்றிருக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (உஎ)

விடாதவத்தை மூடி விடம்புசித்தாற் போலச்
செடாதிகளுஞ் சேதனனுஞ் சேர்ந்து-படாதுபடும்

Digitized by Google

அச்சைக் கழற்றி னருள்வழிநீ யவ்வழியுன்
இச்சைப் பொருண்மலமென் றெண்.

(இ-ள்.) விடாது அவத்தைமூடி விடம் புசித்தால் போலச் சடாதிகளும் சேதனனும் சேர்ந்து படாதபடும் எ-து,—அணுவளவேனும் இடைவிடாது அவத்தைகள் தோறும் வேறு வேறாய் இருந்துள்ள உடம்பு முதலிய கருவிகளும் ஆன்மாவும் கலந்து விடமருந்தினாற்போல் படாததுன்பங்கள் எல்லாம்படும்;

ஆகலின் இங்ஙனம் என்றறிந்து

அச்சைக் கழற்றின் அருள்வழி நீ அவ்வழி உன் இச்சைப் பொருள் மலம் என்று எண் எ-து,—அந்த அவத்தைகளாகிய உடம்புகளை நீங்குதி எனின், நீ அருளிடம் ஆவை, அவ் வவத்தைகளிடம் உன்னால் இச்சிக்கப்பட்ட பொய்ப்பொருள்கள் அவைதன்றி உன்னை வாதிக்கும் மலமும் அவையென்று அறிதி எ-று.

சாக்கிராவத்தையில் இருக்கும்போது அதனுள் தோன்றும் கருவிகள் யாதொன்று யாதொன்று அடுத்தது அதனதன் மயமாயும், அதனதன்கணின்று சொப்பனாதிகளில் செல்லும்போது ஆண்டாண்டுத் தோன்றும் கருவிகள் மயமாயும், ஈண்டு வரும்போதும் அந்த அவத்தைகள் தோறும் முற்கூறிய கருவிகளைச் சார்ந்து வரலானும் அந்த அவத்தைகளைவிட ஆன்மாவிற்கு வேறிடம் இன்மையானும் 'விடாதவத்தைமூடி' என்றார். விடம் அருந்தினவனை அவ்விடம் வாதிப்பதுபோல் அவத்தை தன்னைச்சேர்ந்த ஆன்மாவை வாதித்தலான் அங்ஙனங் கூறினார். உடம்பும் விடயமும் ஆகிய இச்சைப் பொருளால் மற்றை அவத்தைகள் மேன்மேல் தொடர்தலின் எல்லாவற்றையுங் கூட்டி 'அவ்வழியுன் னிச்சைப்பொருள்' என்றார். யாதோரவத்தை அடுத்தது அந்த அவத்தை வடிவாய் ஆன்மா இருத்தலின் அதனை 'அச்சு' என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஆன்மா சார்போதன் என்பதும் இச்சார்போதத்தால் துன்பமே அன்றி இன்பம் இன்று என்பதும் அறிவித்தவாறு காண்க. (உ௲)

தன்னையறி வார்க்கெதிருந் தானும் பயனுமிலை
என்னிற் சிவனையறி வென்போமோ-சின்னாத
தீதகற்று மாற்றொளிபோற் றேய்ந்துசிவமாயிருக்கப்
போதகத்தை நாமொழிவிப் போம்.

(இ-ள்.) தன்னை அறிவார்க்கு எதிரும் தானும் பயனும் இலை என்னின் சிவனை அறிவு என்போமோ எ-து,—கருவிகள் முப்பத்தாறையும் நீங்கித் தன்னை உள்ளபடி உணர்ந்தோர்க்கு முன் அறிவிற்கு எதிரீடாய்த் தோன்றின கருவிகளும் இல்லை, தேகமாகிய தானும் இல்லை, இத்தேகத்தால் அநுபவிக்கும் விடயப் பயனும் இல்லையென்று வேதாகமங்கள் கூறும் எனின் அவ்வான்மாவில் அக்கினிக்கு உட்டணம்போல் பிரிபடாதிருந்த சிவத்தை எதிரிட்டு அறியத் தொடங்கின் என்ன விபரீதமாய்ப் போமோ (யாம் அறிகிலோம்)

சின்னாத தீது அகற்றும் மாற்று ஒளிபோல் தேய்ந்து சிவம் ஆய் இருக்கப் போதகத்தை நாம் ஒழிவிப்போம் எ-து,—ஞானநாதனே? புடம்போட்டுக் கருமசம் அகற்றும் பொன்னுக்கு மாற்றொளி மிகுதல்போல் உன் போதங்குறைந்து நீ சிவப்பிரகாசந்தானா யிருக்க நானா உபாயங்களானும் அப்போதத்தை யாம் ஒழிவிப்போம், (யாம் ஒழிவித்தபடியே நீ ஒழிந்து போதி,) எ-று.

பொன்னும் கல்லும் சரியொத்தபோது இருபுறனும் சாயாது மேல்முள் நேரேநிற்கும் கீழ்முள்போலத் தன்னை உள்ளபடி உணர்ந்தோனுக்குக் கேவல சகலங்களில் சென்று அதன் அதன் மயமாய் இருந்த அறிவு அவைகளைச் சாராது பிரிந்து அருள்நாட்டத்தில் அசைவற நிற்றலால், 'தன்னையறிவார்க்

கெடிருமில்லை' என்றும், தேகம் தானுயிருந்த அறிவு அதனைப்பிரிந்து அறிவாய் நிற்றலால், 'தானுமில்லை' என்றும் அருட்பூரணம் என்றைக்கு விளங்குமோ என்று அவ்வருள் மேல் இச்சையைவைத்து விடய இச்சையை நீங்கி நிற்றலால், 'பயனுமில்லை' என்றுங் கூறினர்.

புடம் போடுந்தோறும் இடைகுறைந்து மாற்று உயர்தல் போலத் தற்போதத்தால் சிவத்தை எதிரிட்டு அறியாது அறிந்து அசைவற நிற்குந்தோறும் அப்போதங்குறைந்து சிவப்பிரகாசம் மேலிடலால் 'தீதகற்று மாற்றொளிபோல்' என்று உவமை கூறினர்.

இத்திருவெண்பாவால் சிவத்தை எதிரிட்டு அறியக்கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (உ௬)

பூரணவா னந்தமாந் தானே புறம்புபால்
வாரியின்மீன் போன்ற மலவாழ்வைப்- பாரீர்
உதியாது நின்ற வொளியை யிருளாக்கும்
அதுகாணு மக்கினித்தம் பம்.

(இ-ள்.) பூரண ஆநந்தம் ஆம் தானே புறம்பு பால் வாரியில் மீன்போன்ற மல வாழ்வைப் பாரீர் எ-து,—உள் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்று கூறப்பட்ட எவ்விடத்தும் நிறைந்துள்ள பரிபூரண சுகமாகிய சிவந்தானே அதனைவிட்டு நீங்காத ஆன்மாவிற்குப் புறம்பு, பாற்கடலில் சஞ்சரித்தும் அப்பாலைப் புசிக்க அறியாது செந்துக்களைப் புசிக்கும் மீன்போலும் அப் பூரணாநந்தத் திருந்தும் அதனை அநுபவிக்க அறியாது மாயாமலமாகிய விடயங்களை அநுபவிக்கும் இந்த ஆன்மாக்களினது மலவாழ்க்கையைக் கண்டீர்கொலோ; (அஃதன்றி)

உதியாது நின்ற ஒளியை இருள் ஆக்கும் அது அக்கினித்தம்பம் எ-து,— உதய அத்தமனம் இன்றி எக்காலத்தும் ஓர் இயல்பாய் நின்ற ஞானசூரியனைத் தெரியவொட்டாது இருள்

போற் காட்டும் அது அக்கினித் தம்ப மந்திரம்போலும் ஆன்மாவை அநாதியே மறைத்திருந்த ஆணவமானது, எ-று.

கூகைக்கு வழிக்கண் இருந்த குற்றத்தால் சூரியப் பிரகாசம் இருளாய்த் தோற்றியதுபோல் ஆணவமலக் குற்றத்தால் ஆன்மாவிற்கு ஞானவொளி இருளாய்த் தோன்றினமையால், 'ஒளியை யிருளாக்கும்' என்றும், அக்கினியோடு மந்திரம் அபின்னமா யிருந்து அவ் வக்கினி முழுது மறையாது அதனது சூட்டை மறைத்ததுபோல் ஆன்மாவோடு ஆணவம் அபின்னமா யிருந்து அவ் வான்மா முழுது மறையாது அதனது ஞானத்தை மறைத்தலான், 'அதுகாணு மக்கினித்தம்பம்' என்றுங் கூறினர். காணும்—அசை.

இத்திருவெண்பாவால் மலத்தடையால் ஆன்மாவிற்கு ஆநந்தமும் திருவருளும் தோன்றாதிருந்தன என்று அறிவித்த வாறு காண்க. (௬0)

கடல்சிவநீ ரான்மா வுப்புமலங் கன்மம்
அடர்வாயுப் போத மலைகாண்-இடைவிடா
தவ்வாதி யுட்கரண மைம்பொறியிற் பம்பரம்போல்
இவ்வா றுனைச்சுழற்று மெண்.

(இ-ள்.) கடல் சிவம் நீர் ஆன்மா உப்பு மலம் அடர்வாயு கன்மம் அலை போதம் எ-து,—கடல்போலுஞ் சிவம், அதனுள் நீர்போலும் ஆன்மா, அந்நீருள் பிரிபடாதிருந்த உப்புப்போலும் ஆணவம், அந்நீரின்மேல் வீசுங் காற்றுப்போலும் கன்மம், அக்காற்றான் எழும் அலைபோலும் போதம், (ஆகிய இவற்றுள்)

இடைவிடாது அவ்வாதி உட்கரணம் ஐம்பொறியில் பம்பரம்போல் இவ்வாறு உனைச்சுழற்றும் எண் எ-து,—காற்றைப் போன்ற கன்மத்துக் கீடாய் இச்சா ஞானக்கிரியைகள் பஞ்சமூர்த்திகளைச் செலுத்த இப்பஞ்ச மூர்த்திகள் அகாரமுதலிய

Digitized by Google

அக்கரங்களைச் செலுத்த இந்த அக்கரங்கள் மனமுதலிய உட்கரணங்களைச் செலுத்த இவ்வுட்கரணங்கள் ஐம்பொறிகளிடத்தும் இடைவிடாது உன்னைப் பம்பரச்சுழல்போலும் இங்ஙனம் எக்காலும் சுழற்றும் என்று அறிதி, எ-று.

அவ்வாதிகளைக் கூறினமையால் இவற்றிற்கு முதற்காரணமாகிய இச்சா ஞானக்கிரியை முதலிய வருவிக்கப்பட்டன. காற்றான் அலை எழல்போல் ஆன்மாக்கள் கன்மத்துக் கீடாய்ப் போதம் பலபடவிரிதலின் அங்ஙனங்கூறினார். காண்-அசை.

இத்திருவெண்பாவால் திருவருள் ஆன்மாக்களைக் கன்மத்துக்கீடாய் நடத்துமாறும் அவ்வான்மாக்கள் கரணங்களோடுங் கூடி இந்திரியவழிச்சென்று விடயங்களைப்புசிக்குமாறும் இங்ஙனம் என்று அறிவித்தவாறு காண்க. (கூ௪)

மண்ணாதி சத்தாதி வாக்கு மனமாதி
கண்ணாதி நாதாந்தங் கண்டகன்ற-உண்மை
தனையணுவென் றேயுணர்த்துஞ் சார்பினையுங்கண்ட
உனையறிவென் றுள்ளே யுணர்.

(இ-ள்) மண் ஆதி சத்தாதி வாக்கு மனம் ஆதி கண் ஆதி நாதாந்தம் கண்டு அகன்ற உண்மைதனை எ-து,—பிருதிவி முதலிய பஞ்சபூதங்களும், சத்தாதி விடயங்களும், வாக்காதி கன்மேந்திரியங்களும், மனமாதி அந்தக் கரணங்களும், சட்சுவாதி ஞானேந்திரியங்களும், காலமாதி வித்தியா தத்துவங்களும், சுத்தவித்தை ஆதி நாதம் ஈறாய்ச் சொல்லப்பட்ட சிவதத்துவங்களும், ஆகிய இம் முப்பத்தாறையும் அடிதொடங்கி வேறு வேறாய் ரூபகதரிசனம்பண்ணி அறிந்து, அவையெல்லாம் தான் அன்றென்று நீங்கி, அவற்றின் முடிவில் நின்ற சைதன்னியத்தை;

அணுஎன்றே உணர்த்தும் சார்பினையும் கண்ட உனை அறிவு என்று உள்ளே உணர் எ-து,—ஆன்மா என்று உனக்கு

Digitized by Google

அறிவிக்கும் திருவருளையும், அவ்வருளால் முன்கண்டு நீக்கிய கருவிகள் இவை என்றும், கண்ட உன்னை அறிவென்றும் உனக்குள்ளே அறி, எ-று.

கருவிகள் முப்பத்தாறும் ஒன்றை ஒன்று அறியாமை யானும், தத்தம் குணங்களைத் தாம் அறியாமையானும், காட்சி கண்ணை அறியாததுபோல் அவைகள் ஆன்மாவை அறியா ஆகலானும் கண் காட்சிகளை அறிவதுபோலக் கருவிகளை ஈது ஈதென்று பகுத்து அறிந்து நீங்கிநின்றது ஆன்மா ஆகலானும், 'நாதாந்தங் கண்டகன்ற வுண்மை தனை' என்றார். தன்னால் அறியப்பட்ட கருவிகளைச் சடமென்றும் அவற்றைத் தனக்கு அறிவித்தது அருளென்றும், அக்கருவிகள்போல் சடமும் அன்றித் திருவருளைப்போல் பேரறிவும் அன்றி நின்று அறிந்த அறிவு தான் என்றும், தன்னையும் பாசத்தையும் திருவருளையும் அவ்வருளால் கண்டமையால் 'உணர்த்துஞ் சார்பினையும்' என்றார். தத்துவங்களை எல்லாம் பகுத்துக் கூறினமையால் வித்தியாதத்துவம் வருவிக்கப்பட்டது. அறிவோடுங் கூடி அறிவாயிருத்தலின் ஆன்மாவையும் அறிவென்றார்.

இத்திருவெண்பாவால் ஆன்மா ஈதென்று அறிவித்தவாறு காண்க. (௧௨)

அஞ்சுதொழி லாவதுவே யஞ்சவத்தைக் கிஞ்சலிலா
அஞ்சிடத்துங் கொள்ளிவட்ட மாகவே-பஞ்சவன்ன
வைத்த படிகம்போன் மாறு துனைமயக்கல் [ம்
சித்திரக்கூத் தாகத் தெளி.

(இ-ள்.) அஞ்சுதொழில் ஆவதுவே அஞ்சு அவத்தைகிஞ்சல் இலா அஞ்சு இடத்தும் கொள்ளிவட்டம் ஆகவே எ-து,— சிவனது பஞ்ச கிருத்தியங்கள் யாவை எனின், சாக்கிர முதலிய அஞ்சவத்தைகளுமாம். சுருக்கமில்லாத இவ் வஞ்சவத்தைகளிடத்தும் கொள்ளிவட்டம் போலாக அதிசீக்கிரமாய் மாறி மாறி வரச் சுழற்றி;

Digitized by Google

பஞ்சவன்னம் வைத்த படிகம்போல் மாருது உனை மயக்கல் சித்திரக் கூத்து ஆகத் தெளி எ-து,—வைக்கப்பட்ட பஞ்சவன்னத்தின் மயமாம் படிகம்போல நீ சேர்ந்த அவத்தையாவது அதன் மயமாக்கி இடையருது உன்னை மயக்குதல் அவனது அழகிய திருக்கூத்தாக அறிதி, எ-று.

முப்பத்தாறு கருவிகளோடு ஆன்மா தேகபோகங்களை அறிதலின் சாக்கிரத்தைச் சிருட்டியாயும், இச்சாக்கிரத்தில் புசித்த வாசனை சொப்பனத்தும் அறிந்து நிற்றலான் இதனைத் திதியாயும், இச்சொப்பனம்போல் சிறிது நிழலெழத்தோன்றி மறைதலால் சுழுத்தியைச் சங்காரமாயும், பிராணவாயு இயக்கம் இன்றி ஒன்றுந் தோன்ருது இருத்தலால் துரியத்தைத் திரோபவமாயும், அதீதம் கருவிகள் ஏதும் இன்றி ஆணவ இருளாயிருந்ததாயினும் அதன் நிமித்தமாய் மாயையில் தநுவாதி கொடுத்தல் இருவினை ஒப்புவருவித்தல் ஆசாரிய மூர்த்தமாய் வந்து உபதேசித்தல் முதலிய அநுக்கிரகம் பெறுதலின் இவ் வதீதத்தை அநுக்கிரகமாயுங் கூறினர்.

'கிஞ்சலிலா' என்று விதப்பான், உடல், தோன்றி நின்று அழிவது, சிருட்டி திதி சங்காரம். உயிருள் மயக்கமும் தெளிவும் வருவன திரோபவ அநுக்கிரகம். இங்ஙனம் உடலின் மூன்றும் உயிரின் இரண்டுமாக வருவனவும்; ஓர் இந்திரியத்தில் ஆன்மாபிரவேசித்தல் சிருட்டி, அதனால் அறியும் விடயத்தை அநுபவித்தல் திதி, அவ்விடயமயமாய் அழுந்துதல் சங்காரம், அதனில் ருசிப்பித்தல் திரோபவம், அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகம், இங்ஙனம் இந்திரியங்கள் தோறும் வருவனவும்; மனத்தான் ஓர் பொருளை நினைத்தல் சிருட்டி, அப்பொருளில் பிரியம் பிறத்தல் திதி, அஃது எப்போது வருமென்று நினைத்து நிற்றல் சங்காரம், அப்பொருளில் மயங்குதல் திரோபவம், அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகம், இங்ஙனம் கரணத்தில் வருவனவும்; இவைமுதலிய பெத்த

Digitized by Google

த்தில் வரும் பஞ்ச கிருத்தியங்களும், முத்தியில் அருள் வடிவமாதல் சிருட்டி, ஆநந்தப்பேறு திதி, இதில் அதீதப்படுதல் சங்காரம், ஞாதுரு ஞானம் ஞேயமென்னும் மூன்றுந் தோன்றுதிருத்தல் திரோபவம், இவை நான்கும் எக்காலமும் விளங்கல் அநுக்கிரகம், ஆகிய இம்முறையே வருவனவுங் கொள்க.

இத்திருவெண்பாவால் பஞ்சகிருத்தியத்தால் அவத்தைகள் நிகழ்வன அறிவித்தவாறு காண்க. (௩௩)

இந்த அவத்தைகள் ஒன்றுந் தோன்றாது ஒழிக்கக்கூடாதோ? எனின், மேற்கூறுகின்றார்.

மாயா விகார மதுபானம் போன்றுமயக்
கோயாத துன்னு லொழியுமோ - நீயதுவாய்ப்
போகாம லாடும் பவுரியவன் பொய்க்காட்சி
ஆகாது போலே யறி.

(இ-ள்.) மாயாவிகாரம் மதுபானம் போன்று மயக்கு ஓயாது அது உன்னால் ஒழியுமோ எ-து,—முற்கூறிய அவத்தை மாயா காரியமாகிய கருவிக் கூட்டங்களினது சேட்டை, அது மதுபானங் கொண்டவனது நற்குணத்தை மாறுபடுத்தித் தனது லகிரி மேலிட்டு அவனை மயக்குதல்போன்று உனது ஞானகுணத்தை மாறுபடுத்தித் தனது குணமேலிட்டு உன்னை ஒழிவறநின்று மயக்கும், அதனை உன்னால் ஒழிக்கக் கூடுமோ;

ஆனால் நீர் இங்ஙனங் கூறிய ஆற்றான் அதனை ஒழிக்கவேண்டாவோ? எனின், அதனை ஒழியாது ஒழித்தற்கு உபாயம் உண்டு, அஃது எங்ஙனம் எனின்,

நீ அது ஆய்ப் போகாமல் ஆடும் பவுரியவன் பொய்க்காட்சி ஆகாதுபோலே அறி எ-து,—ஆடப்பட்ட ஓர் பார்ப்பனக் கூத்தன் தோட்டிவேடம்போட்டான் ஆயினும், அப்பொய் வேடக்காட்சி தான் ஆகாது தன்னை வேறுகண்டு நின்றாற்போல்

Digitized by Google

அவத்தையுள் இருத்தி எனினும் நீ அதன்மயமாய்ப் போகாது உன்னை வேறு பிரித்து அறிதி எனின், அஃது உன்னை மயக்காது என்று அறிதி, எ-று.

இங்ஙனம் பிரித்து நிற்றல் சாக்கிராவத்தையில் அன்றிச் சொப்பனாதிகளில் கூடாதெனினும், அச் சாக்கிராவத்தையைப் பிரித்து நிற்பின் திருவருள் தோற்றும். இத் தோற்றம் மேலிடின் அச்சாக்கிராவத்தை மறையும்; அதுமறையவே அதனது வாசனையான சொப்பனாதிகள் தோன்றா; ஆகலின், பொதுப்படக் கூறினார்.

இத்திருவெண்பாவால் அவத்தை நீங்கி நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க. (கூ௭)

பஞ்ச கிருத்தியத்தான் உண்டாம் அஞ்சவத்தையும் கடந்து சிவத்தில் அதீதப்பட்டு நின்றார்க்கு ஒரோர் காலத்து ஒரோரவத்தைகள் தோன்றாவோ? எனின், மேற்கூறுகின்றார்.

பழுதையைப்பாம் பென்ற பயம்போனாற் பாவித்
தழுதுடம்பையாட்டுகினு மாமோ-தொழிலொழிவில்
நின்றசிவ யோகி நினைத்தொருகா னீவாராய்
என்றழைத்தா லும்பதையா தென்.

(இ-ள்.) பழுதையைப் பாம்பு என்ற பயம் போனால் பாவித்து அழுது உடம்பை ஆட்டுகினும் ஆமோ எ-து,—இருளால் பழுதையைப் பாம்பென்றுகண்ட பயகம்பனாதிகள் சுடரால் பழுதை என்று அறிந்து அப்பாம்பு என்றுகண்ட பயகம்பனாதிகள் போனால் இப்போது சுடரால் அறிந்த பழுதையில் முன்னிருளால் தோற்றிய பாம்பு இருப்பதாய்ப் பாவித்துப் பயந்ததுபோல் அழுது உடலை நடுக்கினும் முன்போலும் பயகம்பனாதிகள் உண்டாகா; (அதுபோலும்)

தொழில் ஒழிவில் நின்ற சிவயோகி நினைத்து ஒருகால் நீ வாராய் என்று அழைத்தாலும் பதையாது என் எ-து,—முன்

Digitized by Google

மலவிருளால் மெய்போல் தோற்றிய அவத்தைகளை எல்லாம் இப்போது ஞானசூரியனால் பொய்யாகக்கண்டு அவ்வவத்தைகளை நடத்தும் பஞ்ச கிருத்தியங்களையும் கடந்து மேல்நின்ற சிவத்தில் அதீதப்பட்ட சிவயோகி கருதி அவத்தாய்! ஒருதரம் மீட்டு இங்கு நீவருதி என்று அழைப்பினும் முன் அழையாதிருக்கவும் தானேவந்து கொள்ளிவட்டம்போல் சுழன்றது, இப்போது அணுவளவேனும் அசையாதிருந்தது, ஈதென்கொலோ (யாம் அறிகிலோம்,) எ-று.

சிவயோகிக்குச் சீவகாருணிய முதலியவற்றால் மௌனநந்தம் ததும்பிற்று ஆயினும், திருவருள்வடிவாய் நிற்பது அன்றி மாயாவடிவம் ஆகான் ஆகலினும், சூரியப்பிரகாசத்து இருள் தோற்றாறு அதுபோல ஞானப் பிரகாசத்தில் மாயாந்தகாரம் தோற்றமாட்டாது ஆகலினும், 'அழைத்தாலும்' என்றும், 'பதையாது' என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் சிவயோகியை அவத்தைகள் சாரமாட்டா என்று அறிவித்தவாறு காண்க. (கூரு)

இங்ஙனம் இருந்த சிவயோகிக்கு உபதேசித்தல் முதலியவற்றால் தான் பிறர் என்று தோற்றுவது என்னெனின் மேற்கூறுகின்றார்.

கன்னிக் கதலிதனை நார்கழிப்பான் கண்போலத்
தன்னையறி யாவறிவே தான்மீளச் - சொன்னாலும்
நாவென்ற நாவேபோ னென்ற சொல்லளவே
ஆமன்றித் தானொன்றிரா கா.

(இ-ள்.) கன்னிக் கதலிதனை நார் கழிப்பான் கண்போலத் தன்னை அறியா அறிவே தான்மீளச் சொன்னாலும் எ-து,— ஈனாத வாழையினது மட்டைநார் கழிக்கத் தொடங்கினோன் கண் அம்மட்டை உளது உளதென்று சுட்டிப் பார்க்குந்தோறும் அவனது கை மட்டைகளை எல்லாம் கழித்துச் சென்று

Digitized by Google

அதனுள் இருந்த குருத்தையும் விரித்து விடுத்தபோது ஆண்டு முன்போல் சுட்டுதற்கு வேறொன்றும் இன்றிச் சும்மா இருந்த அக்கண் போலும், ஆசாரியன் விவேகத்தால் முப்பத்தாறு கருவிகளையும் விடுவிக்கத் தான் கடந்துசென்று அவற்றின் முடிவில்நின்ற அருளையும் பனையையும் கடந்து அதன்மேல் தோன்றும் ஆநந்தத்தையும் எதிரிடாது அதனுள் அதீதப்பட்டு இருந்த சிவயோகி தன்னை அறியா அறிவே ஆவன், அவ்வறிவாயிருந்தோன் மீட்டும் நீ நான் என்று பிரித்து அவ்வறிவு ஏற்றற்பொருட்டு மாணாக்கனுக்கு அறிவித்தான் எனினும்;

நா என்ற நாவே போல் நான் என்ற சொல் அளவே ஆம் அன்றித் தான் எதிர் ஆகா எ-து,—நாவானது தன்பெயரை நாவென்று கூறினும் அப்பெயர்க்கு உரியபொருள் வேறின்றித் தானாயிருந்த அந்நாவைப் போலும், நீ நான் என்று சொல் மாத்திரமே ஆம் அன்றித் தானும் எதிரும் அவனுக்கு உண்டாகா, எ-று.

தன்னை யறியா அறிவு சிவம்,. இதனைத் தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியாதென்று முற்கூறிய பாட்டானுங் காண்க. சிவயோகி தற்போதம்போய்ச் சிவமாய் இருத்தலின் தானென்பதும் அச்சிவப்பிரகாசத்தின் பிரபஞ்சமறைதலின் பிறரென்பதும் அவனுக்கில்லை ஆகலின், 'தானெதிராகா' என்றார்.

இத்திருவெண்பாவால் சிவயோகி தான் பிறர்போற் கூறினும் இவை அவனுக்கு இல்லையென் றறிவித்தவாறு காண்க.

தன்னைத்தான் உள்ளபடி அறிவது எங்ஙனம் எனின் மேற் கூறுகின்றார்.

தம்மா லறிந்ததெல்லாந் தாமல்ல வென்றுணைத்தால்
சும்மா விருப்பதுவாய்த் தோன்றுதோ - விம்மி
அரிந்ததலை வாயடங்கு மவ்வளவே யல்லால்
தெரிந்திடுமோ நீயே தெளி.

Digitized by Google

ஒழிவிலொடுக்கம்.

(இ-ள்) தம்மால் அறிந்தது எல்லாம் தாம் அல்ல என்று உணர்த்தால் சும்மா இருப்பது ஆய்த் தோன்றுதோ எ-து,— தமது போதத்தால் ஈது ஈதென்று பகுத்தறிந்து நீங்கிய கருவிகள் எல்லாம் தாம் அல்ல என்று வேதாகமங்கள் கூறும் எனில் அவற்றைப் பகுத்தறிந்து நீங்கிநின்ற அறிவு தாமென அருளால் அறிந்தும் மௌனமாயிருப்பதாய்த் தோற்றுதோ;

ஆனால் தம்மை அறிந்த அநுபவஞ் சொல்வது எங்ஙனம் எனின்,

அரிந்த தலை வாய் விம்மி அடங்கும் அவ்வளவே அல்லால் தெரிந்திடுமோ நீயே தெளி எ-து,—உறுப்புகட் கெல்லாம் முதலாய தலையை அரிந்தபோது அவ்வாய் திறந்தடங்கும் அவ்வளவே அன்றித் தலை போயிற்றென்றுகூற அறியாது. அது போலும், கருவிகள் முப்பத்தாறையும் நீங்கி அவற்றின்மேல் நின்ற முத்திச்சகலமும் முத்திக்கேவலமும் நீங்கி ஆன்மா அருளால் தம்மை மாத்திரம் அறிந்திருக்குமிடத்து ஆண்டு வேறோர் அநுபவந் தெரிந்திடுமோ, நீயே இதனைத் தெளிந்தறிதி, எ-று.

தத்துவங்கள் முடிவில் தோன்றும் முத்திச்சகலம் முத்திக்கேவலம் இன்மையால், 'அரிந்ததலை' என்றும், இங்ஙனம் நின்ற அறிவிக்கு வடிவு இன்மையால் சொல்லக்கூடாது ஆகலின், 'வாயடங்கும்' என்றும், கூறினர். தத்துவங்களை அங்கமாயும் முத்திச்சகல கேவலங்களைத் தலையாயும் வைத்து இத்தலை போயவிடத்து ஆன்மாவுக்கு அவ்வநுபவங்கள் ஒன்றும் இன்றிச் சும்மா இருத்தலின், 'அரிந்ததலை வாயடங்கு மவ்வளவே யன்றித் தெரிந்திடுமோ நீயேதெளி' என்றார்.

அரிந்ததலை விம்மியடங்குமெனக் கூட்டுக. (௯௭)

மறவாத தம்மை யறிவார் மருளோ
அறிவோ விடயம்போ லாகில் - அறிவை

Digitized by Google

அறிவதறி வாகையினு லாறுறுந் தத்தம்
அறிவையறி யாபோ லறி.

(இ-ள்.) மறவாத தம்மை அறிவார் விடயம்போல் ஆகில் மருளோ அறிவோ எ-து,—சகல கேவலங்களாகிய நினைப்பும் மறப்பும் கடந்து அறிவாய் மறவாதிருந்த தம்மை மறந்தது போல் நினைத்து அறியத் தொடங்குவோர்க்கு எதிரிட்டறியும் விடயம்போல் தம்மைத் தமக்குத் தோற்றும் ஆனுல் அது மருட்போதமோ அருட்போதமோ;

அறிவை அறிவது அறிவு ஆகையினுல் ஆறுறும் தத்தம் அறிவை அறியாபோல் அறி எ-து,—அறிவாயிருந்த தம்மை அறியத்தொடங்குவது தம் அறிவைக்கொண்டு ஆகலின், முப் பத்தாறு தத்துவங்களும் தத்தம் அறிவைத் தாம் அறியாதிரு ப்பனபோல் தம்மைப் பிரித்தறியாது சும்மா இருப்பதுவே தம் மை அறிவதென்று அறி எ-று.

முன் சகல கேவலமாயிருந்த ஆன்மா தன்னை யாதொன்று பார்த்தபோது தான் வேறு அவை வேருய்ப் பிரிந்தாற்போல், இப்போது சுத்தமயமா யிருந்த ஆன்மா தன்னை எதிரிட்டுப் பார்ப்பின் இச்சுத்தம் பிரிந்து கேவலசகலங்களில் செல்லும் ஆகலின், 'ஆறுறுந்தத்த மறிவை யறியாபோ லறி' என்ருர். நினைப்பு மறப்பு இன்றி அறிவாயிருத்தலின், 'மறவாத தம் மை' என்ருர்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் தம்மை அறிவது இங்ஙு னம் என்று அறிவித்தவாறு காண்க. (௧அ)

ஊன்றி னிலமசையி னுத மொழிந்தசிவம்
தோன்ருத் துணையுனக்குத்தோன்றுமோ-தோன்றில்
விரனுதியைத் தீண்டுவபோல் வாய்முகத்தைமென்று
சிரிப்பதுபோற் பார்த்துத் தெளி.

Digitized by Google

(இ-ள்.) ஊன்றின் நிலம் அசையின் நாதம் ஒழிந்த சிவம் தோன்றாத் துணை உனக்குத் தோன்றுமோ தோன்றில் எ-து, ஓர் தண்டால் ஊன்றின் சடமாய் உள்ள நிலமும் அசையும் எனின், எல்லாத் தத்துவங்களுக்கும் முடிவாகிய நாத தத்துவத்தையும் கடந்து உனதுயிர்க்குள் தோன்றாத் துணையாயிருந்த சிவத்தை உன் போதத்தை ஊன்றி நின்று அறிவேன் எனின், அஃதுனக்குத் தோன்றுமோ? உன் போதத்துக்கு அது தோற்றும் எனின்;

விரல் நுதியைத் தீண்டுவபோல் வாய் முகத்தை மென்று சிரிப்பதுபோல் பார்த்துத் தெளி எ-து,—ஓர் விரல் தன்னுனியைத் தான் தொடல்போலும், முகத்தின்கண் இருந்த வாய் அம்முகத்தை எதிரிட்டுக் கறித்துமென்று சிரிப்பதுபோலும், ஆம், இதனை ஆராய்ந்து தெளிந்து அறிதி, எ-று.

நுட்பத்தான் ஆன்மாவுள்ளும் பூரணத்தால் அதற்குப் புறம்புமாய்ப் பிரிபடாது சிவம் இருத்தலின், ஆன்மாவால் அதனைப் பிரித்தறியக் கூடாது ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர். 'சிரிப்பது' யான் சிவத்தை அறிந்தேன் என்று பிறருக்குக் கூறி மகிழ்தல். (௩௧)

பற்றியது தானும் படிகநீ பற்றுவிடப்
பற்றை யெதிரிட்டுப் பார்த்தாலென் - சற்றும்
பிரியாச் சிவனைப் பிறித்தறியத் தேடும்
அறியாமை காணு ணவும்.

(இ-ள்.) பற்றியது தான் ஆம் படிகம் நீ பற்றுவிடப்பற்றை எதிரிட்டுப் பார்த்தால் என் எ-து,—தன்னைச் சார்ந்த நிறம் யாது அந்நிறம் தானுயிருக்கும் படிகம்போலும் யாதோர் கருவியடுத்தது அதன் மயமாவை, நீ அக்கருவிகள் நீங்குதற்பொருட்டு உனக்குள் இருந்த சிவமாகியபற்றை எதிரிட்டுப் பார்த்ததனல் பயன் என்னையுளது;

Digitized by Google

சற்றும் பிரியாச் சிவனைப் பிறித்து அறியத் தேடும் அறியாமை ஆணவம் எ-து,—ஒரு ஞான்றுவளவேனும் உன்னை விட்டுப் பிரியாதிருந்த சிவத்தை உன்போதத்தால் பிரித்து உன்னைவிட அன்றோர் முதலாய்க்கண்டு அதனை அறியத்தேடும் பேதமை ஆணவமாவது, எ-று.

கேவல சகலங்களை நீங்கி அருளால் தன்னை உள்ளபடி அறிந்த ஆன்மா தனக்கு வேறற இருந்த சிவத்தையும் அவ்வருளால் அறியவேண்டும், அதனைக் குருவுபதேசத்தால் அறிந்து கொள்க. (உ-ம்.) 'அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினு லறியாதே யறிந்து' என்னும், சித்தியாருள்ளுங் காண்க. சிவத்தைப் பிரியாது அதனுள் அடங்கின் கருவிகள் தொடரா, அதனைப் பிரிக்கின் தொடரும். ஆகலின், 'பற்றுவிடப்பற்றை எதிரிட்டுப் பார்த்தாலென்' என்றார். ஆங்கு மலம் இன்றாயினும் அதனது வாசனையால் போதம் எழுதலின், 'அறியாமைகா ணவம்' என்றார். ஆன்மாவைப் பற்றுவிடா திருத்தலின், சிவத்தை 'பற்று' என்றார். காண் — அசை.

இவ்விரண்டு திருவெண்பாவானும் திருவருளால் சிவத்தை அறியும்போதும் சிறிதும் போதஞ் சீவியாது நின்று அறியவேண்டுமென்று கூறியவாறு காண்க. (௩௦)

அந்தச் சிவத்தைச் சென்று அடையும் இடம் எவ்விடம் எனின் மேற் கூறுகின்றார்.

அருளாலே தம்மை யறிந்தருளா யந்தப்
பரிபூ ரணமே பரையாய்ப் - பரையொழிவில்
ஆனந்தா தீதமா மத்துவித சித்தாந்த
மோனமவ்வே தாந்த முடிவு.

(இ-ள்.) அருளாலே தம்மை அறிந்து அருள் ஆய் அந்தப் பரிபூரணமே பரை ஆய் எ-து,-முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நின்றவிடத்துப் பாசம் ஈது அருள் ஈதென்று பகுத்த

Digitized by Google

றிந்த அறிவு தாம் என்று தம்மை அருளால் அறிந்து பின்னர்த் தம்மையும் அவ்வருளையும் பிரித்துப்பாராது அவ்வருள் தாமாயிருந்து பின்னர்த் தம்மைச் சிறிதுந் தோற்றாத அந்தப் பரிபூரணமாகிய பரையே ஆகி;

பரை ஒழிவில் ஆநந்தாதீதம் ஆம் அத்துவித சித்தாந்தம் மோனம் வேதாந்தம் முடிவு எ-து,—பின்னர் அப்பரை நீக்கத்தில் தோன்றும் ஆனந்தமயமாகி அவ்வானந்தத்தையும் இங்ஙனம் என்று அறியாது அதனுள் அதீதப்படுவதாகும் அத்துவிதமான ஆகம முடிவாகிய மௌனம் வேதமுடிவிற்கு முடிவாம், எ-று.

அருள் தனது இச்சைப்படி ஆன்மா இச்சையைச் செலுத்தியும், தனது ஞானத்தால் அதன் ஞானத்தை மறைத்தும் தனது கிரியையால் அதனது கிரியையை அடக்கியும், இங்ஙனம் அவ்வான்மபோதஞ் சீவியா நடக்குவது. அங்ஙனம் அதனது போத மடங்கினவிடத்து முன் தோற்றிய இச்சா ஞானக் கிரியைகள் விரியாது நீங்கினவிடம் பரை. ஆகலின், ‘அருள்’ என்றும், ‘பரை’ என்றும் கூறினார். வேதாந்திக்குப் பெத்ததிசைபோல் முத்தியிலும் நானென்பது தொடர்தலின் ‘வேதாந்த முடிவு’ என்றார்.

இத்திரு வெண்பாவால் ஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்த அத்துவிதம் இவ்விடம் என்பதும், இது வேதாந்த முடிவு என்பதும் அறிவித்தவாறு காண்க. (௬௧)

தன்மையு முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமாய்
என்னொழிவி லின்புமா யின்புமிது-என்னாத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றான்
ஓதாமல் வேதமுணர்ந் தோன்.

(இ-ள்) தன்மையும் முன்னிலையும் தான் ஆய்ப் படர்க்கையும் ஆய் என் ஒழிவில் இன்பும் ஆய் இன்பும் இது என்னாத

Digitized by Google

எ-து,—உயிருக்கு உயிராயிருந்து அறிவிக்கும் திருவருளாகிய தன்மையும் தானாகி, ஆசாரியராகிய முன்னிலையும் தானாகி, அவ்வருள் மிகுந்து கூறப்பட்ட வேதாகமங்களாகிய படர்க்கையும் தானாகி, இச்சுருதிகுரு சுவாநுபவங்களால் எனது போதமொழிவில் தோன்றும் ஆனந்தமும் தானாகி, அவ்வானந்தம் இதுவென்று கூறக்கூடாத ஆநந்தாதீதமும் தானாகி எழுந்தருளியிருந்த;

ஓதாமல் வேதம் உணர்ந்தோன் வேதாந்த சித்தாந்தமே பிறவா வீடென்றான் எ-து,—ஓதி அறியாமல் தமது திருவருள் ஞானத்தால் நான்கு வேதங்களையும் முழுதுணர்ந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் இந்த அநுபவ முற்றும் உண்டான வேதத்தின் முடிவாகிய சித்தாந்தமே மீண்டு வாரா முத்தி என்று அருளிச்செய்தார், எ-று.

எல்லாம் தாமாகி என்றது அவரது சுதந்தரம் அறிவித்தது. ஓதி உணர்ந்தோரைப் பற்ற ஓதாமல் உணர்ந்தோர்க்கு உண்மையெல்லாம் உள்ளபடிதெரியும். இங்ஙனம் ஓதாமல் உணர்ந்தோரே இதுவே பிறவாவீடென்று கூறினமையால், இஃது உண்மை முத்தியென்று அறிந்துகொள்க. வியாசர் முதலியோர் ஓதாமல் உணரினும் அவர்க்கு விட்டுணுபரமென்றும் அகம் பிரமம் என்றும் பின்னர் மலைவு பிறந்தது ஆகலின் இவரைப்போலும் அவர் சுதந்திர அறிவிலர் எனக்கொள்க.

மலையேறிப் போவார்க்கு மாநிலமாய்த் தோன்றிக்
கலையாதி யைக்கழற்றிக் காட்டித் - தொலைவிலே
காட்சியொழித் தென்னைக் கரந்தகலா வாதனையின்
மாட்சிசொலின் மோனமாம் வந்து.

(இ-ள்.) மலை ஏறிப்போவார்க்கு மாநிலமாய்த் தோன்றிக் கலை ஆதியைக் கழற்றிக் காட்டித் தொலைவிலே காட்சி ஒழித்து எ-து,—மாநிலத்திருந்து மலைமேல் ஏறிச்சொல்வோர்க்கு

Digitized by Google

ஆண்டு மாகிலமாய்த் தோற்றி அம்மலைமுடிமேல் ஏறிநின்று மீண்டு பார்க்குமிடத்து முன்னிருந்த மாகிலமும் பின்வந்த மலையிடமும் தாம் நின்ற இடத்திற்குக் கீழ்ப்பட்டு அருகில் தோற்றுமாப்போலும், கலை முதலிய ஆறத்துவாவையுஞ் சோதனைபண்ணி நீக்கி இவற்றின் முடிவில் நின்ற ஆன்மாவை அறிதல் முதலிய அநுபவங்களைக்காட்டி, இவ்வநுபவ முடிவிலே முன்தோன்றிய கருவிகளும் பின்தோன்றிய அநுபவங்களும் ஆகிய காட்சிகள் எனக்குத் தோற்ருவாறு ஒழித்து;

வாதனையில் என்னைக் காந்து அகலா மாட்சி சொலின்வந்து மோனம் ஆம் எ-து,—எனக்கு ஓர் வாதனையும் இல்லாது என்னைத் தமது பூரணானந்தத்து ஒளித்து உள்ளும் புறம்புமாய் எழுந்தருளியிருந்த எனது ஆசாரியரது பெருமையைச் சொல்லுமிடத்து அதனைச் சொல்லவொட்டாது என்னைப் பேரானந்தம் வந்து மௌனம் ஆக்கும் (இதன்கொலோ அறிகிலேன்.)

'தொலைவிலே காட்சியொழித்து' என்றமையால் மலைமுடிமேல் ஏறிநின்று பார்க்குமிடத்து என்றும் வருவிக்கப்பட்டது கலையாதி ஆறு அத்துவாவாவன மந்திரம்பதினொன்றும், பதம் எண்பத்தொன்றும், வன்னம் ஐம்பத்தொன்றும், புவனம் இருநூற் றிருபத்துநாலும், தத்துவம் முப்பத்தாறும், கலை ஐந்தும், எனக்கொள்க. அநுபவ முடிவுசொல்லக் கூடாமையின், 'மோனமாம் வந்து' என்ருர். (௩௩)

இதுவென்ற தெல்லாம்பொய் யென்ருனெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு-அதுநாங்காண்
என்ரு னதன்பே ரிரவைப் பகலாக்கும்
ஒன்ருே பரமசுக மோ.

(இ-ள்) இது என்றது எல்லாம் பொய் என்ருன். எனக்குப் பொது அன்றித் தங்கும் இடம் போச்சு எ-து,—ஈது ஈதென்று உன்போதத்தால் சுட்டி அறிந்தது யாது அஃதெல்லாம்

Digitized by Google

பொய் என்றார், இங்ஙனம் அருளிச் செய்த ஆற்றான் என் போதத்தால் சுட்டி அறிதற்கு அரிதாய் எல்லாவற்றுள்ளும் பொதுவாய் இருந்த திருவருளிடமே அன்றி முன்னர்க் கருவிகள்தோறும் அதனதன்மயமாய்த்தங்கும் இடமெல்லாம் இப் போது போயிற்று;

அது நாம் என்றான் அதன் பேர் இரவைப் பகல் ஆக்கும் ஒன்றோ பரம சுகமோ எ-து,—முன் கருவிகளோடுங் கூடிக் கருவிமயமாயும், இப்போது அருளோடுங்கூடி அருள்மயமாயும், அவற்றைப் பாசமென்றும் இதனை அருளென்றும் இருந் தறிந்த ஓரறிவு உண்டே அவ்வறிவு எம்மைவிட வேறோர்முதல் அன்று, அதுவே நாம் என்று எமதாசாரியர் அருளிச்செய்தார், அங்ஙனம் அருளிச்செய்த திருப்பெயருக்கு அருத்தம் என்னை? இற்றைவரையும் மறைத்திருந்த ஆணவ இரவைப் பகலாக் கும் ஞானசூரியனோ? அஃதன்றி என்றால் ஒழிக்கக்கூடாதி ருந்த தற்போதத்தை விழுங்கி எழுந்த பரமாநந்தசாகரமோ? (யான் அறிகிலேன்,) எ-று.

பகுப்பின்றி எல்லாவற்றுள்ளும் பொதுவாய் இருத்தலின் அருளை 'பொது' என்றார். 'அது நாங்காண்' என்றது ஆன் மாவைச் சிவத்தோடு இரண்டற்ற ஐக்கியங் கூட்டியது எனக் கொள்க. (சுச)

அறிவித்தா லன்றி யறியாய்நீ யென்றான்
மறவைக் கதுவே மருந்தாய் - அறியவெனில்
ஆகாய மெய்யவைத்த வம்பா மறிவெனிலும்
ஆகாய வாக்கா மது.

(இ-ள்.) அறிவித்தால் அன்றி நீ அறியாய் என்றான் மறவை க்கு அதுவே மருந்து ஆய் அறிய எனில் ஆகாயம் எய்யவைத்த அம்பு ஆம் எ-து;—உனது உயிருக்கு உயிராயிருந்து யாம் ஒன்றினை அறிவித்தால் நீ அறிவதே அன்றி உன்சுதந்திரமாய்

Digitized by Google

ஒன்றினையும் அறியாய் என்று அருளிச்செய்தார். யான் எனது என்று எழும் மலப்பிணியை நீக்குதற்கு அத்திருவாக்கே மருந்தாய் இங்ஙனம் அறிவிக்கும் தம்மை யான் அறியத்தொடங்கின், யான் இருத்தற்கு இடமும் தம்மை அறிதற்கு எழும் போதத்திற்கு இடமும் தமதிடமே அன்றி வேறுகாணேன் ஆகலின், ஆகாயம் இலக்காய் அதனை எய்யவைத்த அம்புபோலும் ஆகும்;

இங்ஙனம் உயிர்க்குயிராயிருந்து அறிவிப்பதாய் எதிரிட்டு அறியக்கூடாததாய் இருந்த அறிவின்கண் வாக்குத் தோற்றுவது எங்ஙனம் எனின்,

அறிவு எனிலும் ஆகாயவாக்கு அது ஆம் எ-து,—அவர் அங்ஙனம் இருந்த அறிவே எனினும் அவ்வறிவின்கண் நின்ற காருணியத்தால் தோற்றும் வாக்கும் அவ்வாகாய வாக்குப் போலும், எ-று.

அம்பிற்கு எய்யாமுன் நிற்பதற்கு இடமும் எய்தபின் சேர்தற்கு இடமும் அவ்வாகாயமே அன்றி வேறிடம் இன்மையால் இதனை அதற்கு உவமையாகக் கூறினர். வாககால் கூறியது போல் பிறர்க்குத் தோற்றுவதே அன்றி அவர்க்குத் தோற்றாது ஆகலின், 'ஆகாயவாக்காமது' என்றார்.

தன்மையும் முன்னிலையும் எனனும் திருவெண்பா முதல் இந்நான்கு திருவெண்பாவானும் தமது ஆசாரியர் தமக்கு அருளிச்செய்த நிலை கூறியவாறு காண்க. (௬௫)

மலமாயை கன்ம மயக்க விகற்பம்
நிலைபோகப் போயொழிந்த நிட்டை-பலவோ
அறிவுக் கெதிரில்லை யாகாய நீழல்
அறநிற்கு மாபோனிற் பாய்.

(இ-ள்.) மல மயக்கம் மாயை விகற்பம் கன்ம நிலைபோகப் போய் ஒழிந்த நிட்டை பலவோ எ-து,—ஆணவ மலமாகிய

Digitized by Google

மயக்கத்தைக் கேவலாவத்தையால் போகச்செய்து, மாயையாகிய விகற்பத்தைக் குரு லிங்க சங்கம வழிபாட்டால் போகச்செய்து, கன்மத்தைச் சுத்தநிலையாகிய அருளால் போகச்செய்து ஆன்மா இந்த அருள்வழிச் சென்று சிவாநந்தத்தில் தற்போதம் அற்ற உண்மை நிட்டை பலவிதமாமோ;

அறிவுக்கு எதிர் இல்லை ஆகாய நீழல் அற நிற்குமாபோல் நிற்பாய் எ-து,—இங்ஙனம் தற்போதம் அற்றுச்சிவம் என்றும் தான் என்றும் இரண்டற இருந்த அறிவிற்கு எதிரீடாய்த் தோற்றுவது ஒன்றும் இல்லை, ஆகாயம் எல்லாப்பொருள்களோடுங் கூடியிருப்பினும் அப்பொருள்களின் சாயை தன்னுள் தாக்காது நின்றாற்போல் எல்லாக் கருவிகளோடுங் கூடியிருப்பினும் அக்கருவிகள் குணமும் உன்னைச் சாராது நீ நிற்றி, எ-று.

கேவலாவத்தையைத் தெரிசிக்கவே ஆணவம் நீங்கும் ஆகலானும், மனவாக்குக் காயங்களால் குரு லிங்க சங்கமத்தை வழிபடவே அம்மனவாக்குக் காயங்களாய் விரிந்த விகற்பரூபமாகிய மாயை நீங்கும் ஆகலானும், இவற்றை நீங்கிச் சுத்த நிலையில் தோன்றுந் திருவருளைத் தெரிசித்து அந்தத்திருவருளே பெத்த முத்தியினும் எமக்கு உபகரிப்பது என்று அறிந்து தான் பிறர் என்னும் முன்னிலைச் சுட்டொழிந்து நிற்கவே கன்மம் நீங்கும் ஆகலானும், ‘மலமாயைகன்ம மயக்க விகற்ப நிலை போக’ என்றார். சகல கேவலங்கள் நீங்கி ஆன்மபோதமும் ஒழிந்த நிட்டைக்குமேல் வேறு நிட்டை இன்றாகலின், ‘பலவோ’ என்றார். ஆகாயம் தனது நுண்ணிய குணத்தில் திரிவு இன்றி இருந்தமையால் மற்றபொருள்களின் நிழல் தாக்காது இருந்ததுபோல் ஆன்மா தனது போதஞ் சிவியாது நுட்பகுணத்தோடு இருந்தது எனின் சிவத்தோடு கலப்புக்கூடும், தூலமாகிய கருவிகளும் அதனைத் தாக்கமாட்டாது என்பது அறிக. (சசு)

Digitized by Google

போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும்
போதம் பதைத்தளவே பொய்யாகும் - ஈது
விழித்திமைப்பா நின்றால் வெளியசைந்தாற்காற்று
பழக்கமதைச் சாட்சியைப்போற் பார்.

(இ-ள்.) போதம் பதைப்பு அறவே பூரணம் ஆம் பூரணமு போதம் பதைத்த அளவே பொய் ஆகும் ஈது நின்றால் விழித்து இமைப்பு ஆம் எ-து,—ஆன்மபோதம் சேவியாது அடங்கின் அவ்வான்மா தோற்றாமல் அருட்பூரணம் தானாயிருக்கும் அப்பூரணமும் அப்போதம் சேவித்தமாத்திரத்தில் தான் தோற்றாது மறையும் அவ்வான்மாவா யிருக்கும், இங்ஙனம் இப்போதம் அடங்கியும் விரிந்தும் நின்றால் அப்பூரணம் ஓர்கால் தோற்றியும் ஓர்கால் மறைந்தும் விழித்தல்போலும் இமைத்தல்போலும் ஆம்; (அஃது எங்ஙனம் எனின்)

வெளி அசைந்தால் காற்று ஆம் பழக்கமதைச் சாட்சியைப் போல் பார் எ-து,—வெளியில் அடங்கிய காற்றுத் தான் வேறொரு பொருளாய்த் தோற்றாமல் வெளியே ஆம், அவ்வெளியில் நின்றும் அசைந்தால் அதனைவிடத் தான் ஒருபொருளாய்க் காற்றென்பதாம், இக்காற்றாகிய சாட்சியைப்போல் உனது போதம் அருளில் அடங்கியும் விரிந்தும் நின்ற பழக்கமதையும் பார்த்து அறிதி, எ-று.

போதம் அடங்கில் அருளாகியும், அது அசையில் ஆன்மாவாகியும், இங்ஙனம் வருதலின அதனைச் சிறிதுந் தோன்றாது அடக்கவேண்டுமென்பது கருத்து.

இவ்விரண்டு திருவெண்பாவானும் மும்மலங்களை நீக்குதற்கு உபாயமும், இம்மலங்களை நீக்கி அவ்வான்மா தற்போதமுங் கெட்டு ஆனந்தாதீதப்பட்டால் அதற்குமேல் வேறுவீட்டை இன்றென்பதும், ஆன்மா கருவிகள் தாக்காது நிற்றற்கு உபாயமும், அடங்கிய போதம் மீட்டும் விரியாது அடக்கவேண்டும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சஎ)

Digitized by Google

வேதாந்தம் போலிருக்கும் வேதாந்த சித்தாந்தம்
நாதாந்த போத நழுவினர்க்கு - நேதி
தனைக்கழன்று தற்போதஞ் சார்பழியுஞ் சந்தில்
உனக்கறிவா னந்தமுதிக் கும்.

(இ-ள்.) நாதாந்த போதம் நழுவினர்க்கு வேதாந்தம் போல் இருக்கும் வேதாந்த சித்தாந்தம் எ-று,—நாத தத்துவத்தின் முடிவாயிருந்த அருளையும் கடந்த மெய்ஞ்ஞானிகட்குவேதாந்தம்போல் துவிதநாட்டம் இன்றி இருக்கும் வேதத்தின் முடிவாகிய இச் சித்தாந்த நூல் ஆகலின்;

நேதிதனைக் கழன்று தற்போதம் சார்பு அழியும் சந்தில் உனக்கு அறிவு ஆநந்தம் உதிக்கும் எ-று.—நீக்குவதாய் உள்ள தத்துவ முப்பத்தாறையுங் கழன்று, அவற்றின் முடிவில்நின்ற அருளையும் பரையையும் துவிதநாட்டம் இன்றிக் கழன்றுநிற்றி எனின், நின் தற்போதமும் ஆணவ வாசனையாகிய சார்பும் ஒழியும், இவை ஒழிந்த இடத்திற்கும் அதீதத்திற்கும் இடையாகிய சந்தியில் உனக்கு ஞானநந்தம் தோன்றும், எ-று.

முப்பத்தாறு தத்துவங்களையும் நீங்குமளவும் ஆன்மபோதஞ் சீவித்தறிவது அருள்தரிசனமுதல் ஆநந்தாதீதப் படுமளவும் அப்போதஞ் சீவியாதடங்கி அவ்வநுபவங்களைப் பெறவேண்டும் ஆகலின், 'வேதாந்தம்போலிருக்கும்' என்றார்.

இத்திருவெண்பாவால் ஆநந்தம் தோன்றுமிடம் அறிவித்தவாறு காண்க. (சஅ)

தத்துவா தீதத் திமிர்ப்படங்கித் தற்செலவும்
அத்தின் வரத்து மசையாத - சுத்தத்தை
ஒன்றென்று னீசற் றுளதாவை யாதலினால்
அன்றென்ற தென்றே யறி.

(இ-ள்.) தத்துவாதீதத் திமிர்ப்பு அடங்கித் தன்செலவும் அதின்வரத்தும் அசையாத எ-று,—முப்பத்தாறு தத்துவத்

திற்கும் அதீதமாயிருந்த ஆணவமல வாசனை எல்லாம் நீங்கி விடத்து ஆன்மா சிவத்தைச் சென்று கூடுதலும், சிவம் ஆன்மாவை வந்து பொருந்துதலும் ஆகிய இருவகை அசைவும் இன்றி இரண்டற்று இருந்த;

சுத்தத்தை ஒன்று என்றால் நீ சற்று உளது ஆவை ஆதலினால் அன்று என்றது என்றே அறி எ-து,—முத்திக்கண்சிவம் ஒன்றுமே என்று கூறுதி எனின், அச்சிவம் ஒன்றென்று அறிந்து கூறிய நீயும் சிறிது உண்டாவை ஆகலின், அம்முத்திக்கண் அங்ஙனங் கூறுவதும் அன்றென்று அறிதி, எ-று.

உடம்பின் குணம் அன்றி அதன்கண் ஏறியிருந்த திமிர்ப்புப்போல் உயிரின் குணம் அன்றி இதன்கண் ஏறியிருந்தமையால், ஆணவத்தை 'திமிர்ப்பு' என்றார். திமிர்ப்பு அடங்காவிடத்துக் கூடினது போன்றும் பிரிந்ததுபோன்றும் அநுபவந் தோன்றலின் அங்ஙனங் கூறினார். (௩௧)

வெற்றவெறு மாநந்த மேலீடே கேவலத்தில்
நிற்பதுபோ லந்த நிலைகழன்றோர் - சிற்போத
அண்டங் கடந்த வமுதத்தி னோடுலவும்
வெண்டிங்க ளுங்கிரண மும்.

(இ-ள்.) வெற்றவெறு ஆநந்த மேல் ஈடே கேவலத்தில் நிற்பதுபோல் அந்த நிலை கழன்றோர் எ-து,—வியதியிட்ட இடமெல்லாம் கழன்றுசென்று தற்போதம் ஒழிந்ததெல்லாம் ஆநந்தமயமாய்த் தோற்றும் ஆகலின், வெற்றவெறு ஆநந்த மேலீடாகிய இடமே கேவலாவத்தைப் பட்டு நிற்பதுபோலத் தோன்றும், இங்ஙனந் தோற்றும் அவ்வாநந்த மேலீடாகிய நிலையும் நீங்கினோர்;

சிற்போத அண்டம் கடந்த அமுதத்தினோடு உலவும் வெண்டிங்களும் கிரணமும் எ-து,—அருளும் பரையும் ஆகிய ஞானகாசத்தைக் கடந்துநின்ற ஆநந்தாமிர்தத்தோடு விளங்காநின்ற

Digitized by Google

சிவசந்திரனோடும் தாம் அதனைவிட்டு நீங்காத அந்த ஆநந்தாமிர்த கிரணமாகி நிற்பார், எ-று.

ஆநந்தம் மேலிட்டபோது பிரபஞ்சமெல்லாம் ஆநந்தமயமாய்த் தோற்றும் ஆகலின், 'வெற்றவெறு மாநந்தம்' என்றார். ஆநந்த மேலீடு விட்டு உயாமல் தோற்றுவது கேவலாவத்தை அநுபவத்தை அறிந்து ஒன்றுந் தோன்றாதிருந்ததென்று சொல்ல வருதல்போல் ஆநந்தாநுபவம் சொல்ல வருதலால், 'கேவலத்தி னிற்பது போல்' என்றார். அநாதியில் ஆணவமலத்தால் மறைபட்டிருந்த உயிர்க்கு அநுபவஞ் சொல்லக் கூடாததுபோல், சிவத்தில் இரண்டறக் கலந்துநின்ற அநுபவஞ் சொல்லக்கூடாது ஆகலின், ஆநந்தாநுபவத்திற்கு உவமை கேவலாவத்தையைக் கூறினர். 'வெண்டிங்களுங் கிரணமும்' என்று உவமை கூறினமையால் சந்திரனைப்போலச் சிவம், அவனைவிட்டு நீங்காத அமுதம்போல் ஆநந்தம், அவனையும் அமுதத்தையும் விட்டு நீங்காத கிரணம்போல் ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்துநின்ற நிலை எனக்கொள்க.

இவ்விரண்டு திருவெண்பாவானும் முத்தியில் ஒன்றென்றும் இரண்டென்றுங் கூறக்கூடாதென்று அறிவித்த வாறு காண்க. (௬௦)

நினைப்பு மறப்பறுத்து நீயறலை நீக்கா
துனைக்களைய நில்லங்ங னங்ஙன்-எனக்கதற்றல்
விப்பிரட்ட மந்திரட்டம் வேலையிலே போட்டசுளை
செப்படித்தன் ஞானச் சிறை.

(இ-ள்.) நினைப்பு மறப்பு அறுத்து நீ அறலை நீக்காது உனைக் களையகில் அங்ஙன் அங்ஙன் எனக் கதற்றல் எ-து.—முன்னர் நினைப்பு மறப்பு ஆகிய சகல கேவலங்களை அறிவித்து, நீக்கித் தன்னை அறிவித்து, பின்னர்த் தனக்கு உயிர்க்குயிராய்நின்ற திருவருளைத்தரிசிப்பித்து, இத்திருவருளோடுங்கூடி அறிகி

Digitized by Google

ன்ற போதம் தற்சுதந்திரமாய் ஒன்றைப் பகுத்தறியாது ஆகலின், அருளை முன்னிட்டுக்கொண்டு தற்போத ஒழிவைப் பெறுதற்கு உபாயங்கூறி, அதனை நீக்காது அந்நினைப்பு மறப்பு ஆகிய சகல கேவலங்களுள்வைத்து, உன் போதங்களைய நீ அப்படி யில் அப்படியில் என்று மாணாக்கனுக்கு ஓர் நிட்டை போலுங் கூறுதல்;

விப்பிரட்டம் மந்திரட்டம் வேலையிலே போட்ட சுரை செப்படித்தல் ஞானச்சிறை எ-து,—மிகவும் பிரட்டமும், மந்திரத்தால் ஒருவனுக்கு விநோதங் காட்டலும், கடற்கண் போட்ட சுரை ஒடும். செப்படிவித்தையும், ஞானத்திற்குத் தடையாய் உள்ள மலபோதமும் ஆம், எ-று.

அந்த நிட்டைகூடுவோர் ஞானமும் அன்றி முதற்செய்த கிரியை யாதிகளும் அன்றி உபய பிரஷ்டராய்க் கருவிகளோடும் மயங்கலின், ‘விப்பிரட்டம்’ என்றும், ஒருவன் மந்திரத்தால் விநோதவித்தை தோற்றுவதுபோல், உள்ளே நானாகிய மாயாவிநோதங்கள் தோற்றலின் ‘மந்திரட்டம்’ என்றும், சுரை ஓடு ஓர் துறைக்கண் சேராது அலையோடு மறிதல்போல், அறிவு ஓர்நிலை யில்லாது நினைவோடுஞ் சுழல்வதனால், ‘வேலையிலே போட்ட சுரை’ என்றும், ஓர் பந்து முன் தோற்றிப் பின் அதில் பற்பல பந்து தோற்றுதல்போல், ஓர் காட்சிபோல் முன் தோற்றி அது முற்றும் இல்லாது பற்பல காட்சியாய் விரிதலின் ‘செப்படித்தல்’ என்றும், இங்ஙனந் தோற்றுவன சகல கேவல போதம் ஆகலின், ‘ஞானச்சிறை’ என்றும் கூறினார். அங்ஙனங் கூறியது நிட்டை அன்று ஆகலின், கதற்றல் என்றார்.

இத்திருவெண்பாவால் மாணாக்கனுக்குச் சகல கேவலங்களை முன்னர் அறிவித்து நீக்கி, பின்னர்ப் போதம் ஒழித்தற்கு உபாயங் கூறாது அச்சகல கேவலங்களுள் அந்நிட்டை கூறுதல் ரதென்று அறிவித்தவாறு காண்க. (௫க)

Digitized by Google

சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்றால்
சித்தாந்த வேதாந்தச் சீர்மையிலை - முத்தி
அநிர்வசன மின்ப வதீதமெனி லாங்கே
பிணமிடுதல் கன்மம் பிளாய்.

(இ-ள்.) சத்தாதி தத்துவம் போய்த் தானும் எதிரும் கழன்றால் சித்தாந்த வேதாந்தச் சீர்மை இலை எ-து,—சத்த முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் நீங்கி அவற்றின் முடிவில் நின்ற தானும், திருவருள் தெரிசன முதல் ஆனந்தானுபவம் ஈறாய் அவ்வருளால் தான் அறியாது அறியும் அநுபவங்களாகிய எதிரும் கழன்று, ஆனந்தாதீதப்பட்டால் இரண்டென்று கூறும் சித்தாந்தச் சிறப்பும் ஒன்றென்று கூறும் வேதாந்தச் சிறப்பும் அங்கு இல்லை;

முத்தி அநிர்வசனம் இன்ப அதீதம் எனில் ஆங்கே பிணம் இடுதல் கன்மம் பிளாய் எ-து,—அங்ஙனம் அதீதப்பட்ட முத்திசொல் இறந்த சுகாதிதீதம் என்றால், பிள்ளாய்! ஒன்றென்றும் இரண்டென்றும் அம்முத்தியைப் பின்னப்படக் கூறுதல் போதச்சேட்டை ஆம், எ-று.

சத்தாதி விடயங்களின்மேல் ஆன்மாவுக்கு அனிச்சைபிறந்தபோது சோத்திராதி பஞ்சேந்திரியங்களும் விடயங்களை அபகரியாது நீங்கும். இவை நீங்கவே முன் அபகரித்தபோது வசன கமன தான விசர்க்காநந்தங்களை விடயீகரிக்கும் வாக்காதி கன்மேந்திரியங்கள் ஐந்தும் நீங்கும். இவை நீங்கவே அப் பத்திந்திரியங்கட்கும் இடமாய் நின்ற பூதங்கள் நீங்கும். இவை நீங்கவே விடயங்களைப்பற்றி நிச்சயித்து அபிமானித்துச் சிந்தித்து நிற்கும் அந்தக்கரணவாசனை நீங்கும். இது நீங்கவே விடயங்களைப் புசித்தற்கு ஒரெல்லையும், அவ்வெல்லையில் உண்டாம் விடயப்பயனும், அவ்விடயத்தைப் புசிக்கும் போது ஓர் காலங்களினும் அறியாததுபோலப் புதுமையும்,

Digitized by Google

மேலும் இவ்விடயம் அனுபவிக்கவேண்டும் என்னுங் கருத்தும் உண்டாக்குங் காலதத்துவமும் நீங்கும். இது நீங்கவே விடயங்களைப் புசிக்கும்போது இவனுக்கு இவ்வளவு புசிப்பென்னும் மட்டறிந்து வரைந்து நிற்கும் நியதி நீங்கும். இது நீங்கவே ஆன்மா விடயங்களை இச்சித்துப் பகுத்தறிந்து பற்றி அநுபவிக்க அவ்வான்மாவுக்கு இச்சா ஞானக் கிரியைகளை எழுப்பும் இராகம் வித்தை கலை என்னும் இம்மூன்றும் நீங்கும். இவை நீங்கவே ஆன்மாவைப் பஞ்சேந்திரியங்களினும் கறங்குபோற் கொண்டு சுழற்றும் புருடன் நீங்கும். இது நீங்கவே அவ்விடயங்களைப் புசிக்குமிடத்து அவ்விடயம் என்றுந் தான் என்றும் இரண்டற மயக்கிநிற்கும் மாயை நீங்கும். இங்ஙனம் வித்தியாதத்துவங்கள் நீங்கவே இவற்றைப் பிரேரகம் பண்ணுஞ் சுத்ததத்துவங்கள் ஐந்தும் நீங்கும். இங்ஙனம் தத்துவம் முப்பத்தாறும் நீங்கினவிடத்து ஆன்மாவின் இச்சை பெத்தத்தில் விடயத்தின்மேல் சனித்ததுபோல் சிவத்தின்மேல் சனிக்கும். ஞானம், விடாயகந்தம் அசுத்தம் துக்கம் அனித்தியம் என்றும், சிவாநந்தம் சுத்தம் சுகம் நித்தியம் என்றும், பகுத்தறிந்துகொண்டு நிற்கும். கிரியை பழைய பழக்கத்தால் விடயங்கண்மேற் செல்லினும் அவற்றிற் செல்லாது மறுத்து நீங்கிச் சிவத்தையே நாடி நிற்கும் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகள். சிவன் ஆன்மாக்களை முத்தியிலே அடைவிக்கவேண்டும் என்னும் இச்சைப்படி நிற்பது ஆகலின், திருவருள்பதியும், இத்திருவருளை முன்னிட்டுக் கொண்டு அறியும் பரை தெரிசன முதலிய அநுபவங்களாகிய எதிரும், அவைகளை அறிந்த தானும், கழன்று ஆநந்தாதீதப்பட்டால், இரண்டென்றும் ஒன்றென்றும் கூறக்கூடாது ஆகலின், 'சித்தாந்த வேதாந்தச் சீர்ஸமயிலே' என்றார். கன்மம் என்பது சேட்டைமேலேறிற்று. ஆன்மா சத்தாதிகளைத் துரிசற விடுத்தபோது மற்றைத் தத்துவம்முப்பத்தொன்றும் இங்ஙனம் நீங்கலின் சத்தாதிகளை முன்வைத்துக் கூறினார். முத்தியை அறிவிப்பது வே

Digitized by Google

தாகம முடிவாகலின், 'சீர்மை' என்றும் அம்முத்தியில் அதனை அறிந்து கூறும் போதம் இன்மையால், 'அசிர்வசனம்' என்றுங் கூறினர்.

(உ-ம்.) சிவப்பிரகாசம்,—'மருவிய பொறியி லொன்றும் மாபூத மைந்தி லொன்றும், கருவி களனைத்து நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி, ஒருபுல னுகருமிந்த வொழுங்கொழித் துயிரு மொன்றைத், தெரிதரா தவனொழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே' என்றும்,

திருவள்ளுவர்,—'சுவையொளி யூறோசை நாற்றமென்றை ந்தின், வகைதெரி வான்கட்டே யுலகு' என்றும், மற்றும் வருவனவற்றானுங் காண்க.

இத்திருவெண்பாவால் சித்தாந்தமுத்தியோ வேதாந்தமுத்தியோ உண்மை என்று ஐயுறுகின்ற மாணக்கனுக்குக் காண்பானும் காட்சியும் அற்ற விடத்து இரண்டுஞ் சரியென்று அறிவித்தவாறு காண்க. (௩௨)

சிந்தை பயமிலச்சை சீல மருவருப்பு
அந்தை விடுஞ் சாந்திகுல மாசாரம்-இந்தவழி
எட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைகள்
தட்டும் பெருமுரசந் தான்.

(இ-ள்.) சிந்தை பயம் இலச்சை சீலம் அருவருப்பு அந்தை விடும் சாந்தி குலம் ஆசாரம் இந்தவழி எட்டும் எ-து,—எனக்கு இன்னதுவேண்டும் என்னுஞ் சிந்தனையும், துட்டமிருகாதி தோன்றியக்கால் அச்சமும், இன்னர் இன்னது சொல்லப்போகிறார் என்னும் நாணமும், சாந்திராயண விரதமுதலிய சீலமும், ஈது அசுத்தமென்னும் அருவருப்பும், அகந்தையால் செய்த பாவந்தீர்க்கும் புண்ணியம் ஈதென்று செய்யுஞ் சாந்தியும், குலாசாரமும் சமயாசாரமும் ஆகிய இந்தமார்க்கம் எண்வகையும்;

Digitized by Google

சிவயோகிக்கு இல்லை என மாமறைகள் பெருமுரசம் தடும் எ-று,—சிவத்தோடு இரண்டறக்கூடி நின்ற சிவயோகிக்கு இல்லையென்று மாமறைகளாகிய பெரிய பேரிகை முழங்கும், எ-று.

'மாமறைகள் தட்டும் பெருமுரசம்' என்றது அவர்க்கில்லை என்று பலபடக் கூறுதல். இவை எட்டும் சிவத்திற்கு இன்றாகலின் அதனை அடைந்த சிவயோகிக்கும் இன்றென்பது ஆயிற்று; (௫௨)

தத்துவத்தா ரல்லார் சலசந் திரனொப்பார்
தத்துவத்தாற் செய்யுந் தவாதவங்கள்-சுத்தக்
ககனமழை யாற்கழுவிக் காற்றைக் கனலால்
தகனஞ் செயல்போற் றெளி.

(இ-ள்.) தத்துவத்தார் அல்லார் சலசந்திரன் ஒப்பார் தத்துவத்தால் செய்யும் தவாதவங்கள் எ-று,—மெய்ப் பொருளாகிய பாதத்துவத்தை அடையாதார் தற்போதத்தால் செய்யும் தவாதவங்களினாலும், இவற்றின் பயன்களினாலும், உயர்ந்தும் தாழ்ந்தும் சலத்தில் பிரதிபலிதமான சந்திரனைப்போலும் ஆவர்;

அப்பாதத்துவத்தை அடைந்தோர் அருள்வடிவா யிருந்து செய்யும் தவங்களும் அவங்களும் இவற்றான் வரும் பயன்களும் இவர்க்கு எங்ஙனம் ஆம் எனின்,

சுத்தக் ககன மழையால் கழுவிக் காற்றைக் கனலால் தகனம் செயல் போல் தெளி எ-று,—நிருமலமாய் உள்ள ஆகாயத்தை மழையால் கழுவிக் காற்றைக் கனலால் சுடுவதுபோலும் ஆம் என்று அறிதி, எ-று.

ககனத்தை மழையால் கழுவுதலும் காற்றைக் கனலால் சுடுதலும் இன்றாயின வாறுபோல் தற்போதம் போய்ப் பேய் பிடியுண்டவரைப் போலும் திருவருளே வடிவாயிருந்த மெய்ஞ்ஞானிகள் திருமேனியில் நிகழும் தவாதவங்கள் அவ்வருள்

Digitized by Google

விளையாட்டே அன்றி அவர் அவற்றைச் செய்ததும் அவற்றின் பயன் அவரைச் சார்வதும் இன்றென்பது ஆயிற்று. தவாதவங்கள் தத்துவத்தார் அல்லார்க்கு வருவிக்கப்பட்டன. தத்துவம் என்றது ஈண்டுச் சிவத்தை. (௫௪)

காலனுக்குப் பாவமென் றுங் காற்றுங் கதிரவனும்
சீலமிலா ரென்றுஞ் சிவயோகி-மேலொன்றைச்
சுட்டுவதுந் தம்மைச் சுழற்றிவிடா தாட்டுமலக்
கட்டின் பிராந்திவலுக் காண்.

(இ-ள்.) காலனுக்குப் பாவம் என்றும் காற்றும் கதிரவனும் சீலம் இலார் என்றும் சிவயோகி மேல் ஒன்றைச் சுட்டுவதும் எ-து,—உயிர்களைக் கோறலால் காலனுக்குப் பாவம் உண்டென்றும், அசுத்த நிலத்தில் சலித்தலானும் அந்நிலத்து எறிதலானும் காற்றுங் கதிரவனும் ஆசாரம் இலர் என்றுங் கூறுதல் போல், சிவபூசையாதி நன்மார்க்கங்களைச்செய்திலர் என்றும், நீராடல் ஆதி ஆசாரம் இலரொன்றும், இவை முதலிய குணதோஷங்களைச் சிவயோகிகள்மேற் சுட்டிக் கூறுவது;

தம்மைச் சுழற்றி விடாது ஆட்டும் மலக் கட்டின் பிராந்தி வலு எ-து,—தம்மைவிடாது பற்றிநின்று அவத்தைகள் தோறும் சுழற்றி ஆட்டப்பட்ட மலபந்தத்தினல் தோற்றும் பிராந்தியினது சாமர்த்தியமாம், எ-று.

சரியை கிரியா யோக ஞானங்களுள் ஞானம் ஒன்றுமேமுத்திக்கு எதுவாகலின், இஞ்ஞானத்தால் முத்தியை அடைந்திருத்தலின் சரியாதிகளையும் உடம்பாதி அசுத்தங்களை எல்லாங் கடந்து சுத்தமாயுள்ள ஆனந்தவெள்ளத்தில் மூழ்கியிருத்தலின், நீராடலாதி ஆசாரங்களுஞ் செய்வது இன்றிச் சிவயோகி சும்மா இருப்பன். அங்ஙனம் இருப்பது சரியாதிகளைச் செய்வோர்க்கு மலமறைப்பால் தெரியாது தம்மைப்போல் பார்த்து அவனை இகழ்தலான், 'மலக்கட்டின் பிராந்திவலு

Digitized by Google

க்காண்' என்றார். காலனுக்குப் பாவமும் காற்றிற்கும் கதிர வனுக்கும் அசுத்தமும் இன்றாயதுபோல் கன்மார்க்கஞ் செய்யாமையால் பாவமும் ஆசாரம் இன்மையால் அசுத்தமும் அவர்க்கு இன்றென்பதுங் காண்க. காண்-அசை. (௫௫)

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்-தோயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுனு மில்லை
வரைவற்று வேண்டிய செய்வார்.

(இ-ள்.) நாய் ஏறி வீழ்ந்து என் நடாத்துகில் என் ஞானிக்குப்பேய் ஆம் சகம் பழித்து என் பேணுகில் என் தோயார் எ-து, நாய்மேல் இவர்ந்தோன் அதில் நின்றும் வீழ்ந்ததனால் இகழ்ச்சி என்னை, வீழாதிருந்து அதனை நடாத்தியதால் புகழ்ச்சி என்னை, அதுபோல் ஞானிகட்குப் பேய்க் கூத்துப்போல் தோற்றும் இச்சகத்திலுள்ளார் இகழ்ந்தால் அவர்க்கோர்சேதம் என்னை, புகழ்ந்தால் ஓர் இலாபம் என்னை, அவர் ஒன்றோடுந் தோயார்;

பெருமை சிறுமை இலை பின்னும் முன்னும் இல்லை வரைவு அற்று வேண்டிய செய்வார் எ-து,—அஃதன்றி உயர்ச்சி வந்ததென்று பெருமையும் தாழ்ச்சி வந்ததென்று சிறுமையும் அவர்க்கில்லை, பின்னாகிய சகலமும் முன்னாகிய கேவலமும் இல்லை, ஆகலின், சுத்தமாகிய அருள் வடிவாயிருந்து அளவின்றித் தாம் வேண்டியவாறே திருவிளையாட்டு ஆடுவார், எ-று.

இகழ்ச்சியாய் உள்ள நாய் ஏறி வீழ்ந்தாலும் நடாத்தினாலும் இகழ்ச்சி புகழ்ச்சி இன்றாயதுபோல் ஞானிகள் தமக்கு இகழ்ச்சியாயிருந்த உடம்பை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் அவை அவர்க்கு இன்றென்பது ஆயிற்று. செம்பில் காளிதம்போன்று உயிரை அநாதியிற் பற்றியிருந்த சகசமலம் நீக்கற்பொருட்டு

Digitized by Google

மாயையில் தனுவாதி கொடுத்தலின் சகலத்தைப் பின்னென்றும் ஆணவ சம்பந்தமான கேவலத்தை முன்னென்றுங் கூறினார்.

"சிந்தை பயமிலச்சை" என்னுந் திருவெண்பாமுதல் இந்நான்கு திருவெண்பாவானும் சிவஞானி மகிமையை அறிவித்தவாறுகாண்க. (ருசு)

சன்மார்க்க மேமுதலாத் தாதமார்க் கத்தளவும்
தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன்-தன்னைத்
துறவி யரசு சுகியோகி போகி
அறவன் மறவனெனலாம்.

(இ-ள்.) சன்மார்க்கமே முதலாத் தாதமார்க்கத்து அளவும் தன்மார்க்கம் ஆன எங்கள் சம்பந்தன் தன்னை எ-து,—ஞான முதல் சரியை ஈறாய்ச் சொல்லப்பட்ட நான்கு பாதத்திற்கும் உரித்தாகிய சன்மார்க்கமுதல் தாதமார்க்கம் ஈறாய்ச்சொல்லப்பட்ட இந்நான்கினையும் தமது அருள் நெறியால் எமக்குண்டாகச் செய்தருளிய எமது சுவாமிகளாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரை;

துறவி அரசு சுகி யோகி போகி அறவன் மறவன் எனல் ஆம் எ-து,—எல்லாவற்றோடுங் கூடியிருந்தும் அவற்றோடு தாக்கற்று நிற்றலின் துறவி என்றும், சகல புவனங்களையுந் தாமேயிருந்து நடத்தலின் அரசு என்றும், ஆநந்தமயனாயிருத்தலின் சுகி என்றும், சிவயோகத்தை அநுக்கிரகித்தலின் யோகி என்றும், ஆன்மபோதங்களை விழுங்கிக் கோடலின் போகி என்றும், சகல கருமங்களும் ஓர் வடிவாயிருத்தலின் அறவன் என்றும், அடைந்தோர் மும்மலங்களைக் கோறலான் மறவன் என்றும் சொல்லலாம், எ-று.

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாதமார்க்கம் என நான்கு. இவற்றுள் சன்மார்க்கமாவது, நீயே நான்

Digitized by Google

காணே நீ என்பது. சகமார்க்கமாவது, தோழனும், தோழனும் என்பது. சற்புத்திர மார்க்கமாவது, பிதாவும் புத்திரனும் என்பது. தாதமார்க்கமாவது, ஆண்டவனும் அடியானும் என்பது.

ஞானம் பெற்றோரைப் புகழ்ந்து கூறிய பின்னர் இத்திரு வெண்பாவால் அந்த ஞானத்தை அருளிச் செய்தற்குத் தலைவராகிய பிள்ளையாரைப் புகழ்ந்து கூறியவாறு காண்க. ()

தானல்லா தன்னதல்லர் தத்துவசா லத்தலைவர்
மேனிசதா நந்தம் விளையுமிடம்-யானைக்கைப்
போலே யிவருடம்பிற் போகமெலாம்பூசையித
ஞலே சகம்பிழைக்கு மெண்.

(இ-ள்.) தான் அல்லர் தன்னது அல்லர் தத்துவசாலத்தலைவர் மேனி சதாநந்தம் விளையும் இடம் எ-து,—தனுகரண புவன போகங்களாய் உள்ள தத்துவங்கள் எல்லாம் தமக்கு அயல் ஆகலின் அவை தாமும் அல்லாமல், அசுத்தம் துக்கம் அனித்தியமா யிருத்தலின் அவை தமதும் அல்லாமல், அத்தத்துவங்களோடு கூடியும் கூடாத காலத்தோடும் அவற்றிற்குத் தலைவராயிருந்த மெய்ஞ்ஞானிகள் திருமேனி சதாநந்தம் மேன்மேலும் உண்டாகும் ஓரிடம்; ஆகலின்,

ஆனைக்கை போலே இவர் உடம்பின் போகம் எலாம் பூசை இதனாலே சகம் பிழைக்கும் எண் எ-து,—எடுத்த பொருளின் பரிசமறிவதுபோல் தோற்றி அதனுள் இருந்த நாசிக்குக் கந்த விடயமுமாக இருந்த யானைக்கைபோல் இருந்த ஞானிகளது திருமேனியால் அநுபவிக்கும் போகமெல்லாம் இத்திருமேனி அநுபவிப்பது போல் இருந்து இத்திருமேனியுள் இருந்த பரிபூரண சிவத்திற்கும் பூசை ஆம், இப்பூசையினாலே சகத்திலுள்ளார் பிறவித் துன்பத்திற்குத் தப்பி வீட்டின்பத்தை எய்துவர் என்று அறிதி, எ-று.

Digitized by Google

முன் தனுகரணங்களை யாம் என்றும், புவனபோகங்களை எமது என்றுங் கருதிநின்ற தற்போதங் கெட்டு இப்போது அறிவு தாமாய் ஆநந்தம் தமதாயிருத்தலின், "தானல்லர் தன்னதல்லர்" என்றார். தேகத்திருந்த போதத்தையும் கருவிகளையும் விழுங்கிக்கொண்டு அதனுள் சிவங் குடியாயிருத்தலின், "மேனிசதாநந்தம் விளையுமிடம்" என்றும், "போகமெல்லாம் பூசை" என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் ஞானிகட்குப் பத்திசெய்வார் வீடடைவார் என்று அறிவித்தவாறு காண்க. (௫௮)

பூசி முடிப்பனவும் பூண்பனவும் பொற்றுகிலும்
ஆசை மிகுந்த வரசியர்க்காம்-காசிற்ற
முண்டையர்க்கா காசீவன் முத்தனுக்குப்போகமல்
குண்டையொப்பார்க் கேனிதுவா கும். [லால்

(இ-ள்.) பூசி முடிப்பனவும் பூண்பனவும் பொன் துகிலும் ஆசை மிகுந்த அரசியர்க்கு ஆம் எ-து,- சந்தனமாதி பூசப்படுவனவும், மல்லிகையாதி முடிக்கப்படுவனவும், கொந்தளப் பொன்னோலை ஆதி பூணப் படுவனவும், பொற்சரிகைச் சேலை ஆதி உடுக்கப்படுவனவும், ஆகிய இவைமுதலிய போகங்களெல்லாம் அரையனால் மிகவும் இச்சிக்கப்பட்ட சுமங்கலியாகிய அரசியர்க்கே ஆகும்; அது போலும்,

சீவன் முத்தனுக்குப் போகம் அல்லால் காசு இற்ற முண்டையர்க்கு ஆகா குண்டை ஒப்பார்க்கு ஏன் இது ஆகும் எ-து,—சிவனது இச்சைப்படியே அவனது திருவடி சேர்ந்த சீவன் முத்தனுக்கே போகம் அன்றி, மங்கல நீங்கிய அமங்கலிக்குப் போகங்களில் ஒன்றேனும் ஆகாவாறு போலும், சிவனடி சேராது தவம்பண்ணுவோர்க்கும் அத்தவத்திற்கு உரிய விரதஞ் செய்து முடிப்பதே அன்றிப் போகங்களில் ஒன்றேனும் அநுபவிக்க லாகாது; அஃதன்றிக் குண்டையைப்போ

Digitized by Google

னும் சரியையாதி தொழில் செய்வோர்க்கும் இப்போகம் அநு பவிப்பது ஏன் ஆகும், எ-று.

தம்முதலாகிய சிவத்தை இழந்து தவம் பண்ணுவோரை முண்டையர் என்று குறிப்பாற் கூறினர். குண்டைக்குத் தொழில் செய்வதே அன்றி அரையனோடும் கூட்டுறவு இன் மைபோல் சரியையாதிகளைச் செய்வோர்க்கு இத்தொழில் செய்வதே அன்றி சிவத்தோடும் கூட்டுறவு இன்மையால் இவ ரை, "குண்டையொப்பார்" என்றார்.

இத்திருவெண்பாவால் திருவடியை அடைந்தோர்க்கே போகம் அநுபவிப்பதாம் அன்றி, மற்றையர் தமக்குச் சொன் ன நெறி நிற்பதே அன்றிப் போகம் அநுபவிக்கலாகாது என்று அறிவித்தவாறு காண்க. (கூ)

ஆனைமதப் பட்டா லலங்கார மன்றிநாய்
தானுமதப் பட்டாற் சரியாமோ - ஞானி
தடைமீறி னாலுஞ் சதுராகுங் கன்மி
கடைமீற லாகாது காண்.

(இ-ள்.) ஆனை மதப்பட்டால் அலங்காரம் அன்றி நாய் தா னும் மதப்பட்டால் சரி ஆமோ எ-து,—மதமேறா முன்னும் சிறப்புள்ள யானை பின் மதமேறித் தன் தடைகடந்து சேறி னும் சிறப்பேயாம், அன்றிப் பேய் ஏறா முன்னும் இழிவுள்ள நாய்தானும் பின் பேய் ஏறினல் அது போலும் சிறப்பாமோ? அவைபோலும்,

ஞானி தடைமீறினாலும் சதுர் ஆகும் கன்மி கடைமீறல் ஆகாது எ-து,—முன் நின்ற நிலை கடவாதிருந்த போதும் சிற ப்புள்ள மெய்ஞ்ஞானி பின் ஆநந்த மேலீட்டால் அந்நிலை க டந்து சேறினும் சிறப்பே ஆவன், கருமி நிலைகடவா முன்னு ம் அம்மெய்ஞ்ஞானிகட்கு இழிவாவன், தற்போதத்தால் அந் நிலை கடந்தபோதும் இழிவாவான். ஆகலின் தன்னிலை கடக் கலாகாது, எ-று.

Digitized by Google

ஆனைமதமேறினல் மிகவுஞ் சிறப்பு; நாய் பேயேறினல் மி கவும் இழிவு; அவைபோல, ஞானி தடைமீறினல் மிகவுஞ் சிறப்பு; கன்மி கடைமீறினல் மிகவும் இழிவென்பதுங் கா ண்க காண்-அசை.

இத்திருவெண்பாவால் ஞானி கிரியை செய்யினும் செய்யா விடினும் சிறப்பாவன் என்பதும், கன்மி கிரியை செய்யாவி டின் மிகவும் இழிவாவன் என்பதும் அறிவித்தவாறு காண்க.

அதிபக்கு வத்தாற் கநுக்கிரகஞ் செய்யும்
புதுமைக்குச் சாத்திரங்கள் போதா-திதுவென்னுப்
பேறே யநந்தம் பிரகாரம் வந்தானும்
வேறே யநந்த விதம்.

(இ-ள்.) அதிபக்குவத்தாற்கு அநுக்கிரகம் செய்யும் புது மைக்குச் சாத்திரங்கள் போதாது எ-து,—தீவிரதர பக்குவம் உடையானுக்கு ஞானநுக்கிரகம் பண்ணும் அதிசயத்திற்கு வெவ்வேறு வகைப்பட்ட சாத்திரங்கள் எல்லாம் போதாது; அஃது எங்ஙனம் எனின்,

இது என்னுப் பேறே அநந்தம் பிரகாரம் வந்தானும் வேறே அநந்தவிதம் எ-து,—இது என்று ஒன்றைச் சுட்டுதற்கு இடம் வைக்காதுகூறும் உபதேசப்பேறே அவனுக்கு அநந்தம் வித மாய்க் கூறும் சாத்திரங்கள் ஆகும், இங்ஙனம் வந்த பக்குவ னும் அநந்தம் பெயர்களுள்ளும் வேறு, இவனை ஒழிந்த பக்கு வர்களும் அநந்தவிதம் ஆவார்கள், எ-று.

தீவிரதர பக்குவனது அறிவு சிவத்தையே அன்றி மற்றொ ன்றையும் பகுத்து நாடாது ஆகலின், ‘சாத்திரங்கள் போதா து’ என்றார். மந்தம், மந்ததரம், தீவிரம் என்னும் இம்மூன் று பக்குவரும் நானபேதமாய் வருதலினும், இவர்க்கு உபதே சம் நானபேதமாகக் கூறிப் பக்குவப் படுத்தவேண்டும் ஆகலி னும், ‘அநந்தவிதம்’ என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் தீவிரதர பக்குவனுக்குக் கூறும் உபதேசமே போதமென்பதும் மற்றைய மூவர்க்கும் அவர் கூற உபதேச மொழியும் அன்றி வேதாகமங்களால் உணர்த்தவேண்டும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சுக)

அறியாமை நீங்கி யறிவா யறிவே
அறியாம லாயிரண்டு மற்றுப்-பிரியாதார்
தன்னிழப்பின் ஞான சமாதிக்குச் சாதகராம்
அந்நிலைக்கே சீவன்முத்த ராம்.

(இ-ள்.) அறியாமை நீங்கி அறிவாய் அறிவே அறியாமல் ஆய் இரண்டும் அற்றுப் பிரியாதார் எ-து,—சகலகேவலம் ஆகிய அறியாமை நீங்கித் தம்மை அருளாற்கண்டு அவ்வருள் அறிவாகி முன்மலமாகிய அறியாமையில் மறைந்திருந்தாற்போல் அவ்வறிவு தானே அறியாமையாகி அதனுள் மறைந்து இவ்வறிவென்பதும் தாமென்பதும் ஆகிய இரண்டும் அற்று இதனைப் பிறியாதிருப்போர்;

தன் இழப்பில் ஞான சமாதிக்குச் சாதகர் ஆம் அந்நிலைக்கே சீவன்முத்தர் ஆம் எ-து,—அங்ஙனம் இருக்கவே தற்சுதந்தரபோதம் அறும், அஃது அறவே பணாதாளுகிய ஞானசமாதிக்குச் சாதகர் ஆவர், இச்சாதகம் வந்த அக்கணமே சீவன்முத்தரும் ஆவர், எ-று.

இம்முறைவந்து பணாயோகத்தில் நின்றோர்க்குச் சுகப்பேறும் சுகாதீதமும் தாமே கிடைக்கும் ஆகலின், 'அந்நிலைக்கே சீவன் முத்தராம்' என்றார்.

இத்திருவெண்பாவால் பணாயோகத்தில் நிற்போரும் சீவன்முத்தராவர் என்று அறிவித்தவாறு காண்க. (சுஉ)

மகவான்கண் பார்த்தவர்க்கு மாண்பாய்த் தனக்குப்
பகமா யிலச்சைவிடாப் பண்பாய்ச்-சகமாணக்

Digitized by Google

கண்ணூரி போம்வேடக் கண்ணுடி காட்டுதவம்
எண்ணூழி காலமிருந் தென்.

(இ-ள்.) மகவான் கண் பார்த்தவர்க்கு மாண்பு ஆய்த் தனக்குப் பகம் ஆய் இச்சைவிடாப் பண்பு ஆய் எ-து,—இந்திரனது கண்களைப் பார்த்த பெயர்க்கு மாட்சிமையாய் அவ்விந்திரனுக்கு அல்குலாய் அவனது உள்ளே நாணம் விடா முறைமையா யிருந்ததுபோல;

சகம் மாணக் கண்ணூரிபோல் வேடக்கண்ணுடி காட்டுதவம் எண் ஊழிகாலம் இருந்து எ-து,—தவவேடத்தைப் பார்க்கின்ற சகத்தோர்க்கு மாட்சிமையா யிருப்ப இவ்வேடத்திற்கு உரிய ஞானம் தமக்கு இன்றென்று தம்முள்ளே நாணமுற வேசிபோல் மினுக்கிய வேடமாகிய கண்ணுடி காட்டப்பட்ட தவத்தார் அளவிறந்த காலம் இருப்பினும் அவ் வேடத்தால் பயன் அவர்க்கு என்னை உளது, எ-று.

அவனுக்குக் கண்களைப் பார்க்குந்தோறும் இலச்சை வரலால், 'இலச்சைவிடா' என்றார். அவனை இவர்க்கு உவமை கூறினமையால் இவர்க்கும் இவ்வேடத்தைப் பார்க்குந்தோறும் இலச்சைவரும் என்பது ஆயிற்று.

தவத்தோர்க்கு உரிய உள்ளொழுக்கமான ஞானசாரம் ஒன்றும் தோற்றாது வடிவமாத்திரையே தோற்றினமையால் 'வேடக்கண்ணுடி காட்டுதவம்' என்றார்.

இத்திருவெண்பாவால் சிவஞானம் இல்லார்க்குச் சிவவேடத்தால் பயன் இன்று என்று அறிவித்தவாறு காண்க. ()

வேதாகமப்பொதுவிலுபதேசம்

முற்றும்.

Digitized by Google

உ-ம். அதிகாரம்.

சத்திநிபாதத்

துத்தமரொழிவு.

நால்வகைச் சத்திநிபாதத்து உத்தமர்களது பிரபஞ்சப் பற்றொழிவை முறையே கூறினமையால் இவ்வதிகாரத்திற்குச் சத்திநிபாதத்து உத்தமர் ஒழிவு என்று பெயர் ஆயிற்று.

இவர் இந்நூற்கு உரியவர், ஆகலின் வேதாகமப் பொதுவினுபதேச வதிகாரத்தின்பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

சரியாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்-குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணால்வர்க் குபதேசம்
ஆனத் தையுநிகழ்த்தி னான்.

(இ-ள்.) சரியாதி நான்கினுக்கும் சாலோகம் ஆதிவரும் ஆறு எனக்கு அளித்த வள்ளல் குருராயன் எ-து,—சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் இந்நான்கு பாதத்திற்கும் சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் என்னும் இந்நான்கு பதமும் வருமுறைமையை எனக்கு அருளிச்செய்த வள்ளல் குருராயனாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார்;

ஞானத்தில் பக்குவர்கள் நால்வர்க்கு உபதேசம் ஆனத்தையும் நிகழ்த்தினான் எ-து,—ஞானபாதத்திற்கு உரிய மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் இப்பக்குவம் உடையார் நால்வரது இலக்கணமும் அவர்க்கு உபதேசித்த முறைமையையும் அருளிச்செய்தார், எ-று.

முப்பத்தாறு தத்துவங்களையும் வியதிகளைவது சரியை; அவற்றை அறிந்து நீங்கிய தன்னை அருளால் அறிந்து அவற்றின்

Digitized by Google

முடிவில் நிற்பது சாலோகபதம். ஆங்குத் தனக்கு அறிவித்த அவ் அருளைத் தெரிசித்துப் பின் அருள் என்றும் தான் என்றும் பிரித்து நோக்காது தற்போதத்தை அடக்குவது கிரியை; அவ் அருளே வடிவாயிருப்பது சாமீபபதம். அங்ஙனம் இருந்து தற்போதஞ் சிறிதும் தோன்றாது ஒழிப்பது யோகம்; ஆங்குப் பனை தானாயிருப்பது சாரூபபதம். அப் பனை நீக்கத்தில் தோன்றும் ஞானாநந்தத்தைப் பெறுவது ஞானம்; அந்த ஆநந்தத்தில் அதீதப்படுவது சாயுச்சியபதம். ஆகலின், "சரியாதி நான்கினுக்குஞ் சாலோகமாதி வருமாறு" இங்ஙனம் எனக்கொள்க.

கின்னரியைத் தொட்டவர்போற் கேட்ட வளவுக் களவு,—சொன்னதல வெங்கள் சுவாமியுரை - மன்னடத்தில்,—ஆனந்த மூர்ச்சிதர்கை யாடகயாழ் தன்னிலே,—தானுநலம் போலமொழிந் தான்.

(இ-ள்.) தொட்டவர் கேட்ட அளவுக்கு அளவு கின்னரியைப்போல் சொன்னது அல எங்கள் சுவாமி உரை எ-து,—வருடி வாசிப்பார் தாம் நினைத்துக் கேட்ட பாட்டின் அளவுக்கு அளவு கூறும் கின்னரியைப் போன்று யான் நினைத்து வினவியமட்டிற்கு இம்மட்டு விடைகூறியது அன்று, எமது சுவாமிகளாகிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருவாக்கு; (அஃது எங்ஙனம் எனின்,)

மன் நடத்தில் ஆனந்த மூர்ச்சிதர் கை ஆடக யாழ்தன்னிலே தானும் நலம்போல மொழிந்தான் எ-து,—பரமேச்சுரன் திருநடனத்தில் அந்நடன அதிசயத்தைப்பார்த்து ஆநந்த பரவசராய் நிற்போர் கைப்பிடித்த பொன்னினால் இயற்றப்பட்ட யாழ்தன்னிலே தான் வாசிக்கும் நலம்போல் யான் கேளாது கேட்க எனக்கு உபதேச மொழிகளை அருளிச்செய்தார், எ-று.

அவர் ஆநந்தபரவசராய் நிற்கவும் தெய்வயாழ் வருடாது வாசித்தல்போல, பிள்ளையார் ஆநந்தாதீதராய் எழுந்தருளி

Digitized by Google

யிருக்கவும் அவரது தெய்வவாக்கு நினையாது கூறிற்றென்பது அறிக. "கின்னரியைத் தொட்டவர்போல கேட்ட அளவுக்கு அளவு சொன்னதல" என்றமையால், கடாவும் விடையுந் தாமே அருளிச்செய்தார் என்பது ஆயிற்று. தெய்வயாழிற்கு மேல் வேறுயாழ் இன்மைபோல் இந்தஆசாரியர்க்குமேல் வேறு ஆசாரியர் இலர் என்பதும் காண்க. யாழ் உன்னி வாசியாதிருக்கவும் பிறர்க்கு அங்ஙனம் செய்ததுபோல் தோற்றலின், "தானு நலம்போல மொழிந்தான்" என்ற திருவாக்குக்கு அதனை உவமையாகக் கூறினர்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் தமது ஆசிரியர் ஞானபக்குவர் நால்வர்க்கும் உபதேசிக்கு முறைமையைத் தமக்கு அருளிச் செய்யும்போதும் ஆனந்தாதீதராய் எழுந்தருளியிருந்தே அருளிச்செய்தாரென்று அறிவித்தவாறு காண்க. (உ)

சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்குத்
தம்மாய்வார்க் கோருரையே சஞ்சீவம்-மென்மேலும்
மாற்றஞ் சகுனப்புள் வாக்கு மதுவுண்ட
போற்றும்பி யின்பாட்டுப் போல்.

(இ-ள்.) உத்தமர்க்குச் சும்மாதே பார்த்து இருக்கச் சுத்தி ஆம் தம் ஆய்வார்க்கு ஓர் உரையே சஞ்சீவம் எ-து,—தீவிரதரபக்குவர்க்கு ஓர் மொழியும் கூறாது ஞானசாரியர் மௌனநந்த நோக்கால் பார்த்திருக்கவே ஆன்மசுத்தி யாம், தீவிரபக்குவமுடையராய்த் தற்போதம் ஒழிப்போர்க்கு அப்போதஞ் சிறிதேனும் பசையாது ஒழிதற்கு ஏது வாய்க்கூறும் ஓர்மொழியே சஞ்சீவம் போன்ற சுத்தி ஆம்;

மென்மேலும் மாற்றம் சகுனப்புள் வாக்கு போல் மதுஉண்டதும்பியின் பாட்டுபோல் எ-து,—மந்ததர பக்குவர்க்கு விட்டு இசையாது இசைக்கும் சகுனப்புள் வாக்குப் போலச் சிற்சில சொற்களால் தெளிவிக்கச் சுத்தியாம். மந்தபக்குவர்க்கு மது

Digitized by Google

வை நிறைய உண்ட தும்பி இடையறாது பாடும் பாட்டுப் போல வேதாகம சாத்திரங்களாலும் நானு உபாய யுத்திகளாலும் இடையறாது அறிவிக்கச் சுத்தியாம், எ-று.

திருநோக்கக் குறிப்பால் அங்கிலே தெரிந்து கோடலின், "சும்மாதேபார்த்திருக்க" என்றும், சஞ்சீவத்தால் உடலம் சுத்தியாவதுபோல ஓர் உரையால் ஆன்மசுத்தி பெறுதலின், "சஞ்சீவம்" என்றும் சகுனப்புள்வாக்கால் தான் நினைத்தபொருள் கிடைத்தல்போல் சிற்சில சொற்களால் மெய்ப்பொருளைத் தெரிந்து கோடலின், "சகுனப்புள் வாக்குப்போல்" என்றும், மூர்ச்சித்துக் கிடந்த பெண்தும்பியை ஆண்தும்பி சூழ்ந்துகொண்டு இடையறாதுபாடி ஆடவே அதற்கு அம்மூர்ச்சை தெளிந்து இதனோடு பறந்து கூடல்போல், நானுவுபாய யுத்திகளான் இடைவிடாது அறிவித்து அறிவினது ஆணவ மூர்ச்சையைநீக்கித் தம்மோடு சேர்த்தலான், தும்பியின் பாட்டுப்போல்" என்றுங் கூறினர். சுத்தியாவது சகல கேவலங்களைநீங்கி அவற்றின் வாசனையோடு எழுந்ததற்போதமும் ஒழிதல். "மென்மேலு மாற்றஞ் சகுனப்புள்" என்றதனுல், ஆங்கைத என்பதாயிற்று. சகுனப்புள் வாக்குப்போல் என்றும் மதுவுண்ட தும்பியின் பாட்டுப்போல் என்றுங் கூட்டுக.

இத்திருவெண்பாவால் ஞானசாரியர் உபதேசத்தால் நால்வகைப் பக்குவரும் தெளிந்துகொள்ளு முறைமை அறிவித்தவாறு காண்க. (சு)

முலைமுதிர நாண முதிர்ந்தடங்கி மூடிக்
கலவியிலே நக்கினத்தைக் காட்டல்-சலனையன்
ஆனுலுந் தம்பனைசெய் தாநந்த மாக்குவது
போனுலா மிந்தப் பொருள்.

(இ-ள்.) முலை முதிர நாணம் முதிர்ந்து அடங்கி மூடிக்கலவியிலே நக்கினத்தைக் காட்டல் எ-து,—ஓர்பேதைப் பெண்

Digitized by Google

தனது முலை முதிர முதிர நாணம் மேன்மேலும் முதிர்ந்து, பிறபுருடரோடு முன்போல் நகையாடலாதி செய்யாது அடங்கி அம்முலையினை மறைத்துத் தனது சுயபுருடனுக்குக் கூட்டுறவின்கண் நக்கினத்தைக் காட்டுவதுபோலும், ஒருவன் அறிவு முதிரமுதிர முன்போல விடயங்களில் செல்வதற்கு நாணமுதிர்ந்து அவ்விடயங்களிற் செல்லும் போதத்தை உள்ளடக்கித் திருவருளின் மறைத்து ஆநந்தத்திற் கொப்பித்து நிற்றல்; (அப்போதத்தை ஆநந்தத்திற் கொப்பிக்க எனின் அங்ஙனம் ஒப்பிக்கு மாறே நில்லாமல்,)

சலனை பயன் ஆனாலும் தம்பனை செய்து ஆநந்தம் ஆக்குவதுபோனால் இந்தப்பொருள் ஆம் எ-து.—போதச்சலனை ஆனாலும், விடயப்பயனை அநுபவிப்ப தானாலும், இவ்விடயப் பயனை நீக்கி அப்போதச் சலனையை அடக்கி அப்போதத்தை ஆநந்தமய மாக்குவதானாலும், இவ்வாநந்தப் பொருள் ஓர் இயல்பிற்றாய்த் தோற்றாது அங்ஙனம்செய்வனபோம் ஆயின், இப்பொருள் ஓர் இயல்பிற்றாய்த் தோற்றுவதாம், எ-று.

முலை முதிர்ந்த பெண் அம் முலையையும் அல்குலையும் பிறபுருடருக்குக் காட்டாது மறைத்துச் சுயபுருடனுக்குக் காட்டுதல்போல், அறிவு முதிர்ந்தோர் தற்போதத்தை விடயங்களில் செல்லவொட்டாது மீட்டு உள்ளடக்கி அதனைச் சிவாநந்தத்திற் கொப்பிக்கவேண்டும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார். போதம் விடயங்களிற் சென்று அழுந்தியும் ஆநந்தத்திற் சென்று அழுந்தியும் இங்ஙனம் மாறிநிற்கும் எனின், ஆநந்தமும் மாறித்தோன்றும் ஆகலின், "ஆனந்தமாக்குவதுபோனாலாமிந்தப்பொருள்" என்றார். ஆனாலு மென்பதனைச் சலனையென்பதனோடும் ஆநந்தமாக்குவ தென்பதனோடுங் கூட்டுக.

இத்திருவெண்பாவால் அறிவாநந்தத்து அழுந்திய போதம் விரிந்து விடயாநந்தத்திற் செல்லாது ஓரியல்பிற்றாய் நின்றோர்க்கே அவ்வாநந்தம் மாறாது கிடைக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (௬)

Digitized by Google

பஞ்ச மலமும் பசுவநந்த மும்பதியும்
அஞ்சு தொழிலு மவத்தைகளும் - விஞ்சறிவும்
கேட்டுச் சரியாதி செய்துவிலே சங்கெடாக்
காட்சிமெழு கிற்கனகங் காண்.

(இ-ள்.) பஞ்சமலமும் பசு அநந்தமும் பதியும் அஞ்சுதொழி லும் அவத்தைகளும் விஞ்சு அறிவும் கேட்டு எ-து,—ஆண வம், மாயை, காமியம், திரோதை, மாமாயை என்று கூறப்ப ட்ட பஞ்சமலங்களினது இலக்கணமும், இம்மலங்களால் மறைபட்டிருந்த அநேகமாயுள்ள பசுவினது இலக்கணமும், இப்பசுபாசங்கட்கு முதன்மையாய் ஏகமாயிருந்த பதியினது இலக்கணமும், அப்பதியால் செய்யாநின்ற பஞ்சகிருத்திய இலக்கணமும், இப்பஞ்ச கிருத்தியத்தால் நடக்கும் சாக்கிரா தி அஞ்சவத்தையினது இலக்கணமும், இவ்வஞ்சவத்தைகள் தோறும் சுழலும் ஆன்மபோத இலக்கணமுங் கேட்டறிந்தும்;

சரியாதி செய்து விலேசம் கெடாக் காட்சி மெழுகில் கன கம் எ-து,—சரியை கிரியா யோகங்களைச் செய்தும் அப்பாசத் தை நீங்கிப் பதியை அடைந்து பிறவித் துன்பத்தை நீக்கமாட் டாதார் அறிவு மாற்று அறி மெழுகில் அடங்கிய கனகம் போ லும் ஆம், எ-று.

உரைத்து ஒட்ட ஏறிய கனகம் உருக்கி எடாமையின் மெ ழுகில் மறைந்தாற்போலத் திரிபதார்த்தங்களினது உண்மை யைக் கேட்டறிந்த அறிவு சுவாநுபவத்தால் வெளியாகாது மல த்துள் மறைந்தமையால் 'மெழுகிற் கனகங் காண்' என்றார். அவ்வறிவு பிறர்க்குக் காட்சியாய்த் தோற்றலான் அதனை, 'காட்சி' என்றார். காண்-அசை.

இத்திருவெண்பாவால் பதி, பசு, பாசங்களினது உண்மை யை வேதாகமங்களால் உணர்ந்தாலும் அப்பதியைச் சுவாநு பவத்தால் உணராதார்க்குப் பயனில்லை என்று அறிவித்தவாறு காண்க. (௯)

Digitized by Google

வாதி வடத்தினமு மாமருத்து வன்பிணியும்
சாதித்த வீரன்மேற் றம்பலமும் - தீததுபோல்
ஞானத்தி லின்பை நசிப்பித்து நானதுவாம்
ஊனத்தை யாரொழிவிப் போர்.

(இ-ள்.) வாதி வடத்தினமும் மா மருத்துவன் பிணியும் சாதித்த வீரன்மேல் தம்பலமும் தீது அதுபோல் எ-து,—பஞ்சலோகங்களையும் பொன்னாக்கினேன் என்று கூறும் இரதவாதி மிடியனாயிருத்தலும், பிறர் பிணிகளை எல்லாம் போக்கினேன் என்று கூறும் மகாவயித்தியன் பிணியனாயிருத்தலும், பகைகளை எல்லாம் வென்று சாதித்தேன் என்று கூறும் மகாவீரன்மேல் பிறர்போட்ட தம்பலம் இருத்தலுங் குற்றமாம், அதுபோல;

ஞானத்தில் இன்பை நசிப்பித்து நான் அது ஆம் ஊனத்தை யார் ஒழிவிப்போர் எ-து,—சுவாநுபவத்தால் ஞானாநந்தத்தைப்பெறாது அதனை விடயச்சேற்றால் கெடுப்பித்து இவ்விடயச் சேற்றில் அழுந்தி நின்று அவ்வாநந்தத்தை அடைதற்கு ஏதுவாகக்கூறும் ஞானசாத்திரங்களைக் கேட்டறிந்த மாத்திரத்தில் நான் அவ்வாநந்த மயமானேன் என்று கூறுங் குற்றத்தை யாவர் நீக்குகிற்பார், எ-று.

மிடி பிணி தம்பலம் அவரிடத்திருத்தலால் தாம் சொன்னவாறு செய்பவர் அலர் என்று அறிந்தாற்போல, விடயப்பற்று விடாமையால் இவர் இங்ஙனம் கூறுதலே அன்றி அதனை அடைந்திலர் என்பதறிக. மிடியாதி அவர்க்குக் கூறினமையால் விடயம் இவர்க்கு வருவிக்கப்பட்டது. இங்ஙனம் கூறுதல் மிகவுந் தோஷமாகலின், 'ஊனத்தையாரொழிவிப்போர்' என்றார்.

இத்திருவெண்பாவால் சிவாநந்தத்தைப் பெறாதிருந்தும் பெற்றேமென்று அசத்தியங் கூறல் மிகவும் பாவமென்று அறிவித்தவாறுகாண்க. (௫)

Digitized by Google

மயலற்றார் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை
அயலுக் குபதேச மாகும் - துயிலாத்
தொறுவனைப்போ னின்றுகே டூசழுக்கு நோயும்
அறுமுரைத்தோ நாமுரைப்ப தை.

(இ-ள்.) மயல் அற்றார் கேட்க மகிழ்ந்து உரைத்த வார்த்தை அயலுக்கு உபதேசம் ஆகும் எ-து,— தேகாதி பிரபஞ்சங்களை யான் எனது என்று கருதும் மயக்கம் அற்ற அதிபக்குவத்தார் கேட்க ஞானாசாரியர் ஆனந்தமகிழ்ச்சியால் அருளிச்செய்த உபதேசமொழிகள் அப்பக்குவர்க்கு அன்றி அயலில் இருந்தோர்க்கும் உபதேச மாகும்; (ஆகலின் அம்மொழிகளை,)

துயிலாத் தொறுவனைப்போல் நின்று கேள் தூசு அழுக்கு நோயும் அறும் நாம் உரைப்பதை உரைத்தோம் எ-து,— சாக்கிரத்தில் நில்லாது சொப்பனத்துஞ் செல்லாது இடையான தன்மையாய்த் துயின்றும் துயிலாத இடையனைப் போன்று கேவல சகலங்களில் தாக்கற்று நின்று கேட்டி, இங்ஙனங் கேட்டி எனின், தூசின்மேல் ஏறும் அழுக்குப்போன்று ஏறுவதாய ஆகாமிய துன்பமும் ஒழியும், யாம் உனக்குச் சொல்ல வேண்டிய புத்தியைச் சொன்னோம், (இதனை நீ அறிதி) எ-று.

இடையன் கோற்கண் துயிலாதுதுயின்று மாட்டுமணி அரவத்தைக் கேளாதுகேட்கும் முறைமைபோல் இப்போது ஞானோபதேசம் கேட்கும்போதே சகல கேவலங்கள் தாக்காது கேட்போன் அநுபவமுற்றும் பெற்று மும்மலச் சட்டும் ஒழிந்து நிற்பன் ஆகலின், ''தூசழுக்குநோயுமறும்'' என்றார். தூசழுக்கு நோயுமறும் என்ற வும்மையால் சஞ்சித பிராரத்தமும் அறும் என்பதாயிற்று. அஃது எங்ஙனம் எனில், கருவிகள் சடமாகலின் அவைகள் ஆன்மாவை அறிந்து கூடமாட்டா, ஆன்மா கேவலத்தில் மறைபட்டுக் கிடத்தலின் அவைகளைச்சென்று கூடமாட்டான். கருவிகளைப் பிரேரகம்பண்ணி

Digitized by Google

இக் கேவல மறைப்பை நீக்கிச் சகலத்தில் வைத்துப் பெத்தத்தில் தேகாதி பிரபஞ்சங்களை அறிவிப்பது போலவும், கீழால் அவத்தைப்படுத்திக் கேவலத்தில் வைப்பதுபோலவும், முத்தியில் இக்கேவல சகலங்கள் தாக்காது வைத்துச் சுத்தாவத்தையிற் செலுத்திச் சுத்தத்தில் வைப்பதும் திருவருளே என்றும், இஃதன்றிக் கருவிகளைக் கூட்டுவித்தபோது ஆன்மாவிற்குச் சுதந்தர அறிவுதோன்றித் தான் அல்லாத தேகத்தைத் தானெனக் கருதிநின்று யானே எல்லாவற்றையும் அறிவேன், எல்லாவற்றையுஞ் செய்து முடிப்பேன், எனக்கு எதிரொருவரும் இன்றென நிற்கும், இங்ஙனம் நிற்பதனால் இதாகிதங்களும் இவற்றான்வரும் இருவினைகளும் தொடரும், இத்தொடர்ச்சியால் அளவிறந்த பிறவிகளில் நெடுங்காலம் சுழல்வது இங்ஙனம் என்று அந்தப் புல்லறிவை விட்டு நீங்கி, கானலை நீரென்று மயங்கிக் கண்டபோதும் நீரை நீரென்று உள்ளபடி கண்டபோதும் தனக்குக் காட்டி நின்றது கதிரொளி என்று கண்கண்டு நின்றாற்போல், ஆன்மா பொய்யை மெய்யென்று மயங்கி நின்று அறிந்தபோதும், மெய்யை மெய்யென்று தெளிந்து நின்று அறிந்த போதும், திரோபவித்தும் அநுக்கிரகித்தும் அறிவித்து நின்றதும் திருவருளே என்றும், உள்ளபடி அறியில் தானென்பதும், இந்தமுறையே அவன் அவள் அது என்னும் முன்னிலைக் கண்ணும் திருவருள் நடப்பிக்கின்றது என்று கண்டு அம்முன்னிலைகளால் தனக்கோர் இதாகிதங்கள் வந்தகாலை அம்முன்னிலைகளை நாடாது வினைக்கீடாய்த் திருவருள் நடப்பிக்கின்றதென்று அத் திருவருளைநாடி நிற்றலன் பிறனென்பதும் போய், எங்குந் திருவருளைக் காண்டலால் ஆகாமியம் அறும் என்பதும் ஞானாசாரியர் கிருபாநோக்கத்தால் சஞ்சிதம் அறும் என்பது உண்மை. முற்செனனம் புரிந்த வல்வினை உடலுடன் அகலும் என்றும் "வினைப்போகமே யொருதேகங்கண்டாய் வினைதானொழிந்தால், தினைப்போதளவு நில்லாதுகண்டாய்" என்றும் இங்ஙனம் ஈச்சுவர

Digitized by Google

வாக்கியம் ஞானிகள் வாக்கியங்கள் இருக்க, நீர் பிராரத்தவி னையும் போம் என்றது என்னை எனின், ஈண்டுக் கூறியமுறை யே நின்று யான் பிறர் என்பது ஒழிந்து திருவருளே கண்ணா கச்சென்று சிவதரிசனம் பண்ணி அதில் அதீதப்பட்டுநின்ற சிவயோகி பஞ்ச கிருத்தியங்களையுங் கடந்து பரமுத்தனைப் போல் இருப்பன். ஆகலினும், அவன் பிராரத்தம் வருவது போல் தோன்றி அழிவதே அன்றி அவனை வாதியாது ஆகலி னும், அவனுக்குப் பிராரத்தம் இன்றென்பதறிக. இன்னும் அப்பர் மாணிக்கவாசகர் முதலாயினோர் சரித்திரங்களினாலுங் காண்க.

யான்பிறர் என்பதனால் வினை ஏறும் என்பதற்கு உதாரணம். திரட்டு.—"தானலா தொன்றுதன்னைத் தானெனக் கருதிக் கொண்டே, யானெலாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞா ன மத்தால், ஈனமாம் வினையிரண்டா மிருவினை யாலு டம் பாம், ஊனமா ருடம்பா லூழா மூழினாலாகா தண்டோ". சித்தியார்.—"யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு மிக்கோனை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத், தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்றா னேரே தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடும், நான் செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம், ஊன்செய்யா ஞானந்தா னுதிப்பின லலாலொருவருக்கும் யானெனதிங் கொழியாதன்றே". சிவ ஞானதீபம்.—"யான்செய்தேன் பிறர்செய்தா ரெனுங்கோணி ங்கி" என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. பிராரத்தம் இன்றென்பதற்கு உதாரணம். திருவருட்பயன்.—"மும்மை தரும்வினைகண் மூளாவாமூதறிவார்க், கம்மையு மிம்மையே யாம்" என்பதனானுங் காண்க.

இத்திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசங் கூறுமிடத்து மாணாக்கன் சகலகேவலங்களில் தாக்கற்று நின்று கேட்பின் மூவகை வினைகளும் அறுமென்று அறிவித்த வாறு காண்க.

Digitized by Google

அண்ட முதலா யநந்தம் பிறப்பின்விதம்
கொண்டுநர ராய்வினைகள் கூறொத்துத்-தொண்டின்
சரியாதி செய்து தவச்சார்பி னிற்போர்க்
கரிதான பக்குவநா லாம்.

(இ-ள்.) அண்டம்முதல் ஆய் அநந்தம் பிறப்பின் விதம் கொண்டு நரர் ஆய்த் தொண்டின் சரியாதி செய்து வினைகள் கூறு ஒத்து எ-து,—அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் இந்நான்கினில் தோற்றும் எழுவகைப் பிறவியில் உண்டாகிய எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களினும் அநந்தம் உருக்கொண்டு மாறிமாறிச் சுழன்று அவை தொலைத்தும் பின்பு நரவடிவு கொண்டு இவ்வடிவு அநந்தங்கோடியில் சிவபுண்ணியநேரிட்டு அச்சிவபுண்ணியத்தால் சிவத்தொண்டு பூண்டு இச்சிவத்தொண்டினால் சரியை கிரியா யோகங்களைச் செய்து இச்சரியை கிரியாயோகங்களால் இருவினை ஒப்பு மலபரிபாகம் பிறந்து;

தவச்சார்பில் நிற்போர்க்கு அரிது ஆன பக்குவம் நாலாம் எ-து,— உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை நீத்துத் தவச்சார்பில் நிற்போர்க்குக் கிடைத்தற்கு அரிதாகிய மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் எனப் பக்குவம் நான்கு உள, எ-று.

இத்திருவெண்பாவால் இருவினையொப்பு மலபரிபாகம் உடையோர்க்குப் பக்குவம் நால்வகையா யிருக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (அ)

மேலைச் சுகம்வெறுத்து மேலொடுகீ ழற்றுவெறும்
சாலப்பொய் யாயுடலார் தானார்தன்-மூலமார்
என்றுதெரிவிப்பாரை யெய்துவோமென்றிரண்டாய்
ஒன்றுபடத் தேட்டமுதிக் கும்.

(இ-ள்.) மேலைச் சுகம் வெறுத்து மேலொடு கீழ் அற்று வெறும் சாலப் பொய் ஆய் உடல் ஆர் தான் ஆர் தன் மூலம்

Digitized by Google

ஆர் என்று எ-து,—மேலாகிய வனிதாதிசுகங்களை வெறுத்து, இனிமேல் அடையும் பதமுத்திகளினும் பூலோகபோகத்தி லும் விருப்பற்று, அவைகளை எல்லாம் மிகவும் வெறும் பொய் யாய்க் கண்டு, இவ்வுடல்தான் யாது ? இதனுள் இருந்த நான் யாவன் ? எனக்கு முதலாய் உள்ள பதியாது ? என்று விசாரி த்து; (இவை எம்மால் அறியக் கூடுவதில்லை ஆகலின்,)

தெரிவிப்பாரை எய்துவோம் என்று இரண்டு ஆய் ஒன்று படத்தேட்டம் உதிக்கும் எ-து,—இவற்றை அறிவிக்கும் ஞா ஞசாரியரை அடைவோம் என்று கருதித் தான் என்றும் சிவ ம் என்றும் இரண்டாய்ப் பகுத்தறிவதாய்ப் பின்னர் அச்சிவத் தோடு ஒன்றாக இங்ஙனம் பகுத்தறிவித்து ஒன்றாக்கும் அந்த ஞானசாரியர் எங்குளர் என்று தேடுந் தேட்டம் பிறக்கும்,

முன்போல் மெய்யாய்த் தோன்றாமையின், "வெறுஞ்சாலப் பொய்யாய்" என்றார்.

இத்திருவெண்பாவால் பக்குவர்க்கு ஞானசாரியரைத்தே டுந் தேட்டம் இங்ஙனம் பிறக்கும் என்று அறிவித்த வாறு காண்க. (க)

வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பிக்கு மெய்ந் நடுங்கும்,—வார்த்தை நழுவு மனம்பதறும்-கார்க்கத மாய்க்,—காந்து முரோமாஞ் சலியாகுங் காதலித் தார்க்,—கேய்ந்தகுணங் காணிவையெட் டும்.

(இ-ள்.) வேர்க்கும் கண் நீர் ததும்பும் கம்பிக்கும் மெய் நடு ங்கும் வார்த்தை நழுவும் மனம் பதறும் கார்க்கதம் ஆய் காந் தும் உரோமாஞ்சலி ஆகும் எ-து,—உடற்கண் வேர்வை அரு ம்பும், கண்களில் ஆநந்தநீர் பெருகும், உளம் நடுங்கும், உடல நடுங்கும், வசனம் குழறும், ஆசாரியரை என்றைக்கு அடை வோம் என்று மனம் விரைந்து நாடும், மேகம்போல் உள்ளே குமுறி உளமெல்லாம் வெதும்பும் உடல் மயிர்க்குச்செறியும்;

Digitized by Google

இவை எட்டும் காதலித்தார்க்கு எய்ந்த குணம் எ-து—ஆகிய இவை எண்வகையும் ஞானசாரியனை விரும்பித் தேடுவோர்க்கு இயைந்த குணங்களாம், எ-று. காண்-அசை.

இத்திருவெண்பாவால் ஞானசாரியனைத் தேடும்போது பிறக்குங் குணம் அறிவித்தவாறு காண்க, (கO)

அனைநோட்டஞ் சிந்தை பெருமூச் சறியாச்
சுரமூட்ட மெல்லாந் துறத்தல் - உரைதோற்று
மானமவுனம் விகள மறவைசா
வானவிவை பத்துமவத் தை.

அனைநோட்டம் சிந்தை பெருமூச்சு அறியாச் சுரம் ஊட்டம் எல்லாம் துறத்தல் உரை தோற்று மானம் எ-து,—மனம் சகமுகத்தைவிட்டு அகமுகமாய் நிற்றலின் அருகிய நோக்கமும், எப்போது ஞானசாரியனை அறிந்து அடைவோம் என்னும் சிந்தனையும், அவனை நினைக்குந்தோறும் நெட்டுயிர்ப்பெறிதலும், இந்நினைவு மேலீட்டால் பிறரால் அறியக்கூடாத சுரம் மேலெழுதலும், இதனால் ஊண் உறக்கமுதலிய எல்லாம் துறத்தலும், இதனைப் பிறருக்கு யாதென்று சொல்வோம் என்று சொல்லாது அடக்கும் மானமும்,

மவுனம் விகளம் மறவை சாவு ஆன இவை பத்தும் அவத்தை எ-து.—இம்மானத்தால் ஒருவரோடு ஒன்றுஞ் சொல்லாதிருக்கும் மௌனமும், இங்ஙனம் கூறும் விசாரமேலீட்டால் பித்தமேறலும், இந்த அவத்தைகள் படுங்காலத்தும் அந்த ஞானசாரியர் எதிர்ப்படாராயின் மூர்ச்சித்தலும், இறத்தலும் ஆகிய இவை பத்தும் பக்குவர்க்குத் தோற்றும் அவத்தைகளாம். எ-று.

மறவை சாவு என்னும் இரண்டவத்தையும் தீவிரதர பக்குவர்க் கெனக் கொள்க.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஞானசாரியர் எதிர்ப்படாத போது அவர்க்கு இங்ஙனம் அவத்தைகள் தோற்றும் என்று அறிவித்த வாறு காண்க. (கக)

தேட்டந் திரண்ட திருமேனி யுட்புறம்பாய்க்
காட்டு மளவே கரைபுரண்டு-கேட்ட
அதிபக் குவத்தார்க் ககம்புறமென் றாறு
விதிவைத்த தீக்கையா மெண்.

(இ-ள்·) உள் புறம்பு ஆய் தேட்டம் திரண்ட திருமேனி காட்டும் அளவே எ-து,—தமது உயிர் உள் இருந்தும் தெரி யாது தாம் தேடும் தேட்டமாகிய பேராநந்தந்தானே திரண்ட ஞானசாரியர் தமது திருமேனியை அவர் கண்ணோக்காணும் படி புறம்பாய்க் காட்டுமாத்திரத்திலே;

கரைபுரண்டு கேட்ட அதிபக்குவத்தார்க்கு அகம் புறம் என்று ஆறு விதிவைத்த தீக்கை ஆம் எண் எ-து,—அன்பென் னும் ஆறு கரைபுரண்டெழுந்து உந்த அவ் வாசாரியரைப் பல தரம் வலம்வந்து அட்டாங்கமுதலிய வணக்கஞ் செய்து பின் னெழுந்து அஞ்சலி அத்தராய் நின்று ஆநந்தக்கண்ணீர் ஒழுக அநேக தோத்திரம் பண்ணி எமது சுவாமிகளே ! அடியேங் கட்கு இவ்வுடல் வந்தவாறு யாது? இவற்றுள் இருந்த யாம் ஆர்? எமக்கு முதலாயுள்ள மெய்ப்பொருள் யாது? என்று கே ட்ட அதிபக்குவமுடையோர்க்கு வேதாகமங்களில் விதித்து வைத்தபடி அவர் பண்ணுந்தீக்கை அகத்தீக்கை மூன்று புறத் தீக்கை மூன்று என்று ஆறுவகையா யிருக்கும் என்று அறிதி.

தீக்கைகள் ஆறுவன—திருநோக்கம், பரிசம், வாக்கு, பாவ னை, நூல், யோகம் என்பன; இவற்றுள் திருநோக்கம், பாவனை யோகம் என்னும் இம்மூன்றும் அகத்தீக்கை; பரிசம், வாக்கு, நூல் என்னும் இம்மூன்றும் புறத்தீக்கை எனக்கொள்க. உள் ளென்பதை உயிருள்ளிருந்தும் எனக்கொள்க.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஞானசாரியர் தமக்கு எதிரே எழுந்தருளியபோது பக்குவர் வணங்கி வினவு முறைமையும் இவர்க்கு அவர் பண்ணுந்தீக்கை இவை என்பதும் அறிவித்தவாறு காண்க. (கஉ)

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் மலமாயை
கருமத்தை யெல்லாங் கழற்றிச்-சரியாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

(இ-ள்.) பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் மலம் மாயை கருமத்தை எல்லாம் கழற்றி எ-து,—பறவை முட்டையைச் செட்டையால் பரிசித்தல்போல் மாணாக்கனைக் கரசரணங்களால் பரிசித்தும் ஆமை கரைக்கண் இருந்த முட்டையைத் தன்மனத்திற் பாவித்தல்போல் அவனைத் தமது அருளுருவாய்ப் பாவித்தும், மீன் தனது சினையைப் பார்த்தல்போல் அவனைத் தமது கிருபைப் பார்வையாற் பார்த்தும், ஆணவமலம் மாயாமலம் கன்மமலமாகிய இவையெல்லாம் நீக்கி;

சரியாதி வாதனை ஆம் போத மயக்கத்தை வாக்காலே போதைசெய்து போக்கிவிடப் போம் எ-து,— சரியைகிரியா யோகங்களைச்செய்யும் வாசனை ஆகிய தற்போத மயக்கத்தை நீக்குதற்கு ஏதுவாகிய உபதேசமொழிகளைத் திருவாக்கால் போதித்து நீக்கப் போம், எ-று.

யோகத்தைப் பாவனையுள் அடக்கி நூலை வாக்கில் அடக்கி தீக்கை ஆறையும் ஈண்டு நான்காய்க் கூறினார்

இத்திருவெண்பாவால் ஞானசாரியர் மாணாக்கனுக்குத் தீக்கையால் மும்மலங்களையும் தற்போதத்தையும் நீக்குமுறைமை அறிவித்தவாறு காண்க. (கங)

காலமறை தேசமறை கன்மறைபோற் காண்பாரும்
பாலுணும்புள் ளிப்பிமீன் பக்கிதீக்-காலும்

Digitized by Google

இரும்பினீர் மின்னலிலே யேற்றபணம் பார்ப்பார்
தரும்பொருளைக் கொள்ளுவார் தாம்.

(இ-ள்.) காலமறை தேசமறை கல் மறைபோல் காண்பாரும் எ-து,—முன் ஓர்காலத்து ஓர்பொருளை அறியாதிருந்து பின் ஓர்காலத்து அதனை அறிந்துகொள்ளும் காலமறைபோலும், ஓர் தேசத்து அறியாதிருந்த பொருளை ஓர் தேசத்து அறிந்துகொள்ளும் தேசமறைபோலும், முன்மணியென்று அறியாதிருந்தும் பின் அதின் கோட்டம் அறிவாரோடும் பழகி மணி என்று அறிந்துகொள்ளும் கல்மறைபோலும், ஆசாரியர் அநுக்கிரகத்தப் பொருளை அறிந்துகொள்ளுவாரும் உளர்; அஃதன்றி;

பால் உணும் புள் இப்பி மீன் பக்கி தீக்காலும் இரும்பின் நீர் மின்னலிலே ஏற்ற பணம் பார்ப்பார் தரும்பொருளைக் கொள்ளுவார்தாம் எ-து,—பாலுண்ணும் அன்னப் புள்போலும், சிப்பிபோலும், மீன் உண்ணுங் கொக்குப் போலும், உலையில் நெருப்பெழக் காய்ந்த இரும்பின் நீர் போலும், மின்னலொளியில் ஏற்கப்பட்ட பணகோட்டம் அறிவார்போலும், அவராருளிச்செய்த பொருளை அங்ஙனம் ஏற்றுக்கொள்ளும் பக்குவரும் உளர், எ-று.

ஆசாரியர் அநுக்கிரகித்த பொருள் அக்காலத்துத் தோற்றாதிருந்த சின்னாட்குப் பின்னர் தம்முள்ளே தெரிந்துகோடலால் "காலமறை" என்றும், அவர் கொடுத்த நூலில் தெரியாதிருந்து அந்நூற்பொருளைக் கூறும் மற்றோர் நூலில் தெரிந்து கோடலால், "தேசமறை" என்றும் தாம் கற்றநூல் கற்றோரோடும் பழகித் தெரிந்து கோடலால், "கன்மறைபோல்" என்றுங் கூறினார். அன்னம் நீரைநீக்கிப் பாலை உண்டாற்போல் சரியாதிகளை நீக்கி ஞானமொழியைக் கோடலான், "பாலுண்ணும்புள்" என்றும், சிப்பி சோதிமழைக்கு அங்காந்திருந்து துளிவிழுந்த மாத்திரத்தில் வாய்மூடிக் கொள்ளு

Digitized by Google

தல்போல் எப்போது கூறுவார் என்று இதயம் மலர்ந்து கேட்டு அங்ஙனங் கேட்டபொருளை உள்ளடக்கிப் பயன்படுத்திக் கோடலான், "இப்பி" என்றும், கொக்குத் துறைக்கண் அசைவறநின்று மீன் வந்துழிக் கவருதல்போல் சித்திரப்பாவைபோல் அசைவற இருந்து பயன்தருமொழி வருந்தோறும் ஏற்றுக்கோடலான், "மீன்பக்ஷி" என்றும், இரும்பு தான் ஏற்கும் நீர்மாத்திரம் எடுத்துக்கொண்டு அதனை மீளவிடா திருத்தல்போலத் தமக்கு வேண்டிய உபதேசமொழிகளை ஏற்றுக்கொண்டு மீளவிடாதிருத்தலான், "இரும்பினீர்" என்றும், கட்கூர்மையால் விளங்கு மின்னல் ஒளியில் பணம் பார்ப்பதுபோல் அறிவுக் கூர்மையால் அதிசீக்கிரத்தில் கூறிய மொழிகளின் அருத்தமெல்லாம் அறிந்துகோடலின், "மின்னலிலே யேற்ற பணம்பார்ப்பார்" என்றுங் கூறினர். காலமறையாதி மூன்றற்கும் இன்ன காலத்து இன்னபொருள் உளதென்றும், இன்ன தேசத்தில் இன்னபொருள் உளதென்றும், இன்னமலைக்கப்பால் இன்னபொருள் உளதென்றும், தமக்கு ஆப்தனாயுள்ளவன் கூற அம்மொழியை உண்மையாகக் காண்பார்போற் காண்பாரும் உளரென்றும் ஆம்.

இத்திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசித்த பொருள்களை மாணாக்கர் இம் முறைமைகளாய் ஏற்றுக்கொள்வார் என்று அறிவித்தவாறு காண்க. (௯௪)

பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினிபோற் பால்போல்
அதிமோகி தீப்புகல்போ லன்பாம்-விதவையர்போல்
கன்னன் கடையிற் கொடைபோலக் காணலாம்
தன்னையிழ வாதிழந்த ரூன்.

(இ-ள்.) பதி இறக்கக் கேட்டு இறந்த பத்தினிபோல் பால் போல் அதிமோகி தீப்புகல்போல் எ-து,—பதி இறந்தான் என்று பிறர் கூறக் கேட்ட அக்கணத்தில் தானும் இறந்த பதி விரதை போலும், கடைகாலில் இருந்து கவிழ்ந்த பால்போ

Digitized by Google

னும், தனது புருடன்மேல் அதிமோகியா யிருந்தவள் அவ
னிறந்த காலத்து அவனோடும் அக்கினிப்பிரவேச மாதல்
போலும்;

அன்பு ஆம் விதவையர்போல் கன்னன் கடையில் கொடை
போலத் தன்னை இழவாது இழத்தல் காணல் ஆம் எ - து,—
புருடன் இறந்துபோய பின்னரும் முன்னர் அன்பு விடாதிரு
ந்த விதவையர்போலும், மறுமைகுறித்து ஈட்டிய புண்ணிய
மெல்லாம் ஓர் அந்தணனுக்கு கன்னன் தன் தேகாந்தத்திற்
கொடுத்த கொடைபோலும், ஆசாரியர் உபதேசித்த மொழி
களை உட்கொண்ட பக்குவர் தம்மை ஒழியாதொழிக்கும்
முறைமை காணப்படும், எ-று.

கேட்ட அக்கணத்து இறந்தாளைப்போல் உபதேசமொழி
யைக்கேட்ட அக்கணத்தில் போதமிறத்தலின், "பதியிறக்கக்
கேட்டிறந்த பத்தினிபோல்" என்றும், பால் எல்லாங் கவிழ்ந்
தது ஆயினும் அதனுள் வாசனை இருத்தல் போல் போதம்
இறந்தது ஆயினும் அப்போத வாசனை யிருத்தலின், "பால்
போல்" என்றும், சிலநாழிகை சென்ற பின்னர்த் தீப்புகல்
போல் சிலநாளில் போதம்இறத்தலின், "அதிமோகி தீப்புகல்
போல்" என்றும், புருடனோடு இறவாதிருந்து தேகபோகங்
களை வெறுத்து இருத்தல்போல் யான் எனது என்று எழும்
போத எழுச்சியை அடக்கியிருத்தலின், "விதவையர்போல"
என்றும், ஒன்றையுங் குறியாது கொடுத்தல்போல் ஒன்றையுங்
கருதாது எல்லாவற்றையும் விடுத்தலின், "கன்னன் கடையிற்
கொடைபோல்" என்றுங் கூறினர். தான்-அசை.

இத் திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசித்தபொருளை
உட்கொண்ட பக்குவர் தற்போதம் ஒழிக்கும் முறைமையை
இங்ஙனமென்று அறிவித்தவாறு காண்க. (சுெ)

மாற்றுப்பலவகையாம் போன்றோடை வைப்பான்போ
தேற்றிச் சிவாகமத்தாற் செப்புகினும் - ஏற்ற [ல்

Digitized by Google

பரிபாகத் தாலே பழுப்பாம் பலவும்
ஒருபாக மன்றென் றுணர்.

(இ-ள்.) பலவகை ஆம் பொன்மாற்று ஓட்டவைப்பான் போல் சிவாகமத்தால் தேற்றிச் செப்புகினும் எ-து,—பலவகையாய்த் தோற்றும் மாற்றுப்பொன்களைப் பத்துமாற்று ஆக்குதற்பொருட்டுப் புடம்போடும் ஒருவனைப்போலும், பக்குவர் நால்வருக்கும் ஓர் படித்தாற் சிவாகமத்தால் தெளிவித்துக் கூறினும்;

ஏற்ற பரிபாகத்தாலே பழுப்பு ஆம் பல்வும் ஒருபாகம் அன்று என்று உணர் எ-து,—மாற்று ஏற்றமாயிருந்த பொன் பரிபாகத்தால் முன் பழுப்பாகும் அன்றிக்குறைந்தமாற்று உயர்ந்த மாற்றுக்களாகிய பலபொன்களும் ஒருபாகமாய்ப் பழுப்பாகுவதன்று, அதுபோல உயர்ந்த பக்குவனுக்கு முன்னர் ஞானம் ஏறும் அன்றி எல்லார்க்கும் ஓர் பிரகாரமாய் ஞானம் ஏறுதென்று அறிதி, எ-று.

தாழ்ந்த மாற்றுப் பொன்களைப் புடம் போடுந்தோறும் இடைகுறைந்து மாற்றுயர்தல்போல, தாழ்ந்த பக்குவர்க்குச் சிவாகமத்திற் கூறும் நானு உபாய யுத்திகளை உபதேசிக்குந்தோறும் பாசங் குறைந்து ஞானமேறும் என்பதுங் காண்க.

இத்திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசிக்கும் மொழி ஓர் பிரகாரம் ஆயினும், பக்குவ உயர்ச்சி தாழ்ச்சிப்படி ஞானம் ஏறுவதன்றி ஓர் படித்தாய் ஞானம் ஏறுதென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

கல்லையுரு வாக்குங் கழற்றியிலே யில்வாழ்க்கைச்
சில்லநீர் போலத் தெளிந்துவரும்-தொல்லுலகம்
கான்றசோ றுகுங் கதலித்தண் டைக்கனலில்
ஊன்றல்போன் ஞான்முதிக் கும்.

Digitized by Google

(இ-ள்.) கல்லை உரு ஆக்கும் கழற்றியிலே இல்வாழ்க்கைச் சில்லம் நீர்போலத் தெளிந்துவரும் எ-து,—கல்லினை ஓர் பாவைவடிவாக்கும் முறைமைபோல், அருள்வடிவாக்குதற் பொருட்டு மந்த பக்குவர்க்கு உபதேசமொழிகளால் பாசத்தை நீக்குமிடத்துத் தேறு இட்டநீர் தெளிந்து வருதல்போல், அவர்க்கு இல்வாழ்க்கை இஃது ஆர் யாம் ஆர் என்று தெளிவு பிறந்துவரும்;

தொல் உலகம் கான்ற சோறு ஆகும் கதலித்தண்டைக் கனலில் ஊன்றல்போல் ஞானம் உதிக்கும் எ-து,—பழையதாகவரும் இப் பிரபஞ்சம் கக்கின சோறுபோல் அருவருப்பாகத் தோற்றும், வாழைத்தண்டை அக்கினியிற் சுடுதல்போல் அவர்க்கு ஞானந்தோன்றும், எ-று.

பிறந்த சேறும் தெளிந்த நீரும் கலந்து வருதல்போல் இல்வாழ்க்கையில் பற்றும் பற்றின்மையும் கலந்து வருதலின், "தெளிந்துவரும்" என்றார். வாழைத்தண்டைப் பன்னாள் பல காட்டத்தால் சுடல்போல் இவர்க்குப் பன்னாளில் பற்பல உபதேச மொழிகளால் ஞானம் ஏறும் என்பதறிக. (கள)

இரும்பை வடிவாக்கு மியல்பினர்க்குப் பச்சை
மரஞ்சுடுமா போன்ஞானம் வாய்க்கு - மிருந்தவிடம்
நீர்த்தா மரையிலைபோ னீங்கு முலகமெலாம்
பேய்த்தேர்போற் றோன்றும் பிரிந்து.

(இ-ள்.) இரும்பை வடிவு ஆக்கும் இயல்பினர்க்குப் பச்சை மரம் சுடும் ஆறுபோல் ஞானம் வாய்க்கும் எ-து,—இரும்பினை ஓர் பாவை வடிவாக்கும் முறைமைபோல் பாசத்தைநீக்கி அருள்வடி வாக்கப்பட்ட மந்ததர பக்குவர்க்குப் பச்சை மரத்தை அக்கினியால் சுடுமாறுபோல் ஞானம் பலிக்கும்;

இருந்த இடம் தாமரையிலை நீர்போல் நீங்கும் உலகம் எலாம்பிரிந்து பேய்த்தேர்போல் தோன்றும் எ-து,—தாம் இருந்த

Digitized by Google

இல்வாழ்க்கை தாமரையிலையின் நீர்போல் கூடியிருந்தும் அதிற் கூடாது நீங்குவர், பிரபஞ்சமெல்லாம் அவர்க்கு அந்நியமாகக் கானற் சலம்போல் தோன்றும், எ-று.

சிலகாட்டத்தால் பச்சைமரம் சுடல்போல் சில உபதேசமொழிகளால் இவர்க்கு ஞானம் ஏறும் என்பதறிக. (கஅ)

மரப்பாவை போலுடம்பின் வாதனையை மாற்றிக்
கரித்தீக் கவர்வதுவாங் காமித் - திருந்த
மனைபொதுவின் மண்டபமாம் வானோர்கள் வாழ்வும்
கனவெனவே தோன்றிடுங் காண்.

(இ-ள்.) மரப்பாவைப்போல் உடம்பின் வாதனையை மாற்றிக் கரித்தீக் கவர்வது ஆம் எ-து,—மரத்தினை ஓர்பாவை வடிவாக்குதல்போல், அருள்வடிவாக்குதற் பொருட்டுத் தீவிரபக்குவர்க்கு உடம்பின் வாதனையாய பொறி கரண முதலியவற்றை நீக்கி, ஞானத்தை உணர்த்தக் கரி தீ ஏற்றுக்கொளல் போல் ஞானம் உண்டாம்;

காமித்து இருந்த மனை பொதுவின் மண்டபம் ஆம் வானோர்கள் வாழ்வும் கனவு எனவே தோன்றிடும் எ-து,—தான் இச்சித்திருந்த மனைவாழ்க்கை நாலுபேருங் கூடியிருக்கும் பொதுமண்டபம் போலாகும், கேள்வியால் அறியப்பட்ட இந்திராதி தேவர்கள் செல்வமும் சொப்பனம்போல் தோற்றும்,

உடம்பின் வாதனையை மாற்றி என்றமையான், இவர்க்குப் போகவாதனை மாற்றவேண்டுவது இன்றென்பது ஆயிற்று. "வானோர்கள் வாழ்வுங் கனவெனவே தோன்றும்" என்றமையான், நரர்வாழ்வு கழுத்திக்காட்சிபோல் தோன்றும் என்பதாயிற்று. இருந்த என்பது இருத்த என்று வலித்தல் விகாரமாய் வந்தது. காண்-அசை (க௯)

வெண்ணெயுறு பாவையர்க்குஞானம் விளக்கின்மேல்
அண்ணின்மயிர் பஞ்சாகு மாசையிலை-கண்ணீர்

Digitized by Google

ஒழுகும் பொழுதறியா துள்ளுருகி விம்மி
அழுதுசிரிப் பார்புளக மாம்.

(இ-ள்.) வெள் நெய் உறு பாவையர்க்கு ஞானம் விளக்கின் மேல் அணில் மயிர் பஞ்சு ஆகும் ஆசை இலை எ-து,—வெண்ணெயினைப் பொருந்தாநின்ற ஓர் பாவை ஆக்குதல் போல் அருள்வடிவாக்கும் தீவிரதர பக்குவர்க்கு விளக்கின் கொழுந்திற் பிடித்த அணிலின் மயிர்போலும் பன்னிய பஞ்சுபோலும் பாச நீங்கி ஞானம் உண்டாம், அவர்க்கு ஒன்றினும் ஆசை இன்று;

கண் நீர் ஒழுகும்பொழுது அறியாது உள் உருகி விம்மி அழுது சிரிப்பார் புளகம் ஆம் எ-து,—ஆனந்தக்கண்ணீர் ஓடும்போதும் தாமறியாது உள்ளமெல்லாம் நெக்கு நெக்குருகி விம்மி விம்மி அழுது சிரிப்பார், அவர்க்கு உடம்பெல்லாம் உரோமாஞ்சலி ஆம் எ-று.

அழுவது முன்பட்ட பிறவித்துன்பங்களை நோக்கி, சிரிப்பது துன்பங்களை எல்லாம் ஒருகணத்தில் மாற்றிய ஆசாரியரது அதிசயத்தை நோக்கி எனக்கொள்க. பிரபஞ்சத்தின்மேல் இல்வாழ்க்கையின்மேல் உடம்பின்மேல் ஆகிய மூன்றிடத்தும் அவர்க்கு ஆசை இன்மையால் பொதுப்பட "ஆசையிலை" என்றார்.

கல்லை என்னும் திருவெண்பாமுதல் இந்நான்கு திருவெண்பாவானும் மந்தமுதலிய நான்கு பக்குவங்களையும் உடையோரை ஞானாசாரியர் பக்குவப்படுத்தி அவர்க்கு ஞானம் ஏற்று முறைமை இங்ஙனம் என்று அறிவித்தவாறு காண்க. (௨0)

இங்ஙனம் கூறும் பக்குவர்க்கே அன்றி மற்றையர்க்கு ஞானம் போதித்தால் ஏறாதோ ? எனின், மேற்கூறுகின்றார்.

புளிசேர் பழமாணுற் போற்புறம்போ டுள்ளின்
முளைதானும் வேறாய் முளைபோய்த் - தொளைமாண்ட

ஊசிக்குப் பாச மொழிந்ததுபோ லொப்பாருக்
காசைக்கே டானந்த மாம்.

(இ-ள்.) புளி சேர் பழம் ஆனால்போல் புறம்போடு உள்ளின் முளைதானும் வேறு ஆய் முளைபோய் எ-து,—முன்னர்ப் பிஞ்சாய் இருந்தபோது ஓடும் வித்தும் பிரிபடாது ஒன்றாய்ச் சேர்ந்த புளி அவ்வோடும் வித்தும் பிரிபடும் பழம் ஆனாற்போல், முன்னர் அறிவு முதிராமையின் பிரிபடாதிருந்த மும்மலங்களும் இப்போது அவ்வறிவு முதிர்ந்தமையால் மாயை கன்மம் ஆகிய புறம்போடு உயிருள் இருந்த முளையாகிய ஆணவமும் தமக்கு அந்நியமாய் நீங்கி இவற்றான் ஏறுவதாய ஆகாமிய முளையும்போய்;

தொளைமாண்ட ஊசிக்குப் பாசம் ஒழிந்ததுபோல் ஒப்பாருக்கு ஆசைக்கேடு ஆனந்தம் ஆம் எ-து,—காதற்ற ஊசிக்குச் சரடு ஒழிந்ததுபோல் தற்போதத்தோடு எல்லாப் பாசங்களையும் இங்ஙனம் ஒழிந்தோர்க்கு அப்போதத்தால் தோற்றும் ஆசை நாசமே சிவானந்தப் பேறாம், எ-று.

மாயையும் கன்மமும் புறம்பாய்க் காணப்படுதலின் "புறம்பு" என்றும், அவை நீங்கியபோதும் தான் நீங்காது உயிருள் இருத்தலின், ஆணவத்தை "உள்ளின்முளை" என்றும், ஆகாமியம் பிறவிக்கு ஏது ஆகலின் இதனையும் "முளை" என்றுங் கூறினார்.

காது அறாமுன் தொடர்ந்த பாசம் அஃது அற்றபோது ஒழிந்தாற்போல், போதம் அறாமுன் தொடர்ந்தபாசம் அஃது அற்றபோது ஒழிதலின், "ஊசிக்குப்பாச மொழிந்தாற்போ லொப்பாருக்கு" என்றார். தேகபோகங்களாகிய துன்பத்தை இன்பம்போல் மாறுபாடாய்த் தோற்றுவித்து உயிர்க்கு ஆசை உண்டாக்குவது ஆணவம். அதனது வாசனை போதம் ஒழியுமளவும் இருத்தலின், அதன்காரியமாகிய ஆசைகெடவே காரண

Digitized by Google

மாகிய அவ்வாணவ வாசனையும் அவ்வாசனையால் எழும் போதமும் கெடும் ஆகலின், "ஆசைக்கேடானந்தமாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் பக்குவம் உடையோர்க்கே ஞானம் போதித்தால் பாசநீங்கி ஆநந்தப்பேறு உளதாம் அன்றி, மற்றையர்க்கு அங்ஙனம் உண்டாகாதென்று அறிவித்தவாறு காண்க. (உக)

அருண னுதயம்போற் றாம்வீழ்வா ராசை
பெருகுவபோற் கப்பல் பிழைத்துக்-கரைகாணும்
ஆறுபோற் சிறையு மரும்பிணியு நீங்கியிடும்
ஆறுபோ லதிசயம்போ லாம்.

(இ-ள்.) அருணன் உதயம்போல் தாம் வீழ்வார் ஆசை பெருகுவபோல் கப்பல் பிழைத்துக் கரைகாணும் ஆறுபோல் எ-து,—மழையிருளில் நெறிதெரியாது உழல்வோர்க்குச் சூரியன் உதயமானதுபோலும், தம்மால் விரும்பப்பட்ட மாதர்மேல் ஆசை உள்ளமும் மறைய மேன்மேல் வளர்தல் போலும், திசைதப்பியகப்பல் தப்பித்துறை சேரக் காணுமாறு போலும்;

சிறையும் அரும்பிணியும் நீங்கியிடும் ஆறுபோல் அதிசயம் போல் ஆம் எ-து,—விடாச்சிறை இருந்தோர்க்கு அச்சிறை நீங்கியவாறு போலும், மாறா நோயாளர்க்கு அந்நோய் நீங்கிய வாறுபோலும், ஓர் காலமுங் காணாத அதிசயங் கண்டதுபோலும் திருவருள் ஞானம் பெற்றோர்க்குத் தோற்றும், எ-று.

முன்னர் ஆணவ இருளால் பொய் இது மெய் இது என்று ஒன்றுந் தோன்றா திருந்தோர்க்கு இப்போது அருளொளியால் எல்லாம் சிவமாய்த் தோற்றலின், "அருண னுதயம்போல்" என்றும், அவ்வருள் ஞானத்தால் தோன்றும் ஆநந்தத்தில் தாம் மேன்மேல் மறைதலின், "தாம்வீழ்வா ராசை பெருகுவபோல்" என்றும், இந்தஞானாநந்தத்தை என்றைக்கு அடைவோம் என்று இருந்த தமக்கு இப்போது கிடைத்தலின்,

Digitized by Google

“நப்பல் கனாகாணுமாபோல்” என்றும், முன் உடலாயிருந்த தாம் இப்போது அதற்கு உட்புறனாய் விளங்கும் சிவமாயிருத்தலின், “சிறைநீங்குமாபோல்” என்றும், முன் இருந்த பிறவித் துன்பம் இப்போது நீங்கலின், “பிணிநீங்குமாபோல்” என்றும் ஓர் காலங்களினும் கண்டறியாத காட்சியாகலின், “அதிசயப்போல்” என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் பக்குவர்க்குப் பாசநீங்கி ஞானோதயமானபோது தோற்றும் அதிசயகுணம் இவையென்று அறிவித்தவாறு காண்க (உஉ)

பாசநீங்கி ஞானந் தோன்றினால் அவர்க்கு இக்குணங்கள் தோற்றுவது என்னை எனின், மேற்கூறுகின்றார்.

உடல்பொறிக ளுட்கரணத் தோடுகுணம்வாயு
விடவிடவே நாதாந்த வீடும் - நடுநிலையாய்த்
தன்றொழிவும் பேரின்ப சாகரமுஞ் சந்தழிவார்
என்னபடார் கண்டறியா ரே.

(இ-ள்.) உடல் பொறிகள் உட்கரணத்தோடு குணம் வாயு விடவிடவே நாதாந்த வீடும் எ-து,— உடலும் பொறிகளும் அந்தக்கரணங்களும் அவற்றுடனே குணங்களும் பிராணவாயுவும் ஆகிய இவ்வைந்தையும் ஒன்றொன்றாய் அறிந்து நீங்க நீங்கவே வரும் நாத தத்துவத்தின் முடிவாகிய விடுதலையையும்;

நடுநிலை ஆய்த் தன் ஒழிவும் பேர் இன்ப சாகரமும் சந்தழிவார் என்ன படார் கண்டு அறியார் எ-து,— அவ்விடுதலைக்கும் சுகாதீதத்திற்கும் நடுநிலையாய்த் தோன்றும் தன் தரிசனம், திருவருள் தரிசனம், பரைதரிசனம், பரையோகம், பரையோக நீக்கத்தையும், அவற்றின்மேல் தற்போத ஒழிவையும், அதன் மேல் ஆநந்தசாகரத்தையும்; அநுபவமாகக் கண்டு அதன்

Digitized by Google

மேல் சிவத்தோடு இரண்டற் றிருக்கின்றார் என்ன ஆச்சரியப்படார் முன்னோர் காலங்களினும் அவற்றைக் கண்டறியாதார், எ-று.

உடலத்தை உள்ளபடி அறிந்து நீங்கவே பஞ்சபூத காரியமாகிய புறக்கருவிகள் இருபத்தைந்தும், ஈடணைத் திரயங்களும் தசநாடிகளும் நீங்கும். ஞானேந்திரியங்களை உள்ளபடி அறிந்து நீங்கவே அவற்றான் அபகரிக்கப்பட்ட சத்தாதிகள் ஐந்தும், அவ் விந்திரியங்கள் அவ் விடயங்களை அபகரித்தபோது தொழிற்படும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், விடயீகரிக்கப்பட்ட வசனாதிகள் ஐந்தும், இவ்விருவகை இந்திரியங்கட்கும் இடமாய் நின்ற பூதங்கள் ஐந்தும் நீங்கும். அந்தக்கரணங்களை உள்ளபடி அறிந்து நீங்கவே சூக்குமையாதி வாக்கு நான்கும் நீங்கும். முக்குணங்களை உள்ளபடி அறிந்து நீங்கவே இதாகிதங்களாய் வரும் கன்மம் சேஷமின்றி நிற்கும். ஆகலின், அக்கன்மத்தைக் கூட்டாநின்ற காலமும் அதனை வரைந்துநிற்கின்ற நியதியும் நீங்கும். இவை நீங்கவே ஆன்மாவிற்குப் புசிப்பின்மையான் இச்சா ஞானக்கிரியை செலியாது. ஆகலின், கிரியையை எழுப்பும் கலையும், அறிவை எழுப்பும் வித்தையும், ஆசையை எழுப்பும் இராகமும் ஆசைப்பட்ட பதார்த்தத்தில் மயங்கும் புருடனும் நீங்கும். இங்ஙனம் கலாதிகள் நீங்கவே காலத்தையும் நியதியையும் கலையையும் பிரேரித்த சத்திதத்துவமும், வித்தையைப் பிரேரித்த சுத்தவித்தையும், இராகத்தைப் பிரேரித்த ஈச்சுரதத்துவமும், புருடனைப் பிரேரித்த சிவதத்துவமும், மூலப்பிரகிருதியைப் பிரேரித்த சாதாக்கிய தத்துவமும் நீங்கும். இங்ஙனம் சுத்த தத்துவங்கள் நீங்கவே பிராண வாயுமாத்திரம் இயங்கும். இப்பிராணவாயுவை உள்ளபடி அறிந்து நீங்கவே தசவாயுக்களும் அசபைநாதமும் நீங்கும். இம்முறையே தத்துவம் தொண்ணூற்றாறும் நீங்கும். ஆகலின், "விடவிடவே நாதாந்த வீடும்" என்றார்.

Digitized by Google

"நடுநிலையாய்" என்றதனுலும், "பேரின்பசாகரமும்" என்றதனுலும் தற்றரிசனமுதலிய வருவிக்கப்பட்டன். கண்டத்தானத்தில் அந்தக்கரணங்களோடும் கூடி மத்திமை வாகனை நன்ருய் அறிதலின் மத்திமை வாக்குக் காரணமாகிய சூக்குமை பைசந்தியும், மத்திமையால் காரியப்பட்ட வைகரியும், அந்தக்கரணங்களை நீங்கவே நீங்கும். ஆகலின், அந்தக்கரணங்களை நீங்கவே சூக்குமையாதி வாக்குகள் நீங்கும் என்று சொல்லப்பட்டன. பிராணவாயு இயக்கத்தை அடக்கத் தொடங்கின் அடங்காது மேன்மேலியங்கும். ஆகலின் அவ்வியக்கம் தன்னுல் அறியப்படுதலானும், தன்னை அஃது அறியாமையானும், அதனைச் சடம் என்றும், அதனை அறிந்த அறிவு தான் என்றும், தனக்கறிவித்தது திருவருளென்றும் அறிந்து தான் திருவருள் நாட்டத்தில் நிற்கவே அது நீங்கும் எனக்கொள்க. "கண்டறியாரே" என்றதனுல், இப்போது கண்டென்பது வருவிக்கப்பட்டது. (உ-ம்.) "ஐம்புலநாலா மந்தக்கரண முக்குணமிருவளி யொருங்கிய வாேனரேத்த நின்னை" என்னும் திருவெழுகூற் றிருக்கையாற்காண்க. ஏ-ஈற்றசை.

இத்திருவெண்பாவால் முன் ஓர் காலங்களினும் கண்டறியார் ஆகலின், இப்போது அக்குணங்கள் அவர்க்குத் தோற்றுமென்று அறிவித்தவாறு காண்க. (உங)

இங்ஙனம் ஞானத்தால் பாசத்தை நீங்கிப் பதியை அடைந்தோரை மீட்டும் அப்பாசம் மயக்காதோ எனின், மேற்கூறுகின்ருர்.

அறிவுமறி வானு மறியா மலையும்
அறியிற் றடையே தவர்க்குப் - பிறிவரோ
ஆகாயஞ் சூறைகொளி லஞ்சி யடுக்களைக்குள்
போகாது போலாம் பொருள்.

(இ-ள்.) அறிவும் அறிவானும் அறியாமலையும் அறியின் அவர்க்குத் தடை ஏது பிறிவரோ எ-து,—உயிர்க்குயிராய் உள்

ளும் புறம்பும் ஓரணுவளவேனும் விட்டு நீங்காதிருந்து அறிவிக்கும் அறிவாகிய பதியையும், தற்சுதந்தரமாய் ஒன்றினையுமறியாது அப்பதி அறிவிக்க அறிவதாகிய பசுவையும், இங்ஙனம் அறியும் பசுவிற்குத் தன்னையும் தனக் கறிவிக்கும் பதியையும் அறியவொட்டாது மறைத்திருந்த அறியாமையாகிய பாசத்தையும், அப்பதியால் உள்ளபடி அறியின், அவர்க்கு முன்போலும் தடையாது? அஃதன்றி, அப்பதியை ஓர் கணமேனும் பிரிவரோ, (ஆனால் அப்பதியை அவர் பிறியாது நாடிக்கொண்டு நிற்பரோ எனின்);

ஆகாயம் சூறைகொளில் அஞ்சி அடுக்களைக்குள் போகாதுபோல் பொருள் ஆம் எ-து,—எல்லாப் பொருள்கட்கும் இடங் கொடுத்திருந்த ஆகாயந் தானே அப்பொருள்களைக் கொள்ளைகொள்ளும் எனின், அதற்கு அஞ்சி அடுக்களை வீட்டில் புகுந்தொளிக்கக் கூடாது; அதுபோல், அவ்வாகாய முதலிய எப்பொருள்கட்கும் ஆதாரமாகி யிருந்துள்ள மெய்ப்பொருள் தன்னை அறிந்தோர்க்கு இடம் வேறின்மையான் அவரை விழுங்கிக்கொள்வதாம், எ-று.

பாசத்தை அறியும்போது முப்பத்தாறு கருவிகளையும் இஃது ஈதென்று அறிந்து சென்று அவற்றின் முடிவில்நின்ற தன்னால் அவை அறியப்படலானும், தன்னை அவை அறியாமையானும்தனக்கு அன்னியமென்றும்சடமென்றும் அறியப்படும். தன்னை அறியும்போது அக்கருவிகளை எல்லாம் அறிந்து அவற்றை நீங்கிநின்ற அறிவு தான் என்றும், திருவருளால் அன்றித் தற்சுதந்தரமாய் அறிவதிலன் என்றும், தான் கருவிகளோடுகூடியபோது அவைமயமாயும் அவற்றை நீங்கித் திருவருளோடு கூடியபோது இதன் மயமாயும் இருத்தலின், தான் பாச அறிவும் அன்று, பதி அறிவும் அன்று என்று அறியப்படும். பதியை அறியும்போது பெத்தமுத்தி காலத்தினும் தன்னைவிட்டு நீங்காதிருப்பதென்றும், தனக்கு அறிவிப்பதென்றும் பாசத்

Digitized by Google

தைப் பிரேரகம் பண்ணுவதென்றும், ஞானாந்த சொரூபமெ ன்றும் அறியப்படும். இங்ஙனம் நடுவின்று அறிந்த பசுபாசத் தை நீங்கிப் பரிபூரணமாகிய பதியை அடைந்து அப்பூரண மெல்லாந் தானாயிருத்தலின், "அறியிற்றடையே தவர்க்கு" என்றும், பிறிதற்கு ஏதுவாயபோதம் இறத்தலின் 'பிறிவரே' என்றும், இங்ஙனம் பிரியாதிருந்தோரை மெய்ப்பொருள் தன் மயமாய்க் கோடலின், "அடுக்களைக்குட் போகாதுபோலாம் பொருள்" என்றுங் கூறினர். (உச)

பொய்போல மெய்யு மறியப் பெறாப்போக
சையோகர்க் கொன்றேனுஞ் சார்பில்லை-தூய்ய
விழிக்கு ளுதித்த விரிகதிர்போற் றம்மை
அழித்ததுவே யாச்சரிய மாம்.

(இ-ள்.) பொய்போல மெய்யும் அறியப் பெறாப் போகசை யோகர்க்கு ஒன்றேனும் சார்பு இல்லை எ-து,—முன்னர்ப்பொ ய்யாகிய உடலத்தோடுங் கூடியபோது அவ்வுடலமென்றும் தாமென்றும் பிரித்தறியாது அதன் மயமா யிருந்ததுபோல், இப்போது மெய்ப்பொருளையும் தம்மையும் பிரிக்கப்பெறாது இம் மெய்ப்பொருள் ஆனந்தத்தோடுங் கூடிக் கலந்திருந்தோ ர்க்கு ஒரு பொருளோடும் சார்பில்லை, (அஃது எங்ஙனம் எனின்);

தூய்ய விழிக்குள் உதித்த விரி கதிர்போல் தம்மை அழித் ததுவே ஆச்சரியம் ஆம் எ-து,—எல்லாவற்றையும் எதிரிட்ட றியும் மாசற்ற விழிக்குள்ளே முன்போல் எதிரிட ஒட்டாது உதித்த சூரியனைப்போல், ஞாதுரு ஞான ஞேயம் என்னும் முப்பொருளையும் எதிரிட்டறிந்த ஆன்மபோதத்தை அங்ஙனம் எதிரிடவொட்டாது இதனுள் சிவ சூரியன் உதித்து அப்போ தத்தை அழித்துத் தானாயிருந்ததுவே மிகவும் அதிசயமாம்,

கதிர்புறம்பு உதித்தபோது கண்ட கட்குள் உதித்தபோது காண்டற்கு இடமின்மைபோல் போதத்தால் புறம்புபோல்

Digitized by Google

தோற்றிய ஞானசூரியன் இப்போத ஒளியைத் தன் ஒளியால் மறைத்து உயிர்க்குள் உதித்தமையான் இதற்கும் எதிரிடுதற்கு இடம் இன்றென்ப தறிக. (௳௫)

தன்னையிழப் பார்க்கென்ன சார்வூழி சங்காரம்
என்னிலொளித் தெங்கே யிருக்கலாம்-முன்னே
புலிபார்க்கப் போனகதை போலிமையா நாட்டம்
சலியாமுன் மூடுந் தனை.

(இ-ள்.) தன்னை இழப்பார்க்குச் சார்வு என்ன ஊழி சங்காரம் என்னில் ஒளித்து எங்கே இருக்கல் ஆம் எ-து,— தற்போதம் ஒழிப்பார்க்கு மற்றைச் சார்புகள் என்னை உள்ளன? முப்பத்தாறு தத்துவம் என்பதும் அவற்றின் முடிவில் நின்ற தாம் என்பதும் தமக்கு அறிவித்த அருள் என்பதும் இதனைக் கடந்த ஆநந்தம் என்பதும் இன்றி ஆநந்தாதீதரா யிருத்தலின், அவர்க்கிதுவே சர்வசங்கார காலமென்று மெய்ஞ்ஞானிகள் சொல்லுவார் எனின், அவர்க்கு எவ்விடத்து ஒளித்திருக்கலாகும்; ஆனால் சிவத்தை அருளால் அறிந்து அடையவேண்டும் என்பது என்னை எனின்;

முன்னே புலி பார்க்கப் போனகதைபோல் தனை இமையா நாட்டம் சலியாமல் மூடும் எ-து,—முன்னே புலியினைப்பார்த்து அறியச்சென்று ஓர் புருடன் அஃதிருந்த முழைக்கு எதிர்ப்படும் தறுவாயில் அவன் தேகப் பதைப்பற அது பிடித்துக் கொண்டதென்று கூறும் கதைபோல், சிவத்தை அறியவேண்டும் என்று முப்பத்தாறு கருவிகளையும் கடந்துசென்று அருள் நேர்நிற்கும் தறுவாயில் இவன் றன்னை இமையா நாட்டமாகிய அச்சிவந்தானே இவனது போதப்பதைப்பு அறும்படி மூடிக் கொள்ளும், எ-று.

இமைத்தல் விழித்தல் இன்றிய இமையா நாட்டம்போல் மறப்பு நினைப்பு இன்றிய பேரறிவு ஆகலின், சிவத்தை

Digitized by Google

"இமையாநாட்டம்" என்றார். புலிமுழைவாய் நின்றோ யது மூடிக்கொளல்போல், அருள் நேர் நின்றோனைச் சிவ மூடிக்கோடலான், அங்ஙனம் உவமை கூறினார்.

அறிவு மறிவானும் என்னுந் திருவெண்பா முதல் இம் ன்று திருவெண்பாவானும் தற்போதம் இழந்த ஞானிக சிவமயமா யிருப்பாரே அன்றி அவனை மீட்டும் பாசமயக்கா என்று அறிவித்தவாறு காண்க. (உ

அறிந்ததுவாய் நின்ற வறியாமை கண்டு
மறந்தறியார் வாழாது வாழ்ந்த-வெறும்பாழ்
விளைந்தசுகஞ் சொல்லில் வெளியைப் படியால்
அளந்தறியு மாபோல வாம்.

(இ-ள்.) அறிந்து அது ஆய் நின்ற அறியாமை கண்டு மற து அறியார் வாழாதுவாழ்ந்த எ-து,—முப்பத்தாறு கருவிக யும் நீங்கி அவற்றின் முடிவில் நின்ற தம்மை அருளால் அ ந்து அவ்வருள் தரிசனம் பனை தரிசனம் ஆனந்தப்பேறு ஆ ய இவற்றையும் கடந்து சிவமயமாய் முன் நீங்கிநின்ற கரு களை மீட்டுங் கண்டு அச்சிவத்தை மறந்தும் பின்னும் இக்க விகளை நீக்கி அச்சிவத்தை அறியாதார் இப்பிரபஞ்சம் சிறிது தோன்றாது அச்சிவத்தோடும் வாழ்வறவாழ்ந்த;

வெறும்பாழ் விளைந்த சுகம் சொல்லில் வெளியைப் ப யால் அளந்து அறியும் ஆறுபோல ஆம் எ-து,—ஓர் பொ ளோடும் தொடர்வின்றிய வெற்றவெறுஞ் சூனியத்தில் உ டாகிய பேரானந்தத்தைச் சொல்கோம் எனின் ஆகாயத்தை நாழியால் அளந்து அளவிடுமாறு போலுமாம் எ-று.

"அறியாமைகண்டு மறந்தறியார்" என்றமையால் கருவி ளின் மீளாது சிவமாய் எக்காலமும் இருப்பார் என்பதாயிற் வெளியை அளக்கும்படிக்குள் அவ்வெளி நிறைந்திருத்தலி

Digitized by Google

அதனை அளக்கக்கூடாது. அதுபோல், கருதிக்கூறும் மன வாக்கெல்லாம் அவ்வாநந்தம் நிறைந்திருத்தலின், அதனைக் கூறக்கூடாதென்பது அறிக.

இத்திருவெண்பாவால் அங்ஙனம் இருந்த ஞானிகள் பெற்ற இன்பத்தை இங்ஙனம் இருக்குமென்று அவரால் கூறக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (உஎ)

அறிவுக் கறிவென்னு மாகமங்கள் சுத்த
அறிவென்னும் வேதத்தி னந்தம் - பிறியா
நிலைக்குச் சரியாகு நீயென்ற னென்
றலைக்கு மரிபிரம னை.

(இ-ள்.) அறிவிக்கு அறிவு என்னும் ஆகமங்கள் வேதத்தின் அந்தம் சுத்த அறிவு என்னும் பிறியா நிலைக்குச் சரிஆகும் எ-து,—சச்சிதாநந்த சிவத்தை உயிராகிய அறிவுக்கு அறிவிக்கும் அறிவென்று கூறும் ஆகமாந்தங்கள், வேதாந்தங்கள் அறியும் அறிவும் அறிவிக்கும் அறிவும் சுத்த அறிவு தானே என்று கூறும் தற்போதம்போய்ச் சிவத்தைப் பிரியாத நிலைக்கும் சீவத்துவம் போய்ப் பிரமத்தைப் பிரியாத நிலைக்கும் அவ்வாகம வேதங்கள் கூறிய வாக்கியஞ் சரியே ஆகும்;

நீ என்றால் நான்என்று அரி பிரமனை அலைக்கும் எ-து,—அந் நிலை நில்லாது வாசகஞானமாக நீ அது என்றால் அது நான் என்று இங்ஙனம் விஷ்ணு பிரமாதிகளையும் அலைக்கும், எ-று.

நீ அது என்பது ஆகமம், அது நான் என்பது வேதம்.

இத்திருவெண்பாவால் பரஞானத்தால் சிவத்தைக் கூடிப் பிரியாதிருந்தோர்க்கு வேதாகமங்கள் கூறும் ஞானம் இரண்டும் சரியென்பதும் அபர ஞானிகட்குச் சரி அன்றென்பதும் அறிவித்தவாறு காண்க. (உஅ)

சத்திநிபாதத் துத்தமரொழிவு
முற்றும்.

Digitized by Google

ூ - ம். அதிகாரம்.

யோகக் கழற்றி.

சரியாதியில் நிற்போர்களுள் ஒவ்வொருவர் முன் விட்ட குறையால் ஞானத்திற்குப் பக்குவராய் வருவார்கள். அவர் கட்குத் தற்போதத்தை ஒழித்து ஞானம் வருவித்தற்பொரு ட்டு அத்தற்போதத்தால் செய்யும் சரியாதிகளைப் போதனைக ளால் நீக்கவேண்டும். ஆகலின், அவ்வதிகாரத்தின் பின்னர் இவ்வதிகாரங்கள் வைக்கப்பட்டன. ஆயின் முறையே வைத் துக்கூறுது யோகக்கழற்றியை முதற்கண் வைத்தது என்னை எனின், யோகம் ஞானத்திற்கு அருகம் ஆகலினும், இவ் வியோகத்தினின்ற ஞானபக்குவன் அதிபக்குவன் ஆகலினும், முதற்கண் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரம் யோகத்தைக் கழலப் பண்ணினமையான் இ தற்கு யோகக்கழற்றி என்று பெயராயிற்று. இதன் பின்னர்க் கூறும் இரண்டதிகாரத்திற்கும் அதிகார வரைவும் பெயரும் இம்முறையே கொள்க.

சரியை கிரியைகளைச் சற்றுக்கிச் சாகாக்
கருமயோகத்தைக் கழற்ற-அரிதவர்க்குத்
தோன்றியதுபொய்யாகக் காண்கையிலேதோன்றுத
வூன்றியபோ தங்கழலு மோ.

(இ-ள்.) சரியை கிரியைகளைச் சற்று ஆக்கிச் சாகாக் கரும யோகத்தைக் கழற்ற அரிது எ-து,—சரியை கிரியைகளைச் செய்வது அற்பமெனக் கருதி உடல் நாசமாகாவகை செய்யும் யோகிகளதுகிரியாயோகத்தை யாவராலும் நீக்குதற்கு அரிது;

Digitized by Google

அவர்க்குத் தோன்றியது பொய்யாகக் காண்கையிலே தோன்றாத வொன்றிய போதம் கழலுமோ எ-து,—அக்கிரியாயோகிகளுக்கு ஆறுதாரங்களினும் ஓர் மூர்த்தியைத் தியானித்து அதனைவிட்டு மற்றோர் மூர்த்தியைத் தியானிக்கும்போது முன் தியானித்தது பொய்ப்பொருளாய்ப் போகத் தமக்கு அநுபவமாகக் காணுமிடத்தும் தெரியாது அதனை மெய்ப்பொருளாய்ப் பிடித்த போதம் எங்ஙனங் கழலும், எ-று.

இத்திரு வெண்பாவால் போதம் யாதொன்றினைப் பற்றினும் விடாதென்பதும் அப்பற்றைப் பிறராலும் விடுவித்தல் அரிதென்பதும் அறிவித்தவாறு காண்க. (க)

அட்டமா சித்திகளு மத்துவா மூர்த்திகளும்
கிட்டிலதற் கங்கங்கே கீழ்மேலாய் - விட்டு
வரும்போதுந் துக்கமாய் வந்துவந்து மாய்ந்து
பெரும்பாவஞ் செய்யப் பெறும்.

(இ-ள்) அட்டமாசித்திகளும் அத்துவா மூர்த்திகளும் கிட்டில் எ - து, —அக்கிரியா யோகத்தால் அணிமா முதலிய அட்டமாசித்திகளும் தமக்குக் கைவல்லியமாகக் கிடைப்பினும் விநாயகன் முதலிய ஆறுத்துவா மூர்த்திகளையும் சடாதாரங்களில் வழுவறத் தியானிக்கக் கிடைப்பினும் ;

அதற்கு அங்கு அங்கே கீழ்மேல் ஆய் விட்டு வரும்போதும் துக்கம் ஆய் வந்துவந்து மாய்ந்து பெரும்பாவம் செய்யப்பெறும் எ-து, அச்சித்திகளால் எடுக்கும் உருவுகளுள் ஒருருவிற்கு ஒருருவு தாழ்ந்தும் உயர்ந்தும் தோற்ற அவ்வுருவுகளை ஆங்காங்கு விடுத்து வரும்போதும் துக்கமாயும் மூர்த்திகளை ஆறுதாரங்களினும் வெவ் வேறாய் ஆங்காங்குக் கீழுமேலுமாய்த் தியானித்து விடுத்து வரும்போதும் துக்கமாய் அவ்வுருவெடுக்கும்போதும் அதனை விடுக்கும்போதும் அம்மூர்த்திகளைத் தியானிக்கும்போதும் விடுக்கும்போதும் பிறந்து பிறந்து

Digitized by Google

இறந்து இறந்து இவற்றால் மிகுந்த பாவங்கள் செய்யப்படும், எ-று.

சித்தியால் ஓருருவை மறைத்து ஓருருவைக் காட்டலும்' தியானத்தால் ஓராதாரம் விடுத்து ஓராதாரஞ் சேறலும், ஓர்பிறவியை நீங்கி ஓர் பிறவியை எய்தலும், ஓரவத்தையை நீங்கி ஓரவத்தையை எய்தலும்போல் இருத்தலின், "வந்து வந்து மாய்ந்து" என்றும், சித்தியால் சாபாநுக்கிரகம் உளவாகலின், முனிவுபிறந்தபோது பிறரைச்சபித்தலானும், தம்மைப்படைத்தழிக்கும் மூர்த்தியைத் தாம் படைத்து அழித்தலானும், பாவம் வருதலின், "பெரும்பாவஞ் செய்யப்பெறும்" என்றுங் கூறினார். 'வரும்போதும் தூக்கம்' என்பதனை ஆக்கினைசக்கிரமளவுஞ்சென்று மீண்டுவரும்போதும் எனவுங் கொள்க. சகமுகத்தில் செய்யும் தொழில்போன்று அசமுகத்துஞ் செய்தலால் தூக்கம் என்றார். அட்டமாசித்திகளாவன அணிமா, இலகிமா, கரிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், ஆகிய இவை எண்வகையும் எனக்கொள்க. அதற்கென்னு நான்கனுருபை அதனா லென்று மூன்றனுருபாகக் கொள்க. (உ)

அறிவடங்கா வாயு வடங்கவசை வற்றுத்
தறியிருந்தாற் போலச் சமாதி-பெறுகில்
நடந்த குருட்டுமெ நஞ்சருந்திப் பாழூர்க்
கிடந்தகுழிப் புக்கதினுங் கேடு.

(இ-) அறிவு அடங்கா வாயு அடங்க அசைவு அற்றுத் தறி இருந்தால்போலச் சமாதி பெறுகில் ஏ-து, —தமது அறிவான் அதன் இச்சைப்படி சென்று அடங்காத பிராணவாயுவைத் தமது இச்சைப்படி இரேசித்தும் பூரித்தும் கும்பித்தும் உள்ளடங்கச்செய்து தாமும் அதனோடு அசைவற்றுக் கம்பம் இருந்ததுபோல் சமாதிபெறுவர் ஆயின் (இச்சமாதி);

Digitized by Google

நடந்த குருட்டூமன் நஞ்சு அருந்தி பாழ் ஊர் கிடந்த குழிப்புக்க அதினும் கேடு எ-து,—நடக்கப்பட்ட பிறவி அந்தகனுகிய ஒருமையன் விடத்தினைப் புசித்துக் குடிபோகிய ஊரின்கண் உள்ள பாழுங்கிணற்றில் எடுப்பாரற்று வீழ்ந்துகிடந்த அதனினும் கேடாம், எ-று.

வாயு அடக்கல் முதலிய தொழில் செய்தலின், "நடந்த" என்றும், அதற்கு மேலாய ஞான மின்மையால், "குருடு" என்றும், அந்த ஞானங் கூறும் சாத்திரம் அறியாமையான், "ஊமன்" என்றும், சடமாயுள்ள வாயுவுடன் கூடினமையால், "நஞ்சருந்தி" என்றும், முன்செய்த தொழில் மறந்தமையாலும் ஆண்டுத் திருவருள் விளக்காமையானும், "பாழூர்க்கிடந்த குழிப்புக்கு" என்றும், இங்ஙனம் உவமை கூறினர். இவற்றான் 'நடந்த குருட்டூமன்' என்பது அவர்க்கு உவமையும், 'நஞ்சருந்திப் பாழூர்க்கிடந்த குழிப்புக்கு' என்பது அவர் சமாதிக்கு உவமையும் எனக்கொள்க. அவன் அறியாது வீழ்ந்தவன் இவர் அறிந்து வீழ்ந்தவர் ஆகலின், அதனினுங் கேடென்றார்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் கிரியாயோகஞ்செய்வது துன்பமென்றும், அங்ஙனம் துன்பப்பட்டுச் செய்யினும் ஆன்மலாபம் இன்றென்றும், தனது கருத்தை எடுத்து அறிவித்து அவ்வியோகத்தை மறுத்தவாறு காண்க. (௯)

கவிப்பயனு மாதனமுங் கண்சிமிட்டா நோக்குந்
தவப்பகடி யாட்டங்காண் சார்வைத் - தவிர்க்கின்
மறந்தறிய லாகா மலட்டறிவாய் வான்போல்
நிறைந்து நுளும்பாம னில்.

(இ-ள்.) கவிப்பயனும் ஆதனமும் கண் சிமிட்டா நோக்கும் தவப்பகடி ஆட்டம் சார்வைத் தவிர்க்கின் எ-து,—யோகநூலைக் கற்றுக்கொண்டு பிறர்க்கு அதன் அருத்தங் கூறுதலும், பதுமாதன முதலிய ஆதனங் கட்டலும், மனத்தை ஓர் தானத்

தில் நிறுத்தி இமையா நாட்டமாய்ப் பார்த்திருத்தலும் இவை முதலிய நீ செய்யும் தொழில்கள் ஞானதபோதனர் முன்னர்த் தவப்பகடிக் கூத்துக்கட்டி ஆடுவதாம்; இனி இவ் வியோக வாதனையை நீங்குதி எனின் (நேரே வீடடைதற்கு ஒருபாயமுண்டு, அஃது எங்ஙனம் எனின்,)

மறந்து அறியல் ஆகா மலட்டறிவு ஆய்வான்போல் நிறைந்து துளும்பாமல் நில் எ-து— நீ யோக சமாதி கூடும்போது ஓர்கால் நினைந்தும் ஓர்கால் மறந்தும் முன்னர் அறிந்ததுபோல் அறியாது, இப்போது அந்நினைப்பு மறப்பு முதலிய ஒன்றும் தோன்றாத அறிவாய் எங்கும் பூரணமாய் ஒன்றோடும் தாக்கற்று அசைவற்றிருந்த ஆகாயம்போல் நீயும் எங்கும் பூரணமாய் ஒன்றோடும் தாக்கற்று அசைவற்று நிற்றி, எ-று.

“கண்சிமிட்டாநோக்கும்” என்றது, நாசிநுனி புருவமத்தியங்களில் பார்த்துக்கொண் டிருத்தல். நல்ல கூத்தாடுவோன் முன்னர் அவன்வேடம் தானும் போட்டுக்கொண்டு அக்கூத்திற்கு மாறாய அகசியக்கூத்து ஆடுவானைப்போல ஞானிகளைப் போலும் வேடமும் நடையும் காட்டி, அவரது பூரண அறிவுக்கு மாறாகக் கிஞ்சிக்கிய அறிவனாயிருத்தலின், “தவப்பகடியாட்டம்” என்றார். மலட்டறிவு - ஒன்றுங் கலவாத அறிவு.

இத்திருவெண்பாவால் கேவலசகலங்கள் தாக்காது அருள் வடிவாய் நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க.

இங்ஙனம் இருவருக்கும் சமாதிகூடுதல் சரியெனின் யோகியை ஞானிகள் இகழ்ந்து கூறுவது என்னை எனின் மேற் கூறுகின்றார். (௪)

தத்துவமுட் டாக்காய்ச் சமாதியினைச் சார்போதப்
பித்தனென் பார்பேரிற் பிழையுண்டோ-புத்திபோய்க்
கம்பக் களிறுகட்டக் கல்லினார் காணுமிவர்
அம்பரத்தை வந்துபிடிப் பார்,

Digitized by Google

(இ-ள்.) தத்துவம் முட்டாக்கு ஆய்ச் சமாதியினை சார்போ தப் பித்தன் என்பார்பேரில் பிழை உண்டோ எ-து,—தத்துவ ங்களை எல்லாம் நியதிபண்ணி நீங்கித் தம்மை அருளால் அறி யும் அறிவின்றி, அத் தத்துவங்களைத் தன்மேல் முட்டாக்காய் மூடிக்கொண்டு, சமாதிகூடும் கிரியா யோகியைச் சார்போத னுகிய பித்தன் என்று கூறும் ஞானிகள்மேல் குற்றம் யாது;

புத்திபோய்க் கம்பக் களிறுகட்டக் கல்லில் நார் காணும் அம்பரத்தை வந்து பிடிப்பார் இவர் எ-து,— யூகபுத்தி இன்றிக் கம்பத்தின்கண் அடங்கா மதகளிற்றைக் கட்டுதற்குக் கல்லின் கண் நாருரிப்பாரும், தாம் இருத்தற்கு இடங் கொடுத்திருந்த ஆகாயத்தைச்சென்று பிடிப்பாரும் இவர், எ-று.

"தத்துவமுட்டாக்காய்ச் சமாதி" என்றது மனத்தால் வா யுவை வாங்கி உள் நிறுத்தி அதனுள் தாம் மறைந்திருத்தலின், இங்ஙனம் இருப்போர்க்கு அறிவிக்க அறியும் போதமே இன் மையால், எங்ஙனம் சிவத்தை அறிவார் என்பது குறித்து, "கம்பக் களிறுகட்டக் கல்லிஞர்" என்றும், தம் உயிருள் பூர ணமாயிருந்த சிவத்தை அறியாது மற்ருேரிடத்து இருப்பதா ய்க் கருதி அதனைப் பிடிக்கச்சேறலின், "அம்பரத்தை வந்து பிடிப்பார்" என்றுங் கூறிஞர். சார்போதம் சேர்ந்த கருவிமய மாயிருத்தல், மனமும்பிராணவாயும் இருந்த இடத்து எல்லாக் கருவிகளும் இருக்கும் ஆகலின், "தத்துவம்" என்று பொதுப் படக் கூறிஞர்.

இத்திருவெண்பாவால் சமாதிகூடுதல் இருவருக்கும் ஒத்த தாயினும், யோகி இங்ஙனம் செய்தலால் ஞானிகளால் இகழ்ந் து கூறப்பட்டான் என்று அறிவித்தவாறு காண்க. (௫)

நெய்யி னிழல்போ னிழலிற் புருடனைப்போல்
பொய்யில் விகற்பம் புகுவதுவும்-துய்ய
ஒளியோசை யாகி யொடுங்குவதுந் தம்மைத்
தெளியாதார் செய்யுஞ் செயல்.

Digitized by Google

(இ-ள்.) நெய்யில் நிழல்போல் நிழலில் புருடனைப்போல் பொய்யில் விகற்பம் புகுவதுவும் எ-து,—நெய்யின்கண் தோற்றும் நிழலைப்போலும், அந் நிழலைப்பார்த்து ஆகாயத்தைப் பார்க்கில் அந்நிழல்போல் தோற்றும் சாயாபுருடனைப்போலும் கருவிகளாகிய பொய்யிற்கூடிய தற்போத விகற்பத்தால் தாமும் தம்மால் தியானிக்கப்பட்ட மூர்த்திகளுமாய் ஆறுதாரங்களில் தோற்றுவதும்;

துய்ய ஒளி ஓசை ஆகி ஒடுங்குவதும் தம்மைத் தெளியாதார் செய்யும் செயல் எ-து,—நிருமலமாகிய விந்து தரிசனமும் நாத தரிசனமுமாய்த் தோற்றி, அங்ஙனம் தோற்றியவாறே நில்லாது, மீட்டும் ஒடுங்குவதும் ஆகிய இச் செயல்கள் எல்லாம் தம்மை அருளால் தெளிந்து அறியாதார் செய்யும் செயல்களாம், எ-று.

நெய்போல் கருவிகள், அதில் தோற்றும் நிழலும், அந்நிழல் போல் ஆகாயத்தில் தோற்றும் சாயா புருடனும்போல் தாமும், தம்மால் தியானிக்கும் மூர்த்தியும் என்பதறிக. விந்து நாததரிசனம் மாயையுள் தோற்றுவது ஆகலின், அது பொருளன்று என்பதுங் காண்க. (சு)

சாக்கிரத்தே கேவலத்தைச் சார்ந்துவிடத் தத்துவத்தை,—நூக்கியொழிப் பார்போ னுழைவதையும்—நீக்கியே,—கண்ணாடி பார்த்த குரக்கறிவாய்க் காண்பதையும்,—எண்ணூ ரவத்தை யறி யில்.

(இ-ள்.) சாக்கிரத்தே கேவலத்தைச் சார்ந்துவிடத் தத்துவத்தை நூக்கி ஒழிப்பார்போல் நுழைவதையும் எ-து,—சாக்கிரத்தில் அதீதத்தைப் பெறும்பொருட்டுத் தத்துவங்களைத் தள்ளி ஒழிப்பார் போன்று, அவற்றுள் தாம் மறைந்திருப்பதையும்;

Digitized by Google

கண்ணாடி பார்த்த குரங்கு அறிவாய்க் காண்பதையும் அவத்தை அறியில் நீக்கி எண்ணார் எ-து,—கண்ணாடி பார்த்த குரங்கு அதனுள் தோற்றிய நிழலைத் தன் நிழல் என்று எண்ணாது மற்றோர் குரங்கென்று அதனை மெய்யாகக் கருதும் அதன் அறிவுபோல, தற்போதத்தால் தியானித்தறியும் பொருளை அத்தியானத்தின்படி கருவிகளில் தோற்றுவதென்று அறியாது, அதனை மெய்ப்பொருளாய்க்காண்பதையும் சுத்தாவத்தையின் இலக்கணம் அறிவார் எனின், அவர் பொய்யென நீக்கி ஓர் பொருளாய் எண்ணார், எ-று.

ஆதாரம் ஆறையும் ஊடுருவி நிற்கின்றோம், தத்துவங்களை எல்லாம் கடந்தோம் என்று கருதிப் பிராண வாயுவில் மறைந்திருத்தலின், "தூக்கி யொழிப்பார்போ லுழைவதையும்" என்றார். சுத்தாவத்தையில் அருள்மயமாய் நிற்போற்கு எதிரிட்டவை எல்லாம் பொய்யாகலின், "அவத்தை யறியிலெண்ணார்" என்றார். ஏ-அசை.

இவ் விரண்டு திருவெண்பாவானும் சகலகேவலங்களை நீக்கித் தம்மை அருளால் அறிந்து சுத்தாவத்தையில் நிற்போர் யோகி கருதிய பொருளை எண்ணாரென்று அறிவித்தவாறு காண்க. (எ)

உபதேசப் பித்தோ வுபமானப் பித்தோ
விபரீத மோபழக்கோ வேறோ - தபசிநீ
கண்மூடா விண்மூடத் தேடுங் கவுசனைபோல்
எண்மூடா யோகமிது வெண்.

(இ-ள்.) உபதேசப் பித்தோ உபமானப் பித்தோ விபரீத மோ பழக்கோ வேறோ தபசி நீ எ-து,—உனக்குக் குருசொன்ன உபதேசப் பித்தமோ? சாத்திரங் கூறிய உபமானப்பித்தமோ? உனது விபரீத புத்திதானோ? முற்சனனங்களில் தொன்றுதொட்டு நீ செய்துவந்த பழக்கந்தானோ? அஃதன்றிப் பிறர்செய்வது கண்டு பாவனையாகச் செய்தல் முதலிய

மற்றியாதோ? தவவேடம்பூண்டு தவத்தைப் பண்ணுகின்ற நீ (அத்தவத்திற்கு உரிய ஞானயோகம் புரியாது);

விண் மூடத் தேடும் கண்மூடா கவுசனைபோல் எண்மூடா யோகம் இது என் எ-து,—விண்ணை மூடவேண்டினேன் அதனை நாடும் கண்ணை மூடாது வைத்து, அவ்விண்ணை மூடுதற்குக் கவுசனை தேடுதல்போன்று எண்ணுகின்ற மூடனே! பஞ்ச பூதாதி கருவிகளை ஒழிக்கத் தொடங்கிய நீ அவற்றை நாடும் தற்போதத்தைக் கண்ணுக்கு இமைபோல் உனது உயிரைவிட்டு நீங்காதிருந்த அருளில் மறைந்து அடக்காது, இத் தற்போதத்தால் அப்பஞ்சபூதாதி கருவிகளை ஒழிப்பல் என்று கருதிப் பிராணவாயுவை உள்மறித்து, இதனோடும் போராடி நீசெய்யும் யோகம் இதென்னைகொல், எ-று.

அருளில் மறைந்து அசைந்தோனுக்கு அவ் வருளே தோன்றும்; கருவியில் மறைந்து அசைந்தோனுக்கு அக்கருவியே தோன்றும்; ஆகலின், அவ் வியோகத்திற்கும் இவ் வியோகத்திற்கும் பேதம் இவ்வநுபவத்தானுங் காண்க. ஒகாரம் அடுக்கி வந்து இது என் என முடிந்தது. (அ)

வாலே முகமாய் வரவானை யேறினேன்
போலேயுன் போதமோ போய்த்தீண்டும்-சாலப்
பெருஞ் சிரிப்பாந் தன்னைப் பிடித்தாட்டும் பேயைத்
தெரிஞ்சிருக்கத் தேடுஞ் செயல்.

(இ-ள்.) வாலே முகமாய் வா ஆனை ஏறினேன்போலே உன் போதமோ போய்த் தீண்டும், எ-து,—தான் கருதிய ஊருக்குச் செல்லத் தலைப்புறத்தைப் பின்னிட்டு வாற்புறமுகமாய் ஆனையேறினானைப் போலும், நீகருதிய சிவத்தை அடைதற்கு அருளைப் பின்னிட்டு உன் போதத்தை முன்னிட்டுச் சென்றால், உன்போதமோ அச் சிவத்தைப் போய்த் தீண்டுவது? (ஆயின் அவ்வருளைத் தான் அடையவேண்டாவோ? எனின்);

Digitized by Google

தன்னைப்பிடித்து ஆட்டும் பேயைத் தெரிஞ்சி இருக்கத்தே டும் செயல்சால பெருஞ் சிரிப்பு ஆம் எ-து,—தன்னைவிடாது பற்றிநின்று அதனது இச்சைப்படி ஆட்டும் பேயை எதிரிட்டு அறிந்திருக்க, அஃது எங்குளதென்று தேடும் ஒருவனது அறியாமைபோல, பெத்த முத்திகளினும் உனது உயிரைவிட்டு நீங்காதிருந்து ஊட்டி உறக்கி உபகரித்து வீட்டைக் கொடுக்கும் திருவருளை வேறுபிரித்து, இஃது எங்குளதென்று தேடுவது இத் திருவருள்ஞானம் பெற்றோர்க்கு மிகவும் நகையாம், என்றவாறு.

வாற்புறமுகமாய் எறிஞனை அவன் கருதிய ஊருக்கு மாறாகிய ஊரைச் சார்விக்கும், தலைப்புறமுகமாய் எறிஞனை அவன் கருதிய ஊருக்கு நேரே சார்விக்கும். அது போல், அருளைப் பின்னிட்டுப் போதத்தை முன்னிட்டுச் சென்றானைக் கருவிகளைச் சார்விக்கும், அத் திருவருளை முன்னிட்டுப் போதத்தைப் பின்னிட்டுச் சென்றானைச் சிவத்தைச் சார்விக்கும் என்பதறிக. (கூ)

குறங்குகுத்திக் கொண்டு குறேக்கைகத்திக்கூட்டை
மறந்தழைத்தாற் றூக்கம் வருமோ-வெறுங்கெடுவீர்
தன்னை யழித்தெழுந்த சச்சிதா நந்தத்தை
உன்னி லொளித்துவிடா தோ.

இ-ள்.) குறங்கு குத்திக்கொண்டு குறேக்கை கத்திக்கூட்டை மறந்து அழைத்தால் தூக்கம் வருமோ எ-து,—பாயலில் படுத்துக்கொண்டு தொடையைக் குத்திக்கொண்டு குறேக்கை விட்டுக்கொண்டு உடம்பை மறந்ததாகப் பாவித்துக்கொண்டு தூக்கமே நீ வாராய் என்று அழைத்தால், அத்தூக்கம் அங்ஙனம் நினைத்துச் செய்யும் நினைவை அழித்தெழும் கேவலம் வந்தால் அன்றி வருமோ? அதுபோலும் உன்போதத்தால் பிராணவாயுவை மறித்து நீ செய்யும் யோகத்தால் ஆனந்த நித்திரையை வரச்சொன்னால் அந்நித்திரை அப்போதத்தை

Digitized by Google

அழித்தெழாநின்ற அருட்கேவலம் வந்தால் அன்றி வருமோ? (அவ்வருட்கேவலம் எங்ஙனம் வரும் எனின்);

வெறுங்கெடுவீர் தன்னை அழித்து எழுந்த சச்சிதாநந்தத்தை உன்னில் ஒளித்துவிடாதோ எ-து,—அந்தோ வெறுங் கெடுவீர்! தற்போதத்தை அழித்துத் தானாயிருக்கும் சச்சிதாநந்தவடிவாகிய சிவத்தை உன்போதத்தால் உன்னில், உன்னையறியாது உனக்குள் ஒளித்துத் தன்னைவிட உன்னை ஒருமுதலாக்கிப் பிரித்துவிடும், ஆகலின், உனது உயிர்க்குள் இருந்து அறிவிக்கும் பூரணம் எனக் காண்டி, எ-று.

சுபாவ நித்திரை பண்ணுவோன் செயலெல்லாங் காட்டி நித்திரைபண்ணு திருந்தானைப்போல், ஏகாந்தத் திருத்தல், ஆதனங்கட்டல், அசைவற இருத்தல் முதலிய ஞானிகள் நடையைக்காட்டி, அவரைப்போலும் ஆநந்த நித்திரை பண்ணாது தற்போதத்தோடும் இருத்தலின், இங்ஙனம் உவமை கூறினார்.

உபதேசப் பித்தோ என்னும் திருவெண்பா முதல் இம்மூன்று திருவெண்பாவானும் திருவருளை அறிதற்கும், தற்போதம் ஒழித்தற்கும் உபாயம் யாது கூறினும் தெளிந்து கொள்ளாத யோகியைப்பார்த்து வெறுத்துப் போதத்தை அறிந்து அடக்கினாலன்றிக் கருவிகள் அடங்காது என்பதும், அப்போதத்தைப் பின்னிட்டு அருளை முன்னிட்டுச் செல்லவேண்டும் என்பதும், அவ்வருளை முன்னிட்டுச் சென்றபோதும் அதனைத் தற்போதத்தால் எதிரிட்டுப் பார்க்கலாகாது என்பதும், அறிவித்தவாறு காண்க. (௯0)

நீர் கூறியவாறே யோகிகளும் சிவம் வாக்கு மனாதீத கோசரம் என்று கூற நீர் அவரை மறுப்பதென்னை எனின், மேற் கூறுகின்றார்.

Digitized by Google

மனவாக்குக் காயத்தான் மாய்ந்தளவை மாண்ட
தெனவாய்ப் பறையறையி லென்னும்-நினைவதெலாம்
சாக்கிரப்பொய் தானுந் தனியனலன் றற்பரமும்
நீக்கமற்ற பூரணமென் னில்.

(இ-ள்.) மனம் வாக்குக் காயத்தால் மாய்ந்து அளவை மாண்டது என வாய்ப்பறை அறையில் என் ஆம் நினைவது எலாம் சாக்கிரப்பொய் எ-து,—மனம் வாக்குக் காயத்தால் வருந்தி யோகசமாதி கூடிச் சிவத்தைப் பெறுது, அம்மனம் வாக்குக் காயங்களால் அளவிடப்பட்ட அளவைகளை எல்லாங்கடந்தது அச்சிவம் என்ன, பிறர்க்கு வாய்ப்பறை அறைந்து கூறிய ஆற்றுன், அவர்க்குப் பயனென்னை உண்டாம். அவர் பாவிப்பதெல்லாம் சாக்கிரப்பொய், ஆகலின் ;

தானும் தனியன் அலன் தற்பரமும் நீக்கம் அற்ற பூரணம் என்னில் எ-து,—ஆன்மாவும் சிவத்தைவிட ஓர் தனிமுதல்வன் அன்று என்றும், அச்சிவமும் ஆன்மாவை விட்டுநீங்காது உட்புறம்பாய் நிறைந்துள்ள பரிபூரணம் என்றும் வேதாகமங்கள் கூறும் எனின், எ-று.

கூறும் எனின் பொய்யாகலின் பயனென்னை உண்டாம் என முடித்துக்கொள்க.

மனத்தால் வருந்துவது வாயுவை உள்மறித்தல், வாக்கால் வருந்துவது சாத்திரம்பார்த்தல், காயத்தால் வருந்துவது ஆதனங்கட்டல் ஔடதம் புசித்தல் முதலியன. அளவை என்பது காட்சி அநுமானம் ஆகமம் முதலியன. அவ்வளவை மாண்டது ஆன்மாவும் சிவமும் இரண்டற்றிருந்த இடம். அதனை அறியாது மானதக்காட்சியில் நின்று அளவைமாண்டது என்றமையால், "வாய்ப்பறையறையிலென்னும்" என்றார்.

இத்திருவெண்பாவால் அவர் அங்ஙனம் கூறினாராயினும் மனாதிகளைக் கடந்துநின்ற பூரணத்தை உணர்ந்தவர் அலர் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

Digitized by Google

வாயுமனங் கண்ணசையா வாறடக்கி மக்கினமாய்
நீபுதைந்து போய்க்கூட னீதியோ-காயத்துக்
குட்புறம்பாய் நீதானு யுண்டில்லை யாயதற்கும்
அப்புறமாய்த் தாக்கற் றதை.

(இ-ள்.) காயத்துக்கு உள்புறம்பு ஆய் நீதான் ஆய் உண்டு இல்லை ஆய் அதற்கும் அப்புறம் ஆய்த் தாக்கு அற்றதை எ-து, வெறுங் கடத்திருந்த ஆகாயம் போன்று இக்காயத்திற்கு உள்ளும் புறம்புமாய், நீ அருள் தானாகிய காலத்து உண்டென்றும் இல்லை யென்றும் சொல்லப்பட்ட அநுபவமாய், அதற்கும் அப்பாலாய் ஒன்றோடும் தாக்கற்றிருந்த சிவத்தை;

வாயு மனம் கண் அசையா ஆறு அடக்கி மக்கினம் ஆய் நீ புதைந்து போய்க்கூடல் நீதியோ, எ-து,—வாயுவும் மனமும் சிறிதும் அசையாவாறு அடக்கி, அங்ஙனம் அடக்கியபோதமுந் தோன்றாது அவற்றுள் மறைந்து, நீ சென்று அடையத் தொடங்குதல் முறைமையோ, எ-று.

ஆன்மா அருள்வயப் பட்டபோதெல்லாம் அவ்வருள்வடிவாய்த்தோற்றலான் உண்டென்றும், அங்ஙனந் தோற்றிய அருளை இன்ன பிரகாரமாய் இருக்கின்றது என்று சொல்லக் கூடாமையான், "இல்லையாய்" என்றும், அதனையும் கழன்று சுகாதீதப்படுதலின், "அதற்கும் அப்புறமாய்" என்றும் கூறினார்.

இத் திருவெண்பாவால் பூரணத்தை அடைதற்கு ஈது உபாயம் அன்றென்று அறிவித்தவாறு காண்க. (கஉ)

ஒட்டா திருக்கவென்று லொட்டா துறக்கமாம்
சுட்டா திருக்கிற் சுடர்க்கொழுந்தாம்-துட்ட
மனத்தோடு வாயுவைநீர் மண்டையிலேவைக்க
நினைப்பீரி தென்ன நிலை.

Digitized by Google

(இ-ள்.) ஒட்டாது இருக்க என்றால் ஒட்டாதுஉறக்கம் ஆம் சுட்டாது இருக்கின் சுடர்க் கொழுந்து ஆம் எ-து,—உமது யோகத்தால் கருவிகள் ஒன்றும் தாக்காது ஒழிந்திருப்போம் என்று நீர் கருதினால், அக்கருவிகள் ஒழிந்தபடி நிற்கவொட்டாது, கேவலம் வந்து சாரும், அக்கருவிகள் ஒன்றையும் எதிரிடாது பார்த்திருப்போம் எனில் ஆண்டு ஓரொளிதோற்றும், (மனத்தால் வாயுவை அடக்கி நிற்பின் அங்ஙனமாம் எனின்);

துட்ட மனத்தோடு வாயுவை நீர் மண்டையிலே வைக்க நினைப்பீர் இது என்ன நிலை எ-து,—அக்கொடிய மனத்துடனே வாயுவையும் பிரமாந்திரத்தில் நிறுத்துதலே முத்தி என்று அப்பிரமாந்திரத்தில் அவற்றை நிறுத்தக் கருதுவீர்! இஃதென்ன உண்மைநிலை, எ-று.

மனத்தையும் வாயுவையும் பிரமாந்திரத்தில் நிறுத்தினால் கருவிகளெல்லாம் ஒழியும்; அவை ஒழியவே கேவலம் மூடும், அது மூடவே தம்மோடு தமக்குள் இருந்து அறிவிக்கும் திருவருளும் தெரியாது ஆகலின், அந்நிலையை, "ஈதென்ன நிலை" என்றார்.

இத்திருவெண்பாவால் யோகியரது கருத்தை எடுத்துக்காட்டி, இங்ஙனம் நிற்பின் அங்ஙனம் தோற்றும் எனின், எங்ஙனம் நிலையைப் பெறுவீர் என்று அவரை மறுத்தவாறுகாண்க.

வாயுவைவிட்டு மனத்தைமாத்திரம் நிறுத்தினால்சிவத்தைப் பெறலாமோ எனின், மேற்கூறுகின்றார்.

கூட்டிற் குரங்கைநிழற் கோரணிக்கூத் தாமனத்தை
ஆட்டிப் பிடித்தா ரடக்குவார்-காட்சியறச்
சும்மா விருக்கி லசையாது சுற்றுவிறி
சம்மானைப் பம்பரங்கா ணும்.

(இ-ள்.) காட்சி அற சும்மா இருக்கில் அசையாது சுற்றுவிறிசுஅம்மானை பம்பரம் எ-து,—போதம் ஒன்றையும் எதிரிட்டு

நாடாது சும்மா இருப்பினும் ஒருவர் பிடித்து அசைக்காது தானே சுற்றுகின்ற விறிசுபோலும், ஒருவர் எறிந்து பிடியாது தானே சுழலும் அம்மானைபோலும், ஒருவர் ஆட்டாது ஆடும் பம்பரம்போலும் (தானே விரைந்து எழுந்து அசைவது எனின்);

கூட்டில் குரங்கை நிழல் கோரணிக்கூத்து ஆம் மனத்தை ஆட்டிப் பிடித்து ஆர் அடக்குவார், எ-து,—கூட்டில் அடைத்துவைத்த குரங்கைப்போலும், நிழற்பாவைக் கோரணிக்கூத்துப்போலும், ஒருவர் பிடியாதிருக்கவும் தானே சேட்டிக்கும் மனத்தினைப் போதத்தால் பற்றிப் பிடித்து ஆட்டி யாவர் அடக்கிக்கொள்வார், எ-று.

உடம்பில்நின்று சேட்டித்தலின், "கூட்டிற் குரங்கை" என்றும், நிழற்கோரணிக் கூத்தைக் காண்டல் மாத்திரம் அன்றிப் பிடிக்கக் கூடாததுபோல், மனத்தினது போக்குவரத்து அறிவதே அன்றி அதனை அறிந்து பற்றக்கூடாமையின், "நிழற்கோரணிக்கூத்து" என்றும், பன்முகமாய்ச் சிதறி எழலின், "விறிசு" என்றும் குதித்துக் குதித்தெழலின், "அம்மானை" என்றும், ஓர் கணத்தில் அனேகஞ் சுழலாச் சுழல்வதனால், "பம்பரம்" என்றுங் கூறினார்.

கூட்டில் குரங்கசைவும் நிழற்கூத்தசைவும் தூலமாகலின், போதம் அசைந்தவிடத்து அதனது அசைவிற்கு உவமையும், விறிசு அம்மானைபம்பரத்தசைவும் சூக்குமம் ஆகலின், போதம் சிறிதடங்கிய இடத்து அம்மனத்தின் அசைவிற்கு உவமையுமாகக் கொள்க. (கச)

பற்றாத போதும் பதறும் பழக்கமதைக்
கற்றாலென் னாகக் கலக்காது-சற்றேநீ
தீண்டிவிடிற் றான்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை.

Digitized by Google

(இ-ள்.) பற்றாதபோதும் பதறும் பழக்கமதைக் கற்றால் என் ஆகக் கலக்காது எ-து,—ஓர் பொருளையும் போதங் கருதாது அசைவற் றிருந்தபோதும் முன்னர் அசைந்த அப் போதத்தோடுங் கூடிய பழக்கத்தான் விரைந்தெழும் மனத்தைப் போதத்தால் பிடித்துச் சாதித்து அடக்குவன் எனின், உன்னை எங்ஙனம் மயங்கக் கலக்காது;

நீ சற்றே தீண்டிவிடின்தான் செனனமரணம் அது மாண்டு விடின் சிவமாவை எ-து,—நீ உன் போதத்தால் அம்மனத்தினைக் கணப்போதாயினும் பிடித்து விடுத்தி எனின், அதுதானே பிறப்பும் இறப்பும் ஆம், அங்ஙனம் பிடித்து விடுக்கும் போதம் இறக்கும் உபாயம் அறிந்து இறத்தி எனின், அம்மனமும் இறக்கும் நீயும் சிவமாவை, எ-று.

பிடித்தபோது நினைப்பும் விடுத்தபோது மறப்பும் வருதலின், "செனனமரணம்" என்றார்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் தற்போதத்தால் மனத்தை அடக்கக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (கரு)

அறிவா யிரீர்மயக்க மாகா தசையில்
விறிசாய் விடாதோ விகற்பம்-பிறியாத்
தராசி முனிபோற் சமாதிவரின் ஞான
இராசனுமக் கொப்பா ரெவர்.

(இ-ள்.) அறிவு ஆய் இரீர் மயக்கம் ஆகாது அசையில் விகற்பம் விறிசுஆய் விடாதோ எ-து,— கருவிகளை எல்லாம் நீங்கி நின்ற உயிர் அறிவை விட்டு நீங்காத அருள் அறிவாயிருங்கள், அங்ஙனம் இருப்பீர் எனின், மயக்கம் வந்தடாது, அவ்வுயிரறிவைப் பிறியா அறிவைத் தற்போதத்தால் எதிரிட்டுப் பார்ப்பதாய் அசையில் விகற்பஞ்சுழல் விறிசுபோலாய்ச் சுழலும், ஆகலின் அங்ஙனம் பார்த்து அசையாது;

Digitized by Google

பிறியாத் தராசின் றுனிபோல் சமாதிவரில் ஞான இரா சன் உமக்கு ஒப்பார் எவர் எ-து,—இரண்டு தட்டிலும் இட்ட பொன்னும் கல்லும் சரியானபோது கீழ்நின்றமுள் ஓர்பால் சாயாது மேல்நின்ற முள்ளைப் பிரியாதிருந்த அத்தராசின் முள் றுனிபோல், மயக்கமும் விகற்பமும் அடாது அவ்வருளா றின் நேரே உமதுபோதம் அசைவற்று இருக்கும் சமாதி வருமாயின், அப்போது நீர் ஞான ராசன் ஆவீர், அஃதன்றி இவ்வுலகத்து உமக்கொப்பாரும் யாவர், எ-று.

கல்போலும் கேவலம், பொன்போலும் சகலம், அக்கல் மி குந்தபோது கல்தட்டுப் புறத்தும், பொன் மிகுந்தபோது பொன்தட்டுப் புறத்தும் சாயும். கீழ்நின்ற முள்போல் ஆன் மா, இம்முள் சாய்ந்த போதும் சாயாது அசைவற நேரே நின் றபோதும் அசைவற்று மேல்நின்ற முள்போல் அருள் என அறிக. மேல்நின்ற முள்போல் கீழ்நின்ற முள்ளும் அசைவற நேரே நிற்றல்போல் ஆன்மா அருளில் அசைவற நிற்கவேண் டும். ஆகலின், "தராசு றுனிபோல்" என்றார். இங்ஙனம் நிற்கின்ற சமாதி வருதல் அரிதாகலின், "வரின்" என்றார்.

இத்திருவெண்பாவால் கேவல சகலங்கள் தாக்காது திரு வருட்கண் நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க. (கசு)

[இங்ஙனம் கேவல சகலங்களை நீக்கித் திருவருளில் அசை வற நிற்கக் கூடாது. ஆயினும், அந்தக்கரணங்களை அடக்கு தற்கு உபாயம் மேற் கூறுகின்றார்.]

நீர்க்குப் பதமு நெருப்புச் சுடுந்தொழிலும்
காற்றைச் சலிக்கவுமார் கறபித்தார்-ஆர்க்குமிது
போகா மனுதி புதைக்குநிழல் போலாநீ
ஆகாயம் போறபா ரறும்.

(இ-ள்.) நீர்க்குப் பதமும் நெருப்புச் சுடும் தொழிலும் கா ற்றைச் சலிக்கவும் ஆர் கற்பித்தார் ஆர்க்கும் இது மனுதி போ

Digitized by Google

கா எ-து,—நீர்க்குக் குளிர்ந்து பதஞ்செய்யும் குணமும், நெருப்பிற்குச் சுட்டு ஒன்றுவிக்கும் குணமும், காற்றிற்குச் சலித்துத் திரட்டும் குணமும் கற்பித்தார் யாவர்? அவற்றிற்கு இக்குணங்கள் இயல்பான வாறுபோல் மனத்திற்கு ஓர் பொருளைப் பற்றும் குணமும், புத்திக்கு அது பற்றிய பொருளை நிச்சயிக்கும் குணமும், அகங்காரத்திற்கு அது நிச்சயித்த பொருளை அபிமானிக்கும் குணமும், சித்தத்துக்கு அஃது அபிமானித்த பொருளைச் சிந்திக்கும் குணமும் இயல்பாம்: ஆகலின், யாவர்க்கும் இம் மனமாதி அந்தக்கரணங்கள் நீங்கா: ஆயின், (நீர் இங்ஙனங் கூறிய ஆற்றன் அக்கரணங்கள் அங்ஙனம் இருப்பன அன்றி அவற்றை நீக்க வேண்டாவோ? எனின்) ;

புதைக்கும் நிழல்போல் ஆம் நீ ஆகாயம்போல் பார் அறும் எ-து,—தன்னைப் புதைக்க மண் போடுந்தோறும் அம் மண் மீது மேன்மேல் எழப்பட்ட புதைக்கும் நிழல்போலும் அக்கரணங்களை உன் போதத்தால் அடக்குந்தோறும் இப் போதத்தின்மீது மேன்மேல் எழுவதாம்; ஆகலின், உனது உயிருள் பிரிவற்றிருந்த அருளை உட்புறனாய் ஒன்றேனும் தாக்கற்றிருந்த ஆகாயம்போல், அவ்வருள் ஞானக்கண்ணால் தேகாதி பிரபஞ்சங்களை எல்லாம் நிரந்தரமாய்ப் பார்; இங்ஙனம் பார்த்த போது அக்கரணங்கள் அறும், எ-று.

இதனால் அந்தக்கரணம் பொறிவழிச்சென்று பிரபஞ்சத்தை நாடும்பொழுதும், அங்ஙனம் செல்லா விடத்து அவ்வாசனையால் உள்ளே அசையும்போதும், தற்போதத்தால் அடக்கின் அடங்காது மேன்மேல் எழும். ஆகலின், புறம்பும் உள்ளும் திருவருளைப் பரிபூரணமாய்க் காணின் அக்கரணங்கள் அடங்கும் என்பதாயிற்று. நீராதி இயற்கைக் குணங்களைப் போதத்தால் அடக்கக்கூடாது, அதுபோல் மனாதி இயற்கைக் குணங்களையும் இதனால் அடக்கக் கூடாதென்பதுங் காண்க.

Digitized by Google

இத்திருவெண்பாவால் திருவருளை உள்ளும் புறனும் பரிபூரணமாய்ப் பாவித்தால் கரணம் அடங்கும் என்று அறிவித்தவாறு காண்க. (கஎ)

[இங்ஙனம் உள்ளும் புறனும் பரிபூரணமாய்ப் பாவிப்பது அருளன்றோ? எனின், மேற்கூறுகின்றார்.]

மண்ணை மலையை மறிகடலை வானகத்தை
எண்ணி லளந்தறிய லெய்துமோ-உண்மையை நீ
உண்டென்னி லோர்வார்த்தை யுண்டல்லா துன்னொழிவைக்
கண்டறியி லன்னியமாங் காண். [ழிவைக்

(இ-ள்.) மண்ணை மலையை மறிகடலை வானகத்தை எண்ணில் அளந்து அறிய எய்துமோ எ-து,—மண்ணக முழுதையும் வானக முழுதையும் நீட்டல் அளவையானும், மலையை எடுத்தல் அளவையானும், மறிகடலை முகத்தல் அளவையானும் எண்ணுமிடத்து ஒருவரால் இவ்வளவென்று அளவிட்டு அறியக் கூடுமோ? அதுபோல்;

உண்மையை நீ உண்டு என்னில் ஓர் வார்த்தை உண்டு அல்லாது உன் ஒழிவைக் கண்டு அறியில் அன்னியம் ஆம் எ-து,-இருநூற்றிருபத்து நாலு புவனங்கட்கும் அவற்றுள் இருந்த சர அசர உயிர்கட்கும் உள்ளும் புறம்புமாய் நிறைந்துள்ள திருவருளை நீ உண்டென்று சொற்றி எனின், அவ்வோர் சொல்லும் உண்டாவது அன்றி இச்சொல்லுக்குப் பொருள் இது என்று உன் போதத்தால் இதனது நாசத்தில் தோற்றும் அவ்வருளைக்கண்டு அளவிட்டு அறியக் கூடுமோ? அங்ஙனம் அன்று அளவிட்டறிவேன் எனில், உனக்கு அன்னியமாய் இருந்த அவ்வருள் அன்னியமாய் நீங்கும், எ-று.

இதனால் போதத்தாற் சிறிது அளவிடப்படும் மண்ணாதி பொய்ப்பொருளையே முற்றும் அளவிடக்கூடாது எனின்,

Digitized by Google

அப்போத நாசத்திருந்த மெய்ப்பொருளை எங்ஙனம் அளவிடக்கூடும் என்பதாயிற்று. அருள் அன்னியமாயிருந்துள்ளது; ஆயினும், போதந் தடித்தபோது மலவாசனை தோன்றும், இம் மலவாசனையோடுங் கூடிய போதத்திற்கு மலாகிதமா யிருந்துள்ள அவ்வருள் தோற்றாது. ஆகலின், "அன்னியமாங்காண்" என்றார். காண் – அசை.

இத்திருவெண்பாவால் அருளை எதிரிட்டு அறியின் அன்னியமாம் என்று அறிவித்தவாறு காண்க. (கஅ)

உதித்தொடுங்கும் பொய்க்கா ருபாதான மென்று
துதிப்பை யுதிப்பா லொடுக்கின்-பதைத்தெழுந்த
பந்தன்றோ சாட்சியைப்போற் பார்வேர் பறித்தமரம்
கொந்தலர்ந்து காயாதொக் கும்.

(இ-ள்.) உதித்து ஒடுங்கும் பொய் கார் உபாதானம் என்று உதிப்பை உதிப்பால் ஒடுக்கின் பதைத்து எழுந்த பந்து அன்றோ சாட்சியைப்போல் பார் எ-து,— ஆகாயத்தில் தோன்றி மறையும் கார்போல், மாயையில் தோன்றி ஒடுங்கும் பொய்யாகிய காரணங்களையும் அம்மாயை யென்று அருளால் கண்டு நீக்காது, அதனை மெய்போல் கருதி அக்காரணங்களைப் போதத்தால் அடக்கில், அவை கரத்தால் அறையுந்தோறும் விரைந்தெழுந்த பந்துபோல் ஆகாவோ? அப்பந்தைக் கரத்தால் அறையாது விடுத்தால் நிலத்திற் கிடக்கும். ஆகலின், இதன் சாட்சியைப்போல் உன்போதத்தால் அவற்றை அடக்கின், மேன்மேலெழும் என்பதையும், உன் போதம் சும்மா இருப்பின் அவை தாமே அடங்கும் என்பதையும், பார்த்தறிதி (அஃதன்றியும்;)

வேர் பறித்த மரம் கொந்து அலர்ந்து காயாது ஒக்கும் எ-து நிலத்தில் ஊன்றிய முதல்வேர் பறிந்தமரம் பூத்துக் காயாது,

Digitized by Google

அதுபோலும் உன் போதம் அற்றபோது கரண இந்திரியங்கள் ஒன்றும் தோன்றாது அறும், எ-று.

உபாதானம் என்றது மாயையை, அது காரியத்தைக் காரணமாகக்கூறியது. காணம்போல் தோன்றி மறைதலின் போதத்தையும் 'உதிப்பு', என்றார். கரணங்கள் போதம் இருந்தபோது இருந்தும் இழந்தபோது இறந்தும் வருதலின், போதத்தை வேர்க்கு உவமையாகக் கூறினார்.

இத்திருவெண்பாவால் அருளால் கருவிகளினது உண்மையை அறிந்து நீக்கினால் நீங்கும் என்பதும், போதத்தால் அடக்கின் மேன்மேலும் எழும் என்பதும், கருவிகளை நியதிகளைந்து தற்போதத்தையும் அடக்கினால் மீட்டும் கருவிகள் தோற்றாவென்பதும், அறிவித்தவாறுகாண்க. (௧௧)

இங்ஙனம் கருவிகளும் போதமும் இறந்துநின்ற இடத்துவரும் இலாபம் என்னை? எனின், மேற்கூறுகின்றார்.

சுட்டுப்போ தங்கழன்ற சுத்தமணா மாத்திரையில்
மட்டுத்தா னற்றநிட்டை வாய்க்குமால்-கெட்டேன்
தலைச்செய்யு மானந்தஞ் சற்றோபால் வாரி
முலைக்கண்ணிற் றோன்று முறை.

(இ-ள்.) சுட்டுப்போதம் கழன்ற சுத்தம் அணாமாத்திரையில் மட்டு அற்ற நிட்டை வாய்க்கும் கெட்டேன் தலைச்செய்யும் ஆனந்தம் சற்றோ எ-து,—அணாக்கணப்போது ஆயினும் இது அது என்று சுட்டி அறியும் தற்போதம் ஒழிந்த ஓர் வரம்பின்றிய சுத்தமாகிய நிட்டை வாய்க்கும் ஆயின், கெட்டேன்! ஆண்டுப் பிரவேசிக்கும் பேரானந்தம் அற்பமோ ?;

முலைக்கண்ணில் பால் வாரி தோன்றும் முறை எ-து,—முலையினது சிறியகண் துவாரத்தில் பெரிய பாற்கடல் உதயமான முறைமைபோல் பரிபூரணமாய்த் தோற்றும், எ-று.

Digitized by Google

ஈண்டுச்சுத்தம் என்றது பனையோகம், இப்பனையோகத்தில் ஆன்மபோதம் மிகவும் தேய்ந்திருத்தலின் அதனை "மூலக் கண்" என்றும், இங்ஙனம் இருந்தபோது அனைக்கணத்தில் அப்பனையோகம் நீங்கிப் பரிபூரணானந்தம் அநுபவமாய்த் தோ ற்றலின் அதனை "பால்வாரி" என்றுங்கூறினர். தான், ஆல்,— அசை.

இத்திருவெண்பாவால் கருவிகளும் போதமும் இறந்த சுத்த நிலையில் நின்றால் ஆநந்தலாபம் உண்டென்று அறிவித்தவா றுகாண்க. (உ0)

ஆகாயத் தேபலவுந் தோன்றி யடங்காதோ
நீகாயத் தோடழுந்தி நீங்கியருள்-ஆகாதோ
என்றுசலிப் பானே னெதிரற்ற பூரணத்தே
ஒன்று மிலைகா ணுனக்கு.

(இ-ள்.) நீ காயத்தோடு அழுந்தி நீங்கி அருள் ஆகாதோ என்று சலிப்பான் ஏன் எ-து,—நீ காயத்தோடு பொருந்தி இருப்பதாய்க் கருதி இக்காயம் நீங்கி எனக்கு ஓர் காலம் திரு வருள் வடிவம் ஆகாதோ ? என்று சலித்துத் துயர் உறுவா னேன் ;

ஆகாயத்தே பலவும் தோன்றி அடங்காதோ எதிர் அற்ற பூரணத்தே உனக்கு ஒன்றும் இலை எ-து,—ஆகாயத்தினிட மாய்ச் சர அசர தேகங்கள் பற்பலவும் தோன்றி நின்று அழி யாவோ ? அதுபோல், உன்போதம் ஓர் பொருளையும் எதிரி டாது அற்றபோது உன்னை விழுங்கி நின்ற அருட் பூரணத் தில் உனக்கு அத்தேகாதி பிரபஞ்சங்கள் ஒன்றும் இல்லை, எ-று.

ஆகாயத்தினிடமாய்த் தோன்றி ஒடுங்கும் காயங்கள் அவ் வாகாயத்திற்கு அன்னியமானவைபோல், முன் தேகாதிகளை யான் எனது என்று பற்றிநின்ற போதம் திருவருளில் அழுந்

Digitized by Google

திப் பூரணமாய்ப்போகத் தேகாதி பிரபஞ்சங்கள் அன்னியமாய்த் தோற்றும் ஆகலின், "ஆகாயத்தே பலவுந்தோன்றி யடங்காதோ" என்றும், பொய்யாய்த் தோற்றலின், "ஒன்று மிலைகாண்" என்றுங் கூறினர், எ-று. காண்-அசை.

இத்திருவெண்பாவால் அருள் வடிவமாய் என்றைக் கிருப்பன் என்ற மாணாக்கனுக்கு அவ்வருள் பூரணமென்றும், உன் சுட்டுப்போதம் அற்றால் அதனைவிட நீ ஒரு முதல் அன்று என்றும் அறிவித்து, அவனது துயரை மாற்றியவாறு காண்க.

[அவன் யோகப்பழக்கம் நீங்கற் பொருட்டுப் பழக்க இலக்கணம் எடுத்து மேற்கூறுகின்றார்.]

பழக்கங் கொடியது பார் பாறையினுங் கோழி
கிழிக்கும் பொலியைக் கிளறும்-விழித்தும்
குருடர்க் கொளிப்பகையாய்க் கூசிக்கோல் போடார்
அருளைப் பகுக்குமான் மா.

(இ-ள்.) பழக்கம் கொடியது பார் பாறையினும் கோழி கிழிக்கும் பொலியைக் கிளறும் எ-து,—யாவர்க்கும் பன்னாள் தொன்று தொட்டுவரும் பழக்கம் நீக்கக்கூடாமையின் மிகவும் கொடியது, அதனை நீ பார்த்தறிதி, அஃது எங்ஙனம் எனின் பன்னாள் குப்பைசீத்த பழக்கத்தால் கோழி கற்பாறையாயினும் சீக்கும், நெற்பொலிமேல் விடுப்பினும் சீக்கும் அஃதன்றி,

விழித்தும் குருடர்க்கு ஒளி பகை ஆய்க் கூசிக் கோல்போடார் அருளை ஆன்மா பகுக்கும் எ-து,—காசநோய் படர்ந்த குருடர் கண்ணோய் தீர்ந்து விழித்தபோதுங் கதிரொளி இருட்பகை போலாய்க் கூசி முன்பிடித்த கோலைக் கைவிடார், அவர்போல் அருளை அடையாமுன்னர் அது இது என்று நானுவாய்ப் பகுத்த பழக்கத்தால், இப்போது பகுத்தற்கு இடம்

Digitized by Google

இன்றி எங்குந் தானாயிருந்த அவ்வருளை அடைந்தும், ஆன்மா அதனைப் பகுத்து நாடும், எ-று.

சிக்கக் கூடாத பாறையைச் சித்தல்போல் பகுக்கக்கூடாத அருளைப் பகுத்தலானும், கிளறவேண்டுவது இன்றி கின்று தின்னாது பொலியைக் கிளறுதல்போல், பகுக்கவேண்டுவது இன்றி இருந்து அருளாநந்தத்தை அநுபவியாது அவ்வருளைப் பகுத்தலானும், காசமிருந்தபோது கூசிப்பிடித்த கோலை அக் காசநீங்கிக் கதிரொளி கண்டும், இவ்வொளி முன்தோன்றிய இருளாய்க் கூசிக் கைவிடார்போலும், முன்னர் ஆணவமறைப்பானது இது என்று பகுத்த போதத்தை இப்போது அவ்வாணவம் நீங்கி அருளொளி கண்டும், இவ்வருளொளியை முன்னர் ஆணவ இருள்போல் பாவித்து விடார் ஆகலினும், இங்ஙனம் உவமை கூறினர்.

தேகாதி பிரபஞ்சங்களை எல்லாம் திருவருள் வடிவாய்க் காண்பதே அன்றி, அவற்றை நானாவாய்ப் பகுப்பினும் இவ்வருளைப் பகுப்பதாகாதென்பதுங் காண்க. (உஉ)

கட்டியநாண் விட்டாலுங் கந்தகலாக் கன்றுகளைத்
தட்டிப்புறப்படுத்துந் தன்மைபோல்-ஒட்டொழித்து
நின்றாற்போ னீசிவமாய் நில்லென்று நீக்கமறத்
தொன்றாக்கி லொன்றிரண்டா கும்.

(இ-ள்.) கட்டிய நாண் விட்டாலும் கந்து அகலாக் கன்றுகளைத் தட்டிப் புறப்படுத்தும் தன்மைபோல் எ-து,—தறியோடுங் கட்டிய தும்பைத் தெறித்து விடுப்பினும் முன் கட்டியிருந்ததுபோல் கருதி, அத்தறியைவிட்டு நீங்காத கன்றுகளைக் கரத்தால் தட்டி ஒட்டி வெளியில் புறப்படுத்தும் முறைமைபோல;

ஒட்டு ஒழித்து நின்றால்போல் நீ சிவம் ஆய் நில் என்று நீக்கம் அறத்து ஒன்று ஆக்கில் ஒன்று இரண்டு ஆகும் எ-து,—

Digitized by Google

மூன் பந்தமா யிருந்துள்ள முப்பத்தாறு கருவிகளையும் விடுத்துத் தன்னையும் திருவருளையும் அறிவித்து அவ்வருளோடும் சேர்த்து, அவ்வருள் அசைவற நின்றாற்போல் நீ உன் போதம் அசைவற்றுச் சிவமயமாய் நில்லென்று கூறிச் சிவத்தை விடத் தானொரு முதல் என்று கருதும் துவிதபாவனையை மாற்றி, அச்சிவத்தோடு ஒன்றாக்கினும் போத ஒழிவால் அதனோடு ஒன்றான ஆன்மா போத அசைவால் இரண்டாகும் ஆகலின், அதனது போதம் இருந்தவாறு என்னை, எ-று.

தும்புதெறித்து விடுவித்தபோதே தாயைச்சென்று கூடிப் பால் உண்ணும் கன்றுபோல், ஒட்டொழித்தபோதே தற்போதம் ஒழிந்து அருள்வழிச்சென்று சிவத்தை அடைந்து பேரின்பத்தைப்பெறும் பக்குவர் போலாகாது, கட்டியகாண் விட்டாலுங் கந்து அகலாது நின்ற கன்றுகளைக் கரத்தால்தட்டி வெளியில் புறப்படுத்தித் தாயோடுஞ் சேர்த்து முலையைப் பிடித்து உண்ண விடுப்பினும் உண்ணாது மீளுமாறுபோல், ஒட்டொழித்தலும் அன்றி அருளோடுஞ் சேர்த்துத் துவிதபாவனையை மாற்றிச் சிவத்தோடு ஒன்றாக்கினும் அச்சிவத்தோடு இரண்டற்றிருந்து ஆநந்தப்பேற்றை அடையாது தற்போத அசைவால் இரண்டாகலான், இவர்க்கு இக்கன்றுகளை உவமை கூறினார். (உரு)

குரங்கை நினையா திருவென்று கூறத்
திரும்பி யதுவே தியானம்-வருங்கதைபோல்
நீசிவமாய் நில்லென்றா னீங்கியது வாய்நினைந்து
மாய்வையது வன்றோ மலம்.

(இ-ள்.) குரங்கை நினையாது இரு என்று கூறத் திரும்பி அதுவே தியானம் வரும் கதைபோல் எ-து,—ஓர் புருடன் ஓர் பேதைக்குக் குரங்கினை நினையாது இருத்தி என்று கூற, அவன் அங்ஙனங் கூறிய மாத்திரத்தில் மீண்டு அக் குரங்குத்

Digitized by Google

தியானமே இவனுக்கு மனத்தில் குடியா யிருந்தது என்று உலகத்தில் வழங்கும் கதைபோல் ;

நீ சிவம் ஆய் நில் என்றால் நீங்கி அது ஆய் நினைந்து மாய் வை அது அன்றோ மலம் எ-து,— நீ ஒன்றையும் எதிரிடாது சிவமயமாய் நில்லென்று கூறினால், அங்ஙனம் எதிரிடும்போதம் ஒழிவதே அச்சிவமயமாய் நிற்பது என்று அறியாது, போதத்தால் சிவத்தை எதிரிட்டுப் பார்த்து யான் சிவமயமாயினேன் ஆயினேன் என்று கருதி வருந்துவாய், இங்ஙனம் கருதி வருந்தப்பண்ணுவது அன்றோ மலமாவது, எ-று.

கூரியபுத்தி உடையோனுக்கு நீ குரங்கை நினையாதிரு என்று கூறினால், அக்கணமே அந்நினைவை ஒழித்திருப்பன்; அதுபோல, தீவிரதர பக்குவனுக்கு நீ சிவமாய் நில்லென்றால் அக்கணமே சிவம் என்றுந் தான் என்றும் கருதும் துவிதபோதம் ஒழிந்து சிவமாய் நிற்பன் என்று அதற்கு எதிர் மறையும் வருவித்துக் காண்க. (உச)

மணிப்பாம் பிருளின் மறைந்திருக்கத் தேடும்
கணக்காந்தற் போதத்தைக் காட்டி-உணர்த்தினும்
நீரிற் கிணறு நிழலுயுத்த மும்போலாம்
ஆரித்தை நீக்கியிருப் பார்.

(இ-ள்) மணிப்பாம்பு இருளில் மறைந்து இருக்கத் தேடும் கணக்கு ஆம் தற்போதத்தைக் காட்டி உணர்த்தினும் எ-து, சென்னியின்மீது மணியையுடைய பாம்பு தான் இருளிடத்து மறைந்திருப்ப இருளைத்தேடும் முறைமைபோலாகும், நீ உன் போதத்தை முன்னிட்டு அருளிடத்து மறைந்திருப்ப அருளைத்தேடு முறைமை என்று போதஞ் சீவிப்பதைக்காட்டி அருளையும் உன்னைவிட்டு நீங்காத பரிபூரணம் என்று அறிவிப்பினும் தெளிந்து கொள்ளாது;

Digitized by Google

நீரில் கிணறும் நிழல் உயுத்தமும் போல் ஆம் ஆர் இத்தை நீக்கி இருப்பார் எ-து,—பிரளயமாய்க் கோத்துநின்ற சுத்தசலத்தில் கிணறுதொட்டு நீர் தேடும் ஒருவனைப்போலும், தனது நிழலை எதிராய்க் கருதி அதனோடு உயுத்தஞ் செய்யும் ஒருவனைப்போலும், பின்னரும் உன் போதஞ் சீவியாநிற்கும் ஆகலின், இப்போதத்தை நீக்கிச் சிவமாயிருப்பார் யாவர் எ-று.

சென்னியின்மீது மணிச்சுடரை உடைய பாம்பு இருளைத் தேடுந் தோறும் அவ்விருள் நீங்குவது அன்றி நில்லாது; அதுபோல, தற்போதத்தை முன்னிட்டு அருளைத் தேடுந்தோறும் இவ்வருள் நீங்குவது அன்றி நில்லாது என்பதும், அப்பாம்பு சென்னிமணியைப் புழைவழிக்கொணர்ந்து வாய்க்குள் அடக்கின், இருள்தேட வேண்டுவது இன்று, அதுபோல், முன்னிட்ட போதத்தைப் பின்னிட்டால் அருள்தேட வேண்டுவது இன்று என்பதும், அவ்விருள் நிறைந்தாற்போல் இவ்விருள் நிறைந்திருப்பது என்பதும், நீர் வெள்ளமாயிருக்கவும் அந்நீரில் கிணறுதொட்டு நீர் சம்பாதிக்கத் தொடங்கினவனைப் போல், அருள் எங்கும் பிரிவற்ற பூரணமாயிருக்கவும், அவ்வருளுள் தேடி அருளைச் சம்பாதிக்கத் தொடங்கினேன் என்பதும் தன் தேக அசைவால் நிழல் அசைவது என்று அறியாது அதற்கு ஓர் அசைவு வேறுளது என்று கருதி அதனோடு உயுத்தஞ் செய்வானைப்போல், தன்போத அசைவால் கருவிகள் அசைவது என்று அறியாது அதற்கு ஓர் அசைவு வேறுளது என்று கருதி அவற்றை அடக்கத் தொடங்கினேன் என்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க.

இங்ஙனம் எழும்போதம் ஒழிப்பார் அறியர் ஆகலின், 'ஆரித்தை நீக்கியிருப்பார்' என்றார். "மணிப்பாம்பிருளை யென்பது" தற்போதத்தை முன்னிட்டு அருளை நாடுதற்கு உவமை; "நீரிற்கிணறு" என்பது அருளை ஏகதேசமாக நாடுதற்கு உவமை; "நிழலுயுத்தம்" என்பது தன்னை அருளுக்கு வேறாகக்

Digitized by Google

கொடுத்து நிற்கவே கருவிகள் ஒழியும் என்று அறியாது, தற்போதத்தால் அவற்றை அடக்கத் தொடங்குவதற்கு உவமை எனக் கொள்க.

'பழக்கந்கொடியதுபார்' என்னும் திருவெண்பாமுதல் இந்நான்கு திருவெண்பாவானும் அளவில்காலம் தற்போதத்தால் அத்துவித நாட்டத்தில் பழகிவருதலின், அப்போத மொழித்துச் சிவத்தோடு இரண்டற்று இருத்தற்கு உபாயம் யாது கூறினும், பழக்க மிகுதியால் ஆன்மாக்கள் அத்துவித நாட்டமொழித்து நிற்றல் மிகவு மரிதென்று அறிவித்தவாறு காண்க.

[ஆயின் இப்பழக்கம் நீக்குமாறு எங்ஙனம் எனின் மேற்கூறுகின்றார்.]

உட்புறம்பாம் பூசனையு மியோக சமாதிகளும்
சுட்டறிவு கெட்டவர்போற் றூங்குவதும்-விட்டுப்
பகல்விளக்கு முச்சிப் படிகமும்போற் பாசம்
அகலநிற்பார்க் கார்சரியொப் பார்.

(இ-ள்.) உள் புறம்பு ஆம் பூசனையும் யோக சமாதிகளும் சுட்டு அறிவு கெட்டவர்போல் தூங்குவதும் விட்டு எ-து,—அந்தரி யாகம் பகிரியாகமாய்ச் செய்யும் பூசைகளும், ஆருதார பாவனையோக சமாதி கூடுதலும், இது அது என்று சுட்டி அறியும் தற்போதங் கெட்டுப் பரமானந்த நித்திரைபண்ணும் மெய்ஞ் ஞானிகளைப்போல், மனத்தால் பிராணவாயுவை உள்மறித்துப் பிரமாந்திரத்தில் அதனுள் மறைந்து தூங்குவதும் ஆகிய இவற்றை எல்லாம் பொய்யென்று விட்டுநீங்கி;

பகல் விளக்கும் உச்சிப் படிகமும் போல் பாசம் அகல நிற்பார்க்கு ஆர் சரி ஒப்பார் எ-து,—பகற்காலத்து ஏற்றிய தீபம் போலும், உச்சிக்காலத்துப் படிகம்போலும், கருவிகள் முப்பத்தாறும் அகன்றபோகத் திருவருளில் அசைவற நிற்போர்க்கு இணை ஒப்பார் யாவர், எ-று.

Digitized by Google

இருளில்தோன்றியதுபோல் அன்றிச் சூரியப்பிரகாசத்தால் மூதல்கெடாது ஒளி கெட்ட பகல்விளக்குப்போல், முன்னர் ஆணவ அந்தகாரத்தில் தோன்றியதுபோல் அன்றி அருட்பிர காசத்தால் மூதல் கெடாது போதங்கெட்டு நிற்றலின், "பக ல்விளக்குப்போல்" என்றும் பொழுதேறுகாலம் சாயங்காலத் து அன்றி உச்சிக்காலத்தில் பஞ்சவன்னங்களையுங் கவராத படிகம்போலச் சகல கேவலத்து அன்றிச் சுத்தமாகிய அருள் நேரே கருவிகள் ஒன்றேனும் தாக்கற்று நிற்றலின், "உச்சிப் படிகம்போல்" என்றும் "பாசமகல நிற்பார்" என்றுங் கூறி னுர். பகல்விளக்கென்றது தற்போதம் சிவியாது அருளில் நிற்றற்கு உவமையும், 'உச்சிப்படிகம்போல்' என்றது கருவி கள் ஒன்றேனும் தாக்கற்று நிற்றற்கு உவமையும் ஆகக் கொ ள்க.

இத்திருவெண்பாவால் நீ இங்ஙனம் பழகிய யோகப்பழக்கத் தைவிட்டு ஞானயோகத்தில் பழகுதி எனின் சிவத்தைப் பெ றலாம் என்று அறிவித்தவாறுகாண்க. (உசு)

[ஆயின் ஒன்றையும் கருதாது சும்மாநிற்பின் சிவத்தை அ டைவது எங்ஙனம் எனின் மேற்கூறுகின்றார்.]

இருட்கே வலத்தின் றெழுப்பியெதி ரிட்ட
மருட்கே வலசகல மாற்றித்-திரிச்சுடர்போல்
தன்னறிவு தின்னிக்குத் தானுணவாய்ப் போவதல்
உன்னுதலே யோட்டுதல்கா ணும். [லால்

(இ-ள்.) இருள் கேவலத்து இன்று எழுப்பி எதிரிட்ட மருள் கேவல சகலம் மாற்றி எ-து,—கருவிகள் முப்பத்தாறும் இறந் து ஆன்மபோதமும் இறந்து அந்தகாரமாயிருந்த கேவலத் தில் நின்றும் இப்போது தனது அருட்சத்தியால் கருவிக ளைக் கூட்டப்பண்ணித் தற்போதத்தை எழுப்பிச் சுருதிகுரு வாகிய படர்க்கை முன்னிலையாய் நின்று ஞானசமாதி கூடப்

Digitized by Google

பண்ணி அத்தற்போதத்திற்கு எதிரிட்ட மருளாகிய கேவல சகலங்களைப் பூரணமாகிய தன்மையாய் நின்று மாற்றி.

திரிச் சுடர்போல் தன் அறிவுதின்னிக்குத் தான் உணவு ஆய்ப் போவது அல்லால் உன்னுதலே ஒட்டுதல் எ-து,— விளக்குத்திரிமேலேறிய சுடர் சிறுகச் சிறுகத் தின்றுவந்து முடிவில் அத்திரிமுழுதையும் விழுங்குதல் போல, தன்னை அருளால் அறிவித்தபோது தான் இவ்வருள்வழி வரவரச் சிறுகச் சிறுகத் தின்று முடிவில் தனது போதமெல்லாம் விழுங்கித் தானுயிருக்கும் சிவத்திற்குத் தான்புசிப்பாய்ப் போவது அன்றித் தான் வேறொருமுதலாய் நின்று அச்சிவத்தை எதிரிட்டு நாடுதலே அதனை நீக்குதல், எ-று.

கருவிகளும் போதமும் இறந்து கேவல இருளில் கிடந்த நீ கிஞ்சிக்கியனாகலின் அவ்விருளை நீக்கிக் கருவிகளைக் கூடமாட்டாய்; கருவிகள் சடமாகலின், உன்னை அவை வந்து கூடி எழுப்பமாட்டா. ஆகலின், சுதந்தரமாயுள்ள அருட்சத்தி கருவிகளைக்கூட்டி உன்னை எழுப்ப இக்கருவிகளோடுங் கூடி நீ சுகிர்தனானவை. இங்ஙனம் உனக்குப் பெத்தநிலையில் சுதந்தரம் இன்மைபோல் முத்திநிலையினும் இன்றாகலின், நீ உன்போதத்தால் ஒன்றையும் எதிரிடாது அசைவற நிற்றி எனின், அச்சிவம் தானே உன்னை விழுங்கிக்கொண்டு நிற்கும் என்று அறிவிக்கவேண்டி, "இருட்கேவலத்தின்றெழுப்பி" என்றும், "தன்னறிவுதின்னி" என்றுங் கூறினார். "இன்றெழுப்பி" என்றதனால் அநாதியில் எழுப்பியதும் இவ்வாறெனக் கொள்க. காணும் - அசை.

இத்திருவெண்பாவால் சுட்டற்றிருந்தால் அன்றிச் சிவத்தைப் பெறக்கூடாது என்பதும், அங்ஙனம் நிற்பின் சிவம் தானே விழுங்கிக்கொள்ளும் என்பதும், அறிவித்தவாறு காண்க. (உஎ)

Digitized by Google

[ஆயின் நீர் இங்ஙனங் கூறிய ஆற்றான் வேதாந்தி நிலை நன்று என்ற மாணாக்கனை நோக்கி மேற்கூறுகின்றார்.]

அறிந்ததெல்லாம்பொய்யென்ற வத்துவிதியார்க்கு
வெறும்பாழி லூன்றல் விடாது - பிறந்திறப்பை
ஆனு லுனதொழிவு மாநந்த மாமுதிப்பும்
போனால்கா ணுன்பிறப்பும் போம்.

(இ-ள்.) அறிந்தது எல்லாம் பொய் என்ற அத்துவிதியார்க்கும் வெறும்பாழில் ஊன்றல்விடாது பிறந்து இறப்பை ஆனு எ-து,— தம்மால் எதிரிட்டு அறிந்ததெல்லாம் [கண்ணினுல் அறிந்த காட்சி எல்லாம்] கண்ணுகாதவாறுபோல் யாம் அல்லோம், இவை மித்தியாரூபம் என்று அவற்றை நீக்குகின்ற வேதாந்தியாருக்கும் அங்ஙனம் எதிரீடாய்த் தோற்றுவன யாவும் இன்றிச் சர்வசூனியமாயிருந்த பிரமம் நாம் என்று இச்சூனியத்தில் தற்போதம் ஊன்றி நிற்றல் அவர்க்கும் விடாது ஆகலின், நீ அவர்போல் நிற்றி ; ஆயினும், செனனமரணப் படுவை; இங்ஙனம் நிற்பினும் உற்பத்திநாசம் உளவென்றீர் இனி உற்பத்திநாசம் இன்றாய முத்தியாது எனின்,

உனது ஒழிவும் ஆநந்தம் ஆம் உதிப்பும் போனால் உன்பிறப்பும் போம் எ-து,—உனது போத ஒழிவாகிய பரையோகமும் இப்பரையோகத்தில் மேலிடும் ஆநந்தோதயமும் போனால் அப்போது உன்பிறப்பும் போம், எ-று.

பரையோகமும் ஆநந்தப்பேறும் ஆன்மாவிற்கு அநுபவமாய்த் தோற்றலானும், அவ்விடங்களில் ஆன்மாவிற்குச் சிவத்தோடு அத்துவிதம் இன்றாகலானும், "போனால்கா ணுன்பிறப்பும் போம்" என்றார். அவை போனவிடஞ் சுகாதீதம். காண் - அசை.

இத்திருவெண்பாவால் வேதாந்திகள் இங்ஙனம் நிற்றலின் அவர்க்கும் பிறப்பு நீங்காதென்பதும், பிறப்பும் இறப்பும் நீக்கும் இடம் இவ்விடம் என்பதும், அறிவித்தவாறுகாண்க. ()

Digitized by Google

அறிவுக் கறிவா யகண்டமாய் நின்ற
நிறைவைக் குறைய நினைந்து-மறவையுமாய்த்
தாமே சிவத்தைப் படைத்தழிப்பார் தற்றோடம்
போமா றிலைப்பிறப்பேன் போம்.

(இ-ள்.) அறிவுக்கு அறிவு ஆய் அகண்டம் ஆய் நின்ற நிறைவைக் குறைய நினைந்து மறவையும் ஆய் எ-து,—உயிர்க்கு உயிராய் நின்று அறிவிக்கும் அறிவாய், கண்டிதமெல்லாங் கடந்ததாய், குறைவு இன்றி ஒரியல்பிற்றாய் எக்காலமும் விளங்காநின்ற பரிபூரண சிவத்தை ஏகதேச வடிவாய்த் தற்போதத்தால் தியானித்து, அங்ஙனம் தியானித்த வடிவை மறந்துபோம் தன்மை உடையருமாகி;

தாமே சிவத்தைப்படைத்து அழிப்பார் தன் தோடம்போம் ஆறு இலைப் பிறப்பு ஏன் போம் எ-து,—தம்மைப் படைத்தழிக்கும் சிவத்தைத் தாமே படைத்தழிப்பார் ஆகலின், இவர் இங்ஙனஞ் செய்தலான் வரும் தமது பாவமே நீங்குமாறு இல்லை எனின் பிறப்பென்னை நீங்கும், எ-று.

தியானித்தபோது வடிவு தோன்றியும், விடுத்தபோது அவ்வடிவு நீங்கியும் வருதலின், "படைத்தழிப்பார்" என்றும், சிவத்தைப் படைத்தழிப்பது தோஷமாகலின் "தோடம்" என்றுங் கூறினர்.

இத்திருவெண்பாவால் யோகியினது கருத்தை எடுத்துக்காட்டி, இங்ஙனம் ஞானபக்குவன் செய்வது பாவம் என்று அறிவித்தவாறு காண்க. (உக)

மறப்பு நினைப்பு மயக்கும் விகற்பும்
வெறுப்பும் விருப்பும் விடாமல்-விறப்பேனைப்
பானுவும் வேதியும்போற் பார்த்தும் பரிசித்தும்
ஞானபந்தன் றானாக்கி னான்.

(இ-ள்.) மறப்பும் நினைப்பும் மயக்கும் விகற்பும் வெறுப்பும் விருப்பும் விடாமல் விறப்பேனை எ-து,—மறப்பும் நினைப்புமா

Digitized by Google

யுள்ள கேவலமும் சகலமும் மாறிமாறி வரலால், தேகாதி பிர பஞ்சங்களின்மேல் விருப்பும் வெறுப்பும் சனனங்கள்தோறும் விட்டு நீங்காமல் துன்பத்தை அநுபவிக்கையினும் அதனை ஆணவத்தான் இன்பமெனக் கருதி இறுமாந்து கொண்டிருப்பேனை;

பானுவும் வேதியும் போல் பார்த்தும் பரிசித்தும் ஞானபந்தன் தான் ஆக்கினன் எ-து,—பூதவிருளை நீக்கும் பானுவையும் தன்னைச்சேர்ந்த செம்பைப் பொன்னாக்கும் பரிசன வேதியையும் போன்று, தமது ஞானப்பிரகாச நோக்கத்தால் பார்த்தும், கரசரணங்களால் பரிசித்தும், மும்மலங்களையும் நீக்கித் திருவருளால் எடுத்துத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் தமது திருவடியில் ஒன்றாக்கினார், எ-று.

தான் அல்லாத தேகத்தை யானென்றும், தனது அல்லாத போகத்தை எனதென்றும் கருதப்பண்ணுவது மயக்கம். அத்தேக போகங்களில் வெறுப்பும் விருப்பும் வரச்செய்வது விகற்பம் ஆகலின், இவற்றைத் தொடர்ந்து நின்று இருவினைகளும் இவ்விருவினைகளால் பிறப்பிறப்பும் விடாது வரலால், "மயக்கும் விகற்பும் வெறுப்பும் விருப்பும் விடாமல்" என்று இம்முறை வைத்துக் கூறினார். ஞானதீக்கை பண்ணும்போது கிருபாநோக்கம் வைத்துத் திருவடி சூட்ட வேண்டுமாகலின், "பார்த்தும் பரிசித்தும்" என்றார். அங்ஙனம் பண்ணும் தீக்கையில் பாவனையும் இருத்தலின், அது கூறாராயினார். அப்பாவனையால் தம்மோடு ஐக்கம் பண்ணிக் கோடலின், "தானாக்கினன்" என்றார்.

இத்திருவெண்பாவால் தமதாசாரியர் தீக்கையினால் தம்மைத் திருவடிக்கண் ஐக்கியமாக்கிய முறைமை அறிவித்து, நீயும் ஞானதீக்கை பண்ணிக்கொள்ளுதி என்று அறிவித்தவாறு காண்க. (௩0)

யோகக்கழற்றி-முற்றிற்று.

Digitized by Google

௯-ம். அதிகாரம்.

கிரியைக் கழற்றி.

தத்துவத்தை யெல்லாஞ் சடமென்று தாக்கற்றுச்
செத்தசத்தின் கண்போற் றிரியாது-வைத்தெடுத்து
பூரணமே யென்றழைத்துந் தேடிப்புரண்டழுதும்[ம்
கோரணிகாட் டும்பேய்க் குவால்.

(இ-ள்.) தத்துவத்தை எல்லாம் சடம் என்று தாக்கு அற்றுச் செத்த அசத்தின் கண்போல் திரியாது எ-து,—தத்துவங்களை எல்லாம் இது இது என்று தன்னால் அறியப்படலானும், தன்னை அவைகள் அறியாமையானும், அவற்றைச் சடமென்று அறிந்து அவைகள் ஒன்றோடும் தாக்கற்றுச் செத்த ஆட்டுக்கண்போல் சுட்டறிவு கெட்டுச் சும்மா திரியாமல்;

வைத்து எடுத்தும் பூரணமே என்று அழைத்தும் தேடிப் புரண்டு அழுதும் பேய்க்குவால் கோரணி காட்டும் எ-து,—தற்போதநாசத்து இருந்த பூரணசிவத்தை அப்போதத்தால் ஓர் வடிவில் ஆவாகனம் பண்ணி, அதனை மீட்டும் தியானம் பண்ணி, இங்ஙனம் பூசனைபுரிந்தும், அவ்வடிவைப் பரிபூரண சொரூபமே என்று ஓலமிட்டழைத்தும், அச்சிவம் எங்கணும் இல்லை மகாதலங்களில் உண்டென்று கருதி அத்தலங்களில் தேடிச்சென்றும், நிலத்தில் வீழ்ந்து புரண்டழுதும், இங்ஙனம் கிரியையாளரென்னும் பேய்க்கூட்டங்கள் கோரணிக் கூத்தாடிக் காட்டும், எ-று.

செத்தசத்தின்கண் உயிர் அசத்தின் கண்போல் இருப்பினும் இதன்து சுட்டறிவு அதற்கு இன்மைபோல் மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சிகள் போல் இருப்பினும், இவரது சுட்டறிவு

Digitized by Google

அவர்க்கு இன்றி இருப்பர். அவர்போல் நீரும் இராது என்னை செய்கின்றீர் என்று அவரது நடையை இவர்க்கு அறிவிக்கவேண்டி, அந்நடையின்றிய இவனைப்பார்த்து, "செத்தசத்தின் கண்போற் றிரியாது" என்றார்.

சுட்டறிவு கெட்டு நிற்பது அருள், சுட்டச்செய்வது மருள் ஆகலின், 'இவனைப் பேய்க்குவால்' என்றும், இவர்தொழிலை "கோரணிக்கூத்தென்றும்" இவர்க்கு ஆன்மலாபம் இன்மையால் பிறர்க்கு "காட்டும்" என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் கிரியையாளனைப் பார்த்து ஞானிகள் நடையை எடுத்துக் காட்டி, இவரைப்போல் நீரும் செய்யாது என்செய்கின்றீர் என்று இகழ்ந்து கூறியவாறு காண்க.

கிரியைக் கிளைத்துவந்து கேட்டவர்க்குச் சும்மா
திரியச் சுகம்விளைத்த சீமான்-குருவன்றிச்
சற்றே பதைப்பத் தரினுஞ் சகம்படைக்கக்
கற்றானுங் காலனுமாங் காண்.

(இ-ள்.) கிரியைக்கு இளைத்து வந்து கேட்டவர்க்குச் சும்மா திரியச் சுகம்விளைத்த சீமான் குரு அன்றி எ-து,—மனத்தால் பாவிக்கும் தொழிலும், வாக்கால் தோத்திரம் பண்ணும் தொழிலும் காயத்தால் அருச்சனையாதி செய்யும் தொழிலும் ஆகிய இக்கிரியைகளால் மிகவும் மெலிந்து இவற்றை வெறுத்து, ஞானத்தை விரும்பி வந்தடைந்து கேட்ட அதிபக்குவர்க்கு இம்மன வாக்குக் காயங்கள் அசைதற் கேதுவாய தற்போத அசைவை ஒழித்து அருள்வடிவாக்கி, எனக்கு இன்னதுவேண்டும் என்பது ஒன்றும் இன்றிச் சும்மா சஞ்சரிக்கவைத்துப் பேரின்பத்தை உண்டாக்கிய இவ்வாநந்தச் செல்வனே ஞானகுரு அன்றி;

சற்றே பதைப்பத் தரினும் சகம் படைக்கக் கற்றானும் காலனும் ஆம் காண் எ-து,— அப்பக்குவர்க்கு ஓரணுவளவேனும்

தற்போதம் அசைதற் கேதுவாய உபதேசங்களைக் கொடுப்பி னும், அக்குரு சகத்தைப் படைத்தற்குக் கற்றுள்ள பிரமனும், இவனால் படைத்துள்ள சகத்தில் உண்டாகிய உடல்களை அழிக்கும் காலனும் ஆவன் அன்றி ஞானகுரு அலன் என்று அறிதி, எ-று.

போதம் பதைத்தற்கு ஏதுவாகிய உபதேசங்களைக்கூறலின், சகலகேவலங்கள் நீங்கா; இவை நீங்காமையால் பிறப்பு இறப்பு உண்டாகும்; ஆகலின், "கற்றானுங் காலனுமாங் காண்" என்றார். சீவன்முத்தனாய் நிலத்திற் சஞ்சரித்தலின் "திரிய" என்றார்.

இத்திருவெண்பாவால் ஞானபக்குவனுக்கு முன்னிருந்த சரியையாதி வாதனைகளை எல்லாம் போக்கி, தற்போதம் பதையாது மௌனமா யிருக்கும்படி போதிப்பவனே ஞான குரு என்றும், போதஞ் சிறிதேனும் பதைப்பக் கூறும் அவன் குரு அலன் என்றும் அறிவித்தவாறு காண்க. (உ)

அக்கினி தேவற் கசீர்த்தியென்று சுக்கைாத்து
வைக்கோலான் மூடி மலையடுப்பின்-துக்கியாய்
நீராக் கழுவி நிழலைப் புதைத்தளப்பார்
ஆராப்போல் வாரென்ன லாம்.

(இ-ள்.) அக்கினிதேவற்கு அசீர்த்தி என்று சுக்கு அரைத்து வைக்கோலால் மூடி மலை அடுப்பின் துக்கி ஆய் எ-று,— அக்கினிதேவனுக்கு அசீரணம் பிறந்ததென்று கருதி, அது போதற்குச் சுக்கரைத்துக் கொடுத்து, சீதளம் பிறந்ததென்று அவனை வைக்கோலால் மூடி அவனுக்கு முன்னரே இங்ஙனம் செய்யாதிருந்தோம் என்று மலைவந்து தம்மேல் அடுத்ததுபோலும் துக்கத்தை உடையவராகி;

நீரைக் கழுவி நிழலைப் புதைத்து அளப்பார் ஆரைப்போல் வார் என்னல் ஆம் எ-து,—நீரை நீரால் கழுவித் தமது நிழலை

Digitized by Google

மண்ணுட்புதைத்து அந்நிழலைத் தம்மடியால் அளந்து இவ்வளவு என்று அளவிடுவாரை யாவரைப்போல்வார் என்று கூறலாம், எ-று.

எவரெவர் புசித்த புசிப்புகளை யெல்லாம் அவரவர் வயிறாடிருந்து ஜீரணிக்கப்பண்ணும் அக்கினி தேவனுக்கு அஜீரணம் பிறந்ததென்று உபசரிக்கு முறைமைபோல், உயிர்களெல்லாம் உயிராயிருந்து ஊட்டி உறக்கி உபசரிக்கும் சச்சிதாநந்த சொரூபமாயுள்ள சிவத்திற்கு ஓர் குறை உள்ளது போற் கருதி, அட்டவிதார்ச்சனை சோடச உபசாரங்களைச் செய்தலான், "அக்கினிதேவற் கசீர்த்தியென்று சுக்கணாத்து வைக்கோலான் மூடி" என்றும், இன்றைக்கு இக்காழிகை அளவும் பூசைநைவேத்திய உபசாரங்களைச் செய்திலம் என்று மனத்தில் துயருறலால், "துக்கியாய்" என்றும், அசுத்தத்தையெல்லாம் சுத்தமாக்கும் நீரைக் கழுவிச் சுத்தமாக்கத் தொடங்குவான் போன்று தன்னைச் சேர்ந்த உயிர்களினது மும்மலங்களையும் துடைத்து நின்மலமாக்கும் சிவத்தை நீராட்டி நின்மலமாக்கத் தொடங்கினார் ஆகலின், "நீரைக்கழுவி" என்றும், புதைப்பதற்கு அகப்படா நிழலைப் புதைக்கத் தொடங்கினாற்போல், ஒன்றிற்கும் அகப்படாத பொருளைத் தற்போதத்தால் அகப்பட்டதுபோல் பாவித்து ஆவாகனம் பண்ணலின், "நிழலைப்புதைத்து" என்றும், தனது நிழலை அளந்து செல்லுந்தோறும் அந்நிழல் கடந்து கடந்து சேறல்போல், இங்ஙனம் இருக்கும் என்று சிவத்தைத் தியானிக்குந்தோறும் அத்தியானங்களுக்கு அப்பால் அப்பால் சேறலின், "நிழலளப்பார்" என்றுங் கூறினார். சிவத்தினது உண்மையைக் கேட்டிருந்தும் இங்ஙனம் செய்தலான் "ஆரைப்போல்வா ரென்னலாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் மலரகிதமாய் ஆநந்தவடிவா யிருந்த சிவத்திற்கு மாயாகாரியமாகிய நீராதி உபசாரங்களால்

Digitized by Google

சுத்தமும் சுகமும் உண்டாகா என்பதும், அதனைப் போத த்தால் அளவிட்டறியக் கூடாதென்பதும் அறிவித்தவாறு கா ண்க. (௩)

நீர்க்கும் வழிக்குந் துயரில்லை நீந்திநடந்
தார்க்குத் துயரென் றறிவறியா-மூர்க்கருரை
யாற்றுக்கு வாய்கட்டி யம்பரத்துக் கேணியிட்டுக்
காற்றுக்குக் கால்பிடித்தல் காண்.

(இ-ள்.) நீர்க்கும் வழிக்கும் துயர் இல்லை நீந்தி நடந்தார்க் குத் துயர் என்று அறிவு அறியா மூர்க்கர் உரை எ-து,—வெ ள்ளமாய் நிறைந்துள்ள நீருக்கும் ஒரூர்க்குச் செல்லும் வழிக் கும் துன்பம் ஏதும் இல்லை, அவ்வெள்ளத்தை நீந்திச் செல் வோர்க்கும் அவ்வழி நடந்து செல்வோர்க்கும் துன்பமென்று அறிவதுபோல, பூரணமாய் மௌனமாய் ஆநந்தமாயிருந்த சிவத்திற்கு ஓர் துன்பமும் இன்று. அதற்கு ஓர் துன்பம் உளதுபோற் கருதி, பூசை நைவேத்திய உபசாரங்களைச் செ ய்யத்தொடங்கும் எமக்கே துன்பமென்று அறிந்து இங்ஙனம் செய்யும் பூசனையாதிகளை விட்டு நீங்கி, அச்சிவத்தை அறி வித்தற்கு ஏதுவாய ஞானாசாரியனை அடைந்து, திருவருள் ஞானத்தை அறியாத கிரியாகுருவாகிய தூர்ச்சனர் பிறர்க்கு உபதேசம்போற் கூறும் உரை;

யாற்றுக்கு வாய்கட்டி அம்பரத்துக்கு ஏணி இட்டுக் காற்றுக் குக் கால் பிடித்தல் எ-து,—பிரளயமாய்ச் செல்லும் ஆற்றுக்கு வாய்கட்டி அதனை அடக்கச் சொல்லுதல்போலும், ஆகாயத் தின்கண் ஏணி காட்டி இதன்மேல் ஏறி அதனைப் பிடிக்கச் சொல்லுதல்போலும், காற்றுக்குக் கால்பிடித்தல் முதலிய உப சாரங்களைச் செய்யச் சொல்லுதல்போலும் ஆம், எ-று.

மலைக்கண் நின்று கடலளவும் ஊடுருவிக் கோத்து நின்ற ஆற்றுக்கு வாய்கட்டி அடக்கச் சொன்னதுபோல், பிருதிவிமு

Digitized by Google

தல் முப்பத்தாறு கருவிகளையும் ஊடுருவிப் போந்தக் கடலாய் நிறைந்திருந்த சிவத்தை ஓர் வடிவத்து ஆவாகனம் பண்ணச் சொல்வதனால், "ஆற்றுக்கு வாய்கட்டி" என்றும், ஏணி நிற்றற்கும் அதன்மேல் ஏறிச் செல்வோனுக்கும் இடங்கொடுத்துநின்ற ஆகாயத்தை அவ்வேணிமேல் ஏறிப்பிடிக்கச் சொன்னதுபோல், அந்திரியாக பூசைக்குத் தான் சொல்லுந் தானத்திற்கும், அத்தானத்திருந்து பூசனை செய்வோனுக்கும், உட்புறம்பாய் நிறைந்துள்ள சிவத்தை இங்ஙனம் இருப்பதென்று அறியாது, அப்பூசனையால் அறி என்று சொல்வதனால், "அம்பரத்துக் கேணியிட்டு" என்றும், அருவமாயிருந்த காற்றிற்குக் காலே இன்று, அஃது அங்ஙனம் இருப்பவும் அதற்குக் கால் பிடித்தல் முதலிய உபசாரங்களைச் செய்யச் சொல்வது போல், உருவம் அருவம் உருவருவங்களை எல்லாம் கடந்து நின்ற சிவத்திற்கு வடிவேயில்லை, இஃது இங்ஙனம் இருப்பவும் இதற்குச் சோடசாதி உபசாரங்களைச் செய்யச் சொல்வதனால், "காற்றுக்குக் கால்பிடித்தல்" என்றுங் கூறினார். உபசாரஞ் செய்தலை இருவகைப் பூசைக்கும் பொதுவாகக் கொள்க. காண் - அசை.

இத்திருவெண்பாவால் கிரியாகுரு உபதேசத்தால் ஆன்மலாபம் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (ச)

[ஆயின் ஞானிக்குக் கிரியை செய்ய வேண்டாவோ? எனின், மேற் கூறுகின்றார்.]

ஆகாயம் போவார்க்கு மாவிகையோ வாழ்கடலோ
மீகாமன் போற்றிரிய வேண்டுமோ-யோகிக்குங்
கன்மமோ பூரணன்காண் காலமுமா காயமும்போய்
என்ன தொழிலியற் றும்.

(இ-ள்.) ஆகாயம் போவார்க்கு மாவிகையோ ஆழ்கடலோ மீகாமன் போல் திரிய வேண்டுமோ எ-று,—ஆகாய கமனம்

பண்ணுவோர்க்கும் ஓர் பற்றுக்கோடா? அவ்வாகாயம் ஆழ்கடலோ? இவ்வாழ்கடலில் செல்லும் மீகாமனைப்போல் பற்றுக்கோடுபெற்றி ஓர் துறை சார்தற்பொருட்டுத் திசைநாடி இங்ஙனம் சுழல அவர்க்கு வேண்டுமோ; (அதுபோல)

பூரணன் யோகிக்கும் கன்மமோ காலமும் ஆகாயமும் போய் என்ன தொழிலை இயற்றும் எ-து,—சிவயோகி ஆநந்த பூரணன் ஆகலின், தேகாந்தனு யிருந்துள்ள கிரியையாளனைப்போல், அவனுக்கும் கிரியை செய்ய வேண்டுமோ? அஃதன்றி, காலமும் ஆகாயமும் தாம் இருந்தபடி இருப்ப, தம்மிடத்தில் பிறபொருள்கள் தொழிற்படுவன அன்றி, தாம் சென்று யாது தொழிலைச் செய்யும். அதுபோல், பூரணனாகிய அச்சிவயோகி சந்நிதானத்தில் கருவிகள் தொழிற்படுவன அன்றி, தான் ஒரு கருவிகளோடும் கூடித் தொழில் செய்யான், என்றவாறு.

ஆகாய கமனம் பண்ணுவோன் தான் நினைத்த தானத்தில் வாயுவினால் சென்றிருத்தல்போல, சிவயோகி தான் கருதிய வீட்டை அருளால் அடைந்திருத்தலின், "ஆகாயம் போவார்க்கு மாவிகையோ" என்றும், ஆழ்கடலிற் செல்லும் மீகாமனுக்குக் கப்பலாகிய பற்றுக்கோடு பற்றி ஓர் துறைக்கண் சார்தற்பொருட்டுத் திசை நாடிச் செல்லவேண்டும். அதுபோல, கிரியாவானுக் கோர் வடிவைச் சிவமாய்ப் பாவித்து ஓர்பதவியை அடைதற் பொருட்டு அதற்கு விதிமார்க்கமாய் அருச்சனை யாதிகளைச் செய்ய வேண்டுவதுபோல், அவர்க்குச் செய்யவேண்டுவது இன்றாகலின், "மீகாமன் போற்றிரிய வேண்டுமோ" என்றுங் கூறினார். சிவயோகி தான் அறிவாயும் ஆநந்தம் சிவமாயும்கண்டு, அறிவாகியதான் ஆநந்தமாகிய சிவத்தில் கலந்திருப்பன். கிரியாவான் தான் தேகமாயும் சிவம் சிலையாதிகளாற் செய்யும் ஓர் வடிவாயும் கண்டு, அதனைத் திரிகரணங்களால் வழிப்பட்டு இனிமேல் ஓர்பதவியை அடையக்கரு

Digitized by Google

தி இருப்பன். ஆகலின், இவர் இருவருக்கும் இங்ஙனம் உவமைகூறினர். (௫)

நெருப்பில் விறகுதியா நெய்யிற்பா றோன்று
அருக்க னிருளை யடர்த்தாற்போல்-மருட்கெடுத்த
ஞானத்தின் பேர்கிரியை நாசமெனின் ஞானிகளும்
ஊனத் தொழிலுழைப்பா ரோ.

(இ-ள்.) நெருப்பில் விறகு உதியா நெய்யில் பால் தோன்று அருக்கன் இருளை அடர்த்தால் போல் மருள்கொடுத்த ஞானத்தின் பேர் கிரியை நாசம் எனின் எ-து,—நெருப்பின்கண் விறகு தோன்றாது அதுபோலும், நெய்யில் பால் தோன்றாது அதுபோலும், ஆதித்தன் பூதவிருளை அழித்து எழுந்தாற்போல் மும்மலமாகிய இருளை அழித்து எழுந்த ஞானம் அவற்றினது காரியமாகிய கிரியையையும் தோன்றாது அழிக்கும் ஆகலின், இந்த ஞானத்தின் பேர் கிரியாநாசம் என்று வேதாகமங்கள் கூறும் எனின்;

ஞானிகளும் ஊனத்தொழில் உழைப்பாரோ எ-து,—இந்த ஞானத்தைப் பெற்று இதுவே வடிவாயிருந்துள்ள மெஞ்ஞானிகளும் குற்றம் பொருந்திய கிரியைத்தொழிலைச் செய்வாரோ (செய்யார்), எ-று.

விறகை அழித்து எழுந்த நெருப்பில் விறகும், பாலை அழித்து எழுந்த நெய்யில் பாலும் தோன்று; அதுபோல கிரியையை அழித்து எழுந்த ஞானத்தில் கிரியை தோன்றாது; ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர். கிரியை பிறவித்துன்பத்துக்கு ஏது ஆகலானும், அதனல் ஆன்மலாபமாகிய ஆநந்தம் இன்மையானும், "ஊனத்தொழில்" என்றும், "உழைப்பாரோ" என்றுங் கூறினர்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் ஞானிக்குக் கிரியை செய்ய வேண்டுவது இன்று என்று அறிவித்தவாறுகாண்க. ()

Digitized by Google

கிரியையான் ஞானங் கிடைத்தாலுங் கேடு
கருவால் வருவதுபோற் காணும்-ஒருகோடி
சூரியனைக் கூரிருளா லேசுருட்ட னீரகில
காரணனைத் தீண்டநினைக் கை.

(இ-ள்.) கிரியையால் ஞானம் கிடைத்தாலும் கருவால் வருவதுபோல் கேடு காணும் எ-து,—கிரியைத் தொழிலால் ஞானங்கிடைத்தது ஆயினும், அந்த ஞானத்திற்குக் கெர்ப்பத்தின்கண் உற்பத்தியாய் வரும் பொருள்கள் போல் கேடுண்டாம், (அஃதன்றி),

நீர் அகிலகாரணனைத் தீண்ட நினைக்கை ஒருகோடி சூரியனைக் கூர் இருளாலே சுருட்டல் எ-து,— சடசித்துக்களாயுள்ள பிரபஞ்சங்களை யெல்லாம் கடந்து நின்றும் அவற்றை நடத்தும் காரணனாகி யிருந்த சிவனை நீர் உமது கிரியையால் தொடர்ந்து பற்றக் கருதுவது ஒருகோடி சூரியனை மிகுந்த இருளினால் சுருட்டிப் பிடித்தல் போலும், எ-று.

சரியை கிரியா யோகங்கள் ஞானசாரியனை அடைதற்குப் பக்குவம் ஆக்குவன அன்றி, ஞானத்தைக்கொடா ; ஆயினும், முன்விட்ட குறையால் கிரியை அநுட்டிக்குங் காலை ஓர்கால் ஞானம் தோன்றிற்றாயினும், அந்த ஞானம் ஞானசாரியரால் பெறாமையானும் தான் செய்யும் கிரியை மேலீட்டானும் நிலைபெறாது மறையும். ஆகலின், "கிரியையான் ஞானங்கிடைத்தாலும்" என்றும், "கருவால் வருவதுபோற்கேடு" என்றும் கூறினார். ஞானத்தால் சிவத்தைப் பெறவேண்டும் என்பது அறியாது, மாயாகாரியமாகிய கிரியையால் அதனைப் பெறத்தொடங்கலின், "ஒருகோடி சூரியனைக் கூரிருளாலே சுருட்டல்" என்று உவமை கூறினார். கிரியை ஏதுவால் ஞானம் வந்தாயினும் நண்டு இப்பி முதலிய தமது கருவால் நாசமாவனபோல் அந்த ஞானமேலீட்டால் கிரியை கெடும் என்பதும் ஆம்.

Digitized by Google

இத் திருவெண்பாவால் கிரியை அநுட்டிக்குங்காலத் தெய்வகதியாய் ஞானம் தோன்றிற்று. ஆயினும், அக்கிரியை மேலீட்டால் அந்த ஞானம் நிலைபெற்று நில்லாது மறையும் என்று அறிவித்தவாறு காண்க. (எ)

சுகாதீதம் வேண்டிற் றொழில்செய்வோ மென்றால்
நகாரோ துயில்வார் நடந்தோ-விகாரமெனச்
சாத்திரமும் பூசைச் சமாதிகளுஞ் சார்போதக்
கோத்திரங்காண் மாயைக் குழாம்.

(இ-ள்.) சுகாதீதம் வேண்டின் தொழில்செய்வோம் என்றால் நகாரோ நடந்தோ துயில்வார் எ-து,—ஆனந்தாதீதமாகிய வீட்டைய விரும்பின், அதனை அறிவிக்கும் ஞானசாரியரை அடைந்து அருள்ஞானம்பெற்று, இவ்வருள் ஞானத்தால் அவ்வீட்டையாது விடுத்து, கிரியைத்தொழிலான் அவ்வீட்டையலாம் என்று கருதி அக்கிரியைகளைச் செய்வோம் எனின் மெய்ஞ்ஞானிகள் சிரியாரோ ? அஃதென்னெனின் நித்திரை பண்ண வேண்டினோர் ஓரிடத்துப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணுவது அன்றி, ஓரூர்வழி நடந்து சென்றோ நித்திரை பண்ணுவார் ; (அஃதன்றி),

விகாரம் எனச் சாத்திரமும் பூசை சமாதிகளும் சார்போதக் கோத்திரம் மாயைக் குழாம் எ-து,—ஞானிகளோடு மாறுபட்டதுபோன்று நீர் ஓதும் சாத்திரமும், அந்திரியாக பூசையில் ஓர்வடிவைத் தியானித்து நீர்சமாதி கூடுதலும், உமது சார்போதத்தின் கூட்டமும், மாயைக் கூட்டமும் அவை, என்றவாறு.

போத ஒழிவில் நின்ற சுகாதீதத்தை விரும்பினோர் கருவிகள் ஒழிந்தபோதும், அசைவறுதபோது, அவைகளோடுங் கூடித் தொழில்செய்தால், அப்போதம் நெய்சொரிதழல்போல் மேன்மேல் வளர்தலின், "சுகாதீதம்வேண்டிற் றொழில்செய்

வோமென்றால்" என்றும், இத்தொழிலால் அச்சுகாதீதம் பெறுதல் அரிதென்பதும் ஞானிகளறிவார் ஆகலின், "நகாரோ" என்றுங் கூறினார். தேகமசைந்து செல்லும்போது நித்திரை வரினும், அவ் அசைவு அந்நித்திரையை வரவொட்டாது தடுத்தல்போல, கருவிகள் அசைந்து தொழில் செய்யும்போது தெய்வகதியால் ஆனந்த நித்திரைவரினும், இத்தொழில் அந்நித்திரையை வரவொட்டாது தடுக்கும் ஆகலினும், தேகம் அசைவற ஓரிடத்துக் கிடந்தபோது நித்திரை நன்றாய் வருவதுபோல் கருவிகள் தொழில் செய்யாது அடங்கியபோது ஆனந்த நித்திரை நன்றாய் வருமாகலினும், "துயில்வார் நடந்தோ" என்றார். போதம் ஒன்றாயினும் அடுத்த கருவிகள்தோறும் அதனதன் மயமாய்ச் சென்றிருத்தலின், "சார்போதக் கோத்திரம்" என்று பன்மையாகக் கூறினார். "மாயைக்குழாம்" என்றது கருவிகளை, போதமும் கருவிகளும் கூடிச் செய்தலான் இரண்டையுங் கூட்டிக் கூறினார். பாசஞானம் பசுஞானம் என்றும் ஆம்.

இத்திருவெண்பாவால் கருவிகளையும் போதத்தையும் கடந்து நின்ற சுகாதீதமுத்தியை அவற்றாற் செய்யும் கிரியைகளால் அடையக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (அ)

தொழிலிறுதி தானே சுகவுதய மென்றால்
தொழிலுதயந் துக்கமெனச் சொல்லோம்-தொழில்
செயினும்,— வந்திப்போ கம்போல வுண்டுடுத்தன்
மாத்திரமாய்ச்,—சிந்திப்பா ரைப்பேணிச் செய்.

(இ-ள்.) தொழில் இறுதி தானே சுகஉதயம் என்றால் தொழில் உதயம் துக்கம் எனச் சொல்லோம் எ-து,—இம்மையைக்குறித்துச் செய்யும் உழவாதி அறுவகைத் தொழில்களும், மறுமையைக் குறித்துச் செய்யும் சரியாதி தொழில்களும், வீட்டைக்குறித்துச் செய்யுங் கருவிகளை நியதிகளைதலாகிய

Digitized by Google

தொழில்களும், அதற்குமேல் ஞாதுரு ஞான ஞேயமாய் நிற்கும் போத அசைவுகளும் அற்ற இடந்தானே சிவாநந்தோதயம் என்று வேதாகமங்கள் கூறும் எனின், அணுவளவேனுந் தொழில் உதயமான இடத்துத் துன்பம் உண்டாம் என்று யாம் கூறுகிலோம், ஆண்டுத் துன்பம் உண்டென்பது தொழிலிறுதி தானே சுகவுதயம் என்ற மொழிதானே விளக்கலின்;

(ஆயின் நீரிங்ஙனங் கூறிய ஆற்ருன் தொழில் சிறிதேனும் செய்யவேண்டாவோ ? எனின்,)

தொழில் செயினும் வந்திப் போகம்போல உண்டு உடுத்தல் மாத்திரம் ஆய்ச் சிந்திப்பாரைப் பேணிச் செய் எ-து,— இன்றி அமையாத சிற்சில தொழில்களை நீ செய்யினும் இனிமேலைக்கு வேண்டும் என்று ஒன்றையும் கருதாது, உண்டு உடுக்கும் வந்திப்போகம்போல் இம்மைமறுமைப் போகங்களில் ஒன்றையும் சிந்தியாது, காடி கூழேனும் கிடைத்ததை உண்டலும், கரித்துணி கந்தையாதேனும் கிடைத்ததை உடுத்தலும் ஆகிய இம்மாத்திரமே சிந்திக்கும் பெரியோரைப் பார்த்து அவரைப்போல நீயும் செய்தி, எ-று.

ஓர் தொழிலும் செய்யாது நிழற்கண் இருப்பது சுகம் என்ருல் எழுந்து வெய்யிலிற்சென்று தொழில் செய்தல் துன்பம் என்பது சொல்லவேண்டுவது இன்ருகலின், "தொழிலுதயந் துக்கமெனச் சொல்லோம்" என்ருர். வந்தி சுகத்தைச் சுதர் இன்மையால் மேலைக்கு ஒன்றையும் குறியாததுபோல், ஞானிகட்கு இகபரங்க ளெல்லாம் பொய்யாகலின், இனிவரும் ஒன்றினையும் குறியார் ஆகலினும் அவள் உண்டு உடுத்தல் மாத்திரமா யிருத்தல் போல், உண்டு உடுத்தல் மாத்திரமா யிருத்தலினும் இங்ஙனம் உவமை கூறினர். "சிந்திப்பாரைப் பேணிச்செய்" என்பது, நீ தொழில் செய்தி ஆயினும் ஞானிகள் நடையைப் பார்த்து அவர் செய்யும் தொழில் மாத்திரமே அன்றி அதிகஞ் செய்யற்க என்பதெனக்கொள்க.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஞானக்கிரியைமாத்திரம் மேலைப்பயன் குறியாது செய்க என்று அறிவித்தவாறு காண்க. (கூ)

சும்மா விருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை
விம்மா கதறுவதும் வேலைகளும்-தம்மறிவால்
நீட்டிப் பிடித்திருக்கு நிட்டைகளு ஞானிகண்முன்
காட்டும் பரியா சகம்.

(இ-ள்.) சும்மா இருக்க வைத்த சூத்திரம் ஆம் சாத்திரத்தை விம்மாக் கதறுவதும் வேலைகளும் தம் அறிவால் நீட்டிப் பிடித்து இருக்கும் நிட்டைகளும் எ-து,—தற்போதத்தை ஒழித்து ஆநந்தமௌனமாயிருக்க ஓதிவைத்த உபாயமாகிய சாத்திரங்களை விம்மி அழுது ஓதலும், நீராடல் ஆதி கிரியைகளைச் செய்தலும், தமது போதத்தால் ஓர் வடிவைத் தியானித்து உடலை நீட்டிப் பிடித்து ஆசனங் கட்டியிருக்கும் நிட்டைகளும் ஆகிய இவையெல்லாம்;

ஞானிகள்முன் காட்டும் பரியாசகம் எ-து,—இவைகள் ஒன்றும் இன்றி மௌனாநந்தமாயிருக்கும் மெய்ஞ்ஞானிகள் முன்னர்க் காட்டப்பட்ட பரியாசகமாம், எ-று.

வேதாகமவழிகூறும் ஞானசாத்திரங்க ளெல்லாம் தற்போதத்தை ஒழித்துச் சிவமாயிருத்தற்கு உபாயங் கூறும் ஆகலின், "சும்மாவிருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை" என்றும், ஞானசாத்திரத்தின் அருத்தங்களை நாடிக் கலுழ்தலான், "விம்மா" என்றும், அவ்வருத்தப்படி நில்லாமையான், கதறுவது என்றும் கிரியைகள் யாவும் அறிவன்று ஆகலினும், உலகர் வேலையோடு இதுவும் ஓர் வேலை ஆகலினும், "வேலைகள்" என்று தற்போதத்தால் கூடும் நிட்டை அன்மையால் "நீட்டிப் பிடித்திருக்கு நிட்டை" என்றும், இவை எல்லாம் ஞானிகட்குப் பரியாசகமா யிருத்தலின், "பரியாசகம்" என்றுங் கூறி

Digitized by Google

ஞர். "தம்மறிவா னீட்டிப் பிடித்திருக்கும்" என்றமையான் அருளறிவால் நிட்டைகூடுதல் நிட்டை என்பதாயிற்று.

இத்திருவெண்பாவால் போதம் இறந்து நிற்பதே நிட்டை என்றும், போதத்தோடுங் கூடிச் செய்வது நிட்டை அன்றென்றும் அறிவித்தவாறு காண்க. (௬௦)

குடையுஞ் செருப்புங் கொடுநடப்ப தல்லால்
படியும் விசும்பும் பரப்பி - இடையாடும்
மாத்திரம்போ லேசமய வாதமனம் போதாத
சாத்திரங்கற் றூர்வீடுற் றூர்.

(இ-ள்.) குடையும் செருப்பும் கொடு நடப்பது அல்லால் படியும் விசும்பும் பரப்பி இடை ஆடும் மாத்திரம் போலே எ-து,—ஓர் ஊருக்குச் செல்லவேண்டினோன் உடம்பில் மழை வெயிலாதிகள் படாது கையில் குடையும் பிடித்துக்கொண்டு, காலில் கல் முள் மண் தாக்காது செருப்பும் தொட்டுக்கொண்டு நடப்பதே அன்றி ஆகாயமெங்கும் குடை பரப்பி பூமியெங்கும் தோல்பரப்பி அவற்றிற்கு இடையேசெல்லு மாத்திரம்போலே;

சமயவாதம் மனம் போதாத சாத்திரம் கற்று வீடு உற்றூர் ஆர் எ-து,—சமயிகள் நாளுவாகக் கூறும் தருக்க வாதங்களையும், அத்தருக்க வாதத்தால் அநந்த பேதமாய்த் தோற்றும் மனோவுத்திகளையும், அளவு கூறினும் அவ்வளவு போதாத சாத்திரங்களைக் கற்று வீடடைந்தார் யாவர், எ-று.

ஓர் ஊரை அடையக் கருதினோன் மேலுக்கும் காலுக்கும் துன்பம் அணுகாவகை குடையும் செருப்பும் பிடித்திட்டுக் கொண்டு சென்று அவ்வூரை அடைவதுபோல், வீட்டையக் கருதினோன் ஆசாரியர் கூறும் உபதேச மொழிகளும் அவர் கொடுக்கும் ஓர்சாத்திரமும் கொண்டு, அவற்றின் அருத்தப் படி திரிகரணங்களால் ஒன்றையும் வருந்திச் செய்யாது

Digitized by Google

ஒழித்து அவ்வீட்டை அடையாது, அளவிடப்படாத ஆகாயத்திலும் பூமியினும் குடையும்தோலும் பரப்பி நடுவிடைச்செல்லத் தொடங்குவோனைப் போலும், தருக்கவாதங்களையும் அவ்வாதத்தாலெழும் மனோவுத்திகளையும் அளவிடினும் அளவிடப்படாத சாத்திரங்களைக்கற்று நீர் வீட்டையத் தொடங்குவது என்பதும், சிலகற்பினும் அதனால் வீடு கூடாதென்பதும் இதனாற் காண்க. சாத்திரங்களை மிகவுங் கற்றோர்க்குத் தருக்குவாதமும் மனோவுத்தியும் மிகவும் விரியும் ஆகலின், சாத்திரங்கட்கு அளவு கூறுவார் வேறு கூறாது அவற்றையே அளவு கூறினார். வாதம் என்பதும் மனம் என்பதும் ஆகுபெயர்.

இத்திருவெண்பாவால் அபரஞானத்தால் வீட்டையக் கூடாது என்று அறிவித்தவாறு காண்க. (கக)

அறிவாலே பற்றி யனுபவித்து விட்ட
கிறியால் வருமோ கெடுவீர் - அறிவாய்நீர்
ஆம்போ தறிவிப்பான் றானா யவையிரண்டும்
போம்போதும் வாராப் பொருள்.

(இ-ள்.) அறிவாய் நீர் ஆம்போது அறிவிப்பான் தான் ஆய் அவை இரண்டும் போம் போதும் வாராப்பொருள் எ-து,—கருவிகள் முப்பத்தாறையும் நீங்கி அவற்றின் முடிவில் நின்ற அறிவு யாம் என்று அவ்வறிவாய் நீராகும் போது உம்மையும் தன்னையும் அறிவிப்பான் தானாகி அந்த அறியும் அறிவும் அறிவிக்கும் அறிவும் ஆகிய இவை இரண்டும் நீங்கியபோதும் வாராத சிவனாகிய மெய்ப்பொருள்;

கெடுவீர் அறிவாலே பற்றி அனுபவித்து விட்ட கிறியால் வருமோ எ-து,—கெடுவீர்காள்! தற்போத அறிவால் ஒன்றைப் பாவித்துப்பற்றி, இஃது இங்ஙனம் இருப்பது என்று

Digitized by Google

அப்போதத்தால் அநுபவித்து அறிந்து, மீட்டும் அப்பாவனை யை விடுத்த பொய்யினால் வருமோ, எ-று.

பாவனையில் தோன்றும் வடிவு மாயை, அவ்வடிவில் இதம் பிறத்தல் கருமம், அவ்வடிவை மெய்யாகக் கருதப் பண்ணுவது ஆணவம் ஆகலின், "கிறியால் வருமோ கெடுவீர்" என்றார். அருளும் ஆன்மபோதமும் நீங்கியபோது ஆன்மா சிவமயமாயி ருக்கும் ஆகலின், "அவை யிரண்டும் போம்போதும் வாராப் பொருள்" என்றார்.

இத்திருவெண்பாவால் அருளையும் போதத்தையும் கடந் துநின்ற சிவம் போதத்திற்கு அகப்படாதென்று அறிவித்த வாறு காண்க. (கஉ)

அழிப்பே யவனுக்கு மிச்சையது வானால்
இழப்பே யுனக்கிச்சை யென்னாய்-இழப்பை
அறியா ததுகா ணறியாவஞ் ஞானம்
கிறிகேளுன் போதங் கெடல்.

(இ-ள்)அழிப்பே அவனுக்கும் இச்சை அது ஆனால் இழப்பே உனக்கு இச்சை என்னாய் எ-து,—உன் போதத்தை ஒழிப்ப தே சிவனுக்கும் இச்சை, அவனது இச்சா சத்தி தொழிலும் அதுவானால் அவனது இச்சைபோல் உன்போதத்தை ஒழிப்ப தே உனக்கும் இச்சையாய்க் கருதுவாய் நீ வீடடைய விரும் பினை எனின்;

(ஆயின் நீர் இங்ஙனங் கூறிய ஆற்றால் அஞ்ஞானங் கெடு தல் வீடு அன்றென்பதும், போதங் கெடுதல் வீடு என்பதும் ஆயிற்று. இனி அஞ்ஞானமாவது யாது எனின்.)

இழப்பை அறியாதது அறியா அஞ்ஞானம் கிறி உன்போ தம் கெடல் கேள் எ-து,—அப்போத இழப்பை அறியாத கிரி யையாகிய இவை நீ செய்தலே அறியாமையாகிய அஞ்ஞானம்

Digitized by Google

என்று அறிதி ஆயின், அப்போத இழப்பைஅறிதற்கு உபாயம் எங்ஙனம் எனின், பொய்யனே! இனி உன்போதங் கெடுதற்கு உபாயம் சொல்லுதும் நீ கேட்டி, எ-று.

சிவன் பெத்த நிசையில் உடலை ஒழித்து மாயையில் வைத்து இளைப்பாற்றுதல்போல், முத்தி நிசையில் போதத்தை ஒழித்து ஆநந்தக்கடலில்வைத்து இளைப்பாற்றுவன், ஆயினும், அவன் ஒழிக்கும் இச்சைபோல் தன்னை இழக்கும் இச்சைவைத்த ஆன்மபோதத்தை ஒழிப்பன் அன்றி, அப்போதத்தை ஒழிக்கும் இச்சை இன்றிய ஆன்ம போதத்தை ஒழியான் ஆகலின், ''இழப்பேயுனக் கிச்சையென்றாய்'' என்றார்.

இத்திருவெண்பாவால் தற்போத நாசத்தை விரும்பினோர்க்கு மெய்ப்பொருள் கிடைக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (கரு)

மருந்து பிணியோடே மாண்டு புகைதீ
எரிந்த விறகோ டிறக்கில் - விரிந்த
தொழின்மனத்தின் மட்டேநீ தோயுமதென்னாடி
நிழல்புதைத்தாற் போலெதிர்போய் நில்.

(இ-ள்.) மருந்து பிணியோடே மாண்டு புகை தீ எரிந்த விறகோடு இறக்கில் எ-து,—பிணிமாண்டபோது அது நீங்கற் பொருட்டு உண்ட மருந்தும், அப்பிணியோடு மாண்டுபோம் எனில், எரிந்த விறகு இறந்தால் அவ்விறகோடும் புகையும் தீயும் இறக்கும் எனில், அவைபோல், உன்போதம் இறந்தால் அப்போதத்தோடும் கிரியை இறக்கும் என்றும் கிரியை இறந்தால் அதனோடும் கருவியும் போதமும் இறக்குமென்றும் அறியாது உன்போதத்தால் கிரியை செய்யாநின்றனை;

விரிந்த தொழில் மனத்தின் மட்டே நாடி தோயுமது என் நீ நிழல் புதைத்தால்போல் எதிர்போய் நில் எ-து,—நானாவாய் விரிந்த உனது கிரியைத்தொழில்கள் மனத்தினளவே அன்றி

Digitized by Google

வேறு இன்று ஆகலின், கருவிகள் முப்பத்தாறையும் போதத்தையுங் கடந்துநின்ற சிவத்தைக் கிரியை ஏதுவாகக்கொண்டு அப்போதத்தால் நாடி, அச்சிவத்தை அடையத்தொடங்கும் உன் கருத்து என்னை, நீ அக்கருவிகளை நியதிகளைந்து அவற்றின் முடிவில் நின்ற உன்னை அருளால் அறிந்து, பெரியநிழலில் சிறியநிழல் மறைந்தாற்போல் நீ அத்திருவருளில் மறைந்து எதிரீடெல்லாம்போய் நிற்றி, இங்ஙனம் நிற்றி எனின் போதம் ஒழித்தற்கு உபாயமும் சிவத்தைப்பெறுதற்கு உபாயமும் இதுவேயாம், எ-று.

போதம் தோன்றியதுபோது கிரியைதோன்றும். அப்போதம் சிவத்தில் இறந்தபோது அப்போதத்தோடும் கிரியை இறக்கும். ஆகலின், போதத்தைப் பிணியாகவும், கிரியையை மருந்தாகவும் வைத்துக் கூறினார். விறகு எவ்வள விருந்ததோ அவ்வளவும் புகையும் தீயும் இறவா, அவ்விற கிறந்தபோது அதனுடனே புகையும் தீயும் இறக்கும், அதுபோலக் கிரியை எவ்வளவு இருந்ததோ அவ்வளவும் கருவிகளும் போதமும் இறவா, அக்கிரியை சிறிதும் தோன்றாது இறப்பின் அதனோடும் இக்கருவிகளும் போதமும் இறக்கும் ஆகலின், "புகைதீயெரிந்த விறகோடிறக்கில்" என்றார். கிரியை இறந்தபோது கருவிகளும் போதமும் இறக்குமென்றது எங்ஙனம் எனின், கிரியை இருந்தபோது போதம் வளர்வதே அன்றி இறவாது, அக்கிரியை இறந்தால் போதத்திற்கு அசைவின்றிக் கெடும். இப்போதம் கெடவே இதனைத் தொடர்ந்து நின்ற கருவிகளும் கெடும். ஆகலின் இங்ஙனமென்று அறிதி. பெரியநிழல் சிறிய நிழலில் புறம்போகாது அடங்கின் மறையுமது போல் பூரணமாகிய சிவபோதத்தில் கிஞ்சிக்கியமாகிய ஆன்மபோதம் எதிரிட் டசையாது அடங்கின் அதில் மறையும் ஆகலின், "நிழல் புதைத்தாற்போல்" என்றார். நீங்கிநின்ற கருவிகளையும் அடைந்து நின்ற திருவருளையும் எதிரிடாது நிற்க வேண்டு மாகலின், "எதிர்போயநில்" என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் போதம் அடக்குதற் குபாயங் கூறிய வாறு காண்க. (கச)

காணு மறிவுநீ காட்டறிவு நாமவற்றைக்
காணக் கழலுங் கழற்றியிலே-நாணி
நமைத்திரும்பிப் பாராதே நான்ருனென்ருதே
அமிழ்த்துகர கம்போனிற் பாய்.

(இ-ள்.) காணும் அறிவு நீ காட்டும் அறிவு நாம் அவற்றைக் காணக் கழலும் கழற்றியிலே எ-து,—கருவிகளை இது இது என்று காணும் அறிவு நீ, அவற்றை உனதுயிர்க்கு உயிராயிருந்து உனக்குக்காட்டும் அறிவு நாம், அக் கருவிகளினது குணங்களை நீ காணக் காணஅவைகள் எல்லாம் உனக் கன்னியமாய் நீங்கும், நீக்கத்தில் அவற்றின் முடிவில் நின்ற உன்னைக் கண்டபின்னர்;

நாணி நமை திரும்பிப் பாராதே நான்தான் என்ருதே அமிழ்த்து கரகம்போல் நிற்பாய் எ-து,—அக்கருவிகளை அறிந்து நீங்கவும் என்னை உள்ளபடி அறியவும் யான் காணும் அறிவு ஆகலின், எனக்குச் சுதந்தரம் இன்மை என்று நீ நாணி எனக்குக் காட்டும் அறிவு ஒன்று உளது என்று எம்மை எதிரிட்டுப் பாராதே, அங்ஙனங் காணுமறிவும் காட்டும் அறிவுமாய் இருந்தோம் ஆயினும், கண்ணொளியும் ஆதித்தன் ஒளியும் பிறிபடாததுபோல் பிறிபடா திருப்போம் ஆகலின், அஃதன்றி இங்ஙனம் பிறிபடாதிருந்த பரிபூரணத்தை நான்தானென்று கருதாதே, கடலில்அமிழ்த்திய கரகம் சலத்தை உள்ளே கொண்டு அக்கடலில் மறைந்தாற்போல், நீயும் அப்பரிபூரணத்துக்குள்ளே அமிழ்ந்தி நீ தோன்ருது அதனுள் மறைந்து நிற்பாய் என்றவாறு.

கருவிகளினது குணங்களை எதிரிட்டு அறியாதபோது அவைகள் ஆன்மாவிற்கு அன்னியமாய் நீங்காது ஆகலின்,

Digitized by Google

"காணக்கழலும்" என்றார். கருவிகளை எல்லாம் நீங்கி ஆன்மா அருள்வடிவாயபோது அவ்வருட் பூரணம் எல்லாம் தானாய்த்தோற்றும் ஆகலின், "நான்றானென்றே" என்றார்.

இத்திருவெண்பாவால் கருவிகள் நீக்குதற்கு உபாயமும், அவற்றை நீக்கித் தன்னை அருளால் அறிந்து அருட் பூரணம் விளங்கியபோது போதம் சீவியாது அருளில் மறைந்து நிற்றற்கு உபாயமும் அறிவித்தவாறு காண்க. (கஜ)

வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட
புதுமைச் சிவாநந்தம் போதும்-பதையா
விளக்கொளியி லெண்ணெய் வியாபியா னாற்போல்
கொளக்கொடுத்தல் சத்தியமாக் கொள்.

(இ-ள்.) வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட புதுமைச் சிவாநந்தம் போதும் எ-து,—தன்புருடனைக் கூடி இன்புறுதற்கு ஏதுவாகச் செய்யும் கலியாணச் சடங்கினை அவனோடும் கூடி இன்புறுதலாகக் கருதிக்கொண்ட பேதைப் பெண்போல், சிவனாகிய புருடனை ஆன்மநாயகி கூடி இன்புறுதற்கு ஏதுவாகச் செய்யும் கிரியைத்தொழிலை அவனோடும் கூடி நீ இன்புறுதலாகக் கருதிக்கொண்ட இந்தப்புதுமையாகிய சிவாநந்தம் அமையும்; (இனிக் கிரியையைச் சிவாநந்தமாகக்கருதும் கருத்தைவிட்டு)

பதையா விளக்கு ஒளியில் எண்ணெய் வியாபி ஆனால் போல் கொளக்கொடுத்தல் சத்தியமாக் கொள் எ-து,—அசையாது நின்று விளக்கொளிக்குள் எண்ணெய் வியாபியானாற்போல், நீ சிவத்தில் வியாபியாய் அசைவற நின்று அது விழுங்கிக்கொள்ள உன்னைக் கொடுத்தல் உண்மையாயுள்ள முத்தி என்று அறிந்துக்கொள்ளுதி, எ-று.

விளக்கொளியில் எண்ணெய் வியாபித்துக்கொண்டு நிற்க, இவ் வெண்ணெயை அவ்வொளி விழுங்கித் தான்பிரகாசித்தல்

Digitized by Google

போல், அச்சிவபூரணத்தில் ஆன்மா வியாபித்து அசைவற நிற்கவே, அச்சிவபூரணம் இவ்வான்மாவை விழுங்கிக்கொண்டு தான் பிரகாசிக்கும் ஆகலின், "விளக்கொளியி லெண்ணெய் பியாபி யானாற்போற் கொளக்கொடுத்தல்" என்றார். தன்னைக்கொடுப்பது சத்தியம் எனவே தன்னாற்செய்யும் கிரியை அசத்தியம் என்பது தானே ஆயிற்று.

இத்திருவெண்பாவால் போதத்தாற் செய்யும் கிரியை முத்திக்கு ஏது அன்று என்பதும், போதத்தைச் சிவனுக்கு உணக் கொடுத்து நிற்றலே ஏது என்பதும் அறிவித்தவாறு காண்க. (கக)

கிரியைக்கழற்றி

முற்றும்.

Digitized by Google

௫-ம். அதிகாரம்.

சரியைக்கழற்றி.

நடந்துங் குளித்துமிது நல்லநா ளூனை
விடுந்தொழிலான் மெய்வருந்திவீடென்-றடங்காதார்
என்றுஞ்சுக மேயிருப்ப ரிப்போதே துக்கமிவர்க்
கென்றெதிர்போ யின்பமுதிக் கும்.

(இ-ள்.) நடந்துங் குளித்தும் இது நல்ல நாள் ஊனைவிடும் தொழிலால் மெய் வருந்தி வீடு என்று அடங்காதார் எ-து,—பூப்பிரதக்ஷிணமாய் நடந்து சென்றும், கங்கை முதலிய தீர்த்தங்க ளாடியும், இது நல்ல நாள் என்ன ஊனை விடுத்தும், இவை முதலியன செய்யும் சரியைத் தொழிலால் மெய் வருந்தி, இங்ஙனம் செய்வனவே வீடென்று துணிந்து தற்போதம் அடங்காதார்;

என்றுசுகமே இருப்பர் இப்போதே துக்கம் இவர்க்கு என்று எதிர்போய் இன்பம் உதிக்கும் எ-து,—எக்காலமும் ஓர் தொழிலையும் செய்யாது சுகமே இருப்பர், இத்தொழில்களான் இவர்க்கு இம்மைக்கண்ணே துன்பம், இத்தொழில்வாசனை மறுமைக்கண்ணும் தொடரும் ஆகலின், எக்காலம் தான் என்றும் சிவம் என்றும் எதிரிடும் போதம் ஒழிந்து ஆநந்தம் தோன்றும், எ-று.

தாம் குறித்தது வீட்டின்பமா யிருந்தும் அதனைப் பெறுதற்கு ஏது அல்லாத சரியைத்தொழிலை மிகவும் மெய் வருந்திச் செய்தலான், அவ்வின்பத்தைப் பெறுதற்கு ஏதுவாய்த் தற்போதத்தையும் எளிதில் ஒழித்து, அதனை எக்காலம் பெறுவரோ என்னும் காருணியத்தால், "என்றெதிர்போ யின்பமுதிக்கும்" என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் வீடடையத் தொடங்கினார் அறியாமையான் இத்தொழிலைச் செய்து வருந்துகின்றார், அந்தோ என்று இரங்கிக் கூறியவாறு காண்க. (க

உடலா லுழைத்தா லுடலொழியு மென்று
கெடுவீ ரிதையெங்கே கேட்டீர்-உடலே
நடையாடியபிணம்போ னான்போய்த் திரியக்
கிடையாதோ வென்றுகே ளீர்.

(இ-ள்.) உடலே நடை ஆடிய பிணம்போல் நான் போய்த் திரியக் கிடையாதோ என்று கேளீர் எ-து,—இந்த உடல்தானே நடையாடிய பிணம்போலத் தற்போதம் கெட்டு நிலத்தின்கண் உலாவ எமக்கு உண்டாகாதோ? என்று ஞானாசாரியனைக் கேளாத நீங்கள்;

கெடுவீர் உடலால் உழைத்தால் உடல் ஒழியும் என்று இதை எங்கே கேட்டீர் எ-து,—கெடுவீர்காள், உடலால் வருந்தி யாத்திரை சேறல் முதலிய இச்சரியைத் தொழிலைச் செய்தால் பிறப்பு நீங்கும் என்று இந்த உபதேசத்தை எந்தக் குருவினிடத்துக் கேட்டீர், எ-று.

ஞானாசாரியனை அடைந்து அனுக்கிரகம் பெற்ற மெய்ஞ்ஞானிகட்குக் கருவிகள் முப்பத்தாறும் தற்போதமும் கெடலான், அக்கருவிச் சேட்டையும் போதச்சேட்டையும் இன்றாம்; ஆகலின், அவரது திருமேனி உள்ளும் புறனும் வறுங்கடத்து ஆகாயம்போல் சிவமே நிறைந்திருக்கும்; அவர் நிலத்தில் சரிக்கும்போதும் அக்கடம் ஆகாயத்திற் செல்வதுபோல் தோற்றும்; ஆகலின், "நடையாடிய பிணம்போ னான் போய்த்திரிய" என்றார். கேளீர் எங்கே கேட்டீர் எனமுடிக்க. வீடடையத் தொடங்கி இங்ஙனம் செய்தலால், "கெடுவீர்" என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் அவர் கேட்ட உபதேசத்தை மறந்தவாறு காண்க. (உ)

எந்தவூர் நீரென்று லிப்போ திருந்துநாம்
வந்தவூர் தன்னை மறந்தோமேல் - அந்தவூர்க்
கின்றுநாம் போம்வழியே தென்னினுமக் கேழுலகும்
ஒன்றுபோ லொன்றுதோன் றும்.

(இ-ள்.) நாம் எந்த ஊர் நீர் என்றால் இப்போது இருந்து வந்த ஊர்தன்னை மறந்தோமேல் எ-து,—யாம் இந்த ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் சென்றபோது, அவ்வூரில் இருந்தான் ஒருவன் எந்த ஊர் நீர் என்று எம்மைக் கேட்டால், இப்போது இருந்து வந்த ஊர்தன்னை அவனுக்கு இன்ன ஊர் என்று சொல்ல மறந்தோம் எனின்;

அந்த ஊர்க்கு இன்று நாம் போம் வழி ஏது என்னின் உமக்கு ஏழுலகும் ஒன்று போல் ஒன்று தோன்றும் எ-து,—முன்னிருந்து வந்த ஊருக்கு இப்போது நாம் போதற்கு வழியாதென்று நீர் நாடின், உமக்கு ஏழுலகும் ஒன்று போல் தோன்றி அந்த ஊருக்குச் செல்லும் வழிபோல் மற்றோர் ஊருக்குச் செல்லும்வழி தோன்றும் எனின், இங்ஙனம் கேட்டோனுக்கு ஊர்ப்பெயரும் சொல்ல மறந்து அவ்வூருக்குச் செல்லும் வழியும் தெரியாது மயங்கிய இப்போதம் கொண்டோ திரிகரணங்களையும் கடந்து நின்ற பூரணசிவத்தை நீர் அடையத்தொடங்கினீர், எ-று.

அவர்க்குத் தம்மைப்போல் இவரும் தோற்றலான் அவரை இவர் தம்மோடுங் கூட்டி "மறந்தோமேல்" என்றார். ஊர்ப்பெயர் சொல்ல மறந்துபோவது தூலபுத்தியால் தெரியாது யாம் அங்ஙனம் மறப்பது இலம் என்று அவரைத் தம்மைவிடப் பிரித்து நோக்கி, உமக்கு ஏழுலகும் ஒன்றுபோல் ஒன்று தோன்றும் எனத் தூலமாகிய வழித்திகைப்பை எடுத்துக் கா

Digitized by Google

ட்டினர். நெறிக்கண் திசை தப்பியபோது முன்போல நான்கு திசையும் பிரிந்து தோன்றாது ஆகலின், "ஏழுலகு மொன்றாய்போல்" என்றார்.

இத்திருவெண்பாவால் ஞானசாரியரால் அன்றி ஆன்மாக்கள் சுதந்தரத்தால் வீடடையக் கூடாதென்று சுதந்தரகீனமறிவித்தவாறு காண்க. (ரு)

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லும்,—காட்டுவது ஞானக் களவுகாண்-தேட்டமற்றோன்,— பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாசமென்றறிந்தார்க்,— கோர்வடிவும் வார்த்தையுமுண்டோ.

(இ-ள்.) வேட்டியும் தாழ்வடமும் வெள் நீறும் வெள் பல்லும் காட்டுவது ஞானக்களவு எ-து,—காவிவேட்டியும் உருத்திராக்கத் தாழ்வடமும், மெய்ம்முழுதும் பூசும் வெண்ணீறும், அடைக்காய் தின்னாத வெண்பல்லும் இவை முதலிய சிவவேடங்களை மெய்யிற் காட்டுவது ஞானத்திருட்டு;

தேட்டம் அற்றோன் பூரணன் சிற்றறிவன் பாசம் பொய் என்று அறிந்தார்க்கு ஓர் வடிவும் வார்த்தையும் உண்டோ எ-து,—ஓர் பொருட்கண்ணும் விருப்பம் அற்றோனாகிய சிவன் பரிபூரணன், சீவன் சிற்றறிவன், பாசம் பொய் என்று அறிந்த ஞானிகட்கு ஓர்சமய வேடமும் சமய அபிமான வார்த்தையும் உளவோ? இல, எ-று.

அகத்து ஞானம் இன்றிப் புறத்து வேடத்தானும் வசனத்தானும் ஞானிபோற் காட்டினமையால் "ஞானக்களவுகாண்" என்றார். அகத்து ஞானமும் புறத்துவேடமும் உள எனின், ஞானக்களவு அன்று என்றாயிற்று. சிவம் அணுத்திரள் முதலிய பொருள்கட்கெல்லாம் உட்புறனாகிய பரிபூரண அறிவாகலின், அதற்கோர் சமயம் இல்லை. சிற்றறிவு பொய்யாகிய

Digitized by Google

பாசத்தை விட்டு நீங்கி அப்பரிபூரண அறிவோடும் கலந்தபோது, அப்பரிபூரண அறிவாய் நிற்கும் அன்றி, அது இது என்னும் பகுப்பில்லை ஆகலின், "ஓர் வடிவும் வார்த்தையுமுண்டோ" என்றார். காண் - அசை.

இத்திருவெண்பாவால் வேடத்தால் மிகவும் சிறப்புள்ளார் ஆயினும், அகத்துஞானம் இலர் எனின் சிறப்பிலர் என்பதும், வேடம் யாதும் இலராயினும், அகத்து ஞானம் உள்ளார் சிறப்புளார் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சு)

கல்வியாய்ப் புத்தகமாய்க் காவிகடுக் குட்கட்டாய்ப்
பல்லின்வெளுப் பொத்த பசுமார்க்கம்-எல்லை
கழன்ற தியானத்திற் கண்சிமிட்டு மாங்காண்
சுழன்றபெரு மாயைத் தொழில்.

(இ-ள்.) கல்வி ஆய்ப் புத்தகம் ஆய்க் காவி கடுக்குள் கட்டு ஆய்ப் பல்லின் வெளுப்பு ஒத்த பசுமார்க்கம் எ-து,—தாம் கற்ற கல்விகளைப் பேசுவதாய்ப் புத்தகம் கையிற் கொள்வதாய்க் காவிவேட்டி உடுப்பதாய்த் திருமேனிக் கடுக்கன் காதிலே இடுவதாய்க் கண்டத்தில் கெவுடம் கட்டுவதாய்ப் பேச்சிற்கும் வேடத்திற்கும் ஏற்பப் பல்வெளுப்பும் ஒத்திருந்த பசுஞான நெறியினை உடையார் ;

எல்லை கழன்ற தியானத்தில் கண் சிமிட்டும் ஆம் சுழன்ற பெருமாயைத் தொழில் எ-து,—பிருதிவி முதல் நாதம் ஈறு என்று அளவுகூறப்பட்ட கருவிகள் முப்பத்தாறையும் கழன்ற சிவத்தியானத்தை உடையவரைப்போலக் கண்மேற் செருகி ஆசனங் கட்டிக்கொண்டு இருப்பர், இவர் இங்ஙனம் இருப்பதாம் கறங்குபோல் சுழலாநின்ற பெரிய மாயையினது தொழிலாவது, எ-று.

ஞானம் இன்றி வேடங் கொண்டோர் வேடதாரிகளோடு ஒப்பு ஆகலின், "பசுமார்க்கம்" என்றார். அகத்துப் பரிபூரண

Digitized by Google

ஞானம் இன்றிக் கண்ணிமிட்டிப் பத்திந்திரியங்களையும் அப்போதடக்கி ஆசனங்கட்டி இருப்போர்க்கு முன்னர் ஞானேந்திரியங்களால் அறிந்து, கன்மேந்திரியங்களால் தொழில் செய்யு மனம் அப் பத்திந்திரியங்களும் அடங்கலின், அவற்றின் வாசனையோடு முன்னர் ஏறிய வாசனையோடும் உள்ளே சுழலும் அன்றி அடங்காது ஆகலின், "சுழன்ற பெருமாயைத் தொழில்" என்றார்.

இத்திருவெண்பாவால் ஞானநிட்டை இன்மையான் அவரது நிட்டையை மறுத்தவாறு காண்க. (ரு)

ஞானக் கிரியை நடிப்பவர்க்கு நாடோறும்
போனத் தளவே புசிப்பன்றி-ஏனும்
துறவா யவாவறுத்து மெய்யுணர்ந்த தூய
அறிவார்க் கறியாவின் பம்.

(இ-ள்.) ஞானக்கிரியை நடிப்பவர்க்கு நாள்தோறும் போனத்து அளவே புசிப்பு அன்றி எ-து.—அகத்து ஞானம் இன்றிப் புறத்து ஞானசாரமாய் நடிப்பவர்க்கு எக்காலமும் அன்னபானத்தளவு வரும் விடயானந்தாநுபவம் அன்றி;

துறவு ஆய் அவா அறுத்து மெய் உணர்ந்த தூய அறிவார்க்கு அறியா இன்பம் ஏன் ஆம் எ-து,—துறவினை உடையராகித் துறந்த அப்பொருள்கள்மேல் முன்னர் வாசனையால் எழும் அவாவினை அறுத்து மெய்ப்பொருளை உணர்ந்த நிருமல ஞானிகட்கும் தோன்றாத சொரூபாநந்தானுபவம் ஏன் உண்டாம், எ-று.

இவர் செய்யும் ஆசாரத்தைப் பிறர் கண்டு பெரியர் எனப் போனகங் கொடுத்தலின், "போனத்தளவே புசிப்பன்றி" என்றார். பேரின்பம் போதகாசத்தில் தோன்றாமல் தோன்றலான் "அறிவார்க்கறியாவின்பம்" என்றும், இவ்வின்பம் பெறுதற்கு ஏதுவாய ஞானம் இன்மையால், "ஏனும்" என்றுந்

கூறினர். துறவு—புறப்பற்று நீங்குதல். அவாவறுத்தல்—அ ப்பற்று நீங்குதல், இவ்விருவகைப் பற்றும் நீங்கவே சகலகே வலங்களும் நீங்கும். இவை நீங்கவே மெய்யுணர்வு தோன் றும். ஆகலின், "துறவாய வாவறுத்து மெய்யுணர்ந்த தூயவர் வார்" என்றார். போனகம் என்பது போனம் என்றாயிற்று.

இத்திருவெண்பாவால் ஞானம் இன்றி ஞானசாரமாத்தி ரம் செய்வோர்க்குப் பிறப்பின்பமே அன்றி வீட்டின்பம் இன் றென்று அறிவித்தவாறு காண்க. (ரு)

[இந்த இன்பம் யாவரா லறியக்கூடுமென்று இரங்கிக் கேட் ட மாணக்கனை நோக்கி மேற்கூறுகின்றார்.]

இன்பே யறிவுக் கிடம்புள்ளி னைந்ததுபோல்,—
துன்பே யணுப்பொருப்பாய்த் துக்கிக்கும்- நன்குண
த்தால்,—பேரின்புக் கிச்சை பிறந்ததினிக் கேளுனக்
குப்,—பேரின்பந் தேடிப் பெறாய்.

(இ-ள்.) இன்பே அறிவுக்கு இடம் எ-து,—இந்தப்பேரின் பம் பரிபூரணம் ஆகலின், இவ்வின்பமே ஆன்மா இருத்தற்கு இடம்;

(ஆனல் அவ்வின்பம் இங்ஙனம் இருக்கும் எனின், அதனை யான் இப்போது அடையவேண்டும், இனிப் பிறவித்துன்பஞ் சிறிதும் படமாட்டேன் என்ற மாணக்கனை நோக்கி மேற்கூ றுகின்றார்.)

புள் இனைந்ததுபோல் துன்பே அணுப்பொருப்பு ஆய்த் து க்கிக்கும் நன்குணத்தால் பேரின்புக்கு இச்சை பிறந்தது இ னிக்கேள் உனக்குப் பேரின்பம் தேடிப் பெறாய் எ-து,—உயி ர்ப்பு ஒலி சிறிது தோன்றினும் அதனைப் பேரொலியாகக் கண்டு அசுணப்புள் வருந்தியதுபோல், நீ இததேகாதி பிரப ஞ்சங்களான் வரும் துன்பம் அணுவளவு ஆயினும், அதனைப் பொருப்பளவாகக் கண்டு துன்புறும் நற்குணத்தால் உனக்கு

Digitized by Google

இப்போது பேரின்பத்தின்மேல் இச்சை செனித்தது ; ஆகலின், இனி அதனை அடைதற்கு உபாயம் சொல்லுதும் கேட்டி, அப்பேரின்பத்தை யாம் கூறிய உபாயப்படி தேடிப் பெறுதி, என்றவாறு.

விடையசுகத்தைத் துன்பம் எனக் கூறினர். இதனை அங்ஙனம் கண்டோர்க்குச் சொரூப சுகத்தின்மேல் இச்சை செனிக்கும் ஆகலின், "துன்பே யணுப்பொருப்பாய்த் துக்கிக்கு நன்குணத்தாற் பேரின்புக் கிச்சை பிறந்தது" என்றார்.

இத்திருவெண்பாவால் பேரின்பத்தை விரும்பிக் கேட்ட மாணுக்கனுக்கு விடை கூறியவாறு காண்க. (எ)

பேரின்ப முன்னைப் பிரியாதுன் னுண்மையம்°
தோரின்ப மாய்விடயத் தூடுதிப்பும்-பேரின்
பழிவிலே தோன்று மறிவு மயலாம்
மொழியு மிரண்டின்ப மும்.

(இ-ள்.) பேரின்பம் உன்னைப் பிரியாது அது உன் உண்மை எ-து,—அந்தப் பேரின்பம் உன்னைவிட்டு எக்காலமும் ஓர் அணுவளவேனும் பிரியாதிருப்பது, அவ்வின்பமே உனக்கு உரித்தாய் மெய்ம்மையாய் உளளது;

(அங்ஙனம் என்னைவிட்டு நீங்காது எனக்கு உரித்தாய் மெய்ம்மையாய் இருப்பது எனக்குத் தோன்றாது இருப்பான் என்னெனின்.)

ஓர் இன்பம் ஆய் விடயத்தூடு உதிப்பும் பேரின்பு அழிவிலே தோன்றும் எ-து,—உன்னால் அறியப்பட்டு ஓரின்பமாய் வனிதையர் விடயத்தூடு தோன்றுவதும், யாம் கூறிய அந்தப் பேரின்பமும் எதிரீடு அற்ற இடத்துத் தோன்றும்;

அறிவும் அயல் ஆம் இரண்டு இன்பமும் ஒழியும் எ-து,—ஆணறிவும் பெண்ணறிவும் எதிரிட்டபோது அவ்வறிவுகளும்

Digitized by Google

அயலாம் ஆண்குறியும், பெண்குறியும் எதிரிட்டபோது இக் குறிகளும் அயலாம் (இவைகள் அயலாகவே) இவ்விருவ கைக் கூட்டுறவுகளால் வரும் இரண்டின்பங்களும் அயலாய் ஒழியும், எ-று.

ஆண்குறியும் பெண்குறியும் கலந்து எதிரிட் டழிந்தபோ தும், ஆணறிவும் பெண்ணறிவும் கலந்து எதிரிட் டழிந்தபோ தும், அவ்வின்பமும் இவ்வின்பமும் தோன்றலான், அழிவிலே தோன்றும் என்று இருமைக்கும் பொதுவாகக் கூறினர். குறி களும் அறிவுகளும் எதிரிட்டபோது இன்பம் இன்மையால், "ஒழியுமிரண்டின்பமும்" என்றார். இருவகைக் குறிகளும் கலந்தபோது அவை இருந்தும் தோன்றாது அழிதலானும், ஆண்குறி பெண்குறிக்கு உள்ளீடா யிருத்தலானும், இன்பம் தோற்றலானும் அவற்றினது கூட்டுறவை இவற்றினது கூட்டு றவிற்கு உவமையாகக் கூறினர். அறிவு மயலா மென்ற உம்மையால் ஆண்குறி பெண்குறிகளும், அழிவிலே தோன் றும், என்றமையான் அறியாது எதிரிட்டபோது என்பதும் வருவிக்கப்பட்டன. விடயாநந்த மேலீட்டால் பரவசமாவது போல் சொரூபாநந்த மேலீட்டால் பரவசமாவதுங் கொள்க.

இத்திருவெண்பாவால் பேரின்பம் ஆன்மாவை விட்டு நீங் காது என்பதும், அதனைப் பெறுதற்கு உபாயமும் கூறியவாறு காண்க. (அ)

[விடயாநந்தம் அறிதல்போல் அவ்வாநந்தமும் அறியக் கூ டாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

விடய முகிழ்த்துநின்று விட்டவிடங் கீழ்மேல்
இடைவிடா தேநிறைந்த வின்பம்-தொடுவரோ
தோன்றி யழிவதுவே துக்கசுக முன்னுண்மை
தோன்று வடங்காச் சுகம்.

(இ-ள்.) விடயம் உதித்து நின்றுவிட்ட இடம் கீழ் இடை விடாதே நிறைந்த இன்பம்மேல் தொலைவரோ எ-து,—ஓர் விடயத்தின்கண் தோன்றி நின்று அழியப்பட்ட இன்பம் கீழாய இன்பம், வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களினும் இடையறாது பரிபூரணமாய் நிறைந்த இன்பம் மேலாய இன்பம் ஆகலின், இவ்வின்பத்தைப் பெற்றுள்ளார் தற்போதத் தால் அதனைப் பற்றுவரோ; (அஃது எங்ஙனம் எனின்,)

தோன்றி அழிவதுவே துக்கசுகம் உள் உண்மை தோன்றா அடங்காச் சுகம் எ-து.— போதத்தால் பற்றி அறிந்து அநுப விக்கும் அவ்வின்பம் தோன்றி அழிவது அங்ஙனம் தோன்றி அழிவதுவே சுகமும் துக்கமும் ஆகலினும், உளதுள்ளே மெய் ம்மையா யிருந்த இன்பம் ஓர் காலங்களினும் உற்பத்தி நாசம் இன்றாய வீட்டின்பம் ஆகலினும், எ-று.

அவ்வின்பம் ஓர் விடயத்தில் தோன்றி அழிதலால் பற்றி விடப்பட்டது. இவ்வின்பம் பூரணம் ஆகலானும், உற்பத்தி நாசம் இன்மையானும் பற்றுதல் விடுதல் இதற்கு இன்மை ஆ யிற்று. தோன்றியபோது சுகமும் மறைந்தபோது துக்கமும் வருதலின், "தோன்றியழிவதுவே துக்கசுகம்" என்றார். இச் சுகதுக்கங்களால் விழைவு வெகுளியும், இவ்விழைவு வெகுளி களால் இருவினைகளும், இவ்விருவினைகளால் பிறப்பும் உண் டாம் என்பதுங் கொள்க. சிற்றின்பம் பற்றியபோது தோன் றும், விடுத்தபோது மறையும், பேரின்பம் பற்றியபோது மறையும், விடுத்தபோது தோன்றும் என்பதுங் காண்க.

இத்திருவெண்பாவால் இவ்வின்பம்போல் அவ்வின்பம் போதத்தால் அறியக்கூடா தென்று அறிவித்தவாறு காண்க.

[ஆயின் அவ்வின்பம் இத்தலத்தில் தோன்றுவதில்லை ஆக லின், மற்றோர்தலத்தில் சென்றிருந்து தவத்தைப்பண்ணி அத னைப் பெறுகின்றேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற்கூறு கின்றார்.]

Digitized by Google

எங்குமபரிபூ ரணமென்னி னீதல்ல
தங்கங்கா மென்னும்போ தங்கிலையோ-பங்காகேள்
ஆகாயந் தீண்டிவிடு மற்ப வறிவழிவி
லேகாண்பே ரின்பமுதிக் கும்.

(இ-ள்.) எங்கும் பரிபூரணம் என்னின் ஈது அல்லது அங்கு அங்கு ஆம் என்னும்போது அங்கு இலையோ பங்கா கேள் எ-து,—அப்பேரின்பம் இருநூற் றிருபத்துநாலு புவனம் எங்கும்.உட்புறனும் நிறைந்துள்ள பரிபூரண மென்று வேதாகமங்கள் கூறும் எனின், அவ்வின்பம் பெறுதற்கு ஈது இத்தலம் அன்று, காசி முதலிய அந்தந்தத் தலங்களில் பெறலாம் என்று நீ கூறும்பொழுது நீ இருந்த அத்தலத்தில் அவ்வின்பம் இன்ருயதோ? பகுப்பறிவு நீங்காதவனே கேட்டி;

ஆகாயம் தீண்டிவிடும் அற்ப அறிவு அழிவிலே பேரின்பம் உதிக்கும் காண் எ-து,—பரையோகமாகிய ஞானகாசத்தைப் பெற்றவிடத்து அதற்குமேல் தோன்றும் அநுபவத்தை நாடித் தான் நின்ற நிலையைத் தழுவும் அற்பவறிவு அழிந்தவிடத்திலே உனக்குப் பேரின்பம் தோன்றுமென்று அறிதி, எ-று.

பரையோகநிட்டை பெற்ற காலை அதற்குமேல் தோன்றும் சிவத்தை நாடாது அவ்வருளையு மறவாது இருப்பின், சிவதரிசனம் தானே தோன்றும், அது தோன்றவே கிஞ்சிக்கிய போதம் அழியும், அஃதழியவே பேரின்பம் தோன்றும் ஆகலின், "ஆகாயந்தீண்டிவிடு மற்பவறிவழிவிலே காண் பேரின்பமுதிக்கும்" என்றார். (உதாரணம்) சித்தியார் "கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகில், பிறியாத சிவன்றானே பிரிந்துதோன்றும் பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த் தோன்றி, நெறியாலே யிவையெல்லா மல்லவாகி நின்றென்றுந் தோன்றிடுவ னிராதாரனாயே" என்றும், திருவாசகம். "இரைதேர் கொக்கொத்திரவுபக லேசற்றிருந்தே வேசற்றேன், கரைசோடியார் களிசிறப்பக் காட்சிகொடுத்துன் னடியேன்பால், பிரை

சேர்பாலி னெய்போலப் பேசாதிருந்தா லேசாரோ'' என்றும் வருவனவற்றாற் காண்க.

இத்திருவெண்பாவால் பூரண இன்பம் உறுதற்குத் தலம் இடம் அன்றென்றும் போதநாசம் இடமென்றும் அறிவித்த வாறு காண்க. (கo)

[அப்பேரின்பம் அடைதற்கு இச்சிற்றின்பமாகிய விடயம் தடை ஆகலின், இதனை ஒழித்து அதனை அடைவேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற்கூறுகின்றார்.]

உடம்புள்ள மட்டும் விடய மொடுங்கா
ஒடுங்குகிலோ கேவலமா மும்பர்-இடம்புள்
பறந்தாற் கலங்குமோ பாசத்தி னுண்மை
அறிந்தாற் சுடாத்தடைபோ லாம்.

(இ-ள்.) உடம்பு உள்ளமட்டும் விடயம் ஒடுங்கா ஒடுங்குகிலோ கேவலம் ஆம் எ-து,— விடயங்கள் அநுபவித்தற்கு ஏதுவாய உடம்பிருக்கும் அளவும் அவ்விடயங்கள் ஒழியா, உடம்போடு ஒற்றுமையாயிருந்த ஞானேந்திரியங்கள் ஐந்திற்கும் எதிரீடாய் விடயங்கள் தோன்றுந்தோறும் அவற்றை ஒழிப்பேன் எனின், அங்ஙனம் ஒழிக்கில் கருவிகள் எல்லாம் ஒழியும், அவை ஒழியிலோ கேவலம் வந்து அடுக்கும்; (ஆயின் அவற்றை ஒழிக்கும் ஆறு எவ்வாறு எனின்,)

உம்பர் இடம் புள் பறந்தால் கலங்குமோ பாசத்தின் உண்மை அறிந்தால் சுடர்த்தடைபோல் ஆம் எ-து,— ஆகாயத்தினிடமாய்ப் புள் பறந்தால் அவ்வாகாயம் அசையாது, அதுபோல, நீ இம்மாயா வடிவத்தை யான் அலன் என்று நீங்கி அருள்வடிவாய் இருத்தி எனின், அப்போது விடயங்கள் வந்தடப்பினும் நீ அசையாதிருப்பை ஆயின், மாயாவடிவமாயிருந்த போது வருத்திய விடயம் திருவருள் வடிவாயிருந்தால் வருத்தாது இருப்பது எங்ஙனம் எனின், அசுத்தம் துக்கம் அனித்

தியம் அன்னியம் என்று பாசத்தின் உண்மையைத் திருவரு ளால் அறிந்தனை ஆயின், அக்கினிச்சூட்டைத் தடுக்கும் மந்தி ரம்போல், அவ்வறிவு கருவிச்சேட்டையைக் கெடுக்கும் ஆக லின், அக்கினி யிருந்தும் சுடாததுபோல் கருவிக ளிருந்தும் முன்போல வாதியா வாகும், எ-று.

தான் கருவிகட்கு அன்னியமாய்ப் பிரிந்து நின்று அருளா ல் அடக்காது அக்கருவிகளோடுங் கூடிநின்று போதத்தால் அடக்கினமையால் "கேவலமாம்" என்றார். அருள் வடிவா யிருந்தபோது கருவிகள் அசைவதே அன்றித் தானசையான் ஆகலின், "உம்பரிடம் புட்பறந்தாற் கலங்குமோ" என்றார்.

இத்திருவெண்பாவால் கருவிகளை உள்ளபடி அருளால் அறிந்து நீங்கி, அவ்வருளில் மறைந்து நின்றால் மீட்டும் அவை கள் வந்து வாதியா என்று அறிவித்தவாறு காண்க. (௧௧)

[விடயங்களை இந்திரியங்களால் அறிந்து அநுபவித்தற்கு ஏதுவாய இவ்வுடலை ஒழித்து, இவ்வின்பத்தைப் பெறுவேன் என்னின் மேற் கூறுகின்றார்.]

உடலிருந்தென் போயென் னுருவருவ மூன்றும்
அடைவர் தொழிலு மநாதி - குடமுடைத்து
மண்ணென்ன வேண்டுமோ மாயா வயிந்தவத்தும்
உண்ணின்று பார்த்திரிப்போ தும்.

(இ-ள்.) உடல் இருந்து என் போய் என் உரு அருவம் மூ ன்றும் அடைவர் தொழிலும் அநாதி எ-து,—இவ்வுடல் இரு ந்ததனால் அவ்வின்பம் வருதற்குத் தடை என்னை? இது போ யதனால் அவ்வின்பம் வருமாறு என்னை? அவ்வின்பம் வருவத ற்குத் தடை இவ்வுடலால் யாதும் இன்று, உருவமும் அருவ மும் உருவருவமும் ஆகிய இம்மூன்று வடிவத்தினையும் உடை ய சர்வஞ்ஞர் ஆதியிலே ஆணவமலத்திற் கிடந்த உன்னைக் காருணியத்தால் எடுத்து, மாயையில் தநுகரண புவன போக

Digitized by Google

ங்களைக் கொடுத்து, இருவினை ஒப்பு மலபரிபாகம் வருவித்து, வீடடைவிக்கும் பொருட்டுச் செய்யும் பஞ்ச கிருத்தியங்களும் அநாதி (ஆகலின் நீ இக்காயத்தை ஒழிப்பலெனக் கருதற்க;)

குடம் உடைத்து மண் என்ன வேண்டுமோ மாயா வயிந்த வத்தும் உள் நின்று பார்த்திரு இப்போதும் எ-து,—ஒருவருக்குக் கடத்தை மண்ணென்று அறிவிப்பதே அன்றி, அக்கடத்தை உடைத்து மண்ணென்று அறிவிக்க வேண்டுமோ அது போல், உனக்கு இவ்வுடம்பை மலமென்று அறிவிப்பதே அன்றி, இதனை அழித்து மலமென்று அறிவிக்க வேண்டுமோ? ஆகலின், இதனுள் இருந்தே இவ்வுடம்பையும் மற்றும் உள்ளனவாய கருவிகளையும் மாயா மலமென்றும் உனக் கன்னியமென்றும் கண்டு நீங்கி, வயிந்தவ மாயையாகிய சுத்த தத்துவத்தின் முடிவில் நின்று, உன்னை அருளால் கண்டு அவ்வருளில் அசைவற இருத்தி, இப்போதும் அவ்வாநந்தம் உதயமாம்; (தேகமுடிந்த அப்போதும் அவ்வாநந்த மயமே அவை), என்றவாறு.

பெத்த தசையில் பஞ்சகிருத்தியத்தால் பஞ்சாவத்தைகளையும் உண்டாக்கி நடத்தாநின்ற சர்வஞ்ஞர் இப்போது முத்திதசையினும் உனக்குப் பஞ்சாவத்தைகளையும் நீக்கித் தமது திருவடி யாநந்தத்தைக் கொடுப்பர். நீ உடலை ஒழிக்கவேண்டுவ தேதுக்கு என்று அறிவித்தற்கு ''அடைவர் தொழிலுமனுதி'' என்றார். இப்போதும் என்றமையான் அப்போதும் என்பது வருவிக்கப்பட்டது.

இத்திருவெண்பாவால் அவ்வின்பம் பெறுதற்கு உடலொழித்தல் ஏதுவன்று, இவ்வுடலாதிகளை எல்லாம் தனக்கு அன்னியமென்று அருளாற்கண்டு நீங்கி, அவ்வருளில் நிற்றல் ஏதுவென்று அறிவித்தவாறு காண்க. (கஉ)

[வேதாந்த முத்தியோ சித்தாந்த முத்தியோ உண்மை என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.]

Digitized by Google

கயிற்றரவுங் கட்டையினிற் கள்ளனும்போன் மாயா
மயக்கமற்ற வேதாந்த வாழ்வு-முயற்சிகெட்ட
ஆனந்தா தீதத்தே யாணவரா மாகமமும்
தானந்தி னார்க்குச் சமன்.

(இ-ள்.) கயிறு அரவும் கட்டையினில் கள்ளனும் போல் மாயா மயக்கம் அற்ற வேதாந்த வாழ்வும் எ-து,—உள்ள கயிற்றினிடத்து இல்லாத பாம்பு கற்பிதமாகத் தோற்றுதல் போலும், உள்ள கட்டையினிடத்து இல்லாத கள்வன் கற்பிதமாகத் தோற்றுதல் போலும், உள்ள பிரமத்தினிடத்து இல்லாத மாயை கற்பிதமாகத் தோன்றுகிற தென்று அறிந்து, இம் மாயாமயக்கம் சிறிதும் தோன்றாது இறந்த இடம் வீடென்று கூறும் வேதாந்தச் செல்வமும்;

முயற்சி கெட்ட ஆனந்தாதீதத்தே ஆணவர் ஆம் ஆகமமும் தான் நந்தினார்க்குச் சமன் எ-து,—தற்போதமுயற்சி சிறிதும் தோன்றாது இறந்த ஆநந்தாதீதத்தில் பெத்த தசையில் ஆணவராகி இருப்பாரைப்போலும் இருப்பதே வீடென்று கூறும் ஆகமச் செல்வமும், தானென்று எதிரிட்டெழும் புல்லறிவு கெட்டார்க்குச் சமனும், எ-று.

அவித்தியாகதமாய் இருந்த சீவனது புன்மை அறிவாய் இருந்து நான் என்று எதிரிடும் அவ்வறிவு கெட்டபோது அச் சீவசாட்சியாய் இருந்த பிரமம் தான் ஆகலானும், ஆணவமயமாய் இருந்த ஆன்மாவினது புன்மை அறிவாய் இருந்து நான் என்று எதிரிடும் அப்போதம் கெட்டபோது அவ்வான்மா தனக்கு முதலாகிய சிவமயம் ஆதலானும், இங்ஙனம் ஆயபோது இருவர்க்கும் ஆநந்தாநுபவம் இருத்தலானும், "தானந்தினார்க்குச்சமன்" என்றார். தானந்தாத அபரஞானிகட்குச் சமன் அன்றென்பது தானே ஆயிற்று.

Digitized by Google

இத்திருவெண்பாவால் வேதாந்த சித்தாந்த முத்தி இரண்டும் தற்போதம் ஒழிந்தோர்க்குச் சமனென்று அறிவித்தவாறு காண்க. (கங.)

என்னாணை யென்னாணை யென்னாணை யேகமிரண்
டென்னாமற் சும்மா விருவென்று-சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவினோதன்.

(இ-ள்.) திருஞான சம்பந்தன் சீகாழி நாடன் அருளாளன் ஞானவினோதன் எ-து,—திரு ஞான சம்பந்தப் பிள்ளையாரென்னுந் திருநாமத்தை யுடையார் சீகாழிநாட்டிற்கு அதிபதியான அருளாட்சியுடையார் ஞானத் திருவிளை யாட்டினை யுடையார்;

என் ஆணை என் ஆணை என் ஆணை ஏகம் இரண்டு என்னாமல் சும்மா இரு என்று சொன்னான் எ-து,—முக்காலும் தமது பேரில் திருவாணைகூறி முத்தியில் வேதாந்தியைப்போல் ஏகம் என்றும், பேத சித்தாந்த வாதியைப்போல் இரண்டென்றும் கூறாது, இங்ஙனம் கூறுதற்கு ஏதுவாய உன்போதத்தை ஒழித்து, நீ மௌனானந்தமா யிருத்தி என்று அருளிச்செய்தார், எ-று.

ஒன்றெனில் பெறுவானும் பேறும் இன்றாம் ஆகலினும், இரண்டெனில் பதமுத்தியே அன்றி ஐக்கியமுத்தி கூடாது ஆகலினும், போத அறிவில் இரண்டாயும் போத ஒழிவில் ஒன்றாயும் இருத்தலினும், "ஏகமிரண் டென்னாமற் சும்மா விருவென்று சொன்னான்" என்றார்.

இத்திருவெண்பாவால் முத்தி நிச்சயம் ஈதென்று அறிவித்தவாறு காண்க. (கச)

சரியைக்கழற்றி.

முற்றும்.

Digitized by Google

௯-ம். அதிகாரம்.

விரத்திவிளக்கம்.

இவ்வனம்சரியாதிகளை நீத்து நின்றார் ஆயினும், உட்டுறவு இல்லார்க்கு ஞானம் விளங்காது ஆகலின், இவ் வதிகாரத்தினுள் துறவி விளக்கங்கூறி உட்டுறவின் இலக்கணம் அறிவித்தார் ஆகலின் இவ்வதிகாரத்திற்கு விரத்திவிளக்கமென்று பெயராயிற்று. விரத்தி யெனினும் துறவி எனினும் ஒன்று.

அறிந்தவிடத் தின்பதுன்ப மாகா ததுவும்
மறந்தவிடத் தின்ப மயக்கும் - அறிந்த
அலியறிவு நீயென்றா னத்துவிதா னந்த
முலையமுத முண்ட முனி.

(இ-ள்.) அத்துவித ஆனந்த முலை அமுதம் உண்ட முனி எ-து,— இரண்டற்ற அத்துவிதத்தில் தோன்றும் பேரானந்தமாகிய திருமுலை அமுதத்தை அம்மை பொற்கிண்ணத்தோடும் கொடுப்ப வாங்கி உண்ட திருஞான சம்பந்தப்பிள்ளையார்;

அறிந்த இடத்து இன்ப துன்பம் ஆகாது மறந்த இடத்து அதுவும் இன்பம் மயக்கும் அறிந்த அலி அறிவு நீ என்றான் எ-து,— கருவிகள் முப்பத்தாறையும் கடந்து, அருளை அறிந்தவிடத்து, ஆண்டு இன்பமும் துன்பமும் உண்டாகா, அவ்வருளை மறந்தவிடத்து முன் நீங்கி நின்ற கருவிகள் வந்து கூடலான், அத்துன்பமும் இன்பமும் வந்து ஈண்டு மயக்கும் ஆகலின், பதி அறிவோடுங்கூடி இன்பதுன்பம் இன்றிய அப்பதி அறிவாயும், பாச அறிவோடுங்கூடி இன்பதுன்பமாயும் நின்று அதனையும் இவற்றையும் அறிந்த அலி அறிவு நீ என்று எனக்கு அருளிச்செய்தார், எ-று.

Digitized by Google

பதி அறிவு-ஆணறிவு, பாச அறிவு-பெண்ணறிவு, இவ்விரு வகை அறிவும்போல் அன்றிப் பதி அறிவோடுங்கூடிப் பதிஅறிவாயும், பாச அறிவோடுங்கூடிப் பாச அறிவாயும், ஆண்வடிவும் பெண்வடிவும் தழுவி நின்ற அலிபோலிருத்தலின் பசு அறிவை, "அலி யறிவு" என்றார். அம்மை ஆநந்தவடிவம் ஆகலின், அவரது திருமுலைப்பாலை "ஆநந்தவமுதம்" என்றார். அதுவும் என்பதனை அத்துன்பமும் மயக்கும் எனக் கூட்டுக.

இத்திருவெண்பாவால் ஆன்மா ஒன்று உண்டென்று அறிவித்தவாறு காண்க. (௧)

அறுசமயத் தோர்க்கு மறுதியிட்ட கூடல்
துறவா யவாவறுத்த றாய்மை - பிறவா
முடிகள் சமுத்தி முயற்சியெல்லா மூத்த
கடைகரும நாசமிது காண்.

(இ-ள்.) அறுசமயத் தோர்க்கும் அறுதி இட்ட கூடல் துறவு ஆய் அவா அறுத்தல் தூய்மை எ-து,—அறுவகைச் சமயத்தோர்க்கும் வீடடைதற்கு மட்டிட்டுவைத்த பொது நெறி யாது? எனின், கூடற்கண் சங்கப்பலகையில் ஏறி இருந்து உட்பற்றுப் புறப்பற்று என்னும் இருவகைப் பற்றினையும் துறப்பதாய் இத்துறவுகளான் மெய்ப்பொருளை உணர்வதாய்ப் பிராரத்த வாசனையான் ஓரோர் காலையின் உள்ளத்தெழும் அவாவினையும் அறுத்தல் தூய்மையாய்க் கூறிய இம்மூவகை அதிகாரங்களின் நெறிகளே யாம்; (அஃது அன்றியும்.)

பிறவா முடிகள் சமுத்தி முயற்சி எல்லாம் மூத்தகடைகருமநாசம் இது எ-து,—பிறவாமைக்கு ஏது கூறிய பலவாற்றான்ளும் சிரசாய கருவிகள் முப்பற்றாறையும் போக்கப்பட்ட வீடும், தற்போத முயற்சி எல்லா முதிர்ந்த கடையாகிய கருமநாசமும், இம்மூவகை அதிகாரத்திற் கூறிய நெறியாம், எ-று.

Digitized by Google

சமயிகள் அறுவரும் வீடடைதற்கு மட்டு வேறுவேறு கூறி னார் ஆயினும், ஒருவர் கூறியது ஒருவர்க்குச் சம்மதம் அன்று, துறவாய் மெய்யுணர்ந்து அவாவறுத்தல் அனைவர்க்கும் சம்மத மாம்; ஆகலின், "அறுசமயத் தோர்க்கு மறுதிவிட்ட கூடற் றுறவா யவாவறுத்தல்" என்றார். துறவும் அவாவறுத்தலும் கூறினமையான், இடையில் மெய்யுணர்வு வருவிக்கப்பட் டது. இங்ஙனம் சங்கப்பலகையின் மேல் ஏறிக் கூறிய மூன் றதிகாரங்கள் என்றது திருக்குறளுள் துறவாதி மூன்றதிகா ரங்களையுமாம் என்றறிக. இம்மூவகை அதிகாரங்களின் ஒழு குதல் உயிர்ச்சுத்தி; இங்ஙனம் உயிர்ச்சுத்தி பண்ணுவோர்க்கு உடற்சுத்தி பண்ணவேண்டுவது இன்மையால், "கடைகரும நாசமிதுகாண்" என்றார்.

இத்திருவெண்பாவால் உட்டுறவு புறத்துறவு உடையா ரைச் சமயிகள் எல்லாரும் ஞானிகளென்று அங்கீகரிப்பரென் று அறிவித்தவாறு காண்க. (உ)

வாசிக்குச் சாவீரர் வைதாற் பொருந்தது போல்
ஆசைக்கே டார்க்கிதுவா மட்டதென-நேசித்த
ஒட்டையைப்போல் வார்க்கா முடம்பார வூண்பழ
பெட்டருக்கீ தாகாப் பிழை. [கும்

(இ-ள்.) வாசிக்குச் சாவீரர் வைதால் பொருந்தது போல் ஆசைக் கேடர்க்கு இது ஆம் எ-து,—வாசி என்ற வார்த்தை க்கு மனம் பொருந்து இறந்துவிடத் துணிந்த வீரனை வைதால் மனம்பொருந்ததுபோல், பெண்ணாசை ஆகாதென்று ஓர்வார்த் தை கூறிய மாத்திரத்தில் அவ்வாசை மனத்தின்கண் மீட் டும் எழாது அடக்கும் அவ்வாசை நாசர்க்கே இவ்வதிகாரத்தி ன் அருத்தம் சம்மதமாம்; (அம்மைதன்றி.)

அட்டது என நேசித்த ஒட்டையைப் போல்வார்க்கு ஆம் உடம்பு ஆர ஊண் பழகும் பெட்டருக்கு ஈது ஆகாப்பிழை

Digitized by Google

ஏ-து.—அறுசுவை அடிசில்போல வேப்பந்தழை யாதிகைப் பிலை இச்சித்த ஒட்டகத்தைப்போல், காடி கூழ் களி முதலிய வற்றைச் சுவையாய் விரும்புவோர்க்கும் சம்மதமாம், உடல் பருக்கும்படி அறுசுவை அடிசில்களை நன்று நீதென்று பரு ந்து ஊண்பழகும் பேடிகளுக்கும் காமிகளுக்கும் இதன் அரு ந்தம் சம்மதம் ஆகாத குற்றமாம், எ-று.

மற்ற நூலின்கண் ஒரிடத்துப் பெண்ணாசை ஆகாதென்று கூறக்கண்டு அதனை விடுத்தோர்க்கே அவ்வாசை உடையோ ரைமிகவும் இகழ்ந்து கூறும் இதன் அருத்தம் சம்மதம் ஆம் ஆகலின், "வாசிக்குச்சாவீரர் வைதாற்பொருததுபோ லாசைக்கேடர்க் கிதுவாம்" என்றார். அருந்தல் ஆசையைத்துக் கூறினமையால், "ஆசைக்கேடர்க் கென்றதை" பொருந்தல் ஆசையாகக் கொள்க.

இத்திருவெண்பாவால் அருந்தல் பொருந்தல்களில் ஆசை யற்றோர்க்கே இந்நூல் ஆமென்று அறிவித்தவாறு காண்க. ()

[நீர் இங்ஙனம் கூறிய ஆற்றான் ஆசையறுதலோ முத்தி எனின், மேற் கூறுகின்றார்.]

பாசங் கழன்றாற் பசுவுக் கிடம்பதியாம்
ஊசல் வடங்கழன்ற தொவ்வாதோ - நேசித்த
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டுமக்கோ
மற்றைச் சமயமெங்கு மாம்.

(இ-ள்.) பாசம் கழன்றால் பசுவுக்கு இடம் பதி ஆம் ஊசல் வடம் கழன்றது ஒவ்வாதோ எ-து,—உயிர்ச்சார்வு பொருட் சார்வு ஆகிய இருவகைச் சார்வும், இச்சார்வுகளை நீங்கியபோ தும் இவற்றின்மேல் எழாநின்ற அவாவும், இவ்வவா நீங்கிய போதும் கண்டபொருள்கள் மேற்சென்று பற்றும் இந்திரியங் களும் இவ்விந்திரியங்கள் அடங்கியபோதும் முன் எறியிருந்த வாசனையால் உள்ளெழும் மனநினைவுகளும் இவைமுதலிய

Digitized by Google

பாசங்களெல்லாம் கழன்றபோது இவற்றினின்ற பசுவுக்குப் பதியே இடமாம், அஃது எங்ஙனம் எனின், அந்தரமாய் நின்ற ஊசற்கயிற்றில் இருந்தோனுக்கு அவ்வூசற்கயிறு அற்றபோது நிலம் இடமாம் அதுபோல, அஃது ஒவ்வாதோ? (அதனை நீ அறிதி அஃதன்றி;)

நேசித்த பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும் பாட்டு உமக்கோ மற்றைச் சமயம் எங்கும் ஆம் எ-து,— தம்மால் இச்சிக்கப்பட்ட பற்றுக்கள் எல்லாம் அற்றபோதே அப்பற்றறுதி பிறப்பினை அறுக்குமென்று (திருவள்ளுவநாயனார் கூறிய) குறள் வெண்பாப்பாட்டு உமக்கு மாத்திரமோ சம்மதம், மற்றைய சமயங்களுக்கெல்லாம் சம்மதமாம், எ-று.

ஊசல் இருந்தபோதும் ஒழிந்தபோதும் அதனுள் இருந்தோனுக்கு அசைவும் அசைவின்மையும் உண்டாவது போல், பாசம் இருந்தபோதும் ஒழிந்தபோதும் அசைவும் அசைவின்மையும் ஆன்மாவிற்கு உண்டாமென்பதும் காண்க.

இத்திருவெண்பாவால் ஆன்மாவிற்குப் பாசமுழுதும் நீங்கின் பதியைத் தேடவேண்டுவது இன்றென்று அறிவித்தவாறு காண்க. (ச)

உனக்கு மெய்யாய்த் தோன்றி யொழித்துவிடும் பாசம்,—வினைச்சடமே யென்னில் விடம்போல்-உனைச்சுழற்றும்,—ஆனாலுந் தன்னை யறியாத துன்னறிவு,—தானாகு ஞானத் தடை.

(இ-ள்.) உனக்கு மெய்யாய்த் தோன்றி ஒழித்துவிடும் பாசம் வினைச்சடமே என்னில் விடம்போல் உனைச் சுழற்றும் ஆனாலும் எ-து,— உனக்குத் தோன்றும்போது யான் எனது என்று கருதும்படி மெய்யாகத் தோன்றி, நீங்கும்போது உன்னைப் புறம்பாய் ஒழித்து நீங்கிவிடும் தேகபோகங்களாகிய பாசம் வினைக்கீடாய் வரும் மாயாகாரிய மாகிய சடமென்று அறி

விப்பினும், நீ இங்ஙனம் அறியாமையான், நின்னை விடம்புசித் தவனை மயக்குதல்போல் மயக்கும் எனினும், அப்பாசம் ஞானத்தடை அன்று; (இனிஞானத்தடையாவது யாது? எனின்,)

தன்னை அறியாதது உன் அறிவுதான் ஆகும் ஞானத்தடை எ-து,—தனுவாதிக ளெல்லாம் இது இது என்று நாலுவாய்ப் பகுத்தறிந்தும், அவற்றை அறிந்த தன்னை அறியாதது உனது புல்லறிவாகலின், இவ்வறிவே ஞானத்திற்குத் தடையாகும், என்றவாறு.

ஆணவத்தால் மறைபட்டிருந்த ஆன்மாவிற்கும் சிவன் மாயையில் தனு கரண புவன போகங்களைக் கொடுத்து இச்சா ஞானக்கிரியைகளைவிளக்குவித்தலானும், இத்தனுவாதிகளால் சுருதி குரு சுவானுபவங்களை அறிந்து வீடடைதற்கு ஏதுவாகலானும், இவற்றைச் சடமென்றும் தனக்கு அன்னியமென்றும் அறிந்தபோது மயக்காமையானும், உனைச்சுழற்றும் ஆறுலும், இவை ஞானத்தடை அல்லவென்றும் தானென்றும் தனதென்றும் தன்னால் அறியப்பட்ட தேகபோகங்களைத் தானும் தனதும் அல்லவென்றும் அவற்றைத் தனக் கன்னியமாக் கண்டு தன்னை உள்ளபடி அறியமாட்டாத தனது அறிவே ஞானத்தடை ஆகலின், "உன்னறிவு தானுகு ஞானத்தடை" என்றுங் கூறினர். தனுவாதி நான்கினுள் தனுவோடு கரணமும் போகத்தோடு புவனமும் ஒற்றுமையா யிருத்தலின, தேகபோகமென்று இரண்டாகக் கூறப்பட்டன.

இத்திருவெண்பாவால் தனுவாதிகளைத் தனக்கன்னியமாக் காணின், திருவருள் தோற்றும் என்று அறிவித்தவாறு காண்க. (ரு)

[ஆன்மாவிற்கு இவை உருவம் அன்றாயின், இவற்றின் மயமாயிருப்பது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

சிற்றறிவனும்மறைப்பைச் சேர்ந்தவடிவொண்படிகம்
பற்றுதினு மொன்றாகாப் பான்மைபோல்-உற்ற

Digitized by Google

உருவ சொரூப சுபாவ முனக்கு
வருமடைவு சொன்னோ மதி.

(இ-ள்.) சிற்றறிவன் ஆய் மறைப்பைச் சேர்ந்த வடிவு ஒள் படிகம் பற்றுகினும் ஒன்று ஆகாப் பான்மைபோல் எ-து,—கிஞ்சிக்கிய அறிவனுப்ச் செம்பில் களிம்புபோன்ற ஆணவமறைப்பைச்சேர்ந்த வடிவு ஆன்மாவினது சுபாவம். படிகம் அடுத்த வன்னமயமா யிருப்பினும் தன்னிறம் அந்நிறத்தோடு ஒன்றாகாத முறைமைபோல, தான் அடுத்த கருவிமயமா யிருப்பினும் தன்னறிவு அக்கருவி அறிவோடு ஒன்றாகா திருப்பது ஆன்மாவினது உருவம். ஒன்றையும் பற்றாதிருந்த படிகம் நிருமலமா யிருத்தல்போல், ஆன்மா மும்மலங்களையும் நீங்கி நிற்றல் தனது சொரூபம்;

உற்ற உருவ சொரூப சுபாவம் உனக்கு வரும் அடைவு சொன்னோம் மதி எ-து,—இங்ஙனம் உனக்கு உற்ற சுபாவ உருவசொரூபங்கள் வருமுறையைச் சொன்னோம், இவற்றை அறிந்துகொள்ளுதி, எ-று.

"படிகம் பற்றுகினு மொன்றாகா" எனவே ஒன்றையும் பற்றாத படிகம் நிருமலமா யிருக்குமென்பது ஆயிற்று. ஆணவம் சகசமலம் ஆகலின், அதனைச்சேர்ந்த வடிவு சுபாவம் என்றும், படிகத்திற்குச் சிவப்பு வன்னமுதலிய செயற்கையாய் வந்தது போல், ஆன்மாவிற்குக் கருவிகள் செயற்கையாய் வந்து பொருந்துதலின், இதனை உருவம் என்றும், படிகம் வன்னங்களை நீங்கியபோது தனது சுய சொரூபத்தோடு இருத்தல்போல், ஆன்மா கருவிகளை யெல்லாம் நீங்கியபோது தனது சுயசொரூபத்தோடு இருத்தலின், இதனைச் சொரூபம் என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் ஆன்மாவினது உருவசொரூப சுபாவம் அறிவித்தவாறு காண்க, (சு)

Digitized by Google

நினைப்புமறப் பற்று நிறைந்த வறிவாய்
அனைத்துடனு நின்றம் பரமாய்த்-தனக்கருளித்
தன்னாநந் தத்தைத் தனக்களித்த சர்க்கரையே
அன்றனுக் கின்னவைமூன் றாம்.

(இ-ள்.) நினைப்பு மறப்பு அற்று நிறைந்த அறிவு ஆய் அனைத்துடனும் நின்று அம்பரம் ஆய்த் தனக்கு அருளி எ-று—நினைப்பு மறப்பாகிய சகல கேவலங்களை அநாதியிலே நீங்கி, எங்கும் பரிபூரண அறிவாய், எல்லாவற்றோடும் கூடிநின்றும், ஆகாயம்போல் ஒன்றோடும் தாக்கற் றிருப்பதாய் ஆன்மாவிற்கு அருள்செய்து மும்மலங்களையும் நீக்கி;

தன் ஆநந்தத்தை தனக்கு அளித்த சர்க்கரையே அன்றனுக்கு இன்னவை மூன்று ஆம் எ-று,—தனது பேராநந்தத்தை அவ்வான்மாத் தனக்குக் கொடுத்தருளிச் செய்த நாவிற்குச் சர்க்கரையே அன்ன சிவனுக்கும் இன்ன உருவ சொரூப சுபாவம் மூன்றும் உண்டாம், எ-று.

"நினைப்பு மறப்பற்று நிறைந்த வறிவாய்" எனவே சிவனது சுபாவம் அநாதியிலே நின்மலமா யிருத்தல் எனவும், "அனைத்துடனு நின்றம் பரமாய்" எனவே இங்ஙனம் இருப்பது அருளாகலின், அவனது உருவம் இச்சாஞானக் கிரியைகள் எனவும், "தன்னாநந்தத்தைத் தனக்களித்த" எனவே, ஆநந்தம் அவனது சொரூபம் எனவுங் காண்க.

இத்திருவெண்பாவால் சிவனது உருவ சொரூப சுபாவம் அறிவித்தவாறு காண்க. (எ)

அறிந்துபற்றி நின்றமுந்து மறப வறிவை
அறிந்துசுத்தி யேபே ரறிவாய்-நிறைந்துசிவம்
தோயாமீ னின்றதுபோற் றோற்றமுத லந்துடனும்
தோயாமற் சுத்தத் துறவு.

Digitized by Google

(இ-ள்.) அறிந்து பற்றி நின்று அழுந்தும் அற்ப அறிவை அறிந்து சுத்தி பேர் அறிவு ஆய் எ-து,—பஞ்சவிடயங்களையும் ஞானேந்திரியங்களால் அறிந்து, கன்மேந்திரியங்களால்பற்றி, அந்தக்கரணங்களால் அவற்றுள் அழுந்தும் கிஞ்சிக்க போதத்தை ஆன்மாவினது இயற்கைக்குணம் அன்றென்றும், மதுபானங் கொண்டோனுக்கு வெறி தோன்றியதுபோல், அவ்விருவகை இந்திரியங்களையும் கரணங்களையும் கூடியவிடத்துத் தோன்றிய விடயபோதம் ஈதென்றும் அறிந்து (இவ்விந்திரிய கரணங்களோடும் அப்போதத்தை நீத்து, தன்னை உள்ளபடி அறிந்து, அங்ஙனம் தன்னை அறிந்தபோது தனக்கு இந்திரிய கரணங்களையும் வேறுக்கித் தன்னையும் அறிவித்து அருளை னக்கண்டு, அவ்வருளே வடிவாகி இருந்து, தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் சிவானுபோகத்தில் இரண்டற அழுந்தி நிற்பது) ஆன்மசுத்தி, இந்த ஆன்மசுத்தியே (சிவத்தில் வியாபகமாகிய பேரறிவு ஆகலின்) இப்பேரறிவாகி;

சிவம் நிறைந்து தோயாமல் நின்றதுபோல் தோற்றம்முதல் ஐந்துடனும் தோயாமல் சுத்தத் துறவு எ-து,—தனக்கு வியாத்தியாயிருந்த சிவம் எல்லாவற்றோடும் பூரணமாய் நிறைந்திருந்தும், ஒன்றோடும் தோய்வற்று நின்றாற்போல், சிருட்டியாதி ஐந்தொழில்களோடும் தோயாமல் (நிற்பதே) பரிசுத்தமான துறவு, எ-று.

இச்சா ஞானக் கிரியைகள் சிவதத்துவங்களைச் செலுத்த, சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை எழுப்ப, ஆன்மாவின் இச்சை அந்தக்கரணங்களினிடத்தும், ஞானம் ஞானேந்திரியங்களிடத்தும், கிரியை கன்மேந்திரியங்களிடத்து நின்று உள்விடயங்களை அறிந்து பற்றி அழுந்தும் ஆகலின், இவ்விருவகை இந்திரியங்களும் கரணங்களும நீங்கவே ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியை நீங்கும், இவை நீங்கவே கலாதிகள் நீங்கும்,

இவை நீங்கவே சிவதத்துவம் நீங்கும், இவை நீங்கவே தன்னை அறியும். ஆகலின், "அறிந்து பற்றி நின்றழுந்து மற்பவறிவை யறிந்து" என்றார். அவன் அவள் அது முன்னிலையாய் இதாகிதங்கள் வருதலையும், அவற்றைத் தான் பெறுதலையும், திருவருட்கண்ணால் பார்த் தழித்துப் பேய் பிடியுண்டவனைப் போல், சிவத்துள் மறைந்து நின்றமையால், தான் மலமும் ஆகாமல் என்றும், அங்ஙனம் நின்றழியாத ஆநந்தபோகம் பெறுதலால் தான் சிவமும் ஆகாமல் என்றும் இங்ஙனம் கூறப்படும், இங்ஙனம் இருப்பது ஆன்மசுத்தியாகலின், "சுத்தி" என்றார். ஒன்றையும் பகுத்துக் காணாது வியாத்தியாய் நின்ற சூரியன் ஒளியில் வியாபகமாகிய கண்ணொளியும் ஒன்றையும் பகுத்துக் காணாது நிற்பதுபோல், ஒன்றையும் பகுத்தறியாது நின்ற சிவவியாத்தியில் வியாபகமாகிய ஆன்மாவும் பஞ்சகிருத்தியங்களால் விளங்கும் பிரபஞ்சங்களுள் ஒன்றையும் பகுத்தறியாது நிற்கவேண்டும், ஆகலின், "சிவந் தோயாம னின்றதுபோற் றோற்றமுத லைந்துடனுந் தோயாமற் சுத்தத் துறவு" என்றார். பஞ்ச கிருத்தியங்களாவன—ஓரிந்திரியத்தில் பிரவேசித்தல் சிருட்டி, அவ்விந்திரியத்தில் நின்று ஓர் விடயத்தைப் பற்றுதல் திதி, பற்றிய விடயத்து இரண்டற அழுந்துதல் சங்காரம், அதில் இதம் பிறத்தல் திரோபாவம், அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகம், இங்ஙனம் ஓரிந்திரியத்தில் பஞ்சகிருத்தியங்களும் வரலால் ஐந்திந்திரியங்களினும் தோயாமல் நிற்பதே ஐந்தொழிலினும் தோயாமல் நிற்பதென அறிக. அறிந்து பற்றி நின்று அழுந்துதலை விடயபோதமென்று அறிதல் ஆன்மரூபம், அவற்றை நீங்கித் தன்னை அருளால் கண்ட விடம் ஆன்மதரிசனம்; தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் சிவத்தோடு இரண்டறக்கலந்து நிற்பது ஆன்மசுத்தி எனக் கொள்க. ஏ-அசை.

இத்திருவெண்பாவால் பரிசுத்தமாகிய துறவு இதுவென்று அறிவித்தவாறு காண்க. (அ)

Digitized by Google

[ஞானிகள் இங்ஙனம் பிரபஞ்சத்தில் தோயாமல் நிற்பரோ எனின், மேற்கூறுகின்றார்.]

கூறிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகத்
யாரறிவா ரந்த வறிவுதயம்-சூரியன்காண் [தை
உன்னீழ லைக்கெடுத்த வுச்சியிலே யூனமறச்
சொன்னா ரவத்தைகளைந் தும்.

(இ-ள்.) கூர் இருளில் மின்மினியின் கூட்டம்போல் வாழ் சகத்தை யார் அறிவார் அந்த அறிவு உதயம் சூரியன் எ-து,- மழைகாலத்து அரையிருளில் மின்மினிப் புழுக்கூட்டம் போன்று, ஆணவாந்தகாரத்தில் ஆன்மாக்கள் கிஞ்சிக்க பேதத் தோடும் கூடிப் பொய்ம்மையாய் வாழாநின்ற இப் பிரபஞ்சத்தை ஞானிகளாயினார் யாவர் அறிவார், (அவர் சகத்தோடுங் கூடி இருக்கையினும் அதனை அறியாரென்று நீர் கூறியது என்னை ? எனின்) அவர்க்கு அந்த ஞானோதயம் சூரியோதயம் போல் தோற்றும்; (ஆகலின் அச்சகத்தை அறியார் ஆயின் இந்த ஞானத்தை அடியேன் பெறுமாறு எங்ஙனம் எனின்,)

உன் நீழலைக் கெடுத்த உச்சியிலே ஊனம் அற அவத்தைகள் ஐந்தும் சொன்னார் எ-து,—காலையினும் மாலையினும் நீளும் உனது நிழலைக் கெடுத்த உச்சிகாலத்தைப் போல், சகல கேவலங்களில் செல்லும் உன்போதம் அடங்கிய நடுவிடத்து உனது ஆணவக்குற்றம் அறவும் ஞானச் செல்வம் வரவும் ஏதுவாகச் சுத்தாவத்தைகள் ஐந்தினையும் சொன்னார் (பெரியர் அவற்றை யாம் சொல்லக்கேட்டு நீ அறிதி), எ-று.

இருளைப்போல் ஆணவம், மின்மினிபோல் கருவிப் போதத்தோடுங் கூடிய ஆன்மாக்கள், மின்மினி மின்னியவாறே தோன்றாது மறைந்து மறைந்து மின்னல்போல், ஆன்மாக்களினது மறப்பு நினைப்புகள் ஆகலின், "கூரிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகம்" என்றார். சூரியோதயத்தில்

Digitized by Google

பூதவிருளும் மின்மினி ஒளியும் தோற்ற; அதுபோல், ஞா னேயத்தில் ஆணவ இருளும் கருவிப்போதமும் தோற்ற ஆகலின், "அறிவுதயஞ் சூரியன் காண்" என்றார். இந்திரிய ஙகள் பத்தும் பஞ்ச பூதங்களிடமாய் நின்று, விடயங்களை நேரே அபகரித்து விசற்கரிக்கப் பொருந்திய போதம் இறக்க இருந்த இடம் நின்மலசாக்கிரம்; அவ்விந்திரியங்களிடமாய் விடயங்களைப் பகுத்தறியப்பட்ட ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளுக்கு இடமாகிய மனம் புத்தி ஆங்காரங்களின் வி யாத்தி அறும் இடம் நின்மல சொப்பனம்; ஆன்மசைதன்னி யத்திற்கு அதிட்டானமான சித்தவிகற்பம் ஒடுங்கின இடம் நி ன்மல சுழுத்தி; அச் சைதன்னிய வாகனமான, பிராணவாயு நீங்கின இடம் நின்மல துரியம்; ஊசல் வடம் அற்றபோது அ தற்கு வீழ்ந்த இடம் ஆதாரம் ஆனாற்போல், இங்ஙனம் கருவி ப்போதம் எல்லாம் கழிந்த இடத்து ஆன்மா அருள் ஆதார மாய் நின்ற சுத்தாவத்தை நின்மலாதீதம்; இக்கருவிப்போதங் கழன்ற சுத்தாவத்தையில் சுடர்காட்டக் கண்ட கண்போல், அருளால் தன்னை அறிவது நின்மலசாக்கிரம்; இங்ஙனம் தன் னை அறிந்த இடத்துத் தனக்கொரு சேட்டை அற்று அந்த அ ருளே தனக்கு ஆதாரமாய் அவ்வருளில் தான் அசைவறநின்ற இடம் அவ்வருள் தரிசனம்; இங்ஙனம் இவ்வருளைத் தரிசிப் பது நின்மல சொப்பனம்; இச்சாஞானக்கிரியை தோன்றாது நின்ற இடம் பரை; இந்தப் பரையினது நின்மலமெல்லாம் தனது இச்சாஞானக்கிரியை தோன்றாது தனதாகி எதிரீடு சிறிதும் இன்றி இப்பரையே தானாகி இருந்த இடம் நின்மல சுழுத்தி. தான் இப்பரையாகிய இடத்துக் கதிரொளி நேரே நின்ற கண் அக்கதிரிடத்து அதீதப்படுந் தறுவாயில், இக்கண் ணுக்கு அந்தக் கதிரினது வட்டப் பளபளப்பு மாத்திரந் தோ ற்றுவதுபோல், பரையைநீங்கி ஆநந்தசத்தி நேரேநின்று தான் சிவத்தில் அதீதப்படுந் தறுவாயில், ஆநந்தாநுபவம் பெறுவது நின்மலதுரியம், அக்கதிரினது வட்டப் பளபளப்பாகிய சோ

Digitized by Google

பையைக் கண்ட கண் அக்கதிராகாதிருக்கையிலும், தன்பார்வையும் இழந்து தன்னால் காணப்பட்ட முதலையும் இழந்து அக்கதிர் தானாய் மிகவும் அதீதப்பட்டாற்போல், அங்ஙனம் ஆநந்தாநுபவம் பெற்ற ஆன்மா அந்த ஆநந்தமாகாதிருக்கையிலும், இவ்வாநந்தாநுபவத்தை அறிந்த தானும் இன்றி ஆநந்தமாய் நின்ற முதலும் இன்றி அவ்வாநந்தமே தானாய் அதீதப்பட்ட இடம் நின்மலாதீதம். முன்சொன்ன ஐந்தும் கருவிகள் முப்பத்தாறும் நீங்குதற்கு ஏது, பின்சொன்ன ஐந்தும் தற்போதங்கெட்டுச் சிவத்தில் அதீதப்படுதற்கு ஏது. "சொன்னாவத்தைகளைந்தும்" என்றது இவையெனக் கொள்க. "உச்சியிலே சொன்னாவத்தைகளைந்தும்" என்றமையான், அவ்வுச்சி நேர்படுதற்கு ஏதுவாகிய அவத்தைகள் ஐந்தும் சொல்லப்பட்டன. இருளைப்போல் கேவலம், உடுக்களைப்போல் சகலம், உடு இன்றி இருளை மாத்திரம் காணும் கண்போலவும், இருளிடத்து உடுவாற் காணுங் கண்போலவும், கேவல சகலங்களை அறியும் ஆன்மா, சூரிய உதயத்தில் இருளும் உடுவும் இன்றிச் சூரியப்பிரகாசமாத்திரங் கண்ட கண்போல், அருள் தோற்றியகாலத்து முன் தோன்றிய கேவல இருளும் கருவிக் கூட்டங்களும் தோன்றாது, அவ்வருளைமாத்திரம் கண்டுகொண்டிருப்பது அருள்தரிசனம், சூரியப்பிரகாசத்தைக் கண்ட கண் புடை பெயர்ந்து நோக்காது அச்சூரியப் பிரகாசத்தில் ஏகீபாவமாய் நிற்பதுபோல், அருள் என்றும் தான் என்றும் சிறிதும் தோன்றாது, அவ்வருளே தானாய் நிற்பது பணாதரிசனம், சூரியப்பிரகாசத்தை விட்டு அச்சூரியனது வட்டப் பளபளப்பைப் பார்த்த கண்போல் ஆன்மா, பணையை நீங்கி ஆநந்தபோகம் பெறுதல் சூரியனது வட்டப் பளபளப்பைப் பார்த்த கண் தன் பார்வையையும் இழந்து, அப் பளபளப்பாகிய காட்சியையும் இழந்து, அச்சூரியனுள் அதீதப்பட்டது போல், ஆநந்தபோகத்தைப் பெற்ற ஆன்மா, அதனைப்பெற்றதான் என்பதும் அவ்வாநந்தம் என்பதும் இன்றி, அவ்வா

ங்தந் தானும் அதனுள் அதீதப்பநுவது ஈண்டு இருவகையாய்க் கூறிய அவத்தைகட்கு உவமை இதனுனுங் காண்க.

இத்திருவெண்பாவால் ஞானிகள் உலகத்தை அறியார் என்றும், ஞானம் நின்மலாவத்தையில் நின்றால் பெறலாம் என்றும் அறிவித்தவாறு காண்க. (கூ)

[அந்த ஞானத்தை நீர் கூறிய நின்மலாவத்தையில் நின்று பெறுவதே அன்றி, துறவின்கண் நின்று தவத்தைப் பண்ணிப் பெறக்கூடாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

மெய்யாகத் தோன்றிவிடும் பொய்யை விசாரிக்கில்
பொய்யாய்ச் சுவர்ப்பாம்பாய்ப் போமன்றி-ஐயா
தொழிலைச் செயிற்றானு சோரனைப்போற் றோன்றி
கழலப் பறையறைதல் காண். [க்

(இ-ள்.) மெய் ஆகத் தோன்றிவிடும் பொய்யை விசாரிக்கில் பொய் ஆய் சுவர்ப்பாம்பு ஆய்ப் போம் அன்றி ஐயா தொழிலைச்செயில் எ - து,—விசாரியாதபடியினாலே மெய்யாகத் தோன்றும் பொய்யாகிய கருவிக் கூட்டங்களது உண்மையை நின்மலாவத்தையில் நின்று விசாரித்து அறியின், சுவரில் எழுதிய பாம்புபோலாய்ப் பொய்யாய்த் தோன்றும், அஃதன்றி அவற்றை அங்ஙனம் விசாரித்தறிந்து நீங்காது வைத்துக் கொண்டு அவை போம்படிக்கு மாணாக்கனே! நீ தவத்தொழில்களைச் செய்தி யெனின்; (அதுதான்.)

தானு சோரனைப்போல் தோன்றிக் கழலப் பறை அறைதல் எ-து,—சடமாகிய கட்டையைத் தீபத்தால் பாராதபடியினால் கள்வனைப்போல் தோன்றக்கண்டு வெருண்டு அக்கள்வன் நீங்கும்படிக்குப் பறை அறைதலோடு ஒக்கும், எ-று.

சுவரில் எழுதிய பாம்பிற்குத் தோற்றரவு மாத்திரமே அன்றிச் சேட்டை இன்றாயதுபோல், கருவிகளை எதிரிட்டறிந்த போது பிரபஞ்சம் தோற்றரவு மாத்திரமே அன்றி முன்போல்

Digitized by Google

சேட்டியாது ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார். நின்மலாவத்தையில் நின்று அருட்கண்ணால் எதிரிட்டுப் பார்க்கும்போது சடமாய் நீங்கும் கருவிகளை மெய்யாகக் கருதிக்கொண்டு, அவை நீங்கும்படிக்குத் தவத்தொழிலைச் செய்யத் தொடங்கினமையால் இங்ஙனம் உவமை கூறினார். காண்-அசை.

இத்திருவெண்பாவால் கருவிகளினது உண்மையைக் காணின் எல்லாம் பொய்யாய்விட்டு, ஞானம் தோன்றும் அன்றி தவத்தான் அங்ஙனம் விடுதலும் ஞானம் தோற்றலும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (௪௦)

[கருவிகளினது உண்மையை அறிந்தால் எல்லாம் பொய்யாய்ப்போம் என்றீர். அப்பிரபஞ்சமும் தேகமும் பரிச்சேதம் இன்றாய்ப் போமோ? எனின், மேற்கூறுகின்றார்.]

உலகத்தை மாயா வுடலைப்பொய் யென்றால்
அலகைத்தேர் போலறிவ தல்லால்-விலகித்
துடைத்தொழித்த லாகுமோ சொப்பனத்தீச் சூழ்ந்
கடக்கவிடுஞ் சாக்கிரம்போற் காண். [தால்

(இ-ள்.) உலகத்தை மாயா உடலைப் பொய் என்றால் அலகைத் தேர்போல் அறிவது அல்லால் விலகித் துடைத்து ஒழித்தல் ஆகுமோ எ-து,—மாயா காரியமாகிய இப்பிரபஞ்சத்தினையும் உடம்பினையும் பொய் என்று அறிவித்தால், பேய்த்தேர்போல் பொய்யாகக் கண்டு அறிவது அன்றி, அத் தேகாதி பிரபஞ்சங்களைப் பரிச்சேதமாய் நீக்கித்தள்ளி ஒழிக்கக்கூடுமோ; (நீர் இங்ஙனம் கூறியவற்றால் ஞானமும் அஞ்ஞானமும் கூடியிருக்குமோ எனின்,)

சொப்பனத் தீச் சூழ்ந்தால் கடக்கவிடும் சாக்கிரம்போல் காண் எ-து,—சொப்பனாவத்தையில் ஒருவனைக் கடக்கும் வழி இன்றி அக்கினி சூழ்ந்துகொண்டால், அவ்வக்கினியைக் கட

Digitized by Google

க்கவிடும் சாக்கிராவத்தைபோல், உன்னைச் சூழ்ந்துகொண்டு நின்ற தேகாதி பிரபஞ்சங்களை ஞானசூரியன் வந்து தோன்றில் உனக்குப் பொய்யாகக் காட்டிவிடும் என்று அறிதி, எ-று.

பேய்த்தேர் நீரைப் பொய் என்று கண்டபோது நீர்போல் தோற்றவும், முன்னர் மெய் என்று கண்ட வாசனையும் இருக்கும், சொப்பனத்தீயைக் கடக்கவிட்ட சாக்கிரத்தில் இத்தோற்றரவு இன்றி முன்கண்ட வாசனைமாத்திரம் இருக்கும். அங்ஙனம்போல், சுத்தாவத்தையில் நிற்போர்க்கும் சுத்தத்தில் நிற்போர்க்கும் பிரபஞ்சந் தோற்றும் ஆகலின், அவ்விரண்டுவமையுங் கூறினர்.

இத்திருவெண்பாவால் கருவிகளது உண்மை அறிந்தவிடத்துத் தேகாதி பிரபஞ்சங்கள் முன்போல் மயக்குதல் இன்றி, காட்சிவாதனை மாத்திரையாய் நிற்கும் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

[கருவிகள் முப்பத்தாறையும் பொய்யாகக்கண்டு நீங்கினால் அந்த ஞானம் தோன்றுமோ ? எனின், மேற்கூறுகின்றார்.]

பொய்யென்ற வார்த்தைப் புரையற்று மெய்யானால்
மெய்யென் பதுதேட வேண்டுமோ-மையிருளைத்
தீர்த்த வெயிலைத் திரும்பி யசைத்தின்மைத்துப்
பார்த்ததிலென் சந்தையம்வைப் பாய்.

(இ-ள்.) பொய் என்ற வார்த்தை புரை அற்று மெய் ஆனால் மெய் என்பது தேடவேண்டுமோ எ-து,—கருவிகள் எல்லாம் பொய் என்று நீ சொன்ன வார்த்தைபோல, குற்றமற்று உனதறிவிற்கு அவை பொய் என்பது உண்மையாய்த் தோற்றும் எனின், மெய்யாகிய ஞானம் என்பது வேறு தேட வேண்டுமோ ; (அவத்தையைப் பொய்யாய்த் தோற்றுவித்தது தானே ஞானம் அன்றோ ? ஆயின், அங்ஙனம் தோற்றுவித்த ஞானத்தை யான் கண்டுகொண்டிருக்க வேண்டாவோ ? எனின்,)

Digitized by Google

மை இருளைத் தீர்த்த வெயிலைத் திரும்பி அசைத்து இமைத்துப் பார்த்து அதில் என் சந்தையம் வைப்பாய் எ-து,—மயக்கமாகிய ஆணவ இருளைத் தீர்த்த ஞானப்பிரகாசத்தை உன் போதத்தால் எதிரிட்டு அசைத்துப் பார்த்தும், அங்ஙனம் பாராது ஒழிந்தும், அந்த ஞானப்பிரகாசத்தை ஈது அன்றாமோ அன்றோ என்று நீ என்னை ஐயுறுகின்றாய், (அங்ஙனம் ஐயுறாது அதனுள் அசைவற நிற்றி), எ-று.

சூரியப் பிரகாசத்தால் இருள் நீங்கி, அப்பிரகாசத்தைக் கண்ட கண் ஈது அப்பிரகாசமோ அன்றோ என்று அதன்மேல் ஐயுறாது, அவ்வொளியில் ஏகீபாவமாய் நிற்பதுபோல், அருளில் அசைவற நிற்கவேண்டும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார்.

இத்திருவெண்பாவால் கருவிகள் அனைத்தும் பொய்யாக உள்ளபடி அறிதலே ஞானம் என்று அறிவித்தவாறு காண்க.

[தேகாதி பிரபஞ்சமெல்லாம் பொய் என்றும், பிறவித்துன்பம் ஈது ஆகாதென்றும், ஞானிகளும் ஞானிகள் அல்லாரும் கூறுகின்றார். இவருள் ஞானிகளை அறிவது எங்ஙனம்? எனின், மேற்கூறுகின்றார்.]

வேண்டா பிறப்பென்ற வார்த்தையினின் மெய்விடயம்
தீண்டாததிலே தெரியாதோ-காண்பீர்
உடம்பு மிகையொன்றி லாமையே நோன்பென்
றடங்க வடங்கினு ரை.

(இ-ள்.) பிறப்பு வேண்டா என்ற வார்த்தையினில் எ-து,- பிரபஞ்சம் பொய் என்றும், பிறவி ஆகாது என்றும், மெய்ஞ்ஞானிகளும் பொய்ஞ்ஞானிகளும் கூறிய வார்த்தையினால்; (அவர்களைப் பிரித்துக் காணக்கூடாது ஆயினும்,)

உடம்பு மிகை ஒன்று இலாமையே நோன்பு என்று அடங்க அடங்கினாரை மெய்விடயம் தீண்டாது அதிலே தெரியா

Digitized by Google

தோ காண்பீர் எ-து,—உடம்பைச் சத்துரு என்றும், ஓர்விட யங்களினும் பற்று இலாமையே நோன்பு என்றும் அறிந்து, அத்தேகபோகங்களை யான் எனது என்று கருதும் புறத்து நின்றபோதம் அடங்க, உள் நின்றபோதம் அடங்கியமெய்ஞ்ஞானிகளை அவரது உடம்பு விடயங்களைப் பற்றாது, அதனால் தெரியும் ஆகலின், இக்குறிப்பினால் கண்டுகொள்வீர் எ-று.

மெய்யால் காண்பீர் என்றமையால், வார்த்தையிலே காணக்கூடாது ஆயினும் என்பது வருவிக்கப்பட்டது. மெய்யோடு இந்திரியங்கள் ஒற்றுமையா யிருத்தலின், மெய்விடயந் தீண்டாதென்று ஆகுபெயராகக் கூறினார். என்று என்பதனை, உடம்புமிகை என்றதனோடுங் கூட்டுக.

இத்திருவெண்பாவால் வாசக ஞானிகளையும் அநுபவ ஞானிகளையும் அறிதற்கு ஏது கூறியவாறு காண்க.　　　　(கரு)

விரத்திவிளக்கம்

முற்றும்.

———

Digitized by Google

எ-ம். அதிகாரம்.

துறவு.

எத்தனை உட்டுறவு உடையார் ஆயினும், புறப்பற்றோடு இருப்பின் இப்பற்று ஓரோர் காலை அறிவை மயக்கும் ஆகலின், புறத்துறவும் வேண்டும் என்று இதனுள் புறத்துறவு இலக்கணம் கூறினார். ஆகலின், இவ்வதிகாரத்திற்குத் துறவு என்று பெயராயிற்று.

தேடப் படும்பொருளைச் சிக்கனவா கப்புதைத்துக்
கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினும்-கூடாத
வாணாளை வீண்கழிக்கு மானிடரைப் போன்மயக்கம்
பூணார்பொய் கண்டுதுறப் போர்.

(இ-ள்.) தேடப்படும் பொருளைச் சிக்கனமாகப் புதைத்துக் கோடிக்கு ஒரு நிமிடம் கொள்ளுகினும் கூடாத வாழ்நாளை வீண் கழிக்கும் எ-து,—தம்மால் தேடப்பட்ட திரவியங்களையெல்லாம் செலவழியாது பத்திரமாகச் சேமஞ்செய்து வைத்துக்கொண்டு, தாம் உடலைவிட்டுப் போங்காலை நிமிடகாலம் அவ்வுடலில் இருக்கக் கோடி திரவியத்துக்குப் பிறர் கையில் ஆயுள் வாங்கிக் கொள்ளுவோம் எனினும் கூடாத இவ்வுடலோடு உயிர் வாழ்நாளைத் தவத்திற் கழியாது அவத்திற் கழிக்கும் ;

மானிடரைப் போல் மயக்கம் பூணார் பொய் கண்டு துறப்போர் எ-து,—பேதை மானிடரைப்போல் தேகாதி பிரபஞ்சங்களை மெய்யாகக் கண்டு, இவற்றில் மயக்கம் பூணார்கள் இவற்றைப் பொய்யாகக் கண்டு துறப்போர், எ-று.

கடவுளர் ஆயினும் அங்ஙனம் ஆயுள் கொடுக்கவும் கொள்ளவும் கூடாது ஆகலின், "கூடாத" என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் இளமைக்கண்ணே வனிதாதிபோ கங்களைத் துறந்து, ஞானசாரியனை அடைந்து, வீடடைய வேண்டும் என்று கூறியவாறு காண்க. (சு)

ஊர்க்குருவி யும்வளர்த்த குஞ்சு மொருமனையில்
பாக்கனையும் பார்த்திதுநம் பற்றென்னே-மூர்க்கர்
அரிபிரம ரிந்திரர்கள் வாழ்வநித்த நம்வாழ்
வொருபொருளோ வென்றொழிவா ரோ.

(இ-ள்.) ஊர்க்குருவியும் வளர்த்த குஞ்சும் ஒருமனையில் பாக்கனையும் பார்த்து நம்பற்று இது என்னே மூர்க்கர் எ-து, ஓர்மனையில் வாழாநின்ற ஊர்க்குருவியும், அது வளர்த்த குஞ்சுகளும், அம்மனையில் பூனையும், அப்பூனையினது குட்டிகளும், இளமையில் நல்வினைக்கீடாய்த் தம்முள் உறவாய்க்கூடி இருப்பதையும், முதிர்ந்தபோது தீவினைக்கீடாய் உறவாயிருந்த தாமே தம்முட் பகையாய்ப் பிரிந்து போவதையும், அம்மனையுள் இருந்து நாம் பார்த்திருந்தும் அங்ஙனம் வினைக்கீடாய் வரும் மனைவிமக்கள் முதலிய இப்பிரபஞ்சத்தினைத் துறவாது இதன்மேல் மனது பற்றி இருத்தல் இது என்னைகொலோ, (ஆயின் அவற்றைப் பார்த்திருந்தும் எல்லோரும் இல்வாழ்க்கையோடும் இருக்க இல்லையோ? நீர் இங்ஙனம் கூறியது என்னை?) எனின், அம்மனைவி மக்கள் முதலிய இப்பிரபஞ்சம் வினைக்கீடாய் வந்ததென்று அறியாது அப்பிரபஞ்சத்தோடுங் கூடிவாழ்பவர் மூர்க்கர்;

அரி பிரமர் இந்திரர்கள் வாழ்வு அநித்தம் நம் வாழ்வு ஒருபொருளோ என்று ஒழிவாரோ எ-து,—அப்பிரபஞ்சம் இருவினைக்கீடாய் வந்ததென்று அறிந்த உத்தமராயினோர் யாவர்க்கும் மேலாய அரி பிரமர் இந்திரர் முதலிய தேவர்கள் வாழ்வும் அநித்தியமென்று வேதாகமங்கள் கூறுதலான், நமது அற்பவாழ்வு இஃது ஓர் பொருளோ என்று கருதி, அப்பிரபஞ்சத்தைத் துறவாது ஒழிவாரோ, எ-று.

Digitized by Google

ஒருவன் நல்வினை அநுபவிக்குங் காலத்துத் தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றம் நட்பு இவர் முதலியோர் உறவாயிருந்து இதஞ்செய்வர், அவன் தீவினை அநுபவிக்குங் காலத்து அங்ஙனம் உறவா யிருந்தவர் தாமே பகையாய் அஹிதஞ் செய்வர் ஆகலின், இவர் இருவினைக்கீடாய் வந்தவரென்று அறிந்து துறக்கும்படிக்கு அவைகளை உவமை கூறினர்.

இத்திருவெண்பாவால் மனைவியாதி குடும்பம் வினைக்கீடாய் வந்தது அன்றித் தமக்கு உறவு அன்றென்பதும், அநித்தியம் என்பதும் அறிவித்தவாறு காண்க. (உ)

[இங்ஙனம் எல்லாவற்றையும் துறந்தவர் யாவர்? எனின் மேற்கூறுகின்றார்.]

பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்-வெட்ட
வெறுவெலும்பைநாய்கறண்ட வேந்தர்வரநாய்பார்த்
துறுமுவதைக் காட்டுவோ மோ.

(இ-ள்.) பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரியைப் பரவி விட்டுவிடமாட்டார் வெறு வீடர் எ-து,—அளவற்ற செல்வராயிருந்தும் அச்செல்வங்கள் எல்லாம் நிசறத் துறந்த பட்டினத்துப்பிள்ளை நாயனரையும், பத்திரகிரி நாயனரையும் தோத்திரம் பண்ணி, மனைவியாதிய பற்றுக்களை விட்டுத் துறக்கமாட்டார்கள் மிகுந்த மிடியராயிருந்தார்; (ஆயினும் மனைவி மக்கள் முதலாயினேரை யாம் விடுத்துத் துறந்தோமேல் அவரை அயலார் கைக்கொண்டு போகாரோ? எனின்,)

வெட்டவெறு எலும்பை நாய் கறண்ட வேந்தர்வர நாய் பார்த்து உறுமுவதைக் காட்டுவோமோ எ-து,—ஊன் சிறிதும் இன்றிய வெள்ளெலும்பை ஓர்நாய் தனதுபற்கொண்டு கறண்ட, அந்நாய் முன்னர் அரையர் எதிர்வர, அவ்வெலும்பை அவர்

Digitized by Google

கவர்ந்து கொள்வர் என்று கருதி அவரைப் பார்த்து உறுமு வதைப்போல், யாமும் காட்டுவோமோ, எ-று.

அளகேசனைப் போன்ற செல்வத்தினையும், அருந்ததிபோன்ற கற்பினையுமுடைய மனைவியையும், காமனைப் போலும் கட்டழகினையும், துறந்தோர் பட்டினத்துப்பிள்ளைநாயனாரும், பத்திரகிரிநாயனாரும் ஆகலின், அவரைத் துறந்தோர் என்று எடுத்துக் காட்டி, அம்மூவகையுள் ஒன்றேனும் இல்லாரும் அவரைப்போல் துறக்கமாட்டாமையால், "விட்டுவிடமாட்டார் வெறுவீடர்" என்றார். எலும்பு கறண்டும் நாய்க்குத் தனது எயிற்றில் அது தைத்த துன்பந் தெரியாது இன்பமாத் தோற்றல்போல வனிதாதி போகங்களாகிய துன்பத்தை ஆணவம் இன்பம்போல் மாறுபடுத்திக் காட்ட இன்பமாகக் கருதலான் "வெறுவெலும்பை நாய்கறண்ட" என்றார். தான்பற்றிய எலும்பை அரையர் கவர்வரெனக் கருதி அவரைப்பார்த்து உறுமுவதுபோல், தாம்பற்றிய குடும்பத்தைப் பிறர் கவர்வரெனக்கருதிக் கூறலான், "உறுமுவதைக் காட்டுவோமோ" என்றார்.

இத்திருவெண்பாவால் செல்வம் இளமை அழகு முதலானவற்றுள் சிறந்திருந்தும், அவற்றில் பற்று ஒரணுவளவும் இன்றி, அவற்றையெல்லாம் துன்பமென்று தரிசறக் கைவிட்ட பட்டினத்துப்பிள்ளைநாயனார் பத்திரகிரிநாயனார் போன்று துறந்தோரே, எல்லாவற்றையும் துறந்தோராவர் என்பதும், அச்செல்வம் முதலியவற்றுள் ஒன்றேனும் இன்றாகவும், துன்பந் தருதற்கு இடமாகிய மனைவியாதி குடும்பத்தை இன்பமெனக் கருதிக் கைவிடற்கு அஞ்சுபவரே ஆணவத்தால் மறைப்புண்டவராவர் என்பதும் அறிவித்தவாறு காண்க. (கூ)

[நீர் இங்ஙனங் கூறியவாறே துறந்தோர் பிறப்பு நீங்குவரோ ? எனின், மேற்கூறுகின்றார்.]

நாடுநகர் வீடுடையா டாய்தந்தை நட்புமக்கள்
மாடுகுலம் பொன்னுடம்பின் வாதனைகள்-கூடத்

Digitized by Google

தொடுத்தவலைக் கண்ணித் தொடக்கிதனை யிப்போ
விடப்பெறுவா ரேன்பிறப்பார் மேல்.

(இ-ள்.) நாடு நகர் வீடு உடையாள் தாய் தந்தை நட்பு மக்கள் மாடு குலம் பொன் உடம்பின் வாதனைகள் எ-து,—நாடும் நகரும் வீடும் மனைவியும் தாயும் தந்தையும் நட்பும் மக்களும் மாடும் சாதியும் திரவியமும் இவைமுதலிய உடம்பு வாதனைகளும் ;

கூடத் தொடுத்த வலை கண்ணி தொடக்கு இதனை இப்போது விடப்பெறுவார் மேல் ஏன் பிறப்பார் எ-து,— தாம் அகப்படப் பிணித்த வலையும் கண்ணியும் ஆகிய தொந்தனை என்றறிந்து, இத் தொந்தனையை இப்போது விடப்பெறுவார் இனிமேல் ஏன் பிறப்பார், எ-று.

உடம்பின் வாதனைகள் என்றமையால் ஆடை ஆபரணம் யானை குதிரை கவிகை சிவிகை சாமரை முதலியவும் கொள்க. இங்ஙனம் கூறிய எனதென்னும் போகப் பற்றை நீத்துத் தவஞ்செய்வோர்க்கு யானென்னும் தேகப்பற்றும் அறும், இத்தேகப்பற்று அறவே இவற்றை யான் எனதென்று புறத்து நின்ற போதம் அறும், இப்போதம் அறவே உள்நின்ற போதம் அசுத்தவாசனை பண்ணாது சுத்தவாசனை பண்ணும், இவ்வாசனையால் ஞானங்கிடைக்கும், இஞ்ஞானத்தால் வீடெளதாம் ஆகலின், "ஏன் பிறப்பார்மேல்" என்றார்.

இத்திருவெண்பாவால் போகவாதிகள் எல்லாம் பற்றறத் துறந்தோர் தேகவாதனையாதிகள் அற்று, ஞானத்தால் வீடடைவது மெய்ம்மை ஆகலின், அவர்க்கு இனி என்றும் பிறப்பு இன்று என்பது அறிவித்தவாறு காண்க. (௪)

[நீர் கூறிய மனை ஆதிய பற்றுக்களை எல்லாம் துறந்து பொன்னை மாத்திரம் பிடித்துக்கொண்டு தவஞ்செய்ய லாகாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

தின்னிற் றிமிரில் விடம்பிடித்துத் தீர்ந்துவிடும்
பொன்னை நினைக்கப் பொறுதுகாண்-பின்னை
மருந்தானு மந்திரத்தி னாலுந் தவிராப்
பெரும்பாவம் பெண்ணிற் பெரிது.

(இ-ள்.) தின்னில் திமிரில் விடம் பிடித்துத் தீர்ந்து விடும் பொன்னை நினைக்கப் பொறுது பின்னை மருந்தாலும் மந்திரத்தினாலும் தவிராப் பெரும் பாவம் எ-து,—கோபாதிகளாகிய திமிரினால் விடம் உண்டால், அவ்விடம் சிறிதுபோது தாழ்த்துத் தலைமீக்கொண்டு, பின்னர் மணிமந்திர ஔடதங்களால் தீர்ந்துபோம், பொன்னைக் காத்தானும் பற்றுது வாக்கானும் கூறுது மனத்தால் நினைக்கவே, அப்பொன்னுசையாகிய விடம் அரைக்கணமேனும் தாழாது, அந்நினைவினும் விரைந்து தலைமீக்கொண்டு, பின்னர் மணியானும் மருந்தானும் மந்திரத்தானும் தீராத பெரும்பாவம் ஆகலின்;

பெண்ணில் பெரிதுஎ-து,—நீ விடுக்கின்றேன் என்றபெண்ணுசை விடத்தைப் பற்ற இப் பொன்னுசை விடம் மிகவும் பெரிது; (இதனை மனத்தானும் நினையாது விடவேண்டும்).

துறந்தோர் பொன்பிடித்தால் அதனைப் யாதுகாத்தற்கு இடம் பிடிக்கவேண்டும்; அஃதன்றி, அப்பொன்னை வளர்த்தற்கு அவாத்தோன்றி, அபக்குவர்க்கு ஞானசாத்திரங்களைக் கூறி, பொன் கொடுத்தார்மேல் விழைவும், கொடாதார்மேல் வெகுளியும் தோன்றும், இவை தோன்றவே துறவால் வரும் தவப்பயனும் இன்றி, முன் பெண்ணோடுங் கூடிச் செய்த இல்லறப்பயனும் இன்றிக்கேடுவரும்; ஆகலின், "பெரும்பாவம் பெண்ணிற் பெரிது" என்ருர். காண்-அசை.

இத்திருவெண்பாவால் பொன் மனத்தால் நினைப்பினும் மாருமயக்கம் தருதலானும், ஈட்டல் ஆதியான் விழைவு வெகுளியாதிகள் அடுத்துத் தவப்பயன் அன்றி இல்லறப்பயனும் அழி

Digitized by Google

தலானும், பெண்ணாசையினும் பெரும்பாவம் தருவது ஆகலின், அதனைப் பற்றலாகாது என்பது அறிவித்தவாறு காண்க.

[இங்ஙனந் தேகாதி பிரபஞ்சம் எல்லாம் பொய் என்று நீர் சொல்லக் கேட்டதே அன்றி, மற்றியாவரும் சொல்லக்கேட்டிலேன், என்ற மாணாக்கனை நோக்கி, மேற்கூறுகின்றார்.]

செல்வ மிளமை யுடம்புபேய்த் தேரென்று
சொல்லுவதென் காணாரோ சுட்டதுபோய்-ஒல்லை
விடுவோர் பிறப்பிறப்பின் மீளார்கண் மீண்டால்
தொடுமோ சிவனைத் தொடா.

(இ-ள்.) செல்வம் இளமை உடம்பு பேய்த்தேர் என்று சொல்லுவது என் காணாரோ எ-து,—செல்வமும் இளமையும் உடம்பும் இவைமுதலிய பிரபஞ்சங்களும் கானற்சலம்போலப் பொய்யென்று யாம் கூறவேண்டுவது என்னை? அவை மெய் போலத் தோன்றி அழிவனவற்றைத் தாம் காட்சிப்பிரமாண மாகக் காணார்கொல்லோ; (ஆயின் எல்லோரும் ஞானத்தால் பிறப்பு அறுமென்று கூற, நீர் துறவால் பிறப்பறும் என்று கூறியது என்னை எனின்,)

சுட்டு அது போய் ஒல்லை விடுவோர் பிறப்பு இறப்பில் மீளார்கள் மீண்டால் தொடுமோ சிவனைத்தொடா எ-து,—தேகாதி பிரபஞ்சங்களை யான் எனது என்று சுட்டிஅறியும் இச்சுட்டுப்போதம் போய், அப்பிரபஞ்சத்தை சீக்கிரத்தில் விட்டுத் துறப்போர் பிறப்பிறப்பில் மீண்டு வாரார்கள், ஞானக்குறைவினால் மீண்டார்களேனும், (முன் துறந்து தவம்பண்ணிய வாசனையால் அப்பற்றுக்களைக் கடந்திருப்பரே அன்றி, அவைப் பற்றித் தீண்டுமோ தீண்டாது ஆயினும், பிறப்பில் மீண்டோரைத் தீண்டாதோ எனின், அவர்) சிவனைப்போலும் ஒன்றோடும் பற்றறுதலுடையார் ஆகலின், தீண்டாது, என்றவாறு.

Digitized by Google

இனி அநித்திய விவேகந்தோன்றிய அக்கணமே தாழ்த்தி ராது எல்லாவற்றையும் விடவேண்டும் ஆகலின், "ஒல்லைவிடு வோர்" என்றார். முற்பிறப்பில் அவா உடையார்க்கு இப்பிற ப்பினும் அது தொடர்தல்போல், முற்பிறப்பில் அவா அறுதி உடையார்க்கு இப்பிறப்பினும் அவ் அவா அறுதியே தோற் றும் ஆகலின், "சிவனைத்தொடா" என்றார்.

இத்திருவெண்பாவால் உடம்பு முதலிய பிரபஞ்சந் தோன் றி அழிவது பிரத்தியக்ஷமாக இருத்தலின், கானற் சலம் போ ன்று அழிவதென்று ஒருவர் கூறக் கேட்கவேண்டுவது இன் றென்பதும், இங்ஙனம் பிரத்தியக்ஷமா யிருப்பினும் அறியார் அஞ்ஞானிகள் என்பதும் சுட்டறிவு போய்ப் பிரபஞ்சத்தை அநித்தியமென்று அறிந்து விரைந்து விட்டுத் துறப்பதே ஞா னமென்பதும், இத்துறவுடையோர் ஈண்டு மீண்டும் பிறவார் என்பதும், தவக்குறைவால் மீண்டார் ஆயினும் ஒன்றினும் பற்றுதல் அற்றிருப்பர் என்பதும் அறிவித்தவாறுகாண்க. (௬)

[இந்த அவா அறுதியினால் வரப்பட்ட இன்பம் என்னை ? என்ற மாணாக்கனை நோக்கி, மேற்கூறுகின்றார்.]

ஆசையினா லற்பசுக மாயழிந்தாற் பேரின்பம்
ஆசையின்போக் கென்றறிய லாகாதோ-ஆசை
நளிகைக் கழுக்குவந்த நாசமென நாடித்
தெளியப்போ மற்றிவையைந் தும்.

(இ-ள்.) ஆசையினால் அற்பசுகம் ஆய் அழிந்தால் பேரின்பம் ஆசையின் போக்கு என்று அறியல் ஆகாதோ எ-து,—ஆசை யினாலே போதம் சகமுகமாய்ச் சென்று விடயங்களில் அழுந்த தமக்கு அவற்றால் அற்பமாய சுகந்தோன்றி அழியும் ஆனால், இவ்வாசை நாசமே சிவத்தில் தோன்றும் பேரின்பம் பெறுதற் கு ஏது என்று அறியலாகாதோ ? (ஆயின், அவ்வாசை போம் ஆறு எங்ஙனம் ? எனின்;)

Digitized by Google

ஆசை நளிகைக்கு அழுக்கு வந்த நாசம் என நாடித்தெளிய மற்று இவை ஐந்தும் போம் எ-து,—அவ்வாசை போதத்தின் கண் ஏறுவது நெய்யாதி வார்த்து அடைக்கும் மூங்கிற் குழாய்க்கு அழுக்கு வந்த நாசம்போல, தமக்கு நாசமாம் என விசாரித்தறிய, அவ்வாசையின் போதமாய் விடயங்களிற் பிரிந்து செல்லும் இவ்வைந்து அவாவும் நீங்கும், எ-று.

ஆன்மா ஆசையினால் விடயத்தில் அழுந்திச் சிற்றின்பம் பெறுதல்போல், அவ்வாசை நாசத்தால் சிவத்தில் அழுந்திப் பேரின்பம் பெறும் ஆகலின், "பேரின்பமாசையின் போக்கென் றறியலாகாதோ" என்றார். தேன் நெய் எண்ணெயாதி வார்க்கும் மூங்கிற்குழாய்ச் சிறு துவாரத்தின்கண் மாவட்டை முதலிய நுழைந்தால் அதில் சுழல்வதே அன்றி, அழுக்கினால் மீளமாட்டா ; ஆகலின், முன்போல் தேனாதிவார்த்து அங்கிகரியாது அதனைப் புறம்பாய் விடப்படும். அதுபோல், ஆசை போதத்தில் ஏறி மிகுந்தபோது எவ்விதத்தானும் மீளாது; அதனால், அப்போதத்தில் வீட்டின்பத்திற்கு ஏதுவாய துறவு மெய்யுணர்வு முதலியநற்குணங்கள் ஏறா, இக்குணங்களேறாமையின் முன்போல் பிறவித் துன்பத்தையே பெறும். ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார். நளிகையில் மாவட்டையாதி நுழையும்போது இன்பம்போல் எளிதில் நுழைந்து மீளமாட்டா. அதுபோல், போதத்தின்கண் ஆசை ஏறும் போது இன்பம்போல் தோன்றி, எளிதில் ஏறி மீளாமைக் குங்கொள்க. நளிகை என்பது மூங்கிற்குழாய், அது திசைச் சொல்.

இத்திருவெண்பாவால் அவாவினால் அற்ப இன்பம் பெறுதல்போல் அவா அறுதியால் பேரின்பம் வரும் என்பதும், அவாவினால் தமக்கு நேரிடும் அனர்த்தத்தை உண்மையாய் விசாரித் தறியின் அவ்வவா அறுதிவரும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (எ)

Digitized by Google

[இனித் துறவினது முடிவும், துறந்துசெய்யும் தவத்தினது முடிவும், அடியேற்கு அருளிச்செய்ய வேண்டும் என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.]

உதயந் தொழப்போவார்க் குள்ளும் புறம்பும்
புதையவொளி வீசுமா போலே - பதிமோகி
தீக்காட்டி லேகொடுக்கச் சென்றவா கண்டக்கால்
தாக்காத தன்றோ தவம்.

(இ-ள்.) உதயம் தொழப் போவார்க்கு உள்ளும் புறம்பும் புதைய ஒளி வீசும் ஆறுபோலே எ-து,— சூரிய உதயம் தொழச் செல்வோர்க்கு உள்ளும் புறம்பும் இருள் மறைய ஒளி வீசுமாறுபோலே; (மனை சுதர் முதலிய பற்றுக்கள் எல்லாவற்றையும் விட்டு, அவற்றின்மேல் உள்ளத்தெழும் அவாவினையும் அறுத்து, கண்டவிடயங்கள் மேல்சென்று பற்றும் இந்திரியங்களையும் அடக்கி, உள்ளும் புறம்பும் ஆசையாகிய இருளற விராசையாகிய ஒளிவீச விற்றலே துறவினது முடிவு,)

பதி மோகி கொடுக்கத் தீக்காட்டிலே சென்ற ஆறு கண்டக்கால் தாக்காது அன்றோ தவம் எ-து,—தனது புருடன் மேல் அதிமோகியா யிருந்துளாள் அவன் மரித்தகாலே அவனுக்குத் தன்னைக் கொடுக்கச் சுடுகாட்டிற் சென்றவாறு கண்டால் (அவளைப்போலும் தற்போதத்தைச் சிவனுக்கு ஊணுகக் கொடுத்துத் தாம் ஒன்றேடும்) தாக்கற்றிருத்தல் அன்றோ தவத்தினது முடிவு, எ-று.

உதயந் தொழுவார்க்குக் கண் விழித்தபோதும் இமைத்தபோதும் ஒளிவீசுதல் போலும், துறந்தோர்க்குப் பொறிகளால் விடயங்களைக் கண்டபோதும் காணுதிருந்தபோதும் உள்ளும் புறம்பும் நிராசையோடு இருக்கவேண்டும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர். தவமென்றமையால் துறவு வருவிக்கப்பட்டது.

Digitized by Google

இத் திருவெண்பாவால் உள்ளும் புறம்பும் நிராசையோ டிருப்பது துறவினது முடிவென்பதும், போதம் ஒழிந்து ஒன் றோடும் தாக்கற்றிருப்பது தவமுடி வென்பதும் அறிவித்த வாறு காண்க. (அ)

[இங்ஙனம் நிராசையோ டிருந்தோர்க்குத் தற்போதம் அறு மோ? என்ற மாணாக்கனை நோக்கி, மேற்கூறுகின்றார்.]

ஊமைமணி யாட்டுகினு மோசையழிந் தாற்போல
ஆமதுபோ னிற்க வரிதுகாண்—ஆமாய்
வளர்ந்த வசத்தையெலா மாளமரக் காலால்
அளந்தெறிந்து போட்டதுபோ லாம்.

(இ-ள்.) ஊமை மணி ஆட்டுகினும் ஓசை அழிந்தால் போல் ஆம் எ-து,—நாவிழந்த மணியைப் பிடித்து அசைப்பினும் ஓசை ஒழிந்து நின்றாற்போல ; (பஞ்சவிடயங்களும் வலியவந்து அடுப்பினும் அதிதீவிர பக்குவர்க்குப் போதங் கலங்காது நிரா சையே) உண்டாம் ;

அதுபோல் நிற்க அரிது ஆம் ஆய் வளர்ந்த அசத்தை எ லாம் மாள மரக்காலால் அளந்து எறிந்து போட்டது போல் ஆம் எ-து,— அவர் அங்ஙனம் நிற்குமதுபோல் நிற்க மற்றைய பக்குவர்க்கு மிகவும் அரிது, (நாளு உபாயத்தானும் அங்ங னம்) நிற்கவருமாயின் ஆசையால் முன்னர்ப்போத மேலிட்டு மேன்மேல் வளர்ந்த அதனது சேட்டை எல்லாம் இறந்துபோ ம்படி அறிவாகிய மரக்காலால் இவ்வளவென்று அளந்து புறம் பாய் எறிந்து போட்டது போல் ஆம், எ-று. காண்-அசை.

நிராசையோ டிருப்போரைக் கருவிகள் சேட்டியாது நீங் கும், அக்கருவிகள் நீங்கவே திருவருள் தோன்றும், அத்திரு வருளால் போதத்தை ஈதென்று அளவிட் டறிந்து ஒழிக்க லாம் ஆகலின், இங்ஙனம் உவமைகூறினர்.

Digitized by Google

இத் திருவெண்பாவால் நிராசை உடையோனை வலிந்து விடயங்கள் அடுக்கினும் போதம் அசையாது ஆகலின், நிராசை வரின் போத ஒழிவு தானே வரும் என்பதும், இங்ஙனம் இருத்தல் மற்றைய பக்குவர்க்கு அரிதென்பதும், அங்ஙனம் ஆயினும் அவர்க்கும் உபாயத்தான் அவாவறுதி வருமாயின் அப்போதச்சேட்டை அளவிட்டெறியப்படும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (௬)

[தநுகரண புவன போகங்களில் சிறிதேனும் பற்றின்றி நிற்றற்கு உபாயம் எங்ஙனம்? என்ற மாணாக்கனை நோக்கி, மேற்கூறுகின்றார்.]

தனுவாதி நான்கினுக்குஞ் சார்வழிந்து சற்றும்
நினையா திளைப்பாறி நின்றால்-மனையாமோ
காந்தக் கடத்தூசி காற்றற்ற தீபமென
ஆந்தத் துவங்களய லாம்.

(இ-ள்.) தனு ஆதி நான்கினுக்கும் சார்வு அழிந்து சற்றும் நினையாது இளைப்பு ஆறி நின்றால் மனை ஆமோ எ-து,—போகமும் நானன்று புவனமும் நானன்று தநுவும் நானன்று கரணமும் நானன்று என்று உள்ளபடி அறிந்து, வியதிகளைந்து அத்தநுவாதி நான்கினிடத்தும் யான் எனதென்று சார்ந்து நின்ற போதச்சார்வுகெட்டு, அவற்றை மீட்டுச் சற்றும்பற்றாது அருளில் இளைப்பாறி அசைவற நின்றால், மனையாகிய புவனத்திடத்தும், அம்மனையைப் பற்றியிருந்த வனிதாதி போகத்திடத்தும், முன்போல் பற்றுண்டாமோ? (ஆயின் புவன போகங்களில் பற்றின்றி நிற்பினும் தநுகரணங்களிற் பற்றின்றி நிற்பது எங்ஙனம்? எனின்,)

காந்தக் கடத்து ஊசி காற்று அற்ற தீபம் என ஆம் தத்துவங்கள் அயல் ஆம் எ-து,—காந்தக் கடத்திற்கு எதிர்முகமாய போது பற்றியும், அதனுட் கிடந்தபோது பற்றாதும் இருந்த

காந்தக்கடத்து ஊசிபோலும், காற்றில் இருந்தபோது அசைந்தும் காற்றின்றியபோது அசையாதும் இருந்த காற்றற்ற தீபம்போலும், அத்தநுகரணங்களைத் தனக்கன்னியமாய்க் கண்டு நீங்கி நிற்பின், அவற்றோடும் தாக்கற்று நிற்பது உண்டாம், (அவற்றோடும் தாக்கற்று நிற்கவே) மற்றைய தத்துவங்களும் அயலாய் நீங்கும், எ-று.

தநுவாதிகளில் காங்குபோல் சுழன்ற தன்மை திருவருட்கண் நின்றபோது இன்மையால், "இளைப்பாறி" என்றார். காந்தக்கடத்திற்கு எதிர்முகமாயபோது பற்றிய ஊசி அதனுட் கிடந்தபோது பற்றாதிருந்ததுபோல், சகமுகமாய் நின்று தேகத்தை யானென்று பற்றிய போதம் அகமுகமாய் நின்று திருவருளை அடைந்தபோது அத்தேகத்தை யானென்று பற்றாது ஆகலின், "காந்தக்கடத்தூசி" என்றும், அப்புவன போக தநு கரணங்களைப் போதம் பற்றாது நின்றபோது கரணம் தற்சேட்டையற்று அடங்கும், அப்போது போதந் திருவருளோடுங் கூடிக் காற்றற்ற தீபம்போலாகி மீட்டும் கரணத்தோடுங் கூடாது ஆகலின், "காற்றற்றதீபம்" என்றும், கரணங்களறவே அக்கரணங்களினது சேட்டைக்கு ஏதுவாய கலாதிகளும், அக்கலாதிகளைப் பிரேரகம்பண்ணும் சுத்த தத்துவங்களும் நீங்கும்; ஆகலின், "தத்துவங்களயலாம்" என்றுங் கூறினர்.

இத்திருவெண்பாவால் புவனபோகங்களைத் தான் அன்றென்று உள்ளபடி அறிந்து களைந்து, அவற்றின்கட் சார்ந்து நின்ற போதச்சார்வு கெட்டு, அருட்சார்பி னின்றால் புவனபோகப் பற்றறும் என்பதும், தநு கரணங்களைத் தனக்கு அன்னியமென்று அறிந்து, அவற்றோடும் தாக்கற்றுத் தனக் கன்னியமான அருளாய் நிற்பின் அத்தநு கரணப் பற்றறும் என்பதும், இங்ஙனம் அறவே மற்றைத் தத்துவங்கள் தாமே அறுமென்பதும் அறிவித்தவாறு காண்க. (௬0)

Digitized by Google

[உத்தம ராயினோர் கற்புடைய மனைவியைத் துறப்பரோ ? என்ற மாணுக்கனை நோக்கி, மேற்கூறுகின்றார்.]

நாயலகை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட
பாயசமு மெய்ப்பரிசம் பாவைமிகச்-சாயாநீர்
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வண்டிவையின்
சாட்சியைக்கண் டார்துறவா தார்.

(இ-ள்.) நாய் அலகை நெய் விரும்பி நக்குவதும் நஞ்சு இட்ட பாயசமும் மெய்ப் பரிசம் பாவை மிகச் சாயா நீர் வேட்கை எ-து,—நாயானது வாள்வாயில்தடவிய நெய்யைவிரும்பி அவ்வாள்வாயை நக்குவது போலும், விடங்கலந்த பாயசத்தை ஒருவன் சுவையென விரும்புவது போலுமாகும், பாவையாது மெய்ப்பரிசத்தை இன்பமாய் விரும்புதல் ஆகலினும், பொய்யாகிய அப்பாவையாது மெய்ப்பரிசத்தை மெய்யாகக்கண்டு அநுபவிக்க விழைதல் மிகவும் பொய்யாகிய கானல் நீரை மெய்யாகக் கண்டு தாகத்திற்கு உண்ண விரும்புதல் போலாம் ஆகலினும் ;

அசுணம் இபம் விட்டில் மீன் வண்டு இவையின் சாட்சியைக் கண்டு துறவாதார் ஆர் எ-து,—அசுணப்புள் சத்தத்தானும், யானை பரிசத்தானும், விட்டிற்பூச்சி உருவத்தானும், மீன் இரதத்தானும், வண்டு கந்தத்தானும், கெடுமென இவைகளைச் சாட்சியாய்க் கண்டுறலானும், இவ்வைந்து விடயங்களும் உளவாகிய அப் பாவையைத் துறவாதார் யாவர் எ-று.

வாள்வாயின் நெய்யை நக்கின நாய்க்கும், நஞ்சிட்ட பாயசம் உண்டோனுக்கும், முன்னர் அணுவளவின்பம்போல் தோன்றி, பின்னர் அதனால் மலையளவு துன்பம் வருவதுபோல், அநுபவிக்கும் போது சிறிது இன்பம்போல் தோன்றிப் பின்னைத் துன்பம்வரும் என்பதும், பொய்யாய்த் தோன்றும் கானல்நீரை மெய்யாய்க்கருதி உண்ணத் தொடங்கினோனைப்

Digitized by Google

போல், பொய்யாய்த் தோன்றும் பாவையரை மெய்யாய்க்கரு தி அநுபவிக்கத் தொடங்குவதென்பதும், ஓரோர்விடயத்தை விழைந்து ஒவ்வொன்று கெடுமெனில் ஐந்துவிடயங்களும் உளவாகிய பாவையரை விழைந்தால், அவரால் வருங் கேட்டிற்கு அளவின்றென்பதும் இதனாற்காண்க.

இத்திருவெண்பாவால் பெண்கள் இன்பம் மிகச் சிறிதென்பதும், அதனால்வருந் துன்பம் மிகப்பெரி தென்பதும், அவர் கூட்டுறவு மாயையென்பதும், அவர்கள் செய்யும் ஐம்புல நுகர்ச்சி பெருங்கேட்டைத் தருமென்பதும், இங்ஙனம் அறிந்தோர் தம்மனைவி அருந்ததிக் கற்பினள் ஆயினும் துறப்பரென்பதும், அறிவித்தவாறு காண்க. (கக)

[எல்லோரும் மனைவி ஆதிய குடும்பத்தோ டிருந்து, இன்பங்களை அநுபவித்துக்கொண்டு பூரிப்போடும் இருக்க, அக்குடும்பத்தை நீர் துன்பமென்றீர் இஃதென்னை எனின், மேற்கூறுகின்றார்.]

இடும்பைக்கே கொள்கலமா யேழ்நரகுக் கீடாம்
குடும்பத்தைக் குற்ற மறைக்கின்-நடுங்காரோ
ஐவர்க்கொருவ னறுதொழிலைச் செய்தலால்
மெய்யைப்பொய் யாக்கி விடும்-

(இ-ள்.) இடும்பைக்கே கொள்கலம் ஆய் ஏழ் நரகுக்கு ஈடு ஆம் குடும்பத்தைக் குற்றம் மறைக்கின் நடுங்காரோ எ-து,— அஞ்ஞானிகள் இம்மைக்கண்ணே துன்பங்களை எல்லாம் தாம் அநுபவித்தற்கு ஏற்றுக்கொள்வதாய் கப்பலாய், மறுமைக்கண்ணே எழுவகைப் பிறவியாகிய எழுவகை நரகத்தையும் உண்டாக்கும் கனதையினையுடைய மனை சுதர்முதலிய குடும்பத்தை இங்ஙனம் இகபரங்களினும் துக்கத்தைத் தருவதென்று அறியார், இங்ஙனம் அறியவொட்டாது ஆணவமாகிய குற்றம் அவரை மறைத்தலால், இவ்வாணவக் குற்றம் நீங்கினோர் குடு

ம்பக் குழாத்தைக் கண்டாலும் உள்ளம் வெருவி நடுக்கம் உறு ர்கொலோ ஆயின் ; (நீர் மெய்யென்று கூறிய சிவம் ஒருவர்க்கும் தோன்றாதிருப்பான் ஏன் என்னின்,)

ஐவர்க்கு ஒருவன் அறுதொழிலைச் செய்தலால் மெய்யைப் பொய்யாக்கிவிடும் எ-து,—ஐந்து இந்திரியங்கட்கும் ஓர் முதல்வனாகிய ஆன்மா அவ் விந்திரியங்களால் அறிந்து அநுபவிக்கும் விடய சுகத்தின் பொருட்டு உழவு முதலிய அறுவகைத் தொழிலில் முயற்சிப்படலான் இம்முயற்சி அச்சிவத்தைத் தெரியவொட்டாது பொய்யாக்கிவிடும் (இதனை நீ அறிதி), எ-று.

குடும்பத்தால் இம்மைக்கண் தேகதுக்கம் மனோதுக்கங்கள் இடையறாது வருதலின், "இம்மைக்கே கொள் கலமாய்" என்றும், இக்குடும்ப வாசனையால் மறுமைக்கண் பிறவிகள் தொன்றுதொட்டு வருமாகலின், "ஏழ்நரகுக்கீடாம்" என்றுங் கூறினர். "அறுதொழிலைச் செய்தலால் மெய்யைப் பொய்யாக்கி விடும்" எனவே குடும்பத்தின் பொருட்டுச் செய்யும் அறுவகைத் தொழில்களின் முயற்சியை விட்டுச் சிவயோக முயற்சியில் தொடங்கின் மெய்ப்பொருள் தோற்றுமென்பதாயிற்று. அறுவகைத் தொழில்களாவன—உழவு, தொழில், வாணிகம், எழுத்து, சிற்பம், பரதம் இவை ஆறுமெனக்கொள்க.

[உத்தம பக்குவராயினோர் குடும்பத்தோடும் கூடியிரார் என்று இன்னுங் கூறுகின்றார்.]

குரங்கிற் றனிச்சிக் குடும்பக் குழாமும்
பெருங்குப்பையிற்கரடிப்பெண்டும்-பொருந்துவரோ
காலனுந் தீயுங் கடலுமிருங் கல்லுமாய்
மேலு நரகாய் விடும்.

(இ-ள்.) குரங்கின் தனிச்சிக் குடும்பக் குழாமும் பெருங்குப்பையில் கரடிப் பெண்டும் பொருந்துவரோ எ-து,—ஓர் குரங்கைப் பல குரங்கு வந்து சேட்டித்தல்போல, தாய் தந்தை

Digitized by Google

சுதர் சுற்றம் முதலியோர் தம்மை வந்து வாதிக்கும் குடும்பக் கூட்டத்தையும், அக்குடும்பக் கூட்டமாகிய பெரிய மலக்குப் பைக்கண் காடிபோலும் பற்றப்பட்ட பெண்டிராது கூட்டுற வினையும், பொருந்தி யிருப்பரோ உத்தமராயினோர்? (ஆயின் எல்லோரும் அவரோடுங்கூடி யிருக்க இல்லையோ? இவனொன் னை அங்ஙனம் இராதுபோவது? எனின்.)

காலனும் தீயும் கடலும் இருங்கல்லும் ஆய் மேலும் நரகாய் விடும் எ - து,—அக்குடும்பக் கூட்டம் காலனைப் போலும், தீ யைப்போலும், கடலைப்போலும், பெரிய மலையைப்போலும், இம்மைக்கண்ணே துன்பந்தருவதாய் மறுமைக்கண்ணும் அத ேனாடுங் கூடியிருந்த வாசனையால் பிறப்பாகிய நரகத்தையும் தருவதாய்விடும் (என அறிந்து அதனோடுங் கூடியிரார்,) எ-று.

சோறு கூறை முதலியன கொடுக்கும்போதும் கொடாத போதும் வரும் பிணக்கானும், அவற்றிற் கேதுவாகிய திரவி யந் தேடுதலானும், அதனைப் பாதுகாத்தலானும், அவர்க்கு வியாதி ஆதி துன்பம் அபிமானபங்கம் வந்தகாலையினும், அ ையர் கலகம் அற்பகாலம் வந்தகாலையினும், அவ ரிறந்த காலை யினும், இவை முதலியவற்றால் அக்குடும்பத்தால் தேகத்துக் கும் மனோதுக்கங்கள் இடையறாது வருதலின், "குரங்கிற்று னிச்சிக் குடும்பக்குழாம்" என்றார். இத்துன்பக் குழுவில் காடிபோலும் குணத்தானும் செய்கையானும் இழிவாய பெ ண்டிரைக் கூடுவரோ என்பதனை, "பெருங்குப்பையிற் காடி பெண்டும் பொருந்துவரோ" என்று குறிப்பாற் கூறினர். காலன் உயிர்களைப் பாசத்தால் பிணித்துக்கொடு சென்று நி றையத்துள் வீழ்த்தி வருத்துதல்போல், துறந்து செல்கின்றே னென்று இரண்டடிச் சென்றானை மனை சுதர் முதலியோர் காசரணங்களைப் பற்றிக்கொண்டு ஓலிட்டழுது அவனுள்ளம் இளகப்பண்ணி மீட்டுக் கொடுவந்து குடும்பமாகிய துன்பத்து ள் அகப்படுத்தி வருத்துதலின், "காலனும்" என்றும், ஒருவ

Digitized by Google

னைத் தீச் சூழ்ந்துகொண்டதுபோல் சூழ்ந்து கோடலின், தீ என்றும், நடுக்கடலில் வீழ்ந்தோனுக்குக் கரை கண்டு ஏறக் கூடாததுபோல், குடும்பசாகரத்தில் வீழ்ந்தோனுக்கு இக்கரை கண்டேறக்கூடாது ஆகலின், "கடல்" என்றும் மலை யிருந்தி க்கொண்டதுபோல் குடும்பபாரந் தன் தலைச்சுமையா யிருத் தலின், "இருங்கல்" என்றும், இறக்கும்போது உயிர்க்கு எந் தவாசனை இருந்தது அந்த வாசனையோடும் சென்று பிறத்த லின், "மேலு நரகம்" என்றுங் கூறினர்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் மனைவியாகிய குடும்பம் துன்பங்கட்கும் பிறவி வாதனைகட்கும் உறைவிட மென்பதும், இதனை இங்ஙனமென்று ஆணவமறைப்பான் அஞ்ஞானிகள் அறிந்தில ரென்பதும், ஞானிக ளிதனைக் காணினும் கேட்கி னும் நடுங்குவ ரென்பதும், இக்குடும்ப முயற்சி சிவத்தை அறி யவொட்டாது மறைக்கு மென்பதும், உத்தமபக்குவர் விடாது சூழ்ந்து வாதிக்கும் இக்குடும்பவாதனையான் வரும் நட்டங்களை முற்றும் அறிந்து அதனை அக்கணத்தே விடுவரென்பதும், அறி வித்தவாறு காண்க. (௧௩.)

[இங்ஙனந் துன்பமென்று அறிந்து, துறந்து செல்வோர்தம் மை நம்பியிருந்த குடும்பத்தைப் பாதுகாத்தற்குச் சகோதரர் முதலாயினருள் ஒருவனைத் துணையாகவைத்து, பின்துறந்து சேறலாகாதோ ? எனின், மேற் கூறுகின்றார்.]

கன்னனைப்போற் றன்னை யறிவனே காக்கையுடன்
மன்னு குயில்போன வாறுபோல்-அன்னியமாய்ப்
பேசாது போன துறவி பிறப்பறுப்பார்க்
காசானு மென்றே யறி.

(இ-ள்.) கன்னனைப் போல் தன்னை அறிவனே காக்கையு டன் மன்னு குயில் போன ஆறு போல் அன்னியம் ஆய்ப் பே சாது போன துறவி எ-து,—யான் இன்னசாதி இன்ன குலம்

தாய்தந்தை இன்னாரென்று தனது குலகுடும்பங்களை அறியாத கன்னனைப்போலும், உத்தம பக்குவன் யான் இன்னசாதி இன்னகுலம் இன்னார் தாய் தந்தை யென்று தனது குல குடும்பங்களைப் பகுத்தறிவனோ? இங்ஙனம் ஒன்றையும் பகுத்தறியாது காக்கையுடன் பருவம் வருமளவும் தனது இனம்போல் கூடிச்சென்று, பருவம் வந்தகாலை அதற் கன்னியமாய்ப் பேசாது சென்ற நிலைபெற்ற குயில்போலும், அனித்திய விவேகம் வருமளவும் அவரினம்போல் கூடியிருந்து, அந்த விவேகம் வந்தகாலை அவர்க் கன்னியமாய்ப் பிரிந்து அவரோடுஞ் சொல்லாது சென்ற துறவியே மெய்த்துறவி ;

பிறப்பு அறுப்பார்க்கு ஆசானும் என்று அறி எ-து,—அத்துறவி பிறப்பறுக்கும் பொருட்டுத் துறந்தார்க்கு ஆசாரியனும் ஆவன் என்று நீ அறிதி, எ-று.

தருமன் முதலிய துணைவரையும் குந்தியாகிய தாயையும் கண்டிருந்தும் கன்னன் அறியாததுபோல், இவன் குடும்பத்தாரைக் கண்டிருந்தும் அனித்திய விவேகத்தால் பொய்யாய்க் கண்டான் ஆகலின், "கன்னனைப்போற் றன்னை யறிவனோ" என்றும், குயில் காக்கையோடு கூடியிருந்தபோதும் தன் குரலைக்காட்டினால் கொத்துமென்று அடங்கியிருந்து, செல்லும் போதும் கூவாது சென்றதுபோல், குடும்பத்தோடு கூடியிருந்த போதும் தான் துறந்து, சேறலை அவரோடும் சொன்னாற் பற்றுவரென்பது அறிந்து, சொல்லா தடங்கியிருந்து, செல்லும்போதும் சொல்லாது சென்றமையால், "குயில்போன வாறுபோற் பேசாது போன துறவி" என்றுங் கூறினார். அறிவும் துறவும் உள்ள ஞானி சிறப்புளன் ஆகலின், இவனை "ஆசானும் என்றார்." ஏ-அசை.

இத்திருவெண்பாவால் குலமுதலியவற்றின் அபிமானம் இன்றி, அனித்திய விவேகம் வருமளவும் அவற்றோடு உண்ணுக்குதல் அற்றுக் கூடிநின்று, அந்த விவேகம் வரின் ஒருவரோ

Digitized by Google

ம் விடைபெறாது சென்றவனே துறவிகளுட் சிறந்தவன் என்று அறிவித்தவாறு காண்க. (௧௪)

[இங்ஙனம் துறந்து செல்வாரை மாதா பிதாக்கள் வந்து தடுத்தால் எங்ஙனம் செல்வார்? எனின், மேற்கூறுகின்றார்.]

நித்திரைசெய் வீட்டி னெருப்பும் பெரும்படையும்
முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே-பித்தரைப்போல்
நில்லென்று சொன்னாலு நிற்பரோ வப்படிகாண்
இல்லறத்தை நீத்தா ரியல்பு.

(இ-ள்.) நித்திரை செய் வீட்டில் நெருப்பும் பெரும் படையும் முற்றி முற்றத்தே புறப்பட்டார் நில் என்று சொன்னாலும் பித்தரைப்போல் நிற்பரோ எ-து,—தாம் நித்திரை பண்ணுகின்ற வீட்டினுள்ளே நெருப்பும் பெரும் படையும் செறிந்தவர (விழித்து அவற்றைக்கண்டு வெருண்டு அவ்வீட்டின் வாயில் கடந்து) முன்றிலில் புறப்பட்டார் தமக்கு அனுகூலராயினும் அவற்றின் நடு நிற்பீரென்று அறியாது கூறினும், பித்தரைப்போலும் அவர் மொழியை உட்கொண்டு கணப்போதாயினு நிற்பரோ;

அப்படி இல் அறத்தை நீத்தார் இயல்பு எ-து,—(அவர் எப்படி நில்லாது ஓடிச் செல்வரோ) அப்படியே மாதாபிதாக்கள் தடுப்பினும் நில்லாது இல்வாழ்க்கையைத் துக்கமாகக் கண்டு துறந்து செல்வாரது முறைமையும் ஆம், எ-று.

குடும்பம் துக்கமென்று அறியாதபோது அதனோடுங் கூடியிருப்பார் என்பதும், துக்கமென்று அறிந்தபோது அதனைத் துறந்து செல்வார் என்பதும், துறந்து செல்லும்போது யாவர் தடுப்பினும் நில்லார் என்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க. காண்-அசை. (௧௫)

[இங்ஙனம் துறந்து செல்வோர் இயல்பு இன்னுங் கூறுகின்றார்.]

Digitized by Google

கட்டு நெகிழ்த்துவிட்ட கள்ளனைப்போற் கங்குலி ற்பேய்,—வெட்டு களத்தின் வெருவினர்போல்-முட் டத்,—தொடர்ந்த படைபிழைத்துத் தோன்றப்போ வார்போல்,—அடங்கத் துறந்தேகு வார்.

(இ-ள்.) கட்டு நெகிழ்த்துவிட்ட கள்ளனைப்போல் கங்குலில் பேய் வெட்டுகளத்தின் வெருவினர்போல் முட்டத் தொடர் ந்த படைபிழைத்துத் தோன்றப் போவார்போல் எ-து,—பொ ருள் திருடிய கள்வனைச் சிலர் வந்து பற்றிப் பிணித்து வருத்த, அவருள் அருள் உளத்தொருவன் வந்து, அப்பிணியை அவிழ் த்துவிட்ட காலையில் விரைந்துசெல்லும் அக்கள்வனைப்போலு ம், அரை யிரவில் பெரும்பேயைக்கண்டு வெருவினர் விரை ந்து சேறல் போலும், உயுத்தகளத்தின் வெருவினர் விரைந்து சேறல் போலும், தம்மைப் பிடிக்கப் பின்தொடர்ந்த படைக் குத் தப்பி மிகவுங் கைகடந்து செல்வார்போலும்,

அடங்கத் துறந்து ஏகுவார் எ-து,—தாய் தந்தை மனை சுற் றம் முதலிய குடும்பக்கூட்டங்களை எல்லாம் ஒருங்கே துறந்து செல்வார் (அன்றி அவர்க்கு ஓர் தடையும் இன்று) எ-று.

மலபரிபாகம் வாராமுன் தாம் செய்த இருவினைக்கீடாய்க் குடும்பபாசத்தால் பிணிப்புண்டு வருந்துவர் என்பதும், அப்ப ரிபாகம் வந்தகாலைத் தோன்றாநின்ற அருட்சத்தி அக்குடும்ப பாசந் துக்கமென்று அறிவிக்க அறிந்து துறந்து செல்வார் என்பதும், அப்போது இரவில் தோன்றும் பேய்போலும் உயு த்தகளம்போலும் குடும்பம் அவர்க்குத் தோற்றுமென்பதும், அக்குடும்பக் குழாங்கள் பின் தொடர்வனென்று அறிந்து தூர தேசத்திற் செல்வானென்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க. படை, சேனை.

இவ் விரண்டு திருவெண்பாவானும் குடும்பபாரம் பொறுத் தற்கு ஆற்றாது வருந்தி இழுத்துவிட்டு விரைந்து செல்வோர்

தாய் தந்தை ஆதியர் தடுத்தற்குச் சிறிதும் உட்படாரென்று அறிவித்தவாறு காண்க. (கக)

[தாம் துறந்துபோதற்குக் குடும்பத்தார் சம்மதித்தால், அப்பதியிலிருந்து தவம்பண்ணலாகாதோ? எனின் மேற்கூறுகின்றார்.]

உடுக்கை மறந்தவருக் கூர்காடென் றுண்டோ
அடுத்தயலா ருண்டோபே யானல்-சுடப்போட்
டெதிரிட்ட தெல்லா மிழந்தார்க் கிருந்த
பதியைக்கொண் டுண்டோ பயன்.

(இ-ள்.) உடுக்கை மறந்தவருக்கு ஊர் காடு என்று உண்டோ பேய் ஆனல் அடுத்தயலார் உண்டோ எ-து,—(குடும்பக் கூட்டங்களை எல்லாம் துரிசறத்துறந்து தேகத்தையும் சத்துருவாகக் கண்டு அத்தேகத்தில் நான்கு முழஞ் சுற்றும்) உடுக்கையு மறந்து திரிவோர்க்கு இது ஊர் என்றும், இது காடென்றும் பகுத்துக் காணும் நினைப்பும் உண்டுகொலோ (அஃதன்றி) பூரணப்பேய் வயமாகையினல் அவர்க் கடுத்தாரும் அயலாரும் உண்டுகொலோ; (இங்ஙனம் உடுக்கை மறந்து அடுத்தார் அயலாரென்பதும் தோன்ரு திருப்பதும் அன்றி.)

சுடப் போட்டு எதிரிட்டது எல்லாம் இழந்தார்க்கு இருந்த பதியைக் கொண்டு பயன் உண்டோ எ-து.—காத்தில் எடுத்த பொருள் மிகவுஞ்சுட விரைந்துபோட்டு நின்றாற்போல், தமதறிவிற்கு எதிரிட்ட கருவிகளை எல்லாம் துன்பமாகக்கண்டு, ஞானக்கினியினல் எரித்து இவற்றையும் இழந்தார்க்குத் தாம் முன்னிருந்த பதியில் இப்போது இருந்ததுகொண்டு பயன் என்னை? உண்டுகொல், எ-று.

இத்திருவெண்பாவால் தேகாபிமானம் விடுத்து அதனைப் பகையாகவும், எதிரிட்டவைகளைத் துன்பமாகவும் கண்டு, அனைத்தையும் இழந்து, பூரணமருள் கொண்டோர் இது நாடு

Digitized by Google

இது காடென்றும் இவர் அடுத்தார் இவர் அயலா ரென்றும் பகுத்தறிதல் இன்றாகலின், முன்னிருந்த பதியில் இப்போது இருப்பதனால் அவர்க்கு வரும் பயன் ஒன்றும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. உடுக்கை-வஸ்திரம். (௧௭)

[முன்னிருந்த பதியைவிட்டு, மற்றோர் சிவதலத்தில் ஓரிடம் பற்றியிருந்து, ஒருவர் முன்னிலையாய் உதராக்கினிக்கு அன்னமாத்திரம் வாங்கியுண்டு, தவத்தைப் பண்ண லாகாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

துக்கஞ் சுகமான சுட்டறிவு கெட்டவர்க்குத்
திக்குண்டோ வெங்குஞ் சிவாலயமாம்-அக்கினிக்குப்
பிச்சை பொதுநிழனீர் பேரிதுவே பேசார்தம்
இச்சையிருப் பேகாந்தத் தே.

(இ-ள்.) துக்கம் சுகம் ஆன சுட்டு அறிவு கெட்டவர்க்குத் திக்கு உண்டோ எங்கும் சிவாலயம் ஆம் எ-து,—முன்கண்ட பிரபஞ்ச துக்கம் எல்லாம் இப்போது ஆனந்தமாகக்கண்ட அச்சுட்டுப்போதம் கெட்டோர்க்கு இன்னதிசை என்றும் இன்ன இடம் என்றும் பகுப்புண்டாமோ? அவர்க்கு எத்திசையும் எவ்விடமும் சிவாலயமே ஆகும்; (அஃதன்றி)

அக்கினிக்குப் பிச்சை பொதுநிழல் நீர் பேரிதுவே பேசார் ஏகாந்தத்து இருப்பு தம் இச்சை எ-து,—உதராக்கினி அவித்தற்கு ஊரின்கண் பிச்சையும், இருத்தற்கு இடம் பொதுச்சாவடியும் மரநிழலும், தாகந் தணித்தற்கு ஏரியாதிநீர்களும் உளவாகலின் அன்னம் இடம் நீர் என்னும் இவற்றினது பெயரையே சொல்லார், (ஆயின் அவர்க்கு இச்சைதான் ஏது எனின், ஒருவரோடுங் கூடி யிராது பேசாது) ஏகாந்தத்திருப்பதே அவர்க்கு இச்சையாம், எ-று.

சிவத்தை உணர்ந்தோர்க்கு எங்கும் பரிபூரணமாய்த் தோற்றும் ஆகலின், "எங்குஞ் சிவாலய மாம்" என்றார்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் பிரபஞ்சங்களையெல்லாம் ஆநந்தமயமாக் கண்ட துறவினர்க்குத் திசையாதி எவ்விடத்தும் சிவாலயமாகும் என்பதும், பிச்சையாதி உளவாகலின் அன்னபானாதி ஓரிடத்தில் குறியார் என்பதும், ஒருவரோடும் கூடாது ஏகாந்த மௌனத் திருப்பதே அவர்க்கு இச்சை என்பதும் அறிவித்தவாறு காண்க. (௧௬)

[ஒருவரோடு கூடியிருந்து பேசுதலும் ஆகாதோ? எனின் மேற் கூறுகின்றார்.]

அங்கக்கா ரன்றுதிப்பு நாவிசுவை யானதுவும்
சிங்கிகுளிர்ந்ததுவும் போற்செகத்தோர்-சங்கத்தைத்
தீண்டுமன மேபகையாய்ச் சேரா துடலோடே
மாண்டுதிரி வார்துறவா வார்.

(இ-ள்.) அங்கக்காரன் துதிப்பும் நாவி சுவையானதுவும் சிங்கி குளிர்ந்ததுவும் போல் செகத்தோர் எ-து,—நானாவேடங் கொண்டு நடிக்கும் வேடதாரி அவ்வேடங்கட்கு ஏற்ற பாடை பேசுதல்போலவும், கொல்லாநின்ற விற்சநாபி ஒருவர்க்குச் சுவையானதுபோலவும், தன் காலிற் பூண்ட விலங்கு ஒருவர்க்கு இதமானது போலவும், (தத்தம் சாதிகட்கும் தொழில்கட்கும் ஏற்ற சொற்களைச்சொல்லியும், துன்பமாயுள்ள விடயங்களை இன்பமாகக் கருதிக்கொண்டும், மனைவிமுதலிய பாசவிலங்கை இதமாகக் கைக்கொண்டும் மயங்கிச் சுழலாநிற்பர்) இச்சகத்தோர்;

சங்கத்தைத் தீண்டும் மனமே பகை ஆய்ச் சேராது உடலோடே மாண்டு திரிவார் துறவு ஆவார் எ-து,—இங்ஙனம் சுழலாநின்றார் கூட்டத்தைக் கூடவேண்டுமென்று கருதும் மனநினைவே தம் பகையாகி அந்நினைவோடுங் கூடாது உடலோடு கூடியிருந்தும் கூடாது, அவ்வுடல் வாதனை மாண்டு திரிவாரே துறவினை உடையாராவர் (என்றறிதி), எ-று.

Digitized by Google

"உடலோடே மாண்டு திரிவார்" எனவே, போகவாதனை தேகவாதனை, போதவாதனை ஆகிய இம்மூன்று வாதனையும் தீர்ந்தார் என்பதாயிற்று.

இத்திருவெண்பாவால் பிரபஞ்சிகள் ஒருவரோடொருவர் கூடலும், நானாவிதமாய் வார்த்தையாடலுமே இன்பமாய்க் கருதி மயங்குவர் என்பதும், துறவோர் அங்ஙனஞ் செய்வது துன்பமென்று விடுப்பதுமன்றி, தம்முடலோடு கூடியுங் கூடாதிருப்ப ரென்பதும் அறிவித்தவாறு காண்க. (க௯)

பொன்மலைமேலாகாயம் போவார்க்குப்பூமியுள்ளோர்
என்னவே நாதாந்த மெய்தினரை-என்னருகே
வாவென்று பாற்கடலில் வாழரியை மண்டூகம்
கூவுந் தகைமையதொக்கும்.

(இ-ள்.) பொன் மலைமேல் ஆகாயம் போவார்க்குப் பூமி உள்ளோர் என்னவே எ-து,—பொன்மலை முடிமேல் ஆகாச கமனம் பண்ணுவோர்க்கு இந்நிலத்தின்கண் உள்ளார் மிகவும் தாழ்ச்சியானதுபோல், ஞானிகட்கும் பிரபஞ்சிகட்கும் உயர்ச்சி தாழ்ச்சி இருப்பவும்;

நாதாந்தம் எய்தினரை என் அருகே வா என்று பால்கடலில் வாழ் அரியை மண்டூகம் கூவும் தகைமையது ஒக்கும் எ-து,—நாததத்துவத்தின் முடிவாயிருந்த திருவருளை அடைந்த ஞானிகளைப் பஞ்சபூதகாரியந் தானாகிய தேகந்தானாகி இந்திரிய வழி நுழைந்து செல்லும் பிரபஞ்சி ஒருவன் என் மனைக்கு நீர்வருக என்றழைத்தல் பாற்கடல் நாப்பண் ஆவலையில் பள்ளிகொள்ளாநின்ற பெருமானைப் பார்த்து, ஓர் தவளை நீரும் இக்கடல் மிசை மிதந்து துயில்கின்றீர்; யானும் இக்கடல் மிசை மிதந்து துயில்கின்றேன், உமக்கும் அரியென்று பெயர், எனக்கும் அரியென்று பெயர்; ஆகலின், எனதருகே நீர்வருக என்றழைக்கும் முறைமையது ஒக்கும், எ-று.

Digitized by Google

பொன்மலை முடியை நாதாந்தத்திற்கும், அம்மலைமுடிமேல் தோன்றும் ஆகாயத்தை இந்நாதாந்தத்தில் தோன்றும் திருவருளுக்கும், ஆகாயத்தில் கமனம் பண்ணுவோனை இத்திருவருளையும் கடந்து செல்லும் ஞானிகள் அறிவிற்கும் உவமித்துக் கூறியவாறு காண்க. ஞானிகள் தத்துவங்கட்கெல்லாம் முடிவாய்நின்ற பரிபூரணத்தை அடைந்தவர், பிரபஞ்சிகள் தத்துவங்கட்கெல்லாம் அடியாயுள்ள பஞ்சபூதகாரியம் தானாயுள்ள தேகத்தை அடைந்தவர் ஆகலின், "பொன்மலைமே லாகாயம் போவார்க்குப் பூமியுளா ரென்னவே" என்று அங்ஙனம் உவமை கூறினார். ஞானிகளது மகிமையை அறியாததால், அவரும் உலகத்தின்கண் இருக்கின்றார், யானும் உலகத்தின்கண் இருக்கின்றேன், அவருமனிதர், யானும் மனிதனென்று கருதி அழைத்தான் ஆகலின், "பாற்கடலின் வாழரியை மண்டேங்கூவுந் தகைமையதொக்கும்" என்று இங்ஙனம் உவமை கூறினார்.

இத்திருவெண்பாவால் ஞானிகட்கும் அஞ்ஞானிகட்கும் தாரதம்மியமும், அவரை இவரெண்ணமல் அழைப்பதும், இங்ஙனம் என்று அறிவித்தவாறு காண்க. (உ0)

[ஆயின் பத்தியோடு மனமொழி மெய்களால் அவரைவணங்கி என்மனைக்குத் தேவரீர் எழுந்தருளுக என்று ஒருவன் அழைத்தால் செல்வரோ? எனின், மேற்கூறுகின்றார்.]

கும்பிட்டுங் கீர்த்தித்துங் கோடி யுபசாரம்
வம்பிட்ட பத்தி வலைவழியை-நம்புவரோ
ஊணுதி வாதனைக ளொன்று தவப்பெருமை
வீணை விளக்கு மெனின்.

(இ-ள்.) கும்பிட்டும் கீர்த்தித்தும் கோடி உபசாரம் வம்பு இட்ட பத்தி வலைவழியை நம்புவரோ எ-து,—ஒருவன் வந்து அட்டாங்கபஞ்சாங்கத்தோடு வணங்கியும், அநேக தோத்திரங்

க்ளேப் பண்ணியும், சுவாமிகள்! அடியேன் மனைக்கெழுந்தருளுக என்று கோடி போதங்களாய் உபசாரங்களைச் செய்தும், இங்ஙனம் அழைக்கும் புதுமை பொருந்திய பத்தி ஆகிய வலைநெறியை ஞானிகளாயினோர் ஓர் பொருளாகக் கருதிச் செல்வரோ; (ஆயின் அன்போடு வணங்கி அன்னங் கொடுக்கிறேன் என்றழைத்தால் அவ்வன்ன மாத்திரஞ் சென்று வாங்கிக் கொள்ளலாகாதோ? எனின்,)

ஊண் ஆதி வாதனைகள் ஒன்றாத அப்பெருமை வீணேவிளைக்கும் எனின் எ-து,—ஊண் உடுக்கை முதலிய வாதனைகளையும் விரும்பாத அந்த அவா அறுதி ஆகிய பெருமை அவரிருக்கு மிடத்து அவர் வேண்டா என்று தள்ளவும் வீணாய் அவ்வூணுதிகளைக் கொடுப்பிக்கும் ஆயின், எ-று.

உபசாரமிகுதியை, "கோடி" என்றும், ஒருவரும் அங்ஙனஞ் செய்யக்கண்ட தின்மையால், "வம்பிட்ட" என்றுங் கூறினார். "ஊணுதிவாதனைகள்" எனவே, நோய் குளிர்கட்கு மருந்தும் உறையுளும் வேண்டார், என்பதாயிற்று. (உக)

[தாம் ஊணுதிகளை விரும்பி ஒருவரைப் பின் சேறலாகாது அன்றி, ஒருவர் அன்போடும் வணங்கி ஊணுதி கொடுத்தற்குத் தம்மனைக் கழைத்தாலும் செல்லாதிருப்பது என்காரணம்? எனின், மேற்கூறுகின்றார்.]

கருமந் திரிவிதத்திற் கட்டவிழுங் காலம்
அரவுந் தவளையும்போ லாகி-இருதலையில்
கொள்ளியெறும் பாயுடம்பே கூற்றாகித் தோற்றுமெ
உள்ளினரு மூருமென்னு கும். [னில்

(இ-ள்.) திரிவிதத்தில் கருமம் கட்டு அவிழும் காலம் அரவும் தவளையும்போல் ஆகி இருதலையில் கொள்ளி எறும்பு ஆய் உடம்பே கூற்று ஆகித் தோற்றும் எனில் எ-து,—ஞானுசாரியர் கிருபா நோக்கத்தானும், காசரண பரிசத்தானும், திரு

Digitized by Google

வாக்காலும், அவரது ஆணவம் மாயை கன்மங்களாகிய கட்டு விடுதலையாகாநின்ற காலம் ஆகலின், தம் உடம்பே பாம்பும் தாம் ஓர் தவளையும்போலாகி, அவ்வுடம்பே இருதலையும் எரி சூழ்ந்த கொள்ளியாகி, தாம் அக்கொள்ளிக் குழலுட் சுழலும் எறும்பாகி, அவ் வுடம்பே தம்மைப் பிணித்துச் செல்லுங் கூற்றாகித் தோற்றும் எனின்;

உள்ளினரும் ஊரும் என் ஆகும் எ-து,—இங்ஙனம் பகையாய்த் தோற்றும் உடம்பிற்கு உபசாரஞ் செய்யக் கருதினோரும், அவர் அழைத்துச் செல்லும் ஊரும், அவர்க்கு என்ன பயனைத்தரும், எ-று.

பாம்பு தவளையைப் பற்றி நிற்றல்போல் உடம்பு அவரைப் பற்றி நிற்றலானும், நெருப்பு அவியுமளவும் குழற்கண் வருந்திச் சுழலும் எறும்புபோல் ஊழ்வினை அறுமளவும் உடம்புள் வருந்தி இருத்தலானும், கூற்று உயிரைப் பிணித்துச் சேறல் போல், அவரைப் பற்றிநின்று பிச்சையாதிக்குச் செல்லப்பண்ணுதலானும், அங்ஙனம் உவமை கூறினார். ஒருவன் தனக்குப் பகையாயினார்மேல் வெறுப்புண்டாவதும் அன்றி, அப்பகைவர்க்கு இதஞ்செய்வார்மேலும் வெறுப்புண்டாவதுபோல், அவர்க்குப் பகையாகிய உடம்பின்மேல் வெறுப்புண்டாவதும் அன்றி, அவ்வுடம்பிற்கு இதஞ் செய்வார்மேலும் வெறுப்புண்டாம் ஆகலின், "உள்ளினரூரு மென்னாகும்" என்றார் "இருவிதத்திற் கட்டவிழும்" என்றமையால், இரண்டு மலமும் வருவிக்கப்பட்டன.

[ஞானசாரியரை அடைந்தோரும், ஓரூரின்கண் ஒருவன் செய்யும் உபசாரத்தை அங்கீகரிக்க இல்லையோ? இவர் என்னை? அங்ஙனம் அங்கீகரியா திருப்பது எனின், மேற் கூறுகின்றார்.]

பிறவாத யோனி பிறந்துபிறந் தெல்லாம்
அறிவானு ஞரென் றறியா-அறிவை

Digitized by Google

அறிந்துமீ னண்ட வழிபருந்திற் குஞ்சாய்ப்
பிறந்தவர்க ளேன்பார்ப்பார் பின்.

(இ-ள்.) பிறவாத யோனி பிறந்து பிறந்து எல்லாம் அறிவால் நான் ஆர் என்று அறியா அறிவை அறிந்து எ-து,—தெய்வ மானுடப்பிறப்பு அன்றி, மற்றைப் பிறவாத யோனி பேதங்கள் எல்லாவற்றும் அளவில் காலம் சென்றுசென்று பிறந்து எய்த்து, பின்னர்த் தெய்வகதியாய்ப் பிறவிகட்கு எல்லாம் தப்பி, தன்னை அறிதற்கு ஏதுவாய இம் மானுடப் பிறவியிற் பிறந்தும், இத்தேகத்துள் இருந்து எல்லாவற்றையும் அறிவானாகிய யான் யாரென்று அறிதற்கு அரிதாய அறிவை இம் மானுடதேகம் அநேகத்தாற் செய்த சிவபுண்ணிய மேலிட்டால் இப்போது அறிந்து;

மீன் அண்ட வழி பருந்தில் குஞ்சு ஆய்ப் பிறந்தவர்கள் பின் ஏன் பார்ப்பார் எ-து,—நீருள் நுழைந்துசெல்லும் மீன் முட்டை வழித்தோன்றும் குஞ்சு ஆகாயத்திற் செல்லும் பருந்தின் முட்டை வழித்தோன்றுங் குஞ்சாய்ப் பிறந்தது போல், பிறப்பிற்கு ஏதுவாய்ப் பிறந்த பிறப்புக்கள் நீங்கி, வீட்டிற்கு ஏதுவாய்ப் பிறந்தோர்கள் இப்போது மற்றையனைப் போலும் ஊர் உறவு என்று ஏன் பார்ப்பார், எ-று.

முட்டைவழித் தோன்றல் இரண்டிற்கும் ஒத்ததாயினும், முன் நீருட் சென்றதும், பின் ஆகாயத்திற் செல்வதும் ஒவ்வாததுபோல், முன்னரும் இப்போதும் பிறந்த மானுடப்பிறப்பு ஒத்ததாயினும், முன் பிறப்பிற் சென்றதும், இப்போது வீட்டிற் செல்வதும் ஒவ்வாது. ஆகலின், இங்ஙனம் உவமைகூறினார். முற்பிறப்பில் சிவபுண்ணிய மேலீட்டால் இப்பிறப்பில் எளிதில் தன்னை அறிந்தமையால், "அறிந்து பிறந்தவர்கள்" என்றார். தன்னை அறிந்தால் தலைவனையும் அறியலாம் ஆகலின், "நானென்றறியா வறிவையறிந்து" என்றார்.

Digitized by Google

[இங்ஙனம் ஊர் உறவாதி ஒன்றும் வேண்டார்க்குப் பெருமை தான் யாது? எனின், மேற்கூறுகின்றார்.

அரசர்க் குடைமை யளவற்ற பேறே
பெருமையா னாற்போலப் பெற்ற-அரிபிரமர்க்
கப்பாலாம் வாழ்வு மணுவாகி யாதுமறல்
இப்போ பெருமை யிவர்க்கு.

(இ-ள்.) அளவு அற்ற உடைமை பேறே அரசர்க்குப் பெருமை ஆனால் போல எ-து,-அளவற்ற திரவியம் ஆடை பூடணாதிகளைப் பெறும் பேறே அரசர்க்குப் பெருமையானாற்போல;

பெற்ற அரிபிரமர்க்கு அப்பால் ஆம் வாழ்வும் அணு ஆகி யாதும் அறல் இவர்க்கு இப்போது பெருமை எ-து,—அவ்வரசர் முதலியோர் வாழ்விற்கு மேலாய வாழ்வினைப்பெற்ற அரி பிரமர் வாழ்விற்கும் அப்பாலாகிய பதமுத்தி வாழ்வுகளும் அணுமாத்திரம் இன்பமாய் அழியும் எனக்கண்டிருந்த இக பர வாழ்வுகளில் யாதொன்றினும் பற்றற்ற இப் பற்றறுதியே இவர்க்கு இப்போது பெருமையாம், எ-று.

"அரசர்க்குடைமை" என்று பொதுப்படக் கூறினமையான், நால்வகைச் சேனை நால்வகை அரண் நாஞதேசங்கள் முதலியவுங் கொள்க. அவர்க்கு அப்பேறு மேன்மேல் பெறுவது பெருமையானாற்போல், இவர்க்கு அப்பேறு மேன்மேல் விடுவது பெருமை என்பதும், அவர்க்கு அப்பேறின்மை சிறுமையாவதுபோல், இவர்க்கு அப்பேறு பெறுவது சிறுமை என்பதும், பேற்றின்மேல் பற்றுப் பிறவிக்கேது, அப்பேற்றின்மேற் பற்றறுதி வீட்டிற்கேது என்பதும், பிறப்பை அடைதல் சிறுமை, வீட்டை அடைதல் பெருமை என்பதும் இதனாற்காண்க.

[இங்ஙனம் இருந்த ஞானிகள் வீட்டிற்கு ஏதுவாகிய சரியாதிகளைத்தான் செய்யார்களோ? எனின், அவர் செய்யுஞ் சரியாதிகள் இவை என்று மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

சரியை யுடல்வெறுத்த றன்னை யறிதல்
கிரியோகங் கூடாமை கேளாத்-திருஞானம்
வேறின்மை பேரின்பம் விட்டுதியா மேலீடு
பேறின்மை தானே பெறல்.

(இ-ள்.) சரியை உடல் வெறுத்தல் கிரியை தன்னை அறிதல் யோகம் கூடாமை எ-து,—அவர்க்குச் சரியையாவது மலச்சுமை, துக்கம் விளைக்கும் கூம்பை, அநித்திய விருது எனக் கண்டு, உண்டி சுருக்குதல் முதலியவற்றான் உடலத்தை வெறுத்தல், கிரியையாவது தத்துவம் முப்பத்தாறையும் வியதிகளைந்து அவற்றின் முடிவினின்ற தம்மை உள்ளபடி அறிதல், யோகமாவது அங்ஙனம் தம்மை அறிந்தவிடத்துத் தமக்கு உயிர்க்குயிராயிருந்த திருவருளைக்கண்டு அவ்வருளே வடிவாகியிருந்து முன் நீக்கி நின்ற கருவிகளோடுங் கூடாமை;

கேளாத் திருஞானம் வேறு இன்மை பேரின்பம் விட்டு உதியாமேல் ஈடு பேறு இன்மை பெறல் தானே எ-து,—அம்மூவகையானும் உண்டாம் கேட்டறியலாகாத அழகிய ஞானமாவது (அவ்வருளே வடிவாயிருந்த தாம் சிறிதும் தோன்றாதபடியே ஆகிய) வேறின்மையினையும், அதன்மேல் பேரின்பம் விட்டுத் தோன்றாத மேலீட்டினையும், இவ் வின்பத்தைப் பெற்றோ மென்னும் பேறின்மையினையும் பெறுதல் தானேயாம். என்றவாறு.

ஞானாசாரியர் மௌனமொழியால் அறிவிக்க அறிதலான், "கேளாத்திருஞானம்" என்றும், இன்ப மேலிடாமுன் விட்டுத்தோன்றலான் "விட்டுதியாமேலீடு" என்றுங் கூறினார். பேறின்மை இன்பாதீதம்.

கும்பிட்டென்னும் திருவெண்பாமுதல் இவ்வைந்து திருவெண்பாவானும் ஞானிகளினது இயற்கை நெறிகளினது முறைமை அறிவித்தவாறு காண்க. (உ௫)

துறவு முற்றும்.

Digitized by Google

அ-ம். அதிகாரம்.

அவத்தைத்தன்மை.

[இங்ஙனம் சரியாதிகளை நீத்து உட்டுறவு புறத்துறவுடைய ராய், பிருதிவிமுதல் நாததத்துவம் ஈருகச் சொல்லப்பட்ட தத்துவம் முப்பத்தாறையுங் கடந்து, ஆணவ இருளையுங்கடந்து, ஆன்மதரிசன முதலிய சுத்தாவத்தையில் நிற்போரது தன்மை கூறினமையால், இவ்வதிகாரத்திற்கு அவத்தைத் தன்மை என்று பெயராயிற்று.]

உண்டொழித்துத் தேடு முடம்பரா யொன்றுமுதல்
அண்டர்பதத் தப்பாலு மைம்புலத்தும்-உண்டு
மழுங்கினர்க்குப் போகம் வருத்தமாய்த் தோன்ற
எழுந்தவருள் கெட்டே னிதென்.

(இ-ள்.) உண்டு ஒழித்துத் தேடும் உடம்பர் ஆய் ஒன்று முதல் அண்டர் பதத்து அப்பாலும் ஐம்புலத்தும் உண்டு மழுங்கினர்க்கு எ-து,—ஒருடம்பில் பிராரத்தத்தை உண்டொழித்து, அவ்வுடம்பில் அவ்வினையை உண்டொழித்தற்கு இடையே, இதாகிதங்களாகிய தொடர்பால் தேடும் ஆகாமியத்தால் தொன்றுதொட்டு வரும் உடம்புகளை உடையராய், இப் பூலோகமாகிய ஒன்று முதல் தேவர் பதவிக்கு அப்பாலும் ஆண்டாண்டுச் சென்றிருந்து ஐம்பொறிகளானும் அவ்வவ் வுடம்புகட்கு ஏற்ற விடயபோகங்களை இன்பமாகக் கண்டு உண்டு அளவில் காலந் தழும்பேறினார்க்கு;

போகம் வருத்தமாய்த் தோன்ற எழுந்த அருள் கெட்டேன் இது என் எ-து;—அப்போது இன்பமாய்த் தோன்றிய போகம் இப்போது துன்பமாய்த்தோன்ற உதயமாகிய திருவருள், கெட்டேன் ஈது என்கொல், எ-று.

Digitized by Google

ஓர்பிரகாரம் இன்றிச் செய்தவினையின் பேதப்படியே தநுக ரணபுவன போகங்களும் பேதித்துத் தோன்றலான், "தேடு முடம்பரா யண்டர்பதத்தப்பாலு மைம்புலத்து முண்டு மழுங் கினர்க்கு" என்றார். தநுவாதிகள் பேதிப்பதாவன, நல்லதே சத்து நல்லோர்கள் அங்கீகரித்த போகத்தைப் புசித்தலானும், நல்ல நினைவோடும் நல்ல சொல்லோடும் நற்றொழிலைச் செய் தலானும், பொல்லாத தேசத்துப் புன்போகங்களைப் புசித்த லானும், பொல்லாத நினைவோடும் பொல்லாத சொல்லோடும் புன்றொழிலைச் செய்தலானும், இவற்றுள் ஒன்று நன்றும் ஒன் று தீதுமாய் மாறிமாறி வருதலானும், இவை முதலாயவற்றால் பேதிப்பதெனக் கொள்க.

இத்திருவெண்பாவால் சுத்தாவத்தையில் நின்று அருளைத் தரிசித்தோர்க்கு விடயந் துன்பமாய்த் தோற்றும் என்று அறி வித்தவாறு காண்க. (௧)

வாசகத்துங் கோவையினு மாணிக்க மாகவழங் காசைத் துறையநந்த மாமதிலே-ஆசை
இருதலைப்பா லேக மெனவிரண்டா மித்தில்
ஒருதலைக்கா மந்துறவன் றோ.

(இ-ள்.) மாணிக்கம் ஆக வழங்கு வாசகத்தும் கோவையி னும் ஆசைத்துறை அநந்தம் ஆம் எ-து,—மாணிக்கமணிபோ ல் ஆகப் புலவரான் எடுத்து வழங்காநின்ற சங்கத்தார் முதலி யோர் கூறிய ஆசிரியப் பாக்களினும், மாணிக்கவாசகசுவாமி கள் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய கோவைகளினும், காமத்தினது இலக்கணமாகக் கூறப்பட்ட கிளவித்துறைகள் அநந்தம் ஆகும்;

அதிலே ஆசை இருதலைப்பால் ஏகம் என இரண்டாம் இ தில் ஒருதலைக்காமம் துறவு அன்றோ எ-து,— அக்கிளவித் துறைகளுள் காமம் தலைவனும் தலைவியும் ஆகிய இருவர்பா

லும் சமனொத்துக் கூடுவதாகிய இருதலைக்காமம் எனவும் ஒருவர்பால் மிகுந்தும் ஒருவர்பால் குறைந்தும் காமம் ஒவ்வாது கூடுவதாகிய ஒருதலைக்காமம் எனவும், இரண்டுள் அடங்குவதாம், இவற்றுள் தலைவன் விழையாதிருப்பத் தலைவி விழைந்துபற்றும் ஒரு தலைக் காமம்போல விடயாநந்தத்தைத் துறந்து சொரூபாநந்தத்தைப் பெறும்பொருட்டுச் சுத்தாவத்தையில் நிற்போர்க்கு இச் சொரூபாநந்தம் கிடைத்தது ஆயினும் இவ்வாநந்தத்தையே பெற விரும்பித்தொடர்ந்து நிற்பது அன்றோ துறவாவது, எ-று.

தலைவன் கூடி இன்பம் கொடாதிருப்பினும் தலைவி தனது கற்பால் பிறனை விழையாது அத்தலைவனையே விழைந்து நிற்றல்போல், சொரூபாநந்தம் தனக்குக் கிடைத்திலது ஆயினும் தனது தவக் கற்பால் விடயாநந்தத்தை விழையாது சொரூபாநந்தத்தையே விழைந்து நிற்கவேண்டுமென்பதும் தலைவி கற்பினைக்கண்டு தலைவன் காருணியத்தால் அவட்கு இன்பங்கொடுத்தல்போல், இவன் தவக் கற்பினைக்கண்டு சிவம் காருணியத்தால் தனதாநந்தத்தை இவனுக்குக்கொடுக்குமென்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க. வாசகம்போல் இருத்தலின் ஆசிரியப்பாவை வாசகம் என்றார். (உ)

[இத்திருவெண்பாவால் சொரூபாநந்தத்தை விரும்பிச் சுத்தாவத்தையில் நிற்போர்க்கு இச் சொரூபாநந்தம் கிடைத்திலது ஆயினும், இவ் வாநந்தத்தையே விரும்புவது அன்றி, அசுத்தாவத்தையில் திரும்பி அவ்விடயாநந்தத்தை விரும்பல் ஆகாதென்று கூறியவாறு காண்க.]

சாத்துவிக மெட்டாய்த் தசவவத்தை யாய்த்தன்னை
நீத்தவனுய்த்தானுய்ப்பின்னேயமாய்க்-கூர்த்தெல்லா
சுத்த வவத்தைத் துவட்சித் துகளற்ற (ங)
அத்துவிதர்க் கேதுமுநி யா.

Digitized by Google

(இ-ள்.) சாத்துவிகம் எட்டு ஆய்த் தச அவத்தை ஆய் தன்னை நீத்தவன் ஆய்த் தான் ஆய்ப் பின் நேயம் ஆய்க் கூர்த்தது எல்லாம் சுத்த அவத்தைத் துவட்சி எ-து,—இராசத தாமத காரியங்களை எல்லாம் நீக்கிச் சாத்துவிக காரியமாகிய கிராசை முதலிய எண் குணங்களையும் உடையவனாகி, அருகிய நோக்க முதலிய பத்தவத்தைகளையும் உடையவனாகி, இந்த நற்குணங்களால் தத்துவ முப்பத்தாறையும் கடந்து தன்னை அறிந்து அருளைத் தரிசித்துத் தற்போதம் அடங்கினவனாகி, பின்னர்ப் பரையேதானாகி, பின்னர் நேயத் தழுந்தினோனாகி, இங்ஙனம் ஒருவன் நுண்ணிதாய் அறிந்து சென்றதெல்லாம் சுத்தாவத்தை அநுபவங்களாகும்;

துகள் அற்ற அத்துவிதர்க்கு ஏதும் உதியா எ-து,—இந்தச் சுத்தாவத்தைகளை அறிந்து சென்ற போதம் அற்றுச் சிவத்தோடும் இரண்டறக்கலந்த அத்துவிதத்தை உடையோர்க்கு முற்கூறிய அநுபவங்களுள் யாதொன்றேனும் தோன்றாது (இவர் மௌனாநந்தமாயிருப்பர்), எ-று.

சாத்துவிகம் எட்டாவன,—கிராசை, தவம், பொறுமை, கிருபை, சந்தோடம், வாய்மை, அறிவுடைமை, அடக்கம் உடைமை இவை எண்வகையும் எனக் கொள்க. தச அவத்தையாவன,—பிரபஞ்சத்தை மாயாவடிவமாய்க் காணாது, அருள்வடிவமாய்க் காணும் அருகிய நோக்கமும், கருவிகளை வியதிகளையும் சிந்தனையும், முற்பிறவியிற்பட்ட துன்பங்களை நினைத்து நெட்டுயிர்ப் பெறிதலும், திருவருள் மேலீட்டால் உடம்பில் இளஞ்சூடெழுதலும் ஊணுதிகளைத் துறத்தலும், ஒருவரோடு உரையாடற்கு மானமுறுதலும், மௌனமாயிருத்தலும், பித்தேறினாற் போலப்பிரபஞ்சப் பகுப்புத் தோன்றா திருத்தலும், பிராணவாயு இறந்து மூர்ச்சித்திருத்தலும், போதம் இறந்து விற்றலும் ஆகியஇவை பத்துமெனக் கொள்க. சுத்தாவத்தைகளோடுங் கூடி அவற்றில் தோன்றும் அநுபவங்க

Digitized by Google

ளைப் போதம் சுருங்கிநின்று அறிதலானும், அப்போதம் தேய்தல் வளர்தற்குத் தக்கதாய்ஓர்கால் உயர்ந்த அநுபவமாயும், ஓர்கால் தாழ்ந்த அநுபவமாயும், மாறித் தோன்றலானும், "துவட்சி" என்றார். கேவலாவத்தையோடு ஆணவம் நீங்கிற்று ஆயினும், அதனது காரணம் போதமிறக்குமளவும் இருத்தலின் போதத்தை, "துகள்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஞான சாதகர் இலக்கணமும் சாத்தியரது இலக்கணமுங் கூறியவாறு காண்க. (கூ)

[அவ்வநுபவங்களை அறிந்து சொல்வது வாக்கு ஆகலின், இவ் வாக்கினை மௌனமாக்குவது முத்தி அன்றோ எனின், மேற்கூறுகின்றார்.]

உரையொடுங்கிற் போத முதிக்கு மொழிவே
அருளா மதன்போக் கசையாப்-பரையோகம்
போனாற் சுகாதீதம் புண்ணியர்க்குப் பொய்யுதியா
தேனோர்க்குப் பல்விதமா கும்.

(இ-ள்.) உரையொடுங்கின் போதம் உதிக்கும் ஒழிவே அருள் ஆம் அதன்போக்கு அசையாப் பரையோகம் போனல் சுகாதீதம் எ-து,—வாக்கினை மௌனமாக்கின் உள்ளே போதம் தோன்றும் ஆகலின், அவ்வாக்கு மௌனம் முத்தி அன்று (ஆயின் போதமடங்கின் முத்தியோ? எனின்) போதம் அடங்கின் அருள்தரிசனம் ஆகலின், அப்போதம் அடங்கல் முத்தியன்று, (ஆயின் அருள் தரிசனம் நீங்குதல் முத்தியோ? எனின்) அவ்வருள் தரிசனம் நீங்கின் போதஞ் சிறிதும் அசையாத பரையோகம் ஆகலின், அவ்வருள் தரிசனம் நீங்குதல் முத்திஅன்று, (ஆயின் பரையோக நீங்குதல் முத்தியோ? எனின்) பரையோகம் நீங்கின் சுகப்பேறும் ஆகலின், அப்பரையோகம் நீங்குதல் முத்தி அன்று, (ஆயின் அச்சுகப்பேறு நீங்குதல் முத்தியோ? எனின்), அச்சுகப்பேறு நீங்குதலே சுகாதீதம், இச்சுகாதீதமே முத்திநிலை;

Digitized by Google

புண்ணியர்க்குப் பொய் உதியாது ஏனோர்க்குப் பல்விதம் ஆகும் எ-து,—இச் சுகாதீத முத்தியை அடைந்த புண்ணியர்க்கு மேற்கூறிய சுத்தாவத்தையில் தோன்றும் பொய்கள் யாவும் தோன்ற, இம்முத்தியைப் பெறாது அச் சுத்தாவத்தையில் நிற்போர்க்கு அநுபவம் பலவிதமாய்த் தோற்றும், எ-று.

பரையோகம் கூறி அதற்கப்பால் சுகாதீதங் கூறினமையால், இவற்றிற்கு இடையில் தோன்றும் சுகப்பேறு வருவிக்கப்பட்டது. பரிபூரண சிவத்திற்குத் தம்மைக்கொடுத்தலால் மெய்ஞ்ஞானிகளை, "புண்ணியர்" என்றார். சுகாதீதத்திற்குச் சுத்தாவத்தைக் காட்சி பொய்யாகலின் "பொய்யுதியாது" என்றார்.

இத்திருவெண்பாவால் முத்திநிலை ஈதென்று அறிவித்தவாறு காண்க. (௪)

[அச்சுகாதீத முத்தியை அடைதற்கு ஏதுவாகிய சுத்தாவத்தையில் நிற்போரது குணங்கள் யாவை? எனின், மேற்கூறுகின்றார்.]

கருவி கழல வரைநோக்காஞ் சிந்தை
பெருமூச்சாம் போதம் பிறியில்- அருளாய்
வெதும்பி யுடல்வெறுக்கு மின்பாய் விகளம்
முதிர்ந்துரையு நாணுமொடுங் கும்.

(இ-ள்.) கருவி கழல வரை நோக்கு ஆம் போதம் பிறியில் சிந்தை பெருமூச்சு ஆம் எ-து,—கருவிகள் நீங்கவே மலைமேல் நின்று நோக்குவோர்க்கு நிலத்தின்கண் உள்ள பொருள்கள் அருகித் தோன்றுமாப்போல, (பிரபஞ்சம் எல்லாம் பொய்யாய்த் தோன்றுவதாம்), அக்கருவிகளுள் அதோமுகமாய் நின்ற போதம் அவற்றைப் பிறியில் (ஊர்த்துவமுகமாய் நின்று தன்னை அறியும், அங்ஙனந் தன்னை அறியும்போது இங்ஙனம் இருக்கின்ற யான் எறும்புகளால் நாங்கூழ் அரிப்புண்டதுபோல்

Digitized by Google

அளவில் காலம் அக்கருவிகளால் அரிப்புண்டேனே என்னும் சிந்தனையால் நெட்டுயிர்ப்புளதாம் ;

அருள் ஆய் உடல் வெதும்பி வெறுக்கும் இன்பு ஆய் விக ளம் முதிர்ந்து உளையும் நாணும் ஒடுங்கும் எ-து,— (தன்னை அறிந்த பின்னர்) அருள் தரிசனம் உண்டாய், (பின்னர் அவ் வருளே தனக்கு வடிவாகி) இம்மாயா உடலம் வெதும்பி (இத னை) வெறுப்பன், (பின்னர்) ஆநந்தமுண்டாய், (இவ்வாநந்த மேலீடாகிய) உன்மத்தந் தலைமீக்கொண்டு மௌனமாயிருப் பன், அஃதன்றி, (பிரபஞ்சத்தார்க்கு நாணுவதாய) நாணமும் நீங்கும், எ-று.

"போதம்பிறியில்" என்றதனால், தன்னை அறிந்தென்பது வருவிக்கப்பட்டது. "அருளாய்" என்றதனால், அருள் தரி சனம் வருவிக்கப்பட்டது. நாணம் ஒடுங்கலாவது நீராடல் பூசனையாதி செய்திலன் என்று உலகத்தார் பழிப்பது குறித் துவரும் நாணம் எனக்கொள்க.

இத்திருவெண்பாவால் கருவிகள் நீங்கியவிடத்து வருங் கு ணமும், தன்னை அறிந்தவிடத்து வருங்குணமும், திருவருள் தோன்றியவிடத்து வருங்குணமும், ஆநந்தந் தோன்றியவிட த்து வருங்குணமுங் கூறியவாறு காண்க. (௫)

வேர்க்கும் விழிததும்பும் பொய்யறியின் மெய்வெ
தும்பி,—ஆர்க்கும் விறைக்கு மருளுதிப்பின்-வாக்கு
மனம்,—நின்றுபரி பூரணமாய் நேயத்தே கார்க்கத
மாய்க்,—கன்றிப் புளகிதமாங் காண்.

(இ-ள்.) வேர்க்கும் விழி ததும்பும் பொய் அறியின்மெய் வெதும்பி ஆர்க்கும் விறைக்கும் எ-து,—(பொய்யாகிய கருவி களை உள்ளபடி பொய்யாய் அறியின், மெய்யில்) வெயர்வை அரும்பும், விழியில் நீர்ததும்பும், எல்லாம் பொய்யென்றறி ந்துகொண்டேன் என்று உடலத்துள் இளஞ்சூடெழ ஆரவாரி

ப்பன், (பின்னர்த் தன்னை உள்ளபடி கண்டு ஒன்றினையும் நா டாது, உடலம் அசைவற இருப்பன்);

அருள் உதிப்பின் வாக்கு மனம் நின்று பரிபூரணம் ஆய் நேயத்தே கார்க்கதம் ஆய்க் கன்றிப்புளகிதம் ஆம் எ-து,— (பின்னர்) அருள் தோன்றுமிடத்து வாக்கு மனங்களில் நின்று அவ்வருள் பரிபூரணமாய்த்தோன்ற இதற்கு முதலாய நேயத் தை (என்றைக்கு அடைவேன் என்று அந்நேயத்தை நாடி) மேகங் குமுறுவது போலாய் உள்ளேகுமுறி உள்ளம் வெதும் பி உடலம் உரோமாஞ்சலியாம், எ-று.

வாக்கு மனங்களில் நின்று அருள் பூரணமாய்த் தோன்றுவ தாவது மனத்தால் நினைந்த நினைவு நினைந்த தில்லையாயும். தனக் கநுபவமாய்த் தோன்றுவதாம் எனக்கொள்க.

இத்திருவெண்பாவால் கருவிகளைப் பொய்யென்று அறிந்த விடத்து வருங் குணமும், திருவருள் உதித்த விடத்து வருங் குணமும், அறிவித்தவாறு காண்க.

பேயைப் பெண்ணென் றிருந்தும் பித்தளைக்குப்
பொன்றோற் றும்,—மாயத்தூ ணுண்டுமன மாண்டு
மயல் - போயத்,—திடுக்கமே பித்தாய்த் தெளிமய
லானுற்போல்,—நடக்குமருண் மேலிட்ட நாள்.

(இ-ள்.) பெண் பேயை என்று இருந்தும் பித்தளைக்குப் பொன் தோற்றும் மாயத்து ஊண் உண்டு மயல்போம் மனம் மாண்டு எ-து,—பெண்களைப் பேய்களைப்போலும் பிடித்து வாதிப்பவரென்று கண்டிருப்பதாயும், பித்தளைக்குப் பொன் தோற்றுப்போவதாய்க் காண்பதாயும், உதர எரிவாய்த் தோ ன்று மாயத்திற்குக் காடி கூழ்முதலிய ஊண் யாது கிடைப்பி னும் வாங்கி உண்டு (அவைகண்மேல் வைத்த) மயலும்போய் (அவற்றை மெய்ப்பொருளாகக் காணும்) மனமும் இறந்து;

Digitized by Google

அத்திடுக்கமே யித்து ஆய்த் தெளி மயல் ஆனால் போல் அருள் மேலிட்ட நாள் நடக்கும் எ-து,— (அப்பொருந்தல் அருந்தல்களையும் அவற்றிற்கு ஏதுவாய பொன்னையும் விழைந்து நெடுநாள் பிறவித்துன்பத்தால் வருந்தினேம் என்னும் அந்தத் திடுக்கந்தானே விடாப் பிராந்தியாய் அறிவு பயித்தியங் கொண்டோனைப் போலவும் திருவருள் மேலிட்ட காலத்து விளங்கும், எ-று.

பேய் பிடியுண்டு விடுபட்டோனுக்கு ஓர் காலத்து அதனைக் கண்டபோது பயந்தோற்றல்போல், முன் பெண்களால் வருந்திய வருத்தத்தை நோக்கி அவரைக் கண்டபோது பயந்தோற்றலான் அங்ஙனம் உவமை கூறினர். "பித்தனைக்குப் பொன் றோற்றம்" என்று அதனினும் இழிவாய்க் கூறினமையால் ஓட்டுச் சின்னங்களையும் சிறு கற்களையும்போல் காண்பர் என்பதாயிற்று. எங்கும் பரிபூரணமாய் அருள்வடிவா யிருத்தலானும், பொன் பெண் மண் ஊண் உடல் என்னும் ஐவகையும் வெறுத்து உலகத்தாரோடு மாறுபட்டிருத்தலானும், "தெளிமய லானாற்போல்" என்றார்.

இத்திருவெண்பாவால் அருள்மேலிட்ட நாள் நடக்குங் குணங் கூறியவாறு காண்க.

மலட்டுமக னீங்கி வரக்கண்ட தாய்தால்
அலத்தி மகிழு மதுபோல்-உலப்பிலாக்
காலங் கழிந்ததையுங் காணாத்தைக் கண்டகளிப்
பாலு மழுதுசிரிப் பார்.

(இ-ள்.) மலட்டு மகன் நீங்கி வரக்கண்ட தாய் தால் அலத்தி மகிழும் அதுபோல் எ-து,—(நெடுநாள்)மலடிருந்து (பின்னர் அரிதாய்ப்பெற்ற) புதல்வன் (தன் மனைவிட்டு) நீங்கி (அயல்மனையிற் சென்று மீண்டு) வர எதிர்கண்டதாய் (சென்று எடுத்து மார்போடு அணைத்து முன்னர் அவனைப்பெறாத

Digitized by Google

காலத்தையும் இப்போது அவனைப் பெற்றுக் கண்டகாட்சி யையும் நினைந்து) தாலாட்டுதலோடு அழுது அவ்வழுகை யோடும் சிரிக்கும், அதுபோல்;

உலப்பு இலாக்காலம் கழிந்ததையும் காணுத்தைக் கண்ட களிப்பாலும் அழுது சிரிப்பார் எ-து,—(திருவருளைப்பெருது) அளவிறந்தகாலம் (பிறவியில்) வீணுளாய்க் கழிந்ததைக் கருதியவதனுலும், (அக்காலங்களுள் ஓர்கால மாயினும்) காணுத அத்திருவருளை (இப்போது கண்ட) களிப்பாலும், அவ்வருளைத் தோத்திரம் பண்ணலோடு அழுது அவ்வழுகையோடும் சிரிப்பார் (திருவருள் மேலீட்டைப் பெற்றோர்), எ-று.

"தாலலத்தி" என்று உவமை கூறினமையால் அருளைத் தோத்திரம் பண்ணுதல் வருவிக்கப்பட்டது. அருள் தம்மிடத்துத் தோற்றலான் அதனை மகவாக உவமித்துக் கூறினுர். தால்-தாலாட்டுதல், அலத்தல்-அழுதல்.

இத்திருவெண்பாவால் கழிந்தநாட் கிரங்குதல் கூறியவாறு காண்க. (அ)

[சுகாதீதமுத்தியைப் பெருது, இங்ஙனந் திருவருள் மேலீட்டைப் பெற்றோர்க்குப் பிறப்பு உண்டாகாதோ? எனின், மேற்கூறுகின்றுர்.]

நடைதளர்ந்து மெய்ம்மறந்து நாண மழிந்தே
உடறளர்ந்து கீழ்க்குரலிட் டூண்போய்-மடலெடுப்பா
சத்தாதி கெட்டுமனந் தாக்கற்றுச் சந்தழிந்த [ய்ச்
பித்தர்க்கு மாகா பிணி.

(இ-ள்.) நடை தளர்ந்து மெய் மறந்து நாணம் அழிந்து உடல் தளர்ந்து கீழ்க்குரல் இட்டு ஊண்போய் எ-து,—(கருவிச்சேட்டைக ளடங்குதலின்) நடைதளர்ந்து, (அருளே வடிவாயிருத்தலின்) உடம்பு மறந்து, (உடம்பு மறத்தலின்) பிரபஞ்சிகள் பழிப்பார் என்பது குறித்து வரும் நாணம் அழிந்து,

Digitized by Google

(உண்டிமேல் விருப்பின்மையான்) உடல் தளர்ந்து, (மௌனியா யிருத்தலின்) கீழ்க்குரற் பேச்சாய், (அருளமுதம் புசித்தலின்) சிற்றூண் உண்பதாய்;

மடல் எடுப்பு ஆய்ச் சத்தாதி கெட்டு மனம் தாக்கு அற்றுச் சந்து அழிந்த பித்தர்க்கும் பிணி ஆகா எ-து,—(அருளையே அன்றி மற்றொன்றையும் நாடாமையின்) மடலெடுப்பான் போலாய், (ஐந்தவாவும் அற்றமையால்) சத்தாதி விடயங்களும் இறந்து, (இச்சத்தாதி விடயங்கள் இறந்தமையால் மனம் ஒன்றோடும் தாக்கற்று, (மனம் ஒன்றோடுந் தாக்கற்றமையால்) அருளென்றும் தானென்றும் இன்றி இரண்டற்ற (இவ்வருள் நிலைமீக்கொண்ட) பித்தர்க்கும் (சுகாதீத முத்தியை அடைந்தோரைப்போல்) பிறவிநோய்கள் உண்டாகா, எ-று.

அருள் மேலீட்டையும், பிரபஞ்சப் பற்றொழிவையும், உடையோர் தேகாந்தத்து அறிவோடுஞ் சென்று சுகாதீத முத்தியை அடைவர். ஆகலின், "பித்தர்க்குமாகாபிணி" என்றார்.

இத் திருவெண்பாவால் அருள் மேலீட்டை உடையோர்க்கும் பிறப்பு இன்றென்று அறிவித்தவாறு காண்க. (௬)

குறும்பாட்டும் புன்சிரிப்புங் கூர்த்திமையாநோக்கும்
வெறும்போகஞ் சாய்ந்து விழினும்-மறந்த
திகைப்பும் விதிர்ப்புந் திமிர்ப்பும் விறைப்பும்
உகைப்புந் தெளிந்தறிதலும்.

(இ-ள்.) குறும் பாட்டும் புல் சிரிப்பும் கூர்ந்து இமையா நோக்கும் எ-து,—(தாம் அறிந்த பாட்டுகளுள் சில பாட்டான் அருளைத் தோத்திரம் பண்ணுவதாய) குறும்பாட்டும், (ஆநந்த மகிழ்ச்சியால் தோன்றும்) புன் சிரிப்பும், (உட்புறனும் அவ்வாநந்த பூரணத்தை நுண்ணிதாய்ப் பார்த்துக்கொண்டிருப்பதாய) இமையா நாட்டமும்;

Digitized by Google

வெறும் போகம் சாய்ந்து விழினும் மறந்த திகைப்பும் விதிர்ப்பும் திமிர்ப்பும் விறைப்பும் உகைப்பும் தெளிந்து அறிதலும் எ - து,— (தாம் ஒன்றையும் விழையாது இருப்பினும் தமது சந்நிதியில்) பொய்ப் போகங்கள் மிகவுஞ் சாய்ந்து வந்துகிடப்பினும் (இத்துன்பங்கள் ஈண்டு ஏன் வந்தன என்று அவற்றை) சிறிதும் நினையாத திகைப்பும், (அவற்றைக் கண்டபோது) உடல் நடுக்குறுதலும், (பஞ்சேந்திரியங்கட்கு உரிய விடயங்கள் நேர்படின் அவ்விடயச்சுவை தோன்றாத) திமிர்ப்பும், (பூதம் பேய் புலி காடி முதலிய வந்த காலத்துக் கற்றூண்போலத் தேகம் அசைவற்றிருக்கும்) விறைப்பும், (ஆநந்தம் மிகவும் வந்து தாக்குதலான் எழுந்து குதித்தாடும்) உகைப்பும், (அங்ஙனம் ஆடிய ஆநந்த மேலீட்டால் தோன்றாது அவ்வாநந்த மேலீடு சிறிது நீங்கியபோது இப்போது யாம் என் செய்தோம் என்று) தெளிந்தறிந்து கோடலும், (ஆகிய இக்குணங்கள் எல்லாம் பனிபோக நீங்கி ஆநந்தம் பெற்றோர்க்குத் தோன்றுவனவாம்), என்றவாறு.

இங்ஙனம் அறிவும் துறவும் உடைய ஞானிகளைப் பத்தராய் உள்ளார் எல்லாரும் அன்னபானம் காய் பழம் ஆடை முதலிய கொடுவந்து வைத்து வணங்குவர் ஆகலின், "வெறும் போகஞ் சாய்ந்துவிழினும்" என்றார். வெறும் போகம்-பொய்ப்போகம். சாய்ந்தென்பது மிகுதிமேல் ஏறிற்று.

இத்திருவெண்பாவால் ஆநந்தம் பெற்றோர் குணம் அறிவித்தவாறு காண்க. (கO)

[இங்ஙனம் பூரணாநந்தம் பெற்றோர்க்கு ஆடலும் பாடலும் உண்டாவது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

கால்வந்த வர்க்காட்டங் கைவந்த வர்க்காட்டும்
மால்முந்தி வந்தவர் வாய்ப்பாட்டும்-மேல்கொண்ட

ஆனந்த வுல்லாசத் தாச்சரிய மாரறிவார்
ஊனம்போற் காணு முலகு.

(இ-ள்.) கால் வந்தவர்க்கு ஆட்டம் கை வந்தவர்க்கு ஆட்டம் மால் முந்தி வந்தவர் வாய்ப்பாட்டும் எ-து.—(பிறவி முடவராயிருந்து இடையில் தெய்வகதியால்) கால் நடக்க வந்தவர்க்கு ஆட்ட முண்டாவது போலும், (கைவராதிருந்து இடையில் அங்ஙனம்) கைவந்தோர்க்கு ஆட்ட முண்டாவதுபோலும் (தாங்கூடி அநுபவித்த பெண்மேல்) ஆசை தலைமீக்கொண்டு வந்தவர் வாய்ப்பாட்டுப் போலும் ;

மேல் கொண்ட ஆநந்த உல்லாசத்து ஆச்சரியம் ஆர் அறிவார் ஊனம்போல் காணும் உலகு எ-து,—(தம்மை மறைத்து) மேற்கொண் டெழுந்த ஆநந்த உல்லாச அதிசயத்தால் (அவர்க்கு ஆடலும் பாடலும் உண்டாம்,) அவ்வாநந்தாதிசயத்தை (அதனைப்பெற்ற ஞானிகள் அறிவது அன்றி) மற்றை யாரறிவார்? (அவர்க்கு ஆடல்பாடல்களை) பயித்திய மிகுதியால் உண்டாவனபோல் காண்பார் உலகத்தார், எ-று.

நெடுநாள் காலுங் கையும் வராதிருந்து இடையில் அவை வந்தோர்க்கு ஆட்டம் உண்டாவதுபோல், அளவிறந்த காலமும் மலச்சிறையிற் கிடந்தோர்க்கு இப்போது அச்சிறை விடுதலையாய்ப் பரிபூரண வடிவைப் பெற்றமையான் அவர்க்கு ஆடலும், தாம் அநுபவித்த பெண் இன்பவாசனை உளத்திருத்தலான் அவர்க்குப் பாடல் உண்டாவதுபோல், துன்பப் போகத்தையே அளவில் காலம் புசித்தோர்க்கு இப்போது நிரதிசயாநந்தங் கிடைத்தமையால் பாடலும், உண்டென்பது இவ்வுவமைகளாற் காண்க. "ஊனம்போல்" என்றமையால் ஊனம் இன்றென்பதாயிற்று. உல கென்பது ஆகுபெயர். "கைவந்தவர்க்காட்டம்" என்பதற்கு அருத்தம்—ஓர் வித்தையாதி முன் கைவ்ராதிருந்து பின் கைவந்தபோது ஆட்டம் உண்டாவதுபோலும் என்கினும் ஆம்.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஞானிகட்குப் பூரணவடிவம் பெற்றமையால் ஆடலும், ஆநந்தம் பெற்றமையால் பாடலும் உண்டாம் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

[ஆநந்த மௌனமதனை அடைந்த ஞானிகள் போதம் இழந்தோராகலின், இங்ஙனம் நிர்விகாரிகளா யிருந்தோர்க்கு அந்த விகாரிகள்போலும் ஆடல் பாடல் எங்ஙனம்? உண்டாம் எனின், மேற் கூறுகின்றார்,

அறிவு பறிகொடுத்திவ் வாக்கையற மாறிப்
பெறுதி யிழப்புதியாப் பித்தின்-அறிசென்
றலையற்ற நீத்தமோ ராளற்ற கப்பல்
உலைவுற்ற தோநிற்ப தோ.

(இ-ள்.) அறிவு பறிகொடுத்து இவ் வாக்கை அற மாறிப்பெறுதி இழப்பு உதியாப் பித்தின் சென்று அறி எ-து,—(முன்னர் விடயாநந்தத்திற்குத் தமது அறிவைப் பறிகொடுத்தது போல், இப்போது மாறிச் சொரூபாநந்தத்திற்கு) அவ்வறிவைப் பறிகொடுத்து, (முன்னர்க் கூடியிருந்த) இம்மாயாவடிவ மறந்துபோக, (இப்போது அருள்வடிவாய்) மாறிப்பெற்று, (அவ் வருளே வடிவாகலின் ஓர் பொருளைப் பெற்றேமென்னும்) பெறுதியும், (ஓர் பொருளை இழந்தோமென்னும்) இழப்பும், (இவற்றான் வரும் இதாகிதங்களும்) தோன்றாத ஆநந்தப் பயித்திய மீக்கொண்டு, (ஓரிடத்துச் சிறிதேனும் விகாரமுண்டாகாது இதனை அறிவில்) சென்று பார்த்தறிதி; (இஃதன்றி.)

அலை அற்ற நீத்தம் ஓர் ஆள் அற்ற கப்பல் உலைவு உற்றதோ நிற்பதோ எ-து,—அலையின்றிய சாகரத்தில் நிற்கும் ஓராளும் இன்றிய கப்பல் அசைவுறுகின்றதோ? அசைவற்றுநிற்கின்றதோ? (அஃது எங்ஙனம் அசைவற்று நிற்கின்றது, அது போலும் மௌனாநந்த சாகரத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் தற்போதமும் இறந்துநின்ற ஞானிகளும் அசைகிலர் என்று இத்திட்டாந்தத்தானும் கண்டுகொள்க,) எ-று.

Digitized by Google

அலையற்ற நீத்தத்தை மௌனாநந்தத்திற்கும், ஆளற் றிருத் தலைக் கருவிகளிறந்து நிற்றற்கும், அசைவற்ற கப்பலைப் போ தமிறந்த ஞானிகளது அறிவிற்கும், உவமித்தார். அறிவுபறி கொடுத்தல்-ஆநந்தமயமாய் அழுந்தல். (கஉ)

செகஞ்சிரிக்கத்தாஞ்சிரித்துச் சீபேயென்றோட்டில்
அகம்புறங்கா டேச்சுக்குற் றற்றுத்-திகம்பரியாய்த்
தானந்தம் பாடிவிண்ணிற் றட்டத் துணங்கையடித்
தானந்தக் கூத்துநடிப் பார்.

(இ-ள்.) செகம் சிரிக்கத் தாம் சிரித்துச் சீபேய் என்று ஒட்டில் புறங்காடு அகம் எச்சுக் குற்றற்றுத் திகம்பரி ஆய் எ-து;— (உலகநடை தெரியாத பேயொன்று) சகத்தோர் தம்மைப் பார்த்துச் சிரிப்ப, (ஞானநெறிதெரியாத மலப்பேயொன்று) தாமும் அவரைப் பார்த்துச் சிரித்து, (புறந்திண்ணை பொதுச்சாவடிகளில் தாம் இருந்தவிடத்து அவர்வந்து) சீ பேயோ போம் என்று (ஒட்டினால் யாதொன்றும் கூறாது அவ்விடம் விட்டு நீங்கி) புறங்காட்டை நன்மனைபோற் கண்டு, அசுத்தமென்னும் அருவருப்புச் சிறிதும் அற்றுத் திகம்பரிகளாய் (அவ்விடத்திருந்து);

தான் அந்தம் பாடி விண்ணில் தட்டத் துணங்கை அடித்து ஆனந்தக் கூத்து நடிப்பார், எ-து,—தமது போதநாசமான இடத்துப் பாடிச் சிதாகாசவெளியில் பொருந்தி நின்று துணங்கைக்கூத்திற்கு உரித்தாம்படி கையடித்து ஆநந்தநடனம் பண்ணுவர் (அவ்வாநந்தபூரண ராயினார்), எ-று.

உலகர்க்கு ஞானிகள் மாறுபாடா யிருத்தலானும், ஞானிகட்கு உலகர் மாறுபாடாயிருத்தலானும், "செகஞ்சிரிக்கத்தாஞ் சிரித்து" என்றார். உலகத்திற்கு ஞானம் பேய் ஞானத்திற்கு உலகம் பேய் என்னும் உலகவழக்கமும் அது. பிரபஞ்சமெல்லாம் ஆநந்த பூரணமாய்த் தோற்றலின் சுடுகாட்டசுத்தம்

Digitized by Google

அவர்க்குத் தோற்ருது என்பதறிக. "தானந்தம்பாடி" என்ற தனுல் போதம் இறந்து நின்று பாடினுர் என்பதும் "விண்ணி றட்ட" நடிப்பர், என்றதனுல் பரிபூரணுநந்த மாருது நடிப்பா ரென்பதுங் காண்க.

இவ்விரண்டு திருவெண்பாவானும் ஞானிகள் நிருவிகாரிக ளா யிருந்தே ஆடுவர் பாடுவரென்று அறிவித்தவாறு காண்க

[நீர் கூறியவாறே எல்லாவற்றையும் துறந்து, சிவவேடம் பூண்டுகொண்டு, தவங்களைச் செய்து, சிவாலயங்கடோறும் ஆடிப்பாடி அழுது சிரிக்கின்ருேர் நிருவிகாரிகள் அலரோ? எனின், மேற்கூறுகின்ருர்.]

விபரீதப் பூணு முடையும் விளியால்
அபிமா னமுமவரா லாட்டும்-தபசுபோல்
செய்யுஞ் சடங்குந் திகைப்புஞ் சிதம்பரத்தில்
ஐயன் றனக்கறிய லாம்.

(இ-ள்.) விபரீதப் பூணும் உடையும் விளியால் அபிமான மும் அவரால் ஆட்டும் தபசுபோல் செய்யும் சடங்கும் எ-து,- (பார்த்தபேருக்கு) விபரீதமாய்த் தோன்றும்படி (சிரம் செவி களம் கரம் மார்புகளில் மிகவும் பூண்டுகொள்ளும்) உருத்தி ராக்கப் பூண்களும், (உத்தூளனமும்) ஒட்டுவேட்டி உடையு ம், வார்த்தையினுல் யாம் சிவமுதம் என்று பிடித்துப் பேசும் அபிமானமும், அவரிடத் துண்டாம் ஆடல் பாடல்களும், தப சுபோற் செய்யும் ஞானுசாரங்களும்;

திகைப்பும் சிதம்பரத்தில் ஐயன் தனக்கு அறியல் ஆம் எ-து,—(அவ்வேடத்திற்கும் நடைக்கும் உரிய பரிபூரண ஞானம் அகத்து இன்றி) திகைத்திருத்தலும், (ஆகிய இவை உடையாரது கருத்தினை) சிதாகாசத்தில் பஞ்ச கிருத்திய நட னம் பண்ணுகின்ற பரமசிவனது திருவுளத்திற்கே அறியலாம் (அன்றி மற்றையர்க்கு அறியலாகாது), எ-று.

Digitized by Google

ஆபரணம்போல் பூண்டு கோடலின், உருத்திராக்கத்தை "பூண்" என்றார். உருத்திராக்கங் கூறினமையால் உத்தூள னம் வருவிக்கப்பட்டது. அகத்து ஞானம் இன்றி, புறத்து இங்ஙனங் காட்டுவன எல்லாம் தற்போதத்தா லுண்டாவன ஆகலின், இவர் நிருவிகாரிகள் அலரென்பதுங் காண்க. இவர் களும் ஞானிகள்போல் பிறர்க்குத் தோற்றலின், "சிதம்பரத்தி லயன்றனக்கறியலாம்" என்றார்.

இத்திருவெண்பாவால் ஞானிகள்போல் நடிக்கின்றோரைப் பொய்ஞ்ஞானிகளென்று அறிவித்தவாறு காண்க. (கஅ)

[மெய்ஞ்ஞானிகள் நடை இன்னுங் கூறுகின்றார்.]

மாலயனு யிந்திரனாய் வாழுவதாய் மாளுவதாம்
சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்-ஞாலமயங்
குன்மத்தக் கோரணிபார்த் தோகோவெனச்சிரிப்பர்
தன்னைப்பார்த் தாடுவர்தாந் தாம்.

(இ-ள்.) மால் (ஆய்) அயன் ஆய் இந்திரன் ஆய் வாழுவது ஆய் மாளுவது ஆம் சால மயல் பார்த்துத் தலை அசைப்பர் ஞாலம் மயங்கு உன்மத்தக் கோரணிபார்த்து ஓகோ எனச் சிரிப்பர் எ-து,—(தேவர்கட் கெல்லாம் மேலாய) மால் என்னும் பெயரை உடையனாகியும், அயன் என்னும் பெயரை உடையனாகியும், இந்திரன் என்னும் பெயரை உடைய னாகியும் சிறந்துள்ளார் (தத்தம் பதவிகளில்) அழிவின்றி வாழ்வதாய்க் கருதிக்கொண்டிருந்து, பன்னாளில் மாண்டு போவதாகும் அவரது மிகுந்த ஆணவமயக்கத்தைப் பார்த்து அவ்வாணவம் அவர்களையும் பொய்யாகிய தேகாதிகளையும் மெய்யாக் கருதப்பண்ணி மயக்கிற்று, கண்டீர்கொலோ என்று உள்ளத்து நாடி) சிரக்கம்பங் கொள்வர், (அவ்வாணவத்தான்) இவ்வுலகத்தார் மயங்காநின்ற பயித்தியக் கோரணிக் கூத் தைப்பார்த்து ஓகோ எனப் பிறர்க்குக் கேட்கச் சிரிப்பர்.

Digitized by Google

தன்னைப் பார்த்து ஆடுவர் தாம் தாம் எ-து,— (அஃதன்றி) தம்மைப்பார்த்து, தம்மைச் சிவபூரணம் விழுங்கிக் கோடலால் காணுது, தாம் அச்சிவபூரணம் தாம் என நடனம் புரிவார். என்றவாறு.

மால் அயன் இந்திரன் முதலியோர் இறந்து போவது ஆகமப் பிரமாணத்தால் அறிவதாகலின், அவரது "மயல் பார்த்துத் தலையசைப்பர்" என்ருர், பித்தமேறினேன் தன்னுடம்பு தெரியாது உலகர் நடைக்கு மாறுபாடாய்த் திரிவது போல் ஆணவ மேலீட்டால் தம்மைத் தெரியாது ஞானிகள் நடைக்கு மாறுபாடாய்த் தேகபோகங்களை விழைந்துகொண்டு அறுவகைத் தொழில்களில் நாளுபேதமாய் முயற்சிப்படலான், "உன்மத்தக் கோரணி" என்ருர். அவர் மருளால் மயங்கி நடிக்கின்றூர், இவரருளால் தெளிந்து நடிக்கின்றூர் என்பதுங் காண்க. தாந்தாம் என்பது அந்நடத்திற்கு ஓர் தாளமும் ஆமெனக் கொள்க. (கரு)

ஆசைமுத லான வனைத்தும்போய் நானதுவாம்
வாசனையு மாண்டு மறந்தறியா-நேசத்
துறும்போக வுல்லாச வூமைக்கூத் தாடிக்
குறும்போக் குவந்துநடப் பார்.

(இ-ள்.) ஆசை முதல் ஆன அனைத்தும் போய் நான் அது ஆம் வாசனையும் மாண்டு மறந்து அறியா நேசத்து உறும் போக உல்லாச ஊமைக் கூத்தாடி எ-து,—ஐந்து ஆவா முதலிய கருவிகள் அனைத்தும் இறந்து, நான் அச் சிவத்தோடு அத்துவித மானேன் என்பதாகிய வாசனையும் இறந்து, (தன் தரிசனம் திருவருள் தரிசனங்களில் நின்றோர் ஓர்காலை அவற்றை மறந்து மீண்டும் அறிவதுபோல்) மறந்து அறியாத நேயத்துத் தோன்றும் பரிபூரணுநந்தபோக உல்லாசத்தோடு மௌனக் கூத்தாடி ;

Digitized by Google

குறும் போக்கு வந்தும் நடப்பார் எ-து,—பின்னர்ச் சிறிதிடஞ் சென்று மீண்டு வந்தும் உலாவுவார் (அவ்வத்துவிதாநந்தம் பெற்றோர்), எ-று.

விடயங்களில் செல்லும் ஐந்து அவாவும் நீங்கவே, அவ்விடயங்களை அறிந்து பற்றி அவற்றுள் அழுந்தவதாய இருவகை இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் நீங்கும். இவைகள் நீங்கவே, ஒழிந்த கருவிகளும் நீங்கும். ஆகலின், ஆசை முதலானவனைத்தும்போய் என்று ஆசையை முன்வைத்துக் கூறினார். நேயத் தழுந்தியபோது போதம் இறத்தலின், "மறந்தறியாநேசம்" என்றார். சிறுபிள்ளைகள்போ லுலாவி விளையாடுவ ராகலின், "குறும்போக்கு வந்து நடப்பார்" என்றார்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் மெய்ஞ்ஞானிகள் அஞ்ஞானிகளது பொய்யுலகாசாரத்தைக் கண்டு இரக்கம்பனுதிகளும், தம்முண்மையும் ஆநந்தாநுபவமும் கண்டு நடனுதிகளும் செய்வரென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

[கருவிகளும் போதமும் இறந்து நேயத் தழுந்தினோர் அக்கருவிகளும் போதமும் உடையோரது மயக்கமும் தமது தெளிவும் எங்ஙன மறிவார்? எனின், மேற் கூறுகின்றார்.]

கேடுஞ் சுகமு முதலெல்லாங் கீழ்ப்படுத்திக்
கூடுஞ் சுகம்போலக் கொள்ளாதே-நாடுநகும்
பூனைக்கண் ணேரி பொருப்பேறி போனுச்சிப்
பானுப்போ னீயவனைப் பார்.

(இ-ள்.) கேடும் சுகமும் முதல் எல்லாம் கீழ்ப்படுத்திக் கூடும் சுகம்போலக் கொள்ளாதே எ-து,—துக்கமும் சுகமும் இவற்றிற்கு முதலாய் உள்ள தேகாதி பிரபஞ்ச மெல்லாமும் கீழ்ப்படுத்தி நீக்கி, நேயத்தைக் கூடும் பரமுத்தர் குணம்போலச் சீவன்முத்தர் குணத்தை நீ கருதிக்கொள்ளாதே (அஃது எங்ஙனம் எனின்,)

Digitized by Google

நாடு நகும் பூனைக்கண் வரி பொருப்பு ஏறிபோல் உச்சிப் பானுப்போல் நீ அவனைப்பார் எ-து,—நாட்டின்கண் உள்ளார் பார்த்து நகையாநின்ற இருட்டைச் சிறிதேனும் இன்றி இரவினும் பகலினும் அறியும் பூனையினது கண்ணைப்போலும் வரிகரைமேல் ஏறினோனைப்போலும், மலைமேல் ஏறினோனைப் போலும், மத்தியானத்துச் சூரியனைப்போலும், அச்சீவன் முத்தர் அறிவையும் பார்த்தறிதி, எ-று.

பூனைக் கண்ணிற்கு இரவினும் பகலினும் பொருள்கள் தோன்றுவனபோலும், வரிகரைமேல் ஏறிக்கு இருபாலும் தோன்றுவனபோலும், பொருப்பேறிக்கு நிலத்திற் பொருளும் பொருப்பிற் பொருளும் தோற்றுமாபோலும், உச்சிப் பானுவிற்கு உதயமாகுந் தானமும் அத்தமிக்குந் தானமும் தோற்றுமா போலும், பிறப்பில் துன்பமும் வீட்டில் இன்பமும் அவர்க்குத் தோற்றும். ஆகலின், இங்ஙனம் உவமை கூறினார். இருளான் அறியுங் கண்ணிற்கு ஒளியிற் பொருள் தோற்றாததுபோல் பெத்தர்களென்பதும், ஒளியான் அறியுங் கண்ணிற்கு இருளிற்பொருள் தோற்றாததுபோல் பரமுத்தரென்பதும், இருளினும் ஒளியினும் அறியுங் கண்ணைப்போல் சீவன் முத்தரென்பதும், பூனைக்கண் என்னும் உவமைக் குறிப்பாற்காண்க. பரமுத்தர் தநுவாதிகளை நீக்கி நேயத்தழுந்தினோர். சீவன் முத்தர் தநுவாதிகளோடு கூடியுங் கூடாமல் நின்று நேயத்தழுந்தினோர். ஆகலின், இச்சீவன் முத்தராவார் இவரென்று இதனுட் பகுத்தறிவித்தார். வரி யென்பதனைக் கரைமேலேறி யென்பதனோடுங் கூட்டுக. "நாடுநகும்" என்பது பூனைக் கண்ணிற்கு அடை.

இத்திருவெண்பாவால் சீவன் முத்தராய மெய்ஞ்ஞானிகள் சகமுகமும் அகமுகமும் தோன்றப் பற்றாது பார்த்து அறிவரென்று அறிவித்தவாறு காண்க. (க

[ஞானிகளாயினோர் மௌனமா யிருப்பதன்றி, இவர் ஆடலாதிகளைச் செய்வது என்னை? என்று சரியாதியி னிற்போர் சொல்லார்களோ? எனின், மேற்கூறுகின்றார்.]

சூலையும் பேயும் பிடித்துழல்வார் சும்மாநம்
போலறிவீ ரென்றுரைத்த புத்திபோல்-மூல
இருளான் மறந்தறிவா ரீதென்று னென்பார்
அருளா லறிந்தறிவா ரை.

(இ-ள்.) சூலையும் பேயும் பிடித்து உழல்வார் சும்மா நம் போல் அறிவீர் என்று உரைத்த புத்திபோல் எ-து,—(பொது மாதர் கூட்டரவான் வரும்) சூலை நோயும் (நற்குணத்தை மாறுபடுத்தும்) பேயும் பிடித்து (அவற்றான் வருந்தி) சுழல்வர் (இச்சூலையும் பேயுங்கொண்டு) சும்மா எம தறிவைப்போல் (நீரும்) அறிவீர் என்று (நற்குணத்தோர்க்கு) சொன்ன புத்தி போல்;

மூல இருளால் மறந்து அறிவர் அருளால் அறிந்து அறிவாரை ஈது என் என்பார் எ-து,—மூல மலவிருளால் (தம்மை) மறந்து (மாயா காரியமாகிய தநுவாதிகளை யான் எனதென்று) அறிவார் அருளால் (அத் தநுவாதிகளைப் பொய்யென் றறிந்து நீங்கி) தம்மையும் தமக்குரிய பேரின்பத்தையும் அறிந்தவரைப் பார்த்து (பித்தரைப்போல் நீர் செய்யும் ஆடல் பாடல்கள்) இதென்னை என்று சொல்வர் (அதுகொண்டு இவர்க்கோர் இகழ்ச்சியும் இன்று), எ-று.

சூலையும் பேயும் பிடித்துளோர் புத்தியை அவை பிடியாத நற்குணத்தோர் கேளாததுபோல், சகலகேவலத்தில் நிற்போர் சொற்களை அவற்றை நீங்கிச் சுத்தத்தினிற்போர் கேளாரென்பது இவ் வுவமையான் அறிக. சூலையும் பேயும் என்றது ஏகதார விரதியாய் இலிங்க விரதியா யிருப்போர்க்குப் பொது மாதர் கூட்டரவும் ஐவாரசர் முதலிய மருளேற்றிக் கொள்வதும் நன்றென்று பிறர் கூறுவனபோல் என்பதும் ஆம்.

Digitized by Google

இத் திருவெண்பாவால் மெய்ஞ்ஞானிகளது ஆடலாதி களைக்கண்டு கருமிகள் பழிப்பினும் அது பழிப்பின்பாற் பட்டது அன்றென்று அறிவித்தவாறு காண்க. (௧௮)

[ஞானிகள் மகிமையை உலகத்தாரும் சரியையாதியி னிற்போரும் அறியா திருத்தல் ஏன்? எனின், மேற் கூறுகின்றார்.]

மருண்மூகர் வாக்கறிய வல்லரோ மாயா
இருளே யொளியா யிருப்பர்-அருளுருத்த
பேயனைப்பே யென்னரோ பித்தநாப் பாலிருட்கண்
பார்வைக்குப் பானு பகை.

(இ-ள்.) மருள் மூகர் வாக்கு அறிய வல்லரோ மாயா இருளே ஒளி ஆய் இருப்பர் எ-து,—பித்தமேறிய ஊமர்கள் (நல்லறிவாளர் கூறும் அறநெறி) வாக்கினை (உட்கொண்டு) அறிய வல்லரோ? அதுபோல், (உலகத்தார் ஞானிகள் கூறுந் திருவாக்கான் ஆயினும் அவர்களை ஞானிகளென்று அறியவல்லரோ? அஃதன்றி, (தாம் கற்றநூலறிவும் சரியையாதிகளுமாகிய) மாயாவிருளைத் தானே ஞானப்பிரகாசமாக் கருதிக்கொண்டிருப்போர்;

உருத்த அருள் பேயனைப் பேய் என்னரோ பால் பானு பித்த நா இருள்கண் பார்வைக்குப் பகை எ-து,—(மும்மலங்களையும் தற்போதத்தையும்) கோபித்த அருளாகிய பூரணப் பேய் பிடித்த பெயனைப் பேயனென்று சொல்லார்களோ? (அங்ஙனம் இருந்தோர் இங்ஙனம் இருந்தோரைப் பேயனென்று இகழ்வான் ஏன் எனின்) மதுரமாகிய பால் பித்தமேறிய நாவிற்குப் பகையானது போலும், பேரொளிப் பிரகாசமாயிருந்த பானு இருளை ஒளியாகக்காணும் இருட்கண் பார்வைக்குப் பகையானது போலும், (ஆநந்தமும் திருவருளும் மூலமேலீட்டால் அவர்க்குப் பகையாமாகலின் இவற்றைப் பெற்ற

Digitized by Google

ஞானிகளும் பகையாத் தோற்றுவர், இஃதே அவரிகழ்தற்குக் காரணம் என்று அறிதி), எ-று.

"மருண்மூகர் வாக்கறிய வல்லரோ" என்றது உலகத்தார்க்கு உவமை. நூலுணர்ச்சியோடும் சரியையாதிகளி னிற்போர் இகழ்வா ரென்றது பரஞானம் இன்மையால் எனக்கொள்க. பகை என்பதனைப் பால் என்றதனோடுங் கூட்டுக. கைப்பாயும் இருளாயும் மாறுபடத் தோற்றலின் "பகை" என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகளது மகிமையை உலகத்தாரும் சரியையாதிகளி னிற்போரும் மெய்யுணர்ச்சி யின்மையான் அறியார்களென்று அறிவித்தவாறு காண்க. (கக)

[ஞானிகள் மகிமையை மூடரறியார். ஆயின், அறிவார் ஆர்? எனின், மேற்கூறுகின்றார்.]

அடைப்புள்ளா யாளடர்ந்த வாமையாய்த் திக்கே
உடுப்பதாயோர்ந்துழல்வார்க் கூரார்-நடைப்பிணமே
ஊமைப்பே யாரொனினு மோலமிடுந் தேவர்குழாம்
சேமக்கோ லாளிற் றிரர்.

(இ-ள்.) அடைப்புள் ஆய் ஆள் அடர்ந்த ஆமை ஆய்த்திக்கே உடுப்பது ஆய் ஓர்ந்து உழல்வார்க்கு ஊர் ஆர் எ-து,— (நேயகிட்டை மாறுதிருத்தலின் முட்டைகளைவைத்து அவையைங் காக்கும்) அடைப்புட் போலாய், (தாமிருந்த இடந்தேடிச் சிலர் அன்றுதிகளைக் கொடுவந்து நேரேவைத்து வணங்கி உபசாரங்களைக் கூறினும் இந்திரியங்கள் ஐந்தையும் அவற்றிற் செல்ல வொட்டாது உள்ளடக்கிக்கொண் டிருத்தலின்) ஆள் அடர்ந்த ஆமைபோலாய், (இவ்வுடையைத் துறந்து திக்கெல்லாம் பரிபூரணமாயுள்ள உடையைத் தம்மைத் தெரியாது சூழ வுடுத்திக்கொண்டிருத்தலின்) திக்கையே உடுப்பதாய், (இங்ஙனந்தேர்ந்து உலாவுவார்க்கு) ஊரின்கண் உள்ளார்

Digitized by Google

(நன்றுகூறினுந் தீதுகூறினும் உறவரோ பகைவரோ இவர்) யாவர்;

கடைப்பிணமே ஊமைப் பேயார் எனினும் ஒலம் இடும் தேவர் குழாம் சேமக்கோல் ஆள் இந்திரர் எ-து,—(அஃதன்றி) நடையாடிய பிணம்போல் திரிந்தார் எனினும் ஊமைப்பேயைப்போல் இருந்தார் எனினும் (அவரது மான்மியத்தை) தேவர் கூட்டங்களெல்லாம் அறிந்து சூழ்ந்துகொண்டு தோத்திரம் பண்ணுநிற்பர், (இந்திரர்கள் அவர்க்கு ஏவற்பணிவிடை செய்யும்) சேமக் கோலாள்களாயத் திரிவர், எ-று.

அடைப்புள் முட்டையைச் செட்டையால் அடக்கிக்கோடல் போல், அண்டங்களை எல்லாம் தமது பூரணத்தால் மறைத்துக்கொண்டிருப்பர் என்பதும் ஆம். ஆள் அடர்ந்தபோது ஆமை ஐந்துறுப்பையும் அடக்கிக் கோடல்போல், விடயங்கள் சேர்படின் அவர் ஐந்தையும் அடக்கலின், இங்ஙனம் உவமை கூறினர். ஊர் என்பது ஊரின்கண் உள்ளார்மேல் ஏறிற்று. ஒர்ந்துழல்வார்க் கூரினுள்ளா ரியாவரெனக் கூட்டுக. கருவிச்சேட்டைகள் இறந்துநிற்றலின், "கடைப்பிணம்" என்றும், மௌனநந்தமா யிருத்தலின், "ஊமைப்பேயர்" என்றும் ஒன்றினும் அவாவற்ற மெய்ஞ்ஞானி தேவருலகத்தும் இன்மையால், "ஒலமிடுந் தேவர்குழாம்" என்றும், "சேமக்கோலாளிந்திரர்" என்றுங் கூறினர். அந்த ஞானிகட்கு ஏவல் செய்வது மிகவும் சிறப்பாகலின், அவர் பிடிக்குங்கோலை, "சேமக்கோல்" என்றார். உபேந்திரர் உளர் ஆகலின், இந்திரரென்று பன்மையாகக் கூறினர்.

இத்திருவெண்பாவால் ஞானிகள் மகிமையை மானிடர்கள் அறியார் எனினும், தேவர்கள் அறிந்து ஏவல் புரிவார் என்று அறிவித்தவாறு காண்க. (உ0)

[இங்ஙன மகிமையுடைய ஞானிகள் எத்தேசத்திற்செல்வர் எவ்விடத் திருப்பர் எனின், மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

செத்தவரைப் போலத் திரும்பாமற் போகலுமாம்
எத்திசையு மொன்றென் றிருக்கலுமாம்-முத்தர்தமக்
கண்டமணுச் சிற்றி லாடரங்கந் தேகமலால்
கண்டிடுகைக் கேதுமிலைக் காண்.

(இ-ள்.) முத்தர் தமக்குச் செத்தவரைப்போலத் திரும்பாமல் போகலும் ஆம் எத்திசையும் ஒன்று என்று இருக்கலும் ஆம் எ-து,—முத்தர் தமக்குச் செத்தவரைப்போலத் (தாம் இருந்து நீங்கிய பதியில் மீட்டும்) திரும்பாமல் சேறலும் ஆகும் (அஃதன்றி எல்லாம் பரிபூரணமாய்த் தோற்றலின் எமக்கு) எல்லாத் திக்கும் ஒன்றுதானே என்று ஓரிடத் திருத்தலும் ஆகும்;

தேகம் அணுச் சிற்றில் அண்டம் ஆடு அரங்கம் அலால் கண்டிடுகைக்கு ஏதும் இலை எ-து,—(அஃதன்றி) தேகங்கள் ஆன்மாக்கட்குச் சிற்றில் இழைத்தற்கு இடமெனவும், அண்டம் (அவ்வான்மாக்கட்கு மாயாகோரணிக் கூத்தாடற்கு) ஓராடரங்கெனவும், காண்பது அல்லாமல் (அம்முத்தர் தமக்கு) வேறு காண்கைக்கு யாதொரு பொருளும் இல்லை, எ-று.

உடற்கண் ணிருந்து நீங்கிய உயிர் மீண்டும் வந்து அதனுள் புகாததுபோல், தாமிருந்து நீங்கிய பதியில் மீட்டும் வந்து புகாமையின் "செத்தவரைப்போலத் திரும்பாமற் போகலுமாம்" என்றார். அணு என்பது ஆன்மா. தேகம் சிற்றிலெனவும், அண்டம் ஆடரங்கெனவும் மாறிக்கூட்டுக. பிரபஞ்சமெல்லாம் அண்டபிண்டங்களுள் அடங்கும் ஆகலின், "கண்டிடுகைக் கேதுமிலைக்காண்" என்றார். முத்தர் தமக்கென்பது நடுநின்று இருபாலுங் கொண்டு முடிதலின் தாப்பிசைப் பொருள்கோளும் நடுவிலைத் தீவகமும் ஆதல் காண்க. காண்-அசை.

Digitized by Google

இத்திருவெண்பாவால் ஞானிகள் செல்வதற்கும் இருப்ப தற்கும் தேசமும் இடமும் குறியீடு இன்றென்று அறிவித்த வாறு காண்க. (உக)

[அந்த ஞானிகள் போகாத ஊர் ஒன்றும் இன்றோ? எனின், மேற் கூறுகின்றார்.]

உடற்போகம் போக வுயிர்ப்பகைபோய்ப்பேறும்,
கெடத்தானுந் தன்னறிவுங் கெட்டோர் - நடக்கும்
போ,—தாகாயஞ் சாணிடல்போ லாவதல்லாற் பூர
ணர்க்குப்,—போகாவூ ருண்டோ புகல்.

(இ-ள்.) உடல் போகம் போக உயிர்ப்பகை போய்ப்பேறும் கெடத் தானும் தன் அறிவும் கெட்டோர் எ-து,—உடம்பான் அநுபவிக்கும் விடயபோகம் போக (அப்போகமாகிய துன்பத் தை இன்பம்போல் மாறுபாடாய்த் தோற்றுவிக்கும்) உயிர்ப் பகையாகிய ஆணவம் போய், (பேரின்பத்தைப் பெற்றோமெ ன்னும்) பேறும் போகத், தன்னையும் தனக் கறிவிப்பதாய அருளையும் இழந்துள்ளோர்;

நடக்கும்போது ஆகாயம் சாண் இடல்போல் பூரணர்க்கு ஆவது அல்லால் போகா ஊர் உண்டோ புகல் எ-து,—(ஒரு திசையில்) செல்லும்போது ஆகாயத்தைச் சாணிட் டளப்ப துபோல் (பரிபூரணர்க்குத் தமது பூரணத்தில் தாம் செல்வது போல்) தோன்றும் அல்லாமல் (இது தீதென்று பகுத்துப்பார் த்து) போகாது தவிரும் ஊரும் உண்டுகொல் நீ புகலுதி, எ-று.

ஆணவத்தால் இன்பமாய்த் தோன்றிய போகம் துன்பமா ய்த் தோன்றியபோது அவ்வாணவங் கெடும். அவ்வாணவம் கெடவே தன் தரிசனமுந் திருவருள் தரிசனமும் பணியோக மும் ஆநந்தப்பேறும் உண்டாம். ஆநந்தப்பேறு இழந்த இடத் துத் தானுந் தனக்கறிவித்த அருளும் இன்றாம். ஆகவின், உண்டாம் அவைக்கும் இன்றாம் இவைக்கும் காரணம் இவை

Digitized by Google

யென்று உடற் போக இழப்பையும் உயிர்ப் போக இழப்பையும் எடுத் தறிவித்தார். ஆகாயத்தைச் சாணிட் டளக்கும் போது அளப்பதுபோல் தோன்றி விடுத்தபோது அளந்ததும் இன்றாய் விடுத்ததும் இன்றாய் இருத்தல்போல், பூரணர்க்கு நடக்கும்போதும் அப்பூரணமாறாது அதனுள் நடப்பதுபோல் தோன்றி ஓர் தானத் திருந்தவிடத்து முன் னடந்தோம் என்பதும் இப்பேர திருந்தோம் என்பதும் தோன்றாது. ஆகலின், "ஆகாயஞ் சாணிடல்போல்" என்று உவமை கூறினார்.

இத்திருவெண்பாவால் ஞானிகட்கு நிற்குநிலையும், நடக்கும்போது உள்ள குணமும், ஓரூர் நிற்கை ஒரூர் தவிர்கையும் ஆகிய நியதி இன்றென்பதும், அறிவித்தவாறு காண்க.(உஉ)

[ஆயின் அவர்க்கு நற்றானமும் தீதாய தானமும் சரியோ? எனின், மேற்கூறுகின்றார்.]

தருவனமென் றண்டுகுடை சாமரையாய் வாழும்
நரவனமென் மேல்கீழ் நடுவென்-பரமசிவன்
தாக்கற் றதுபோ லருள்சிவனைச் சாராபோல்
தாக்கற்றார்க் கெங்குஞ் சமன்.*

(இ-ள்.) தருவனம் என் தண்டு குடை சாமரை ஆய் வாழும் நரவனம் என் மேல் நடு கீழ் என் எ-து,—தருக்கள் நெருங்கிய சோலையாயின் என்னை, முள் செறிந்த வனம் ஆயின் என்னை, சிவிகை கவிகை சாமரை முதலியன உடையராய் வாழும் நராகிய அடவி ஆயின் என்னை, உத்தம மத்திம அதமமாயுள்ள தலங்களாயின் என்னை;

பரமசிவன் தாக்கு அற்றதுபோல், அருள் சிவனைச் சாராபோல் தாக்கு அற்றார்க்கு எங்கும் சமன் எ-து,—பரமசிவன் (எல்லாவற்றோடுங் கூடியிருந்தும் அவற்றுள்) தாக்கற் றிருந்ததுபோலும், திருவருளானது (கிருத்தியங்கள் ஐந்தும் தன்னால் நடக்கவும் சிவத்தைவிட்டு நீங்காதிருப்பதே அன்றி இக்

கிருத்தியங்கள் ஐந்தையும் ஒழித்து) அச்சிவத்தைச் சார்வோம் என்று சாராதவாறு போலும் (ஒன்றேனும் தாக்கற்ற ஞானிக ட்கு (முற்கூறிய) இடமெல்லாஞ் சரியாம், எ-று.

கருவிகள் எல்லாவற்றேடும் கூடியிருந்தும் அவற்றுள் தாக் கற்று நிற்றலால், "பரமசிவன் தாக்கற்றதுபோல்" என்றும், தேக இந்திரிய அந்தக்கரணங்கள் தம்மால் தொழிற்படினும் தாம் சிவத்தைவிட்டு நீங்காதிருப்பதே அன்றி இத்தேக இந்தி ரியாதிகளினது தொழில்களை ஒழித்து அச்சிவத்தை அடை வோம் என்பதின்றிப் பரிபூரணமா யிருத்தலின், "அருள் சிவ னைச் சாராபோல்" என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்கு எவ்விடமும் சமனெ ன்று அறிவித்தவாறு காண்க. (உ௩)

[ஆயின் அவர்களுக்கு இடந்தான் யாது? எனின், மேற் கூறுகின்றர்.]

தம்மையரு ளாலறிந்து தாமறிந்த தெல்லாம்போய்
இம்மைப் பெருவாழ்வை யெய்தினர்க்கு—முன்னே
நடந்தறிந்த போத நசிப்பே யிருக்கும்
இடம்புறங்கா டென்ப திலை.

(இ-ள்.) தம்மை அருளால் அறிந்து தாம் அறிந்தது எல்லாம் போய் இம்மைப் பெருவாழ்வை எய்தினர்க்கு எ-து,—(கருவி கள் முப்பத்தாறையுங் கடந்து) தம்மை அருளால் அறிந்து (அங்ஙனந் தம்மை யறிந்த பின்னர்த்தம்மை அறிவித்த அருள் தரிசன முதலாய்) தாமறிந்த எல்லாம் நீங்கி இம்மைக்கண்ணே சுகாதீதமாகிய பெருவாழ்வை அடைந்தோர்க்கு;

முன்னே நடந்து அறிந்த போதம் நசிப்பே இருக்கும் இடம் புறங்காடு என்பது இலை, எ-து,—(கருவிகளையும் தன் தரிசன முதலியவற்றையும் இது இது என்று அறிந்து) அவற்றை நீங்

Digitized by Google

கிச்சென்று (சிவத்தை) அறிந்து அதனுள் இறந்த போதம் (மீண்டு எழாது அதனை) கெடுப்பதே இருக்கும் இடம் அன்றி இது சுத்தமாகிய இடம் என்பதும் இது புறங்காடென்பதும் இன்று, எ-று.

தற்றரிசன முதலியவற்றுள் உறுதியாய் நின்றோர் மறுமைக்கண் அடையும் சுகாதீத முத்தியை இவர் இம்மைக் கண்ணே அடைந்தார். ஆகலின், "இம்மைப் பெருவாழ்வை யெய்தினர்" என்றார். எல்லாவற்றையும் நீங்கிச் சென்றமையால், "நடந்து" என்றார்.

இத்திருவெண்பாவால் ஞானிகட்குப் போதம் இறந்திருக்கும் இடமே கருத்தன்றி மற்றொன்றும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (உச)

[இங்ஙனம் இருந்த ஞானிகட்குச் சாதிநடை சமயநடை இன்றோ? எனின், மேற் கூறுகின்றார்.]

காமாதி விட்டுக் கரமே கலமாகிப்
பூமீதே கைகாலைப் போர்த்துறங்கி-நாமகுணம்
சாதி கருமமெனும் வாதனையிற் றாக்கற்றார்க்
கேது சமயமென லாம்.

(இ-ள்.) காமம் ஆதி விட்டுக் கரமே கலம் ஆகிப் பூமீதே கை காலைப்போர்த்து உறங்கி எ-து,—காமக் குரோதலோப மோகமத மாற்சரியங்களை யெல்லாம் விட்டு நீங்கி, கரமே உண்கலனாகி (மனைதோறும் பிச்சை ஏற்றுண்டு பொதுச்சாவடி புறந்திண்ணை பாழ்ங்கோயில் முதலியவற்றுள்) பூமியாகிய மலரணைமீது கரங்களையும் தாள்களையும் போர்வையாகப் போர்த்துக்கொண்டு ஆநந்த நித்திரை பண்ணி;

நாமம் குணம் சாதி கருமம் எனும் வாதனையில் தாக்கு அற்றார்க்கு ஏது சமயம் எனல் ஆம் எ-து,—பெயர் குணம் சாதி கிரியை என்னும் இவற்றின் வாசனையோடும் தாக்கற்ற மெய்

Digitized by Google

ஞ்ஞானிகட்குச் சாதியாதென்று கூறலாம், சமயம் யாதென்று கூறலாம், (ஆகலின் இவற்றின் நடைகளும் அவர்க்கின்று,) என்றவாறு.

"காமாதி விட்டு" என்றமையான், மாயாகுணம் ஒன்றும் இலர் என்பதாயிற்று. காமாதிகளில் தாக்கற்றொன்றது அவற்றின்வாசனையிற் றாக்கற்றார் என்றமையான், அறற்றை மறந்து போயினார் என்பதாயிற்று. "சாதி கருமம்" என்றமையான் சாதி யேதெனலாம் என்பது வருவிக்கப் பட்டது.

இத் திருவெண்பாவால் ஞானிகள் நடை சாதி சமயங்களோடு ஒவ்வாதென்று அறிவித்தவாறு காண்க. (உரு)

[ஞானி நடை சாதிநடை சமயநடைகளோடு ஒவ்வாது இங்ஙனம் இருப்பது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

ஞானிக் குலகநடை யென்றுநாம் பார்க்கின்
சீனக்கண் ணாடியொடு தீபமுமாம்-ஏனோர்க்கும்
விப்பிரட்ட மேபோல வேறும் விகாரியோ
அப்பராக் கன்றியறி யான்.

(இ-ள்.) ஞானிக்கு உலகநடை என்று நாம் பார்க்கின் சீனக் கண்ணாடியொடு தீபமும் ஆம் எ-து,—ஞானியினது நடையை உலகரது சாதிநடைபோ லென்று யாம் பார்ப்போம் எனின் (அவரது நடை இருளில்) தீபத்தைக் கொண்டு பொருள் காண்பதுபோலுமாம், (இவரது நடை அவ்விருளில்) சீனக் கண்ணாடிகொண்டு பொருள் காண்பது போலுமாம், ஆகலின், (இவரது நடையோடு அவரது நடை ஒவ்வாதானால் சமயிகள் நடையோடு ஒவ்வாதிருப்பது எங்ஙனம் எனின்);

ஏனோர்க்கும் விப்பிரட்டமே போல வேறு ஆம் விகாரியோ அப்பராக்கு அன்றி அறியான் எ-து,—(சமயிகள் தத்தம் கடவுளைத் தமக்குரிய நூல் கூறியவாறே வழிபடுவர், அவர் அக்கடவுளரை எல்லாம் கடந்துநின்ற பரிபூரணசிவத்தை

Digitized by Google

அடைந்தவர் ஆகலின்) அச்சமயிகள் நடைக்கும் இவர் நடை சுத்தப்பிரட்டமேபோல் ஒவ்வாது வேறும் (இங்ஙனஞ் சாதிந டை சமயநடை ஒவ்வாதாயின் இவ்விருவகை நடையும் இல் லாத பாமரர் போலும் அவர்) விகாரியோ எனின், அவர் சிவ னைப்போலும் நிருவிகாரி, அவர் நிருவிகாரியேயாளுல் விகார மற்று இருக்கவேண்டுமே அன்றிக் கரபிச்சை வாங்கி உண்டல் முதலிய நடை நிகழ்வானேன் எனின், அங்ஙனம் காயத்தின் நிகழ்ந்ததாயினும் அவர் நிருவிகாரமாகிய) பராக்கே அன்றி (இவ்விகாரமாகிய பராக்கினுள் ஒன்றினையும்) அறியார், எ-று.

உலகநடை என்றதனுல் ஞானிநடை வருவிக்கப்பட்டது. ஞானிநடை தீபம்போலெனவும், உலகநடை சீனக் கண்ணுடி போலெனவும் மாறிப் பொருள்கொள்க. இருளில் தீபத்தால் பொய்ப்பொருள் தோன்றுவபோல் ஞான தீபநடையால் மெய் ப்பொருள் தோன்றும் என்பதும், அவ்விருளில் சீனக்கண்ணு டியால் பொய்ப்பொருள் சிறிதும் தோன்ருததுபோல், மாயா ந்த காரத்தோடும் செய்யும் சாதி நடையான் மெய்ப்பொருள் சிறிதும் தோன்ருதென்பதும் இவ் வுவமைகளாற் காண்க. "விகாரியோ" என்றமையானும் "அப்பராக்கன்றியறியான்" என்றமையானும், அவற்றிற் கிடையில் வேண்டுவன வருவிக் கப்பட்டன.

இத்திருவெண்பாவால் ஞானிகள் மாயாதீதமான சிவஞா னம் உடையர் ஆகலின், சாதிசமய நடையாகிய மாயைக் குட் படாரென்று அறிவித்தவாறு காண்க. (உகூ)

[ஞானியினது நடை முதலியவற்றை அறியக்கூடாதோ? எனின், மேற்கூறுகின்ருர்.]

மூர்க்க னநாசாரி மூடனெனப் பண்டிதனும்
மேற்குலமா மாசார வித்தனெனப்-பார்க்கில்
அளவைக் களவாகி யப்பாலா ஞானி
தெளிவைத் தெளியாத தென்.

Digitized by Google

(இ-ள்.) மூர்க்கன் அநாசாரி மூடன் எனப் பண்டிதன் ஆம் மேல் குலம் ஆம் ஆசார வித்தது என எ-து,— (உலகநடை சமய நடைகளில் நிற்போர் ஞானி நடையைப்பார்த்து, தமது நடையோடு ஒவ்வாமையான் இவர் பிரட்டு நடையையுடைய) மூர்க்கரெனவும், ஆசார ஈனரெனவும், (ஒன்றும் அறியாத) மூடரெனவுங் கூற (விவேகிகளாயினார் அவர் நடையைப்பார்த்து எல்லாவற்றையுந் தெளிந்த) பண்டிதராமெனவும், மேலாய ஞான குலமாமெனவும், (ஆசாரத்திற் கெல்லாம்) ஓர் வித்தாமெனவுங் கூற;

பார்க்கில் அளவைக்கு அளவு ஆகி அப்பால் ஆம் ஞானி தெளிவைத் தெளியாதது என் எ-து,—(அவர் நடையை) விசாரிக்குமிடத்து, (இவரால் இவ்வளவென்று) அளவிடுதற்கு அளவிடுவதாய் (இவ்வளவையுங் கடந்து) அப்பாலுமாகிய அந்த ஞானியினது (நடையினையும்) தெளிவினையும் (இவ்வளவென்று ஒருவராலும்) அறியக்கூடா திருந்தது என்கொலோ, எ-று.

உலகநூல் சமயநூல்களை உணர்ந்தோர்கள் அந்நூல்களின் நடை இன்மையான் இகழ்ந்து கூறினார். ஞானநூ லுணர்ந்தோர் ஞானநடை என்றறிந்து புகழ்ந்து கூறினாராகலின் "அளவைக்களவாகி" என்றும், இங்ஙனஞ் செய்வோமென்று செய்யாது அவரிடத்தில் ஞானநடை இயல்பாய் நிகழ்தலின் ஞானநூலுணர்ச்சியால் புகழ்ந்து கூறினார், அளவையுங் கடந்துநின்றா ராகலின் இம்மூவளவைக்கும் பொதுப்பட "அப்பாலா ஞானிதெளிவைத் தெளியாததென்" என்றுங் கூறினார்.

இத்திருவெண்பாவால் ஞானியினது நடையுந் தெளிவும் யாவராலும் அறிந்து அளவிடக்கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (௨௭)

[சுகாதீதத்தில் நிற்போர்க்கு அந்நடைகள் இலவாயினும் அருள்தரிசன முதலியவற்றில் நிற்போர்க்கு அந்நடைகள் இலவாயின் அது பிரட்டன்றே? எனின், மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

அஞ்சனக்கண் ணுளர்க் கருநிதியந் தோன்றுவ
போல்,—நஞ்சலகை மாற்றினதி ஞனுவர் போல் -
வெஞ்சாப,—வீடுபோற்ருேன்றுமருண் மேலீட்டால்
விப்பிரட்டாம்,—ஓடையின்மண் டுகமொப்போர்க்கு.

(இ-ள்.) அருள் மேல் ஈட்டால் அஞ்சனக்கண் ஆளர்க்கு அருநிதியம் தோன்றுவபோல் நஞ்சு அலகை மாற்றின் அதில் நாணுவர்போல் வெஞ்சாப வீடுபோல் தோன்றும் எ-து,—திருவருள் மேலிட்ட காலத்து, பாதாள அஞ்சனம் போட்டுப் பார்க்கும் கண்ணினை யுடையார்க்கு அரிய சேமநிதி தோன்றுவபோலும், தம்மேலேறியிருந்த விடத்தையும் பேயையும் மாற்றின் (அதனுல் தெளிவு பிறந்து முன்னர் என்செய்து கொண்டோம் என்று அவற்ருல் மயங்கிச்செய்த செயல்களை நாடி) நாணுவாரைப்போலும், கொடிய சாபத்திஞல் வருந்தினோர்க்கு அச்சாபம் விடுதலை யாஞற்போலும் தோன்றும் ;

ஓடையில் மண்டூகம் ஒப்போர்க்கு விப்பிரட்டு ஆம் எ-து,— (அத்திருவருள் மேலீட்டைப்பெற்ற ஞானிகடை) ஓடையில் மூழ்கிக் கிடக்கும் தவளைப்போல் (மாயாசமுத்திரத்தில் மூழ்கிக்கிடப்போர்க்குப்) பிரட்டு நடைபோல் தோன்றும், எ-று.

மண் மறைப்பால் தெரியாதிருந்த நிதி அஞ்சனம் போட்டுப்பார்த்த கண்ணுளர்க்கு அம்மண் ஊடுருவி அந்நிதிதோன்றுவபோல், மலமறைப்பால் தெரியாதிருந்த அருள் அவ்வருட் கண்ணல் பார்த்தபோது அம்மலமறைப்பு நீங்கி அவ்வருள் எங்கும் தானுய்த் தோற்றும்; ஆகலின், "அஞ்சனக்கண்ணுளர்க் கருநிதியந் தோன்றுவபோல்" என்றும், விடமும் பேயும் நீங்கிய விடத்துத் தெளிவு வந்து முன்னர் அவற்ருல் மயங்கிச் செய்த செயல்களை நாடி நாணுவாரைப்போல், சகல கேவலங்களை நீங்கி அருளைக்கண்ட விடத்து முன்னர் அவற்

Digitized by Google

ருல் மயக்கிச்செய்த செயல்களை காடிகாணம் வரும்; ஆகலின், ''நஞ்சலகைமாற்றி னதிளுனுவர்போல்'' என்றும், தேவனு யிருந்துளான் சாபத்தால் விலங்காதிகளா யிருந்து பின்னர் அச்சாபம் விடுதலை யானபோது தேவத்துவத்தை அடைந்தா ற்போல, அளவிறந்தகாலம் மலதேகம் தானுயிருந்தவர் இப் போது அத்தேகம் நீங்கித் தன்னை அறிவென்று உள்ளபடி அ றிந்தமையால் ''வெஞ்சாப வீடுபோல்'' என்றுங் கூறினர்.

''ஓடையில் மண்டுகேமொப்போர்க்கு'' என்றது, கிணற்றுத் தவளை நாட்டுவளப்ப மறியுமோ என்னும் உலகவழக்கக் குறிப் பால் மாயையில் மூழ்கிக் கிடப்போர்க்கு ஞானி நடை தெரி யுமோ என்றறிவித்தது.

இத் திருவெண்பாவால் திருவருள் மேலிட்டவிடத்து வரு ம் அநுபவமும், அதனை உடையோரும் ஞானிகள் என்பதும், அவரது நடையை மாயையுடையோர் அறியார் என்பதும், அறிவித்தவாறு காண்க. (உஅ)

[நீர் ஈண்டுக் கூறியவாறே துறவும் ஞானநடையு முடை யோரை ஞானிகளென்பது அன்றி இவை இல்லாரையும் ஞா னிகள் என்பது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

அவரவரைப் போலிருப்பர் தாமவரா கார்போல்
இவரவர்க்கொப் பில்லை யெனினும்-உவமைசொலின்
வேசிபணம் வெய்யோன் வீணை வெளிவிசிறி
யாசியர்போ லென்கினுமா வர்.

(இ-ள்.) அவர் அவரைப்போல் இருப்பர் தாம் அவர் ஆகார் போல் இவர் அவர்க்கு ஒப்பு இல்லை எனினும் உவமை சொலி ன் எ-து,—(குடும்பத்தோடு கூடியிருந்தும்) ஞானிகளா யிரு ப்போர் (அறிவினல் அக் குடும்ப நிவிர்த்தியா யிருந்த) ஞானி களைப்போலே யிருப்பர், (இக் குடும்பத்தோடும் இருந்த) ஞா

Digitized by Google

ணிகள் தாம் (கடையினுல் அக் குடும்ப விவிர்த்தியா யிருந்த) ஞானிகளைப்போல் ஆகார், அதுபோல, இந்தக் குடும்பிகள் அந்தக் குடும்பத்தோடும் இருந்த ஞானிகளுக்கு (கடையினுல் ஒப்பர் அறிவினுல் இந்தக் குடும்பிகள் அந்தக் குடும்பத்தோடும் இருந்த ஞானிகட்கு) ஒப்பிலர் எனினும், (இன்னும் அந்த ஞானிகட்கு) உவமை கூறுமிடத்து;

வேசி பணம் வெய்யோன் வீணை வெளி விசிறி யாசியர் போல் என்கினும் ஆவர் எ-து,—வேசிபோல் என்று கூறினும், பணம் போல் என்று கூறினும், வெய்யோன் போல் என்று கூறினும், வீணைபோல் என்று கூறினும், வெளிபோல் என்று கூறினும், விசிறிபோலென்று கூறினும் யாசியர்போல் என்று கூறினுஞ் சரியாவார், எ-று.

வேசி தன்மேல் நசைகொண்டு வந்தார்மேல் தானும் அவர் மேல் நசைகொண்டாற் போலும் வாக்குக் காயங்களிற் காட்டி மனத்தில் அவர்மேல் நசை யின்றிப் பொருள்மேல் நசைகொண் டிருப்பதுபோல், மனைவிமுதலியக் குடும்பத்தார் தம்மேல் நசையுற் றிருப்பத் தாமும் அவர்மேல் நசையுற்றார் போலும் வாக்குக் காயங்களிற் காட்டி, மனத்தில் அவர்மேல் நசையின்றி மெய்ப்பொருள்மேல் நசையுற் றிருத்தலின் "வேசி" என்றும், பணம் எவர் எவர் எம தெம தென்று அபிமானிப்பினும் தனக் கவர்மேல் அபிமானம் அற்றிருத்தல்போல், சுற்றத்தார் நட்பு முதலியோர் எம்மவர் எம்மவர் என்று அபிமானிப்பினும் தாம் அவர்மேல் அபிமானம் அற்று, நிர்விகாரிகளாய் இருத்தலின் "பணம்" என்றும், வெய்யோனுல் உலகத்தார் தொழிற் படினும் இவர் செய்யும் நன்று தீது அவனுக் கின்றாயதுபோல், தமது வாக்குக் காயங்களில் யாது நிகழினும் இவற்றான் வரும் இதாகிதங்களில் தாம் சாராதிருத்தலின் "வெய்யோன்" என்றும், வீணை வாசியா திருந்தபோதும் வாசித்து விடுத்தபோதும் சும்மா இருந்து வாசிக்கும்போது அவன் பாடும் பாட்டி

ன்படி தான் சொல்வதே அன்றி மற்றொன்றும் சொல்லாது ஒழிதல்போல், ஒருவர் ஓர்காரியம் வந்து பேசாமுன்னரும் பேசி ஒழிந்தபின்னரும் தாம் ஓர் காரிய விசாரணை பண்ணாது சும்மா இருந்து, காரியக்காரர் வந்து பேசும்போது அவர் பேசும் காரியப் பேச்சுமாத்திரம் பேசி மற்றொன்றும் சொல்லாது ஒழிதலின் "வீணை" என்றும், வெளி எல்லாவற்றிற்கும் இடங்கொடுத் திருந்தும் அவற்றள் தாக்கற்று நிற்றல்போல் குடும்பத்திற்கெல்லாம் தாம் பிரதானமா யிருந்தும் அவற்றோடும் தாக்கற்றிருத்தலின் "வெளி" என்றும், விசிறி தன்னை எடுத்து விசிறிக் கொள்வார்க்குப் பயன் கொடுப்பதன்றி அவரால் தனக்குப் பயன் வேண்டாதிருத்தல் போல், தம்மைக் கொண்டு பிறர் பயன்படுவது அன்றி அவரால் தனக்குப் பயன் வேண்டா திருத்தலின் "விசிறி" என்றும், யாசியர் குற்றமுடையாரையும், குணமுடையாரையும் குணமாகப் புகழ்தல் போல் இவர் குற்றம் உடையாரையும் குணம் உடையாரையும் சமனாகக் கண்டு நன்மொழி கூறலின் "யாசியர்" என்றும் கூறினர். 'போலென்கினும்' என்பதனை எல்லாவற்றோடும் கூட்டுக.

இத் திருவெண்பாவால் துறந்துள ஞானிகளது வாக்குக் காயங்களில் நிகழும் ஞானநடைக்கு அவர் அதீதமாயிருந்தது போல், இங்ஙனம் குடும்ப சகிதரா யிருந்த ஞானிகளது வாக்குக் காயங்களில் நிகழும் உலகநடைக்கும் இவர் அதீதமா யிருப்பரென்று அறிவித்தவாறு காண்க. (உகூ)

[இங்ஙனங் குடும்பத்தோடு கூடியிருந்தும் பற்றற் றிருப்போரை ஞானிகளென்பது சுபாவம் சிவிகை கவிகை முதலியவற்றோடும் அரசர்போல வாழ்கின்றோரையும் எங்ஙனம் ஞானியென்று சொல்வது எனின், மேற்கூறுகின்றார்.]

தண்டுகுடை யாளராய்ச் சாதுரங்கப் பேரரசாய்த்
தொண்டர்குழாம்போற்றச்சுகித்தாலும்-உண்டுசுத்தர்

போகத்தாரோசுடர்போற் பொய்ப்போகமெய்ப்பெ
சாகப்போ வார்கடன்றீர்த் தல். [ருக்காய்ச்

(இ-ள்.) சாதுரங்கம் தண்டு குடை ஆளர் ஆய்ப் பேர் அரசு ஆய்த் தொண்டர் குழாம் போற்றச் சுகித்தாலும் சுத்தர் உண்டு போகத்தாரோ எ-து,—நால்வகைச் சேனையும் சிவிகை கவிகை முதலியவும் உடையவராய் வாழும் பேரரசரைப் போல (சிவிகை கவிகை முதலிய வுடையராய்) அடிமைக் கூட்டங்கள் சூழ்ந்து நின்று உபசரிப்ப (மகா போகங்களை) அனுபவித்தார் எனினும் (அவற்றோடுந் தாக்கற்று நின்று) சுத்த நிலை பெற்றாரும் உண்டு, அவர் இப்பிரபஞ்சிகள் போலும் போகமயமாய் அழுந்துவரோ (அழுந்தார், அஃது எங்ஙனம் எனின்);

சுடர்போல் பொய்போகம் மெய்ப்பெருக்கு ஆய்ச்சாகப் போவார் கடன் தீர்த்தல் எ-து,— (எண்ணெய் வார்க்குந் தோறும் தன்னிடத்தில் வாங்கிக்கொண்டு தான்மிகவும் பிரகாசிக்கும்) தீபம்போல், பொய்ப்போகம் (வருந்தோறும் அதனைத் தற்போதத்தால் பற்றி அநுபவியாது அருட்கண்ணால் பார்த்துத் தாம் அற்று அநுபவித்தலின் அது மெய்ப்பொருட்காய்ப் பொய்ப் போகத்தான்) மெய்ப்பொருள் மிகவும் பிரகாசமாய்த் (தோன்றும் ஆகலின், இங்ஙனம் என்று அறிதி ஆயின் மெய்ப்பொருளை உணர்ந்தோர் பொய்ப்போகத்தோடும் கூடி யிருந்து அநுபவிப்பது என்னை எனின் அக்கினியில் வீழ்ந்து) இறக்கப்போவார் (தமக்குரியராய் உள்ளார் கொடுக்கும் போகமாகிய) கடனை (வாங்கி அதனுள் விருப்பற்று உண்டு தீர்த்துக்கோடல் (போல் அவரும் இத் தேகத்தை எப்போது ஒழிவோம் என்னும் கருத்தராய் இதற்கமைத்த பிராரத்தகடனை விருப்பற்று அநுபவித்துத்) தீர்த்துக்கொள்வார், (ஆகலின், அவர் அதனோடுங் கூடி இருத்தல் இம் முறைமை என்று அறிதி,) எ-று.

Digitized by Google

ஒழிவிலொடுக்கம்.

ாகம் வருந்தோறும் தமக்கென்று தற்போதத்தால் பற் அநுபவியாது அப்போதம் அற்று அருள்வடிவா யிருந்து போதத்தைத் தாம் அநுபவிப்பது போல் சிவத்திற்கு ஆக்குவது மெய்ப்பத்தி, இப்பத்தியினால் அச்சிவமானது போ தம் சிறிது எழினும் அதனை விழுங்கிக்கொண்டு நின்று பிரகா சிக்கும் ஆகலின், "பொய்ப்போகமெய்ப்பெருக்காம்" என்றார். சாகப்போவார் போகத்தை விரும்பாதிருக்கவும் சுற்றத்தாரா யுள்ளார் அவரை வேண்டிக் கொடுவந்து புசிப்பித்தல்போல், ஞானிகள் போகத்தை விரும்பா திருக்கவும் பிராரத்தம் வலி யக்கொடுவந்து புசிப்பித்தலின் இங்ஙனம் உவமை கூறினார்.

இத்திருவெண்பாவால் பிராரத்தத்தால் வந்த பெருவாழ் வின்கண் பற்றின்றி அவ்வாழ்வு அநுபவிப்பைப் போதத்தால் தாமநுபவியாது சிவத்துக்கு அற்பிதஞ் செய்கின்றோரும் ஞா னிகளே என்று அறிவித்தவாறு காண்க.

[ஞானிகள் அநுபவிப்பதும் பிராரத்தம், மற்றையர் அநுப விப்பதும் பிராரத்தம், ஆயின் அவர்க்கும் இவர்க்கும் பேதம் என்னை ? எனின், மேற்கூறுகின்றார்.]

பெருநோவுக் கேயென்னப் பெற்ற துடற் போகம்
நரகேழு மூட்டுமிது நாஞ்செத்-துருவத்துத்
தாமல்லாற் போகிப்ப தல்லவது வன்பர்பதம்
காவலாட் கைத்தளைபோற் காண்.

(இ-ள்.) உடல் பெரு நோவுக்கே என்னப் போகம் பெற் றது நரகேழும் ஊட்டும் இது நாம் செத்து உருவத்துத் தாம் அல்லால் போகிப்பது அல்ல எ-து,—உடலாகிய பெருநோவு க்கு என்ன கருதிப் போகத்தை அநுபவிப்பது தானே பிறவி யாகிய நரகமேழினும் கொடுசென்று (அவற்றில் உண்டாகிய துன்பங்களை) புசிப்பிக்கும் (இஃது எங்ஙனம் எனின், இவர் அநுபவிக்கும்) இப்பிராரத்தம் தற்போதம் மாண்டு இத் தேக

Digitized by Google

த்துத் தாம் இருப்பது அல்லாமல் (அருள்வடிவாயிருந்து) அநுபவிப்பதல்ல (ஆகலின்);

பதம் அன்பர் அது காவல் ஆள் கைத்தளேபோல் காண்

எ-து,—திருவடியை (பிரியாது நின்ற) அம் மெய்யன்பர் (தம் பிராரத்தம் தற்போதம் மாண்டு தேகம் தாம் அல்லாது திருவருள் தாமா யிருந்து அநுபவிப்பது ஆகலின்) அப்பிராரத்தம் (தேகமிருக்குமளவும்) காவலாள் போலும் கைத்தளே போலும் (இருந்து தேகம் நீங்கும்போது அதனேடும் தானும் நீங்கும் ஆகலின், அவர்க்கு மறுபிறவி உளவாகா என்று) அறிதி, எ-று.

தேகம் தானும் போகம் தனதாயும் கருதிக்கொண்டு தற்போதத்தால் அப் போகத்தைப்பற்றி அநுபவித்தலின் இசாகிதங்களும், இவ்விதாகிதங்களால் இருவினேகளும், இவ்விருவினேகளால் மறுபிறவியும், இங்ஙனம் தொன்றுதொட்டு வரும் ஆகலின், "நரகேழுமூட்டும்" என்ருர். போதம் இறந்திருத்தலானும், பூரணவடிவா யிருத்தலானும், வினேசார்தற்கு இடமின்மையால், அவர்க்கு மறுபிறவி இன்றென்பது காண்க. உடம்பு மூப்புப்பிணிக்கு இடம் ஆகலின் அதனே "பெருநோவுக்கு" என்ருர். "நாஞ் செத்துருவத்துத் தாமல்லாற் போகிப்பதல்ல" என்று அவர்க்கு உண்மையாயகுணங்களே இவர்க்கு இன்மை என்று எடுத்துக் கூறினமையால், அவர்க்கு அவை வருவிக்கப்பட்டன. 'இது' என்பது இவர் பிராரத்த மேல் நின்றது. 'அது' என்பது அவர் பிராரத்தமேல் நின்றது. பதம்-திருவடி, பதத்தினே உடைய அன்பரெனப் பொருள் கொள்க. போகமாய் வந்து சூழ்ந்து கோடலானும், பாமுத்த ஞகவொட்டாது தேகத்தில் அவரைத் தடுத்து நிற்றலானும், பிராரத்தத்தைக் 'காவலாள்' என்றும் 'கைத்தளே' என்றுங் கூறினர்.

இத்திருவெண்பாவால் ஞானிகள் தேகபோகங்களில் பற்றிலர் ஆகலின், அவர் பிராரத்தம் அத்தேகத்தோடு கழியும்

Digitized by Google

என்றும், அஞ்ஞானிகள் பற்றுளர் ஆகலின், அவர் பிராரத்த இதாகிதங்கள் வருவித்துப்பிறப்புக் கேதுவாகும் என்றும் அறிவித்தவாறு காண்க. (௩௧)

[ஒருவர் செய்தவினை மற்றொருவரைச் சாராமையான், அவர் செய்தவினை அவரைச் சாராதிருப்பது எங்ஙனம்? எனின், மேற்கூறுகின்றார்.

சுகிக்கில்லைத் துக்கஞ் சுடுகாடு சொர்க்கம்
அகத்துக்குஞ் சொர்க்கநர காய்ந்தார்-சுகிப்பதுவும்
அத்துவி தாநந்தர்க் காகார மற்றது
பத்தி செய்வார்க் கேற்கும் பயன்.

(இ-ள்.) சுகிக்குத் துக்கம் இல்லைச் சுடுகாடு சொர்க்கம் அகத்துக்கும் சொர்க்கம் நரகு ஆய்ந்தார் சுகிப்பதுவும் அத்துவித ஆநந்தர்க்கு ஆகாரம் அற்றது எ-து,—பரமசுகமே வடிவா யிருப்போர்க்குத் துக்கம் என்பதில்லை, (துக்கம் இன்மையால் சுகமும் இன்று, இது சுத்தமாகிய இடம் என்னும் கருத்துச் சிறிது எழினும் அதுவே நரகமாய்த் தோற்றலின் அசுத்தமாயுள்ள) சுடுகாடே அவர்க்குச் சுவர்க்கம் (அஃதன்றித் தாம் ஆநந்த வடிவா யிருத்தலே சுவர்க்கம் எனவும், தேகம் தாம் என்று சிறிது எழும் கருத்தே நரகம் எனவும், புறத்திற்குச் சொர்க்க நரகு ஆய்ந்தாற்போல) அகத்திற்கும் சொர்க்க நரகாய்ந்தார், (அஃதன்றி அவர்) அநுபவிப்பதும் (அத்துவிதாநந்தமேயாம், இங்ஙனம் இருந்த) அத்துவிதாநந்தர்க்கு அவ்வாகாமியவினை புசிப்பற்று நின்றது; (இங்ஙனம் அவர்க்குப் புசிப்பற்று நின்றால் அவ்வினைதான் எவ்விடத்துச் செல்லும் எனின்),

பத்தி செய்வார்க்குப் பயன் ஏற்கும் எ-து,—அவர் மேல் அன்பாய் இதஞ்செய்வோர்க்கும் (வெறுப்பாய் அகிதஞ் செய்வோர்க்கும்) அவ் விருவினைப் பயன்களுஞ் சாரும் (என்று அறிதி), எ-று.

Digitized by Google

ஆனந்தமே வடிவா யிருத்தலின் தநுவில்லை, அவ்வடிவில் தற்போத மின்மையால் கரணமில்லை, சுடுகாடே சுவர்க்கமா யக் காண்டலான் புவனமில்லை, அவ்வானந்தத்தையே அநுப வித்தலால் போகமில்லை, இங்ஙனந் தநுகரண புவன போகங் களை எல்லாம் கடந்து நின்றோரை அவ்வினை சாரமாட்டா மையின் "ஆகாரமற்றது" என்றார். தேகத்தை உடையவ னைத் தேகி என்றாற்போலச் சுகவடிவா யிருந்தோனைச் 'சுகி' என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகள் சிவானந்தாநுபவர் ஆக லின், அவரை வினைகள் சாரா என்றும், அவர்க்கு இதாகிதங் களைச் செய்வோரிடத்தே அவை சாருமென்றும் அறிவித்த வாறு காண்க. (௯௨)

[இங்ஙனம் இருந்த ஞானி அடைந்த பேரின்பத்திற்கு உவமை யாது? எனின், மேற்கூறுகின்றார்.]

அரிபிரம ரிந்திரர்க ளாதிகளார் தானச்
சரிவிரத்த னின்பத்தைச் சாற்றின்-பரமசிவன்
தானே சரிமீட்டுச் சாற்றுகிற்றான் றான்சரிவே
றானாரை வேதமறி யா.

(இ-ள்.) அவ்விரத்தன் இன்பத்தைச் சாற்றின் அரி பிரமர் இந்திரர்களார் சரி எ-து,—அவ்விரத்தன் இன்பத்திற் குவமை சொல்லுமிடத்து, அரி பிரம ரிந்திரர் முதலிய தேவர்களது இன்பமெல்லாம் ஒன்றாகக் கூட்டின் சரி;

பரமசிவன் தானே சரி மீட்டுச் சாற்றுகின் தான் தான் சரி வேறு ஆனாரை வேதம் அறியா எ-து,—(அஃதன்றி) பரமசிவ னது பரிபூரணாநந்தந் தானே சரி, பின்னுஞ் சொல்லுமிடத்து த் தன் னின்பத்திற்குத் தன் னின்பமே சரி, (இங்ஙனம் எப் பொருள்கட்கும்) வேறாய் நின்றடைந்தார் (இன்பத்தை) வேத ங்களும் இவ்வளவென்று அளவிட்டறிய மாட்டா, எ-று.

Digitized by Google

பரமசிவனது பரிபூரணானந்த மெல்லாம் தாமாகிநின்று அநுபவித்தலின், பரமசிவன் தானே சரி என்றும், தன் இன்பம் போல் மற்றியாவர்க்கும் இன்மையால், தான் தான் சரி என்றும் அவ்வின்பமும் தாமாகாது, அதனை அநுபவிப்போராயிருத்தலின் "வேறுணா" என்றுங் கூறினார். இன்பத்திற் குவமை கூறினமையான் அவர்சரி என்றதை அவரதின்பஞ் சரியென்று கூறப்பட்டது, அஃது ஆகுபெயர். தான்-அசை.

இத்திருவெண்பாவால் ஞானிகளது இன்பத்தின் பெருமை கூறியவாறு காண்க (கூகூ)

சாலோக மாதி தருஞ்சைவ சித்தாந்தி
பாலேகம் பார்க்கப் பணியுமவன்-மேலே
உருகித் திருவுளத்துக் குற்றபணி செய்வார்
பெருமைக்கே துண்டோ பிற.

(இ-ள்.) சாலோகம் ஆதி தரும் சைவ சித்தாந்தி பால் ஏகம் பார்க்கப் பணியும் அவன் மேலே எ-து,—(தன்னை வந்து அடைந்தோரது பத்தி பணிவிடைக் கேற்ப அவர்க்குச்) சாலோக சாமீப சாரூப மாகிய பதமுத்திகளையுங் கொடுக்கும் சித்தாந்த ஞானியால் ஏகமா யிருந்த மெய்ப்பொருளை அறியும் பொருட்டு (வந்து மனமொழி மெய்களான்) வணங்கும் அதிபக்குவன்மேல்;

உருகித் திருவுளத்துக்கு உற்ற பணி செய்வார் பெருமைக்குப் பிற எது உண்டோ எ-து,—(பேரன்பு வைத்து) உள்ளுருகி அவனது திருவுளத்திற்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்வோரது பெருமைக்கு (மேலாய பெருமை) பிறிது யாதுண்டு, எ-று.

வந்தடைந்தோர் பக்குவா பக்குவங்களை அறிந்து, சரியையாதிகளை வருவித்து, சாலோகாதி பத முத்திகளைக் கொடுப்

Digitized by Google

பதும், அதிதீவிர பக்குவனாய் வந்தோனுக்குத் தற்போதத்தைக் கெடுத்து விரதிசய வின்பத்தைக் கொடுப்பதும், மற்றைச் சமயங்களில் இன்மையால், "சாலோகமாதி தருஞ் சைவசித்தாந்தி பாலேகம்பார்க்கப் பணியுமவன்" என்றார். இங்ஙனம். இருந்த சித்தாந்தியைப் பணியுமவனைப் பணிவோர்க்கும் அம் முத்தியின்பம் உண்டாமாகலின், "உற்றபணி செய்வோர் பெருமைக்கே துண்டோபிற" என்றார்.

இத் திருவெண்பாவால் சித்தாந்த ஞானம்போலே வேறு ஞானம் இன்றென்பதும், இந்த ஞானம் பெற்றோரை வழிபடுவோர் பெருமையே பெருமையென்றும் அறிவித்தவாறு காண்க. (௬௭)

காலமுடன்றேசந் திக்குக் கருமமுடல்
கோலஞ் சமயங் குறிப்பறிதல்-சீலந்
தலையோடு போனவுயிர் தான்போலத் தன்னோ
டிலையாஞ் சிவனே யிவன்.

(இ-ள்.) காலமுடன் தேசம் திக்குக் கருமம் உடல் கோலம் சமயம் குறிப்பு அறிதல் சீலம் எ-து,—(இன்ன காலத்து இன்னவிரதஞ் செய்வதென்னும்) காலமும், (காசி முதலியன நல்லன மற்றையன தீயன என்னும்) தேசமும், (இன்னதிக்கு நன்று இன்னதிக்குத் தீது என்னும்) திக்கும், (இன்னகருமஞ் செய்வது இன்னகருமந் தவிர்வது என்னும்) கருமமும், உடலில் (சமைந்த) வேடங்களும், (அவ்வேடங்கட்குரிய) சமயங்களும், (அச் சமயங்கட் குரிய கடவுளரை இங்ஙனம் இருப்பரெனக் குறிப்போடு தியானிப்பதாய) குறிப்பறிதலும், (இன்ன சாதிக்கு இன்னது ஆசாரமென்று செய்யும்) சீலமும், (ஆகிய இவையெல்லாம்);

தலையோடு போன உயிர்போலத் தன்னோடு இலை ஆம் சிவனே இவன் எ-து,—தலைபோனவிடத்து (அதனோடும்) போன

Digitized by Google

உயிர்போல, (தற்போதம் இறந்தவிடத்து) அதனோடும் நீங்கும் (ஆகலின் மௌனாநந்தமாயிருந்த) சிவனே இவனும், எ-று.

கை கால் முதலிய உறுப்புகள் போனவிடத்தும் இருந்த உயிர் தலையோடும் போனதுபோல், போதம் சிறிது இறந்தவிடத்தும் இருந்த கிரியைத் தொழில்கள் அதுமுற்றும் இறந்தவிடத்து அதனோடும் நீங்கும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர். அவற்றைச் செய்தவன் இறந்தமையால் இவனாற் செய்யப்படும் அவையும் இல என்பதுங் காண்க. மௌனாநந்தமா யுள்ள சிவனை அடைந்தவன் மௌனாநந்தி யாகலின் "சிவனே யிவன்" என்றார். தான் – அசை. (கூ௫)

[இங்ஙனம் அவர்க்கு விதிவிருத்தங்கள் இல்லையென்று நீர் கூறியது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

சாவே பெருநோன்பாய்ச் சந்தற்ற சத்தியர்க்குத்
தேவாரங் காலந் தியானமறம்-பாவம்
விதிவிருத்தம் பேசுகைக்கு வேதாக மங்கள்
அதிசயிக்கு மேலுரைப்பா ரார்.

(இ-ள்.) சாவே பெருநோன்பு ஆய்ச் சந்து அற்ற சத்தியர்க்குத் தேவாரம் காலம் தியானம் அறம் பாவம் விதிவிருத்தம் பேசுகைக்கு எ-து,—(தற்போதம்) இறப்பதே பெருந்தவமாய்க் கொண்டு (அதனைக் கெடுத்துச் சிவத்தோடும்) இரண்டறக் கலந்த சத்திய ஞானிகட்குத் தேவாரமுதலிய தோத்திரங்களை ஓதலும், காலா காலங்கள் (அறிந்து சிவாலயங்களிற் சென்று பணிதலும்) (ஒரோர் பாவனையைக் கருதி) தியானித்தலும், (சிவபூசையாதி) புண்ணியங்களைச் செய்தலும், (இவை அன்றி) பாவங்களைச் செய்தலும் ஆகிய இவ்விதி விருத்தங்களுள என்று சொல்வதற்கு;

வேத ஆகமங்கள் அதிசயிக்குமேல் ஆர் உரைப்பார் எ-து,— வேதங்களும் ஆகமங்களும் அதிசயிக்கும் எனின் அவற்றிற்கு மேல் மற்றியாவர் சொல்வார், எ-று.

Digitized by Google

போதம் சிறிது எழினும் அதனைக் கெடுத்துச் சிவத்தோடும் கலந்திருப்பதே அவர்க்குச் சகல நோன்புகளும் ஆகலின், "சாவே பெருநோன்பாய்ச் சந்தற்ற சத்தியர்" என்றார். அங்ஙனம் செய்வதே நோன்பாய்க் கொண்டோர்க்கு அதற்குமேல் மற்ற நோன்பொன்றும் இன்மையான் அவர்க்கு விதிவிருத்தம் இலவாயின, "வேதாகமங்களதிசயிக்கும்" என்றதனால் அவற்றான் விதிவிருத்தம் அறிவோர்க்கு வேறு சொல்வதற்கு இடமின்மையான், "மேலுரைப்பாரார்" என்றார். விதியாவது வேதாகமங்கள் சிவபூசாதிகளைச் செய்க என்று கூறுவது. விருத்தமாவது மதுபானாதிகளை விடுக என்று கூறுவது.

இவ் விரண்டு திருவெண்பாவானும் ஞானிகட்கு விதிவிருத்தங்கள் இல என்று அறிவித்தவாறு காண்க. (௩௲)

மோனிகளைப் பார்த்திமையா மோகமும்வெண்டிங்க
மேனி யழுகெழுதா மேற்பத்தி - ஆன [ள்
பதுமா தனன்கண்ணும் பானுவும்போற்றாய்
எதிராகுஞ் சொப்பனத்தி லும்.

(இ-ள்.) மோனிகளை இமையாப் பார்த்து மோகமும் வெள் திங்கள் அழகு எழுதா மேனி எ-து,—(அந்த ஞானிகள் தம்மைப்போல் சுகாதீத முத்தியைப் பெறும்பொருட்டுப் புறத்து நின்ற போதத்தை உள்ளடக்கி இதனைக் கெடுப்பதே விரதமாய்க் கொண்ட) மௌனிகளை இமையா நாட்டத்தோடும் பார்த்து (இவர்மேல் வைத்த) மோகமும், (உத்தூளனத்தால்) வெண்டிங்கள் போலும் விளங்காநின்ற அழகெழுதக் கூடாத (அவரது) திருமேனியும்;

மேல் பத்தி ஆன பதுமாதனன் கண்ணும் பானுவும்போல் தான் ஆய்ச் சொப்பனத்திலும் எதிர் ஆகும் எ-து,—பிரமனது நான்கு முகங்களினும் மேன்மைபெறு பந்திபோல விளங்குவதான எண்கண்களும், (அக் கண்கட் கெதிர் தோன்றும்)

Digitized by Google

பானுவும்போல், (யான் கருதா திருப்பினும்) அவைதாமாய் வந்து சொப்பனத்தினும், சாக்கிரத்தினும், (என துளக் கண்ணிற்கும், முகக் கண்ணிற்கும்) எதிரோ விளங்குவதாம், எ-று.

சுகாதீத முத்தியை அடைந்த ஞானிகட்கு ஞானசாதகனைக் கண்டால் பாசங்களை எல்லாம் கடந்து இவ்வளவு வந்தானென்று, அவர்மேற் சந்தோடமும் பிறக்குமாகலின், "மோனிகளைப்பார்த் திமையாமோகமும்" என்றார். யான் பெற்றபேறு பெறுக இவ் வையகமென்பதும் அது. பதுமாதனன் இமையா நாட்டத்தையும், அதற்கெதிர் தோன்றும் பானுவையும், உவமை கூறினமையான். அவர்மேல் வைத்த மோகத்தையும், அவரது திருமேனியையும் தமதுளம் மறவா தென்பதாயிற்று. எனதெனும்பெயர் எஞ்சி நின்றது. சொப்பனத்திலும் என்றவும்மையால் சாக்கிரத்தும் என்று வருவிக்கப்பட்டது.

இத் திருவெண்பாவால் எமக்கும் இங்ஙனம் இருக்கும் என்று ஞானிகளருமை அறிவித்தவாறு காண்க. (௩௭)

உருகு பரமசுக வுல்லாச நோக்கும்
திருமுகமும் புன்முறுவற் றேசும் - திருநீறும்
தற்பாவ மாண்ட சரீரத்தி லோர்சாத்தும்
அற்றே வெறுமனழ காம்.

(இ-ள்.) உருகு பரமசுக உல்லாச நோக்கும் திருமுகமும் புல் முறுவல் தேசும் திருநீறும் எ-து,—உள்ளமுருகப் பண்ணுகின்ற பரமசுக உல்லாசத்தோடுங் கூடிய திருநோக்கமும், (அவ் வின்பக் களிப்பால் தெய்வத்தாமரை மலர்ந்ததுபோல விளங்காநின்ற) திருமுகமும், (அவ்வின்பம் பொங்கி மேன்மேலெழலால் தோன்றும்) மந்தகாசப் பிரகாசமும், (திருமேனி முழுதும் பூசுவதாகிய) திருவெண்ணீற் றழகும்;

தற்பாவ மாண்ட சரீரத்தில் ஓர் சாத்தும் அற்றே வெறுமன் அழகு ஆம் எ-து,—(பஞ்சபூத குணங்களாகிய) தற்பா

Digitized by Google

வம் இறந்துநின்ற திருமேனியில் (கூடியும் கூடாதிருந்த ஞானிகளது திருமேனியில்) தோற்றும் (அவை அங்ஙனந் தோற்றுவன அன்றி,) அவற்றான் அவர்க்கு யாது சிறப்பும் இன்று, அவை வாளா தோற்றும் அழகுகளாம், எ-று.

ஆநந்தம் தோன்றும்போது உள்ளம் நெக்குருகத் தோன்றும் ஆகலின், "உருகு பரமசுகம்" என்றும், சடசித்துக்களாயுள்ள பொருள்களெல்லாம் அவர்க்குச் சுகசொரூபமாய்த் தோற்றும் ஆகலின், அவர் நோக்கை "பரமசுக வுல்லாசநோக்கு" என்றுங் கூறினர். "வினையேன் மனத்துத் தேனையும் பாலையுங் கன்னலையு மமுதத்தையு மொத்துனையு மென்பினையுமுருக்காநின்ற வொண்மையனே" என்பதும் அது. "பூநாளுந்தலைசுமப்ப" என்றதுபோல் தோற்றும் என்பதைச் சாத்தும் என்று அருமை தோன்றக் கூறினர். உல்லாசநோக்கு முதலியன அவர் கருத்தாய்த் தோற்றாது இயல்பாய்த் தோற்றலின் "அற்றே வெறுமனழகாம்" என்றார். வெறுமன் என்பது கிராமியச்சொல்.

இத் திருவெண்பாவால் ஞானிகளைப் புகழ்ந்து கூறியவாறு காண்க. (௬அ)

வாடன் மணம்போல் வருந்தா வயிராக்யத்
தோடு மெலிந்த வுடம்புடனே - கூடார்
நிருவிடயா நந்தசுக நீங்காத நோக்கும்
திருமுகமு மென்னைவிடா தே.

(இ-ள்.) வாடல் மணம்போல் வருந்தா வயிராக்யத்தோடு மெலிந்த உடம்புடனே கூடார் எ-து,—வாடற்பூவின் மணம் சிறிது தோன்றுதல்போல் (சிறிது தோன்றும் பிராரத்த வாசனையோடும் போதத்தால்) வருந்திச் செய்யாத பாச வயிராக்கியத்தோடும் தளரா நின்ற திருமேனியுடனே கூடியிருந்துங் கூடாராகிய ஞானிகளது;

Digitized by Google

திருவிடய ஆநந்தசுகம் நீங்காத நோக்கும் திருமுகமும் என்னை விடாது எ-து,—திருவிடயமாய்த் தோற்றும் ஆநந்தமாகிய சுகம் (உட்போல் புறத்து) நீங்காத (அவ்வாநந்தத்) திருநோக்கும், திருமுகமும், எனதுள்ளத்தை எப்போதும் விட்டு நீங்கா, எ-று.

"வாடன்மணம்போல்" என்ற உவமையால் சிறிது பிராரத்த வாசனையோடும் என்பது வருவிக்கப்பட்டது. வருந்திச் செய்யும் போதம் உடையாரது வயிராக்கியம்போல் அன்று, இவர்க்கு இயல்பாய்த் தோற்றலின், "வருந்தா வயிராக்கியம்" என்றார். விடயாநந்தம்போல் எதிரீடற்ற இடத்தில் தோற்றலின், "திருவிடயாநந்தம்" என்றார்.

இத் திருவெண்பாவால். அவரது அருமை கூறியவாறு காண்க. (௯௧)

[ஆயின், இந்த ஞானிகட்குப் பெயர் யாது? எனின் மேற் கூறுகின்றார்.]

தத்துவத்தின் போர்வை சரிந்த திகம்பரிபேர்
அத்துவிதி யேகாந்தி யாநந்தி - சுத்தன்
துரியனவ தூதன் றுறவிசிவ யோகி
திருவாணி யென்விரத்த னென்.

(இ-ள்.) தத்துவத்தின் போர்வை சரிந்த திகம்பரிபேர் எ-து, முப்பத்தாறு தத்துவங்களாகிய போர்வைசரிந்த அதனால் திகம்பரியா யிருந்த ஞானியினது பெயர் (சொல்லுமிடத்து);

அத்துவிதி ஏகாந்தி ஆநந்தி சுத்தன் துரியன் அவதூதன் துறவி சிவயோகி திருவாணி என் விரத்தன் என் எ-து,—(சிவத்தோடு அத்துவிதமா யிருத்தலின்) அத்துவிதி யென்றும், (அங்ஙனம் அத்துவிதமா யிருப்பினும் தான் அச்சிவ மாகாமையான்) ஏகாந்தி யென்றும், (பூரணாநந்த மெல்லாம் தா

Digitized by Google

ஞய் நின்று அநுபவித்தலின்) ஆநந்தி யென்றும், (மலத் திர யங்களை நீங்கி நிற்றலால்) சுத்த னென்றும், (மேலாய பொ ருளை அடைந்தோ ஞகலின்) துரியனென்றும், (வர்ணுச்சிரம ங்களைக் கடந்து நிற்றலான்) அவதூதனென்றும், (தேகாதி பிரபஞ்சங்க ளெல்லாம் துறந்து நிற்றலால்) துறவி யென்றும், (மற்றொன்றோடுங் கூட்டா வின்றிச் சிவத்தோடும் கூட்டா வா யிருத்தலின்) சிவயோகி யென்றும், (அத்துவா ஆறையுங் கடந்து நிற்றலான்) நிருவாணி யென்றும், (அச்சிவத்தோடு அத்துவிதமாக இருக்கின்றே னென்னும் வாசனையும் இறந்து போயிருத்தலின்) விரத்த னென்றும் நீ சொல்லுதி, எ-று.

உடம்பைப் போர்த்துநின்று நீங்கிய போர்வைபோல் உயி ரைப் போர்த்து நின்று நீங்கினமையால், "தத்துவத்தின் பார் வைசரிந்த" என்றார். அஃதன்றிப் பூதகஞ்சுகம் - பிரகிருதி கஞ்சுகம் - கலாதி கஞ்சுகம் — வயிந்தவ கஞ்சுகம் — சத்தி கஞ் சுகம் என்னும் இப்பஞ்ச கஞ்சுகங்களையும் நீக்கி நின்றார் எனி னும் ஆம். அத்துவிதி என்றதாதி இக் குணங்களெல்லாம் உடையன் ஆகலின், இப்பெயர்களெல்லாம் அவற் குரித்தா யின. (கூ0)

[இங்ஙனம் அகத்துள் ஆசையற்றுத் துறந்தோரையும், அக த்துள் ஆசையிருக்கத் துறந்தோரையும், எங்ஙனம் ? அறிய லாம் எனின், மேற் கூறுகின்றார்.]

அடங்கத் துறந்தார்க்கு மாசையறப் பாவித்
தொடும்பக் குவந்தெரியா தோகோ - மடந்தேடிப்
பிச்சையாய் மூலையிற்பெண் பேச்சாய் வரினடைக்
கிச்சையாய்க் கைக்கெதிர்நீட் டும். [கைக்

(இ-ள்.) ஆசை அறப் பாவித்து அடங்கத் துறந்தார்க்கும் ஒடும் பக்குவம் தெரியாது ஓகோ எ-து,— (அகத்து ஆசை இருக்கப் புறத்து) ஆசை அறப் பாவித் தடங்கத் துறந்தாரை

Digitized by Google

யும்,) (இயல்பாய் அகத்து ஆசை அற்று அடங்கத் துறந்தாரை யும்) அவரோடு மிகழும் பக்குவா பக்குவங்களினாலே ஓகோ தெரியாதோ ? (அஃது எங்ஙனம் எனின்;)

மடம் தேடிப் பிக்ஷை ஆய்ப் பெண் மூலையில் பேச்சு ஆய் வரின் நடைக்கைக்கு இச்சை ஆய்க் கைக்கு எதிர் நீட்டும் எ-து,—(அவர் நற்பிச்சையிடும்) மடந்தேடிச் சென்று பிச்சை ஏற்பதாய், (புதிய) மருமகப் பெண் மூலைக்கண் இருந்து (மெல்லெனப் பேசும்) பேச்சுப்போல் (தமக்கென ஒ ரொடுக் கம்பற்றி அதனுள் இருந்து மாரிசத்தோடு மெல்லெனப்) பே சுவதாய், (இவர் பெரியரெனக் கருதிப் பிறர் அன்ன வத்திர முதலிய நடக்கை கொடுவரின்) அந் நடைக்கைக்கு இச்சை யாய் அவர் கொடுக்குங் கைக்குத் தமது கையை எதிர்நீட்டி வாங்குவர் (இவர்க்கு எல்லா மனைதோறுஞ் செல்வதே அன்றி ஓர் மடந்தேடிச் செல்வதும் ஒ ரொடுக்கம்பற்றி யிருந்து மா ரிசமாய்ப் பேசுவதும் தாம் இருக்கும் இடத்துப் பிறர் அன் னுதிகளைக் கொடுவரின் அவற்றை இச்சித்து வாங்குவதும் இல்லை ஆகலின், அவரது புக்குவமும் இவரது பக்குவமும் தாமே தெரியும் நீ அறிதி), எ-று.

"ஆசையறப்பாவித் தடங்கத் துறந்தார்க்கும்" என்றமையா ன், அங்ஙனம் பாவியாது இயல்பாய்த் துறந்தானை என்பது வருவிக்கப் பட்டது. அடங்கத் துறத்தல் மனைவி முதலிய பற்றுக்களை எல்லாம் ஒருங்கே விடுத்தல். அடங்கத் துறந்தா ர்க்கும் என்னும் நான்காம் வேற்றுமையை இரண்டாம் வேற் றுமையாகக்கொள்க. "தெரியாதோ" என்பது தெரியரதெ ன்று ஒகாரந் தொக்கு நின்றது. மடந்தேடிப் பிச்சையாய்க் கைக்கெதிர் நீட்டு மென்று அவரது நடை கூறினமையால், அதற் கெதிர்மறையாய் இவரது நடை வருவிக்கப் பட்டது. ஒருவருக்குச் செல்வம் வரின் அதனை நடக்கை என்பதுபோல், பிறர்வந்து அன்னுதிகளைக்கொடுப்பதனை நடைக்கை என்றார்.

Digitized by Google

[ஆயின், அகப்பற்று அற்றார் துறப்பதே அன்றி, அகப்பற்றுடையார் துறக்கலாகாதோ? எனின், மேற் கூறுகின்றார்.]

கரையடுக்க வந்தாற்றிரையலைக்குங் கப்பல்,—பொருளடுத்தாற் றோன்றும்பொய்ப் போதம்-விருதினவன்,—வெற்றிக் குதிகுதித்தோன் போல்வேண்டும் விட்டதுபின்,—பற்றுமதிற் சிக்கெனநிற் பாய்.

(இ-ள்.) கப்பல் கரை அடுக்க வந்தால் திரை அலைக்கும் பொருள் அடுத்தால் தோன்றும் பொய்ப்போதம் எ-று,—(அலை அலைக்கும் கரைகடந்துசென்று கடலின் நடுநின்ற) கப்பல் (மீட்டும்) அக் கரையடுக்கவந்தால் (அக்கப்பலை) அலை அலைக்கு மாறுபோல, (விடயங்களைத் துறந்துசென்று துறவின் கண் நின்ற நீ மீட்டும்) அவ் விடயங்களை அடுத்தால் பொய்யாகிய அவ் விடயபோதந் தோன்றி அறிவை அலைக்கும் (ஆகலின்;)

விருதினவன் வெற்றிக் குதிகுதித்தோன் போல் வேண்டும் விட்டது பின்பற்றும் அதில் சிக்கெனநிற்பாய் எ-று,—(தன் பகைவனைச் சயங்கொண்டால் அன்றி விடேனென்னும்) விருதினேன்போலும், (ஒருவரோடு வாதுகூறி) வெற்றிக்குத் துரவு தாவினேன்போலும், (நீயும் பிடித்த துறவை முற்றுஞ்) சாதிக்கவேண்டும், (அதனைவிடாது சாதிக்கவேண்டின் விடயங்களை யடாதே அடுத்தால் முன்னர் நீ) விட்ட பற்றுக்களெல்லாம் இப்போதும் வந்து பற்றும், (இவை உன்னைப் பற்றாது அகலும்படி அத்துறவின்கண்) உறுதிப்பட நிற்றி, எ-று.

கரை அடாது கடலில் நடுநின்ற கப்பலை அலை அலையாதது போல, விடயங்களை அடாது துறவின்கண் நின்றோரை விடயபோதம் அலையாதென்பது இவ்வுவமைக்குறிப்பாற் காண்க. விருதினேனுக்கு எவ்விதத்தானும் தன்பகைவனைச் சயங்கொள்வதே விருது, கூடாதாயினும் அவனோடும் பொருது இறத்தலே விருதுபோல், துறவினேனுக்குத் தன் பகை என்னு

Digitized by Google

மாயைப் படைகளாகிய முப்பத் தாறையுங் கடந்து வீடடைத லே துறவு, அங்ஙனங் கடக்கக் கூடாதாயினும் அதனைக் கடத்தற் கேதுவாய சுத்த வாசனையோடு நின்று இறத்தலே துறவு. ஆகலின், "விருதினவன்" போல், என்றும், வெற்றிக்கு அறுபதடித்தூரவு தாவத் தொடங்கினுன் அறுபத் தோராமடி தாவினுன் எனின் அதுவெற்றி, அது தவறின் வெற்றியும் இழந்து அத்தூரவினும் வீழ்வன்; அதுபோல, விடயங்களைத் துறக்கத் தொடங்கினேன் அவ்விடயங்களையும் துறந்து தற்போதத்தையும் துறப்பதே துறவு, அங்ஙனஞ் செய்யாது அவ்விடயங்களைச் சாரின் அத்துறவினுன் வரும் பெருமையும் இழந்து பிறப்பினும் வீழ்வன். ஆகலின் "வெற்றிக் குதிகுதித்தோன்போல்" என்றுங் கூறினர்.

தத்துவத்தின் போர்வை என்னுந் திருவெண்பா முதல் இம்மூன்று திருவெண்பாவானும் ஞானிகளது பெயரும் தாமும் துறந்ததைச் சாதியாது மீட்டும் சாரலாகாதென்பதும் அறிவித்தவாறு காண்க. (சஉ)

அவத்தைத்தன்மை

முற்றும்.

Digitized by Google

௯ - ம் அதிகாரம்.

வாதனைமாண்டார் தன்மை.

குடும்பத்தோடுங் கூடியிருந்து ஞானம்பெற்று அக்குடும்ப வாதனை மாண்டுநின்றார் தன்மை கூறினமையால், இவ்வதி காரத்திற்கு 'வாதனைமாண்டார் தன்மை' என்று பெயராயி ற்று. துறவிகளா யிருந்து ஞானம்பெற்றோரும் அன்றி, குடு ம்பிகளாயிருந்து ஞானம்பெற்றோரும் உளராகலின், அவ்வதி காரத்தின்பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

[ஞானம் இல்லாவிடினும் வைராக்கியத்தால் வீட்டுநெறி அடையலாகாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

ஞான மிலாத வைராக்கி நன்றல்ல,—கானவர்க்கு
நோயினர்க்குங் கள்ளர்க்கும்-ஆனதுவென்,—என்னி
லைக்கே நின்றாலெ னெவ்விடயத் தேய்ந்தாலென்,
தன்னிழப்பே யின்பாந் தலம்.

(இ-ள்.) ஞானம் இலாத வைராக்கி நன்று அல்ல கானவர்க் கும் நோயினர்க்கும் கள்ளர்க்கும் ஆனது என் எ-து,—(அகத் துப் பரிபூரண) ஞானம் இல்லாதார் (புறத்துச் செய்யும்) வயி ராக்கியம் நன்றல்லவாகும், (இஃது எங்ஙனம் எனின் மலை கானில் சஞ்சரிக்கும்) வேடர்களுக்கும், விடா நோயினர்க்கும் (பொருள் திருடும்) கள்வர்க்கும் (வைராக்கியம்) உண்டாவது என்னை? (ஆகலின் இவரது வைராக்கியத்தோடு அவரது வை ராக்கியம் ஒக்கும்;

என் நிலைக்கே நின்றால் என் எவ்விடயத்து எய்ந்தால் என் தன் இழப்பே இன்பு ஆம் தலம் எ-து,—(அகத்துப் பரிபூரண ஞானம் உடையார் அரசுரிமை முதலியன உலக வியாபாரங் களில்) யாது நிலையில் நிற்பினும் என்னை, (வனிதாதி விடய

Digitized by Google

ங்களில்) யாது விடயங்களோடும் கூடியிருந்தாலும் என்னை,
(அந்நிலையும் அவ்விடயங்களும் இவர்க்கிடமும் அன்று இன்ப
மும் அன்று) தற்போத இழப்பே இடமும் இப்போத இழப்பில்
தோன்றும் இன்பமே இன்பமும் ஆம், எ-று.

தழை உடுத்தல், மூலபலங்களைப் புசித்தல், இராப்பகல்
கானிற் சஞ்சரித்தல், பனி மழை வெய்யில் காற்றுகளைப்
பொறுத்தல் முதலியன கானவர் வைராக்கியம்; வனிதாதி வி
டயபோகங்களைத் துறந்திருத்தல் விடாநோயினர் வைராக்கி
யம்; பகைவர்க்கு அச்சம் இன்றித் தம் உடலை இகழ்ந்து இரு
ளிற்சேறல் முதலியன கள்வர் வைராக்கியம்; இவரது வைரா
க்கியங்களால் போத இழப்பும் இன்பமும் இன்றாயின்போல்,
அவரது வைராக்கியத்தாலும் போதவிழப்பும் இன்பமும் இன்
றாகலின், அவரது வைராக்கியத்தை இவரது வைராக்கியத்தி
ற்கு உவமை கூறினார். அகத்துப் பரிபூரண ஞானம் உடையா
ர்க்கு யாதுநிலையில் நிற்பினும் யாதுவிடயங்களைப் புசிப்பினும்
அவற்றை அந்தப் பரிபூரணஞானத்தால் பார்த்தழித்தலின்,
அவற்றோடும் தாக்கற்று நிற்பதும் இங்ஙனந் தாக்கற்று நிற்ற
லால் போத இழப்பும் இப்போத இழப்பால் பேரின்பமும்
உண்டாம் ஆகலின், "என்னிலைக்கே நின்றொலெவ்விட
யத் தேய்ந்தாலென் றன்னிழப்பே யின்பாந்தலம்" என்றார்.
அஃது அன்றி விடய இன்பத்திற்கு ஏதுவாய் உலக வியாபார
ங்களைச் செய்வார்போல், இவர்யாது நிலையில் நின்றார் எனி
னும் அதனுள் தாக்கற்று நின்று சொரூப இன்பத்திற்கு ஏது
வாய தற்போத இழப்பைச் செய்வாரென்பதும், அவ்விடய
இன்பங்களைத் தாம் அற்று அநுபவித்தலால் அவற்றை அநுப
விக்குந் தோறும் தாம் அற்றவிடத்து உண்டாம் பேரின்பம்
மேலிடுமே அன்றி, அவ்வின்பம் ஒர் பொருளாய் அவர்க்குத்
தோற்றாதென்பதுங் காண்க. "தன்னிழப்பே யின்பாந்தலம்"
என்றமையான், அந்நிலையும் அவ்விடயமும் இடமும் இன்

Digitized by Google

மும் அன்றென்பது வருவிக்கப்பட்டது. "வைராக்கியமென்பது" வைராக்கி என்று கடைகுறைந்து நின்றது. (௯)

[ஞானம் பெறுவோர்க்கு இல்வாழ்க்கையைத் துறக்கவேண்டாவோ? எனின், மேற்கூறுகின்றார்.]

எல்லாச் சமயங்க ளுந்துதிக்கு மில்லறத்தில்
நில்லாம னீத்தாரொன் னீத்தாலென் - புல்லறிவைத்
தீரத் தெளிந்து சிவத்தோடும் பற்றற்றார்
ஆகிற் பிறப்பறுக்க லாம்.

(இ-ள்.) எல்லாச் சமயங்களும் துதிக்கும் இல் அறத்தில் நில்லாமல் நீத்தார் என் நீத்தால் என் எ-து,—சமயங்களெல்லாம் இது நன்று என்று புகழ்ந்து கூறாநின்ற இல்வாழ்க்கையில் நில்லாமல் இதனைத் துறந்தார் (இத் துறவிக்குத் தகுமென) மற்றியாது துறந்தாலும் என்னை, (இத்துறவினாற் பிறப்பறுக்கக் கூடுமோ);

புல் அறிவைத் தீரத் தெளிந்து சிவத்தோடும் பற்று அற்றார் ஆகில் பிறப்பு அறுக்கல் ஆம் எ-து,—(தற்போதம் கருவிப்போதங்கள் ஆய) புல்லறிவை (ஞானகுருவால்) நன்றாய் விசாரித்தறிந்து (அதனைக்கெடுத்து) சிவத்தோடும் இரண்டறக் கலந்து, (அச்சிவத்தோடுங் கலந்திருக்கின்றோம் என்னும்) வாசனைப்பற்றும் அற்றார் எனின் (அவர்க்கே) பிறப்பறுக்கலாம், (மற்றையர்க்குக்கூடாது), எ-று.

சமய நூல்களெல்லாம் இல்லறத்தையே மேம்பாடாகக் கூறுதலின், "எல்லாச் சமயங்களுந் துதிக்கு மில்லறத்தை" என்றார். "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃதும் பிறன் பழிப்பதில்லாயினன்று" என்பதும் அது. "நீத்தாரென்னீத்தாலென்" என்றது அவ்வில்வாழ்க்கையைத் துறந்த பின்னரும் உடலொறுத்தல், ஊண்வெறுத்தல், உடை துறத்தல், ஊரொடுக்கந் துறத்தல் முதலியன துறந்து நிற்றலெனக்கொ

Digitized by Google

ள்க. "புல்லறிவைத் தீரத்தெளிந்து சிவத்தோடும் பற்றற்றுராகிற் பிறப்பறுக்கலாய்" என்றமையால், இங்ஙனந் தெளிந்து பற்றறுதி உடையார் இல்லறந் துறவறங்களில் நின்றாலும் 'பிறப்பறுப்பார்' என்பதும், இவையில்லார் யாது துறந்தாராயினும் பிறப்பறார் என்பதுங் காண்க. தற்போதம் கருவிப்போதம் இரண்டும் புல்லறிவு ஆகலின், பொதுப்பட "புல்லறிவு" என்றார். தீரத்தெளிதல் அவற்றை உள்ளபடி அறிந்து கெடுத்தல். (உ)

மனையிழக்கி லோமனது மாறாது மாய்த்த
தனையிழக்கி லோசிவனைச் சார்ந்தங் - கனுபவிக்கை
போகா ததுபோகிற் பூரணமாம் பூரணந்தான்
ஆகா திருப்பதெவர்க் காம்.

(இ-ள்.) மனை இழக்கிலோ மனது மாறாது மாய்த்ததனை இழக்கிலோ சிவனைச் சார்ந்து அங்கு அநுபவிக்கை போகாது அது போகில் பூரணம் ஆம் எ – று,— (நீர் இங்ஙனம் கூறிய ஆற்றான்) இல்வாழ்க்கையைத் துறப்பது துறவன்றோ (எனின், அவ்வில்வாழ்க்கையைத் துறக்கின் அதன்கண் நின்று அநுபவித்த விடயவாதனை) மனத்தின்கண் மாறாது (எழும் ஆகலின், அது துறவு அன்றாயின், மனத்தை மாய்ப்பது துறவோ எனின், மனத்தை) மாய்த்த (தற்போதம் எழும் ஆகலின், அது துறவு அன்றாயின்) தற்போதம் இழப்பதோ (துறவு எனின், அத்தற்போதம் இழக்கில்) சிவத்தை அடைந்து ஆண்டுச் சுகத்தை அநுபவிக்கை போகாது, (ஆகலின், அது துறவு அன்றாயின், சுகப்பே றிழப்பது துறவோ எனின்) அச்சுகப்பேறு போகில் சிவபூரணந் தானும், (அப்போது இங்ஙனம் சிவபூரணந் தான் ஆனேன் என்னும் வாதனை தோன்றும் ஆகலின், அது துறவு அன்றாயின் இனித் துறவு தான் யாது எனின்) ;

பூரணம் தான் ஆகாது இருப்பது எவர்க்கு ஆம் எ–று,— அச்சிவபூரணந் தான் ஆனேன் என்னும் வாதனையு மறந்துநிற்

Digitized by Google

பது (துறவு, இங்ஙனம் சிவபூரணந் தான் ஆகா திருப்பதாய துறவு) யாவர்க் குண்டாம், எ-று.

மாய்த்த என்பதற்கும் தனையிழக்கில் என்பதற்கும் இடையில் தற்போதம் எழும் என்பது வருவிக்கப்பட்டது.

இம்மூன்று திருவெண்பாவானும் மெய்த்துறவாவது இது வென்று அறிவித்தவாறு காண்க. (௩)

[இல்வாழ்க்கையோடு கூடியிருந்தும், இத்துற வெய்தினோனைத் துறவிகனென்று சொல்லப்படுமோ? எனின், மேற்கூறுகின்றார்.]

மாயாபோ கத்தரசாய் வாழ்ந்தாலு மாமணிபோல்
தோயா தவரே துறந்தோர்கள் - தோய்வாரேல்
சேரும் விதைபோலத் தீர்ந்தவிடத் தேதிரும்பும்
வேறொன் றதுவே வினை. ௪

(இ-ள்.) மாயா போகத்து அரசு ஆய் வாழ்ந்தாலும் மாமணி போல் தோயாதவரே துறந்தோர்கள் எ-து,—மாயாபோகத்துக்கெல்லாம் அரசராகி (அப்போகங்களை அநுபவித்து வாழ்ந்தார் ஆயினும், மகத்தாகிய மாணிக்கமணி (ஒன்றோடும் தோயாது நின்றது போல், அவற்றோடும்) தோயாது நின்றவரே துறந்தோரென்று சொல்லப்படுவர்;

தோய்வாரேல் சேரும் விதைபோலத் தீர்ந்த இடத்தே திரும்பும் வேர் ஒன்று அதுவே வினை எ-து,—(படிகமணிபோல் யாதொன்றோடாயினும்) தோய்வாரெனின், நிலத்துச்சேரும் வித்துப்போல (உடல்) இறந்த காலையில் (நின்று நீங்கிய பற்றின்கண் மீட்டும்) திரும்பும் ஓர் மூலமும் அப்பற்றுடைமையே வினையென்பதும் அப்பற்றுடைமையே யாம், எ-று.

மாமணி தன்னை அடுத்த வன்னங்களைக் கவராது, தனது பிரகாசத்தை அவற்றின்மேல் வீசிநின்றாற்போல, யாதுவிடய

Digitized by Google

ங்கள் வந்தடைப்பினும் அதில் தோயாது, தனது ஞானப் பிரகாசத்தை அவற்றின்மேல் வீசிநிற்றலான், "மாமணிபோற்றோயாதவர்" என்றும், உடம்பிற்குப் புறம்பாய பற்றுக்களை ஒழித்து, அவ்வுடம்பாய் நின்றோரைத் துறந்தோர்கள் என்று சொல்வதுபோல, உயிர்க்குப் புறம்பாய கருவிகள் முப்பத்தாறையும் ஒழித்து அறிவாய் நின்றோரை, "துறந்தோர்கள்" என்றார். நிலத்திற் சேரும் வித்துப்போல் உடல் இறந்தகாலை நின்றபற்றின்கண் மீட்டும் உயிர்வந்து அடைந்து உற்பத்தியாகலின் "சேரும் விதைபோல்" என்றும், உடல் நீங்குங்காலை உயிர்க்கு எந்தவாசனை யிருந்தது அந்த வாசனையோடும் பிறப்பின்கண் மீள்கலான் "தீர்ந்தவிடத்தே திரும்பும் வேர்" என்றும், பற்றுள்ள விடத்து வினையும் உளவாகலின் "அதுவே வினை" என்றுங் கூறினர். "அவாவென்பவெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந் தவாஅப் பிறப்பினும் வித்து" என்பதும் அது. "அதுவே" என்பதனைப் பற்றுடைமை எனக்கொள்க.

இத்திருவெண்பாவால் எந்நிலையில் நின்றாலும், அதனுட் பற்றறுதி உடையோர்க்கே வீடென்று அறிவித்தவாறு காண்க.

[விடயங்களை அநுபவிப்பினும் அவற்றுட் கூடாரென்றீர் இதென்னை ? எனின், மேற்கூறுகின்றார்.]

ஒருகுடைக்கீழ்வாழுலகத் தோர்க்குறும்பூருண்டோ
அருணிழற்கீழ் வாழ்வா ரறிவு-கருவிகளில்
போனாலென் சேற்றுத்தூள் போலோபருந்துநிழல்
போனாற்போற் றோயாமற் போம்.

(இ-ள்.) ஒரு குடைக்கீழ் வாழ் உலகத்தோர் குறும்பு ஊர் உண்டோ அருள் நிழற் கீழ் வாழ்வார் அறிவு கருவிகளில் போனால் என்சேற்றுத் தூள் போலோ எ-று,— (பூமியெல்லாம்) ஒரு குடைக்கீழ் ஆள்வோன் உலகத்து வாழ்வோர்க்குக் குறும்பூரால் துன்பம் உண்டாமோ ? அதுபோல், (எங்கும்

Digitized by Google

பரிபூரணமாய் நின்ற) திருவடி நிழற் கீழ் (ஆநந்தச்செல்வத் தோடும்) வாழ்வார் அறிவு விடயங்களிற் சென்றாலும் என்னை, (அவ்வறிவிற்கு) அவ்விடயங்களான் வரும் மயக்கம் யாதும் இன்று, மாயைக்கீழ் வாழ்வார் (அறிவுபோல் அவரறிவு) சேற்றுக்குள் தூண்போல் அழுந்துமோ?;

பருந்துநிழல் போனால் போல் தோயாமல் போம் எ-து,— பருந்தின் நிழல் ஒன்றில் தோய்ந்தும் தோயாது போனாற் போல் (அவரறிவு அவ்விடயங்களில்) தோய்ந்தும் தோயாது நீங்கும் (என்று அறிதி), எ-று.

ஒருகுடைக்கீழ் வாழ்வார் மற்று யாதோர் ஊருக்குச் செல்லினும், அவ் வரையனது ஆணையால் குறும்பு செய்வாரும், இவரான் வரும் துன்பமும், அவர்க்கு இன்றாயதுபோல், திருவடிக்கீழ் வாழ்வார் அறிவுவிடயங்களிற் சென்றாலும், அத்திருவடிப் பூரணமாய் நிற்றலின், இவ்விடயங்கள் மயக்குவதும், தான் மயங்குவதும், இவ்வறிவிற்கு இன்றாம்; ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார். பருந்தின் நிழல் தோய்ந்தவாறே நில்லாது விரைவில் நீங்குதல்போல், அவ்வறிவு விடயங்களில் தோய்ந்தவாறே மயங்காது விரைவில் நீங்கித் திருவடிக்கீழ் நிற்றலான், இங்ஙனம் உவமை கூறினார். பருந்தினை அவர்க்கும், அதன்நிழலை அவரது அறிவிற்கும், உவமையாகக் கூறியவாறு காண்க.

இத் திருவெண்பாவால் விடயங்கள் அவர் அறிவை மயக்காது என்பதும், அவ்விடயங்களில் அவரறிவு தோயாது என்பதும், அறிவித்தவாறு காண்க. (௫)

நெய்யுண்ட நாயென்ன நீரி னிழலென்ன
மையுண்ட கண்போன் மனைவாழ்வார் - துய்ய
இருளால் விலையேறு மாணிக்க மெல்லாப்
பொருள்போல வல்லாப் பொருள்.

Digitized by Google

(இ-ள்.) நெய் உண்ட நாய் என்ன நீரில் நிழல் என்ன மை உண்ட கண்போல் மனைவாழ்வார் எ-து,—நெய்யை உண்டு மீட்டும் கக்காநின்ற நாய்போலும் (தடாக தீரத்தில் நிற்கும் மரம்மேல்முகமாய் நிற்கவும் அத்தடாக) நீரில் கீழ்முகமாய்த் தோன்றும் அம்மரநிழல் போலும், (பிறர்க்கு அழகாய்த் தனக்குக் கரிப்பாயிருக்கும்) மையுண்ட கண்போலும் (அந்த ஞானிகள்) இல்வாழ்க்கையோடுங் கூடியுங் கூடாதிருந்து வாழ்வார்; (இங்ஙனம் வாழ்வாராயின், ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம் என்னை எனின்);

இருளால் விலை ஏறும் தூய்ய மாணிக்கம் எல்லாப்பொருள் போல அல்லாப்பொருள் எ-து,—(இருளைத் துறந்து பிரகாசித்தலான்) இருளான் விலையேறும் நிருமலமாயுள்ள மாணிக்க மணி (அவ்விருளான் மறையும்) மற்றெல்லாப் பொருள்களைப் போலும் அல்லாதபொருள் (அதுபோல் இல்வாழ்க்கை இருளால் தாம் மறைந்திருப்பாரைப்போலும் அன்றி, அவ்வில் வாழ்க்கை இருளைத் தமது ஞானப் பிரகாசத்தால் நீக்கிநின்று விளங்குவர் என்று அறிதி), எ-று.

நெய்யை உண்டபின் வயிற்றில் எட்டுணையேனும் தங்காது மீட்டும் கக்கலான், அந்நெய்யினது சாரம் அதன் உடலிற் சாராததுபோல, விடயங்களைத் தாம் அற்று அநுபவித்துச் சிவத்திற்கு ஆக்கலான், அவ்விடய வாசனை இவரைச் சாராது ஆகலின், "நெய்யுண்ட நாயென்ன" என்றும், கரையின்கண் மரம் மேல்முகமாய் நிற்கவும் அதனது நிழல் நீரின்கண் கீழ்முகமாய்த் தோற்றுதல்போல், சகலத்தையும் கடந்த சிவத்தைத் தாம் பிரியா திருக்கவும் மனைக்கண் இருத்தல்போல் தோற்றலின், "நீரினிழலென்ன" என்றும், பிறர்க் கழகாய்த் தனக்குக் கரிப்பதா யிருக்கும் மையுண்டகண்போல், பிறர்க்கு மனைக்கண் வாழ்கின்றதுபோல் தோற்ற, தமக்குப் பிராரத்த வாசனை என்றைக்கு ஒழியும் என்று வெறுப்பாய்த் தோற்ற

Digitized by Google

லின், "மையுண்டகண்போலும்" என்றுங் கூறினார். மாணிக்கம் பகலைப்பற்ற இரவில் மிகவும் பிரகாசிப்பது போல், மெய்ஞ்ஞானிகட்குத் துறவைப்பற்றி இல்வாழ்க்கையில் ஞானமிகவும் பிரகாசிக்கும் ஆகலின், "இருளால் விலையேறு மாணிக்கமெல்லாப் பொருள்போல வல்லாப் பொருள்" என்றுங் கூறினார். (௬)

[ஞானியும் அஞ்ஞானியும் குடும்பத்தோடிருப்பதனால், அவர்க்குப் பிறப்பு இன்றாயது என்னை? இவர்க்குப் பிறப்பு உண்டாயது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

தொடைதட்ட லொன்றே துயிற்கும் விழிக்கும்
படிகத் திருண்மணிக்கேன் பற்றும்-அடிபார்த்துக்
கூடப்போங் கள்ளனைப்போற் கூடக் குடும்பக்கூத்
தாடிக்கேன் மேற்பிறப்புண் டாம்.

(இ-ள்.) துயிர்க்கும் விழிக்கும் தொடைதட்டல் ஒன்றே படிகத்து இருள் மணிக்கு என் பற்றும் எ-து,—துயிலும் பருவம் உடையோன் துயிறற்குத் தொடைதட்டலும், விழிக்கும் பருவம் உடையோன் விழித்தற்குத் தொடைதட்டலும் ஒன்றேயாம், (அதுபோல் ஞானி மனைவி முதலிய குடும்பத்தார் வந்து சருவுந்தோறும் அகமுகமாய்த் தற்போத ஒழிவில் நின்று ஆநந்த நித்திரைபண்ணுவான், அஞ்ஞானி தன் மனைவி முதலிய குடும்பத்தார் வந்து சருவுந் தோறும் சகமுகமாய் நின்று மயக்கத்தில் அழுந்துவான் ஆயின், ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம் இங்ஙனம் ஆயினும், அந்த ஞானிக்குக் குடும்பத்தில் இருக்கின்றேன் என்னும் வாசனையாயினும் தோன்றாதோ? எனின்,) படிகத்தில் (பற்றும் பஞ்சவன்னமாகிய) இருள் மாணிக்க மணிக்கு என் பற்றும்; அதுபோல அக்குடும்பந் தானாய் நின்ற அஞ் ஞானிக்கு ஏறும் வாசனை குடும்பத்திற் பற்றின்றி நிற்கும் ஞானிக்கு என் ஏறும் இங்ஙனம் குடும்பவாசனையும் ஏறாதிருத்தலான்);

Digitized by Google

அடி பார்த்துக் கூடப்போம் கள்ளனைப்போல் கூடாக் குடும்பக் கூத்தாடிக்கு மேல்பிறப்பு ஏன் உண்டாம் எ-து,—(பொருள்களைக் களவு கொடுத்தோர்கள்) அவன் அடிபார்த்துச் (செல்ல, அப்பொருள் களவுகொண்டோன் அவரோடுங் கலந்துகொண்டு அவ்வடிபார்த்து) கூடச்செல்லும் அக்கள்வனைப்போல், (குடும்பத்தார்க்குச் சுகதுக்கம் வந்தகாலை அவரைப்போல் தானும் அவர்க்குக் காயத்தால் பூரிப்பும் வாட்டமும் உடையவனைப்போற்காட்டி அவரோடுங் கூடிநின்றும் மனத்தான் அவரோடும்) கூடாத குடும்பக் கூத்தாடியாகிய அந்த ஞானிக்கு மறுபிறப்பு ஏன் உண்டாம், எ-று.

தொடைதட்டலால் துயில்வதும் விழிப்பதும் அவர்க்கியல்பாயினபோல், குடும்பத்தால் அகமுகப் படுவதும் சகமுகப் படுவதும் இவர்க் கியல்பாயின என்பதுங் கொள்க. பார்ப்பான் தோட்டிவேடம்போட்டு நடிப்பினும், தன்னை வேறுகண்டுநின்றாற்போல், இவன் குடும்பிபோல் இருப்பினும், தன்னை வேறு கண்டு, நின்றான் ஆகலின், "குடும்பக்கூத்தாடி" என்றார்.

[நீர் இங்ஙனம் கூறிய ஆற்றான் ஞானிக்கு இல்லறமும் துறவறமும் சரியோ? எனின், மேற் கூறுகின்றார்.]

தொடும்போ சுழல்காற் றுத் தூளம்போற்றொட்டு
விடும்போது மங்ஙனே விட்டு - நடந்தாலும்
ஆகாய நீங்காம லாடியது போலடங்கும்
ஏகாந்திக் கெங்கிருந்தா லென்.

(இ-ள்.) தொடும்போது சுழல்காற்றுத் தூளம்போல் தொட்டு விடும்போதும் அங்ஙனே விட்டு நடந்தாலும் எ-து,—(விடயங்களைப்) பற்றும்போதும் சுழல்காற்றுத் தூளத்தைப் பற்றுவதுபோற் பற்றி (அவ்விடயங்களை) விடுக்கும்போதும் அச்சுழல்காற்றுத் தூளத்தை விடுப்பதுபோல் விடுத்து (அங்ஙனம் ஞானியின தறிவு விடயங்களைப் பற்றிவிடுத்துச்) சென்றாலும்;

Digitized by Google

ஆகாயம் நீங்காமல் ஆடி அடங்கும் அதுபோல் ஏகாந்திக்கு எங்கு இருந்தால் என் எ-து,—(தூளத்தைப் பற்றும்போதும்) ஆகாயத்தைவிட்டு நீங்காமற் பற்றி (சுழன்றுடும்போதும் அவ்வாகாயத்தை விட்டு நீங்காது) ஆடி (அத்தூளத்தை விடுத்து அவ்வாகாயத்துள்) அடங்கும் அச் சுழல்காற்றுப்போல, (விடயங்களைப் பற்றும் போதுந் திருவருளை விட்டு நீங்காதுபற்றி, அநுபவிக்கும்போதும் அவ்வருளை நீங்காது அநுபவித்து, அவ் விடயங்களை விடுத்து அவ்வருளில் அடங்கும்) ஏகாந்தியாகிய ஞானிக்கு (இருவகை அறங்களில்) எவ்வறத்திருந்தால் என்னை (அவர்க்கோர் பற்றும் இன்று), எ-று.

"ஆகாய நீங்காமலாடி" என்றதனால், தூளத்தைப் பற்றும் போதும் ஆகாயம் நீங்காமற் பற்றி என்பது வருவிக்கப்பட்டது. "அதுபோலடங்கும்" என்றமையால், ஆடி என்றதன் பின்னர் அடங்குமென்பது வருவிக்கப்பட்டது. இங்ஙனம் செய்தாலும் அவரிருக்கும் இடம் திருவருள் ஆகலின், "ஏகாந்தி" என்றார். (அ)

[இங்ஙனம் குடும்பத்திருந்தும் அதன்கட் சார்பு ஒழிந்து நின்றார் யாவர்? எனின், மேற்கூறுகின்றார்.]

சுந்தரனார் சேரர்கோன் சோழர் குறுமன்னர்
மைந்தருடன் றம்முடலை வாட்டினர்கள் - அந்தமிலாப்
பத்தரொடு ஞான வயிராக் கியர்பலர்க்கும்
ஒத்ததுசார் போத வொழிவு.

(இ-ள்.) சுந்தரனார்......போத ஒழிவு எ-து.— சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், செங்கட் சோழ நாயனார் புகழ்ச்சோழநாயனார் ஆகிய சோழ ராசாக்கள், மெய்ப்பொருள்நாயனார் கழற்சிங்கநாயனார் முதலிய குறுமன்னர், மைந்தருடலை வாட்டிய சிறுத் தொண்ட நாயனார், தம்முடலை வாட்டிய கண்ணப்பநாயனார் அரிவாட்டாயநாயனார் முதலி

Digitized by Google

யோர், நாசமில்லாத திருநீலகண்டநாயனர், அதிபத்தரோடு மற்றும் உண்டாகிய ஞானிகள், வைராக்கியராயுள்ள இம் மெய்யடியார் பலருக்கும் குடும்பத்திற் கூடியிருந்தும் அதன் கட் சார் போதம் ஒழிந்து நிற்றல் ஒன்றாய் ஒத்திருந்தது, (ஆக லின், சார்போதம் ஒழிவோர் எவ்வறத்திருப்பினும் ஒழிந்து நிற்பர், ஒழியாதார் எவ்வறத்திருப்பினும் ஒழியார் என்று அறிதி), எ-று.

செய்யுண்ட நாயென்னுந் திருவெண்பாமுதல் இந்நான்கு திருவெண்பாவானும், பற்றற்ற ஞானிகட்கு இல்வாழ்க்கை யில் ஞானவொளி விளங்கலின். இரவு விளக்குப்போன்று அந்தஞானம் பயன்பட்டு அதிகமாம் என்பதும், அவர் அக்கு டும்பத்தில் பற்றிலாராகலின் பிறப்பு உண்டாகாது என்பதும், அவர் எவ்விடத்திருப்பினும் நிலை அயரார் என்பதும், இவ் வாறு குடும்பத்தி லிருந்தும் ஞானிகளா யிருந்தோர் இவரிவ ரென்பதும் அறிவித்தவாறு காண்க. (க)

வாதனைமண்டார்தன்மை.

முற்றும்.

Digitized by Google

கo-ம் அதிகாரம்.

நிலையியல்பு.

இதனுட் கூறிய உண்மைநிலை தவறினும், மீட்டும் அதனைச் சென்றடைதற்கு உபாயங் கூறினமையான், இவ்வதிகாரத்திற்கு நிலையியல்பென்று பெயராயிற்று.

அறியார் வழிகேட் டறிந்து நடக்க
அறிவா ரறிவென் றறியார் - மறையாக்
குடையிருக்கத் தாமே குதித்துங் கடந்தும்
அடர்மழைக்கே வாரவர்போல் வார்.

(இ-ள்.) வழி அறியார் கேட்டு அறிந்து நடக்க அறிவார் அறிவு என்று அறியார் எ-து,—(தாம்கருதிய ஊருக்குச் செல்லும்) வழி அறியார் (அவ்வழியறிந்தோரைக்) கேட்டறிந்து நடக்கவும் (தம்மால் அறிந்து நடப்பதாய்க் கருதுவர் அன்றி அவ்வழி) அறிவார், (அறிவித்த அறிவு தாம் அவ்வழி அறிந்த) அறிவென்று அறியார், (அதுபோல, தாம் முன்னர் அறியாத கருவிகள் முப்பத்தாறையும் இப்போது அருள் அறிவிக்க, அவை அறிந்து கடந்து செல்லவும், தம்மால் அவற்றை அறிந்து கடந்து சென்றதாய்க் கருதுவரன்றி, அவ்வருள் அறிவிக்க அறிந்த அறிவு தாம் அக்கருவிகளை அறிந்த அறிவென்று அறியார்);

அடர் மழைக்கு ஏவார் அவர் மறையாக் குடை இருக்கத் தாமே குதித்தும் கடந்தும் போல்வார் எ-து,—அடர் மழைக்கண் ஒரூர்க்குச் செல்லத் தொடங்கினோர் (மழை தம்மேல் தாக்காதபடி தமக்கு) மறைப்பாகக் குடை கைக்கண் இருக்கவும் (அக்குடையைத் தம்மேற் கொண்டு செல்லாது மழைத்திவலைகட்கு இண்டயே) தாமே குதித்துங் கடந்தும் (அவ்வடர் மழைக்கண் நனைந்து) செல்கின்றாரைப்போல், கருவிகளைக் கடந்து

Digitized by Google

வீடடையக் கருதினோர் அக்கருவிகள் தம்முன் தாக்காதபடி அருள் தம்மைவிட்டு நீங்காதிருக்கவும், இவ்வருளை முன்னிட்டுக்கொண்டு செல்லாது, அக்கருவிகளைத் தற்போதத்தால் அறிந்தும் கடந்தும் செல்வதாகக் கருதி அவற்றுள் நுழைவார் இதென்னை, எ-று.

முன்னர் அறியாதிருந்த கருவிகளை இப்போது அறியவந்தது திருவருளால் அறிய வந்ததென்று அறியாது, தம்மால் அறிந்ததாகக் கருதினமையால், இங்ஙனம் உவமை கூறினார். கருவிகளை நீக்கத் தொடங்குவோர் திருவருளை முன்னிட்டுக் கொண்டு நீக்காது, தற்போதத்தை முன்னிட்டு நீக்கத்தொடங்கின், அக்கருவிகள் நீங்காது பண்டைப்படி மூடும்; ஆகலின், இங்ஙனம் உவமைகூறினார்.

இத்திருவெண்பாவால் கருவிகளை அறிந்து நீங்குகின்ற அறிவு அருளறிவிக்க அறிந்த அறிவென்று அறியவேண்டும் என்பதும், கருவிகளை நீக்கிச் செல்லும்போது தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டு நீக்கிச் செல்லவேண்டும் என்பதும், அறிவித்தவாறு காண்க. (௧)

[கருவிகளை இங்ஙனம் நீங்கித் திருவருளைக்கூடும் நிட்டை கூடாதாயினும், கேவல சகலங்கள் தாக்காது அருளே எவைக்கும் தாரகமென்று அறிந்து நிற்றற்கு உபாயம் யாது? எனின், மேற்கூறுகின்றார்.]

செத்துப் பிறவாமற் றேடித் திரிகையிலே
செத்துப் பிறந்து திரிவீரே - சுத்த
இருட்கே வலசகலம் போக வெதிரிட்ட
அருட்போத ராய்த்திரியா மல்.

(இ-ள்.) எதிரிட்ட இருள் கேவல சகலம் போகச்சுத்த அருட்போதர் ஆய்த் திரியாமல் எ-து,—(உமது அறிவிற்கு) எதிரிட்ட மயக்க வடிவாகிய கேவலாவத்தையும் (விகற்பவடிவா

Digitized by Google

கிய) சகலாவத்தையும் போக, இவைகள் தாக்காத சுத்தாவத்தையில் நின்று, அருளே எவைக்கும் தாரகம் என்று அறிந்து நாடி அவ்வருட் போதராய்ச் சஞ்சரியாமல்;

செத்துப் பிறவாமல் தேடித் திரிகையிலே செத்துப்பிறந்து திரிவீரே எ-து,—(இனிமேல்) இறந்து பிறவாமல் (இப்போது பிறபிறப்பைக் கடந்து நின்ற வீடு) தேடி (பாவனை முதலிய செய்து உள்ளே) சுழலுமிடத்து தானே (கேவலாவத்தையில்) இறந்தும் (சகலாவத்தையில்) பிறந்துஞ் சுழல்வீர் (இது என்னை), எ-று.

மயக்கமாய் வந்தடுப்பது கேவலம், விகற்பமாய் வந்தடுப்பது சகலம், மயக்கம் வந்தடுத்தபோது மயக்கவடிவாய் நின்றும், விகற்பம் வந்தடுத்தபோது விகற்ப வடிவாய் நின்றும், மயக்கம் நீங்கியபோது அம்மயக்கத்தை மயக்கம் என்றறிந்தும், விகற்பத்திற் சென்று மீண்டபோது அவ்விகற்பத்தை விகற்பம் என்றறிந்தும், இங்ஙனம் அவற்றின் மறைந்தும் சுழன்றும் அவற்றை இவை என்று அறிந்துநின்ற அறிவுதான் என்றறிந்து, அவற்றையும் தன்னையும் தனக்கறிவித்தது அருளென அறிந்து, அவ்வருள் தன்னை எப்போதும் விட்டு நீங்காதென்று அறிந்து, அவ்வருளை நாடி நிற்கவே அம்மயக்க விகற்பமாகிய கேவலசகலங்களில் நீங்கி, அருள் பூரணமாய்ப் பிரகாசிக்கும் ஆகலின், "இருட்கேவலசகலம் போக வெதிரிட்ட வருட் போதராய்த்திரியாமல்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்ம போதஞ் சீவியாது, அருட் போதத்தை நாடிநின்றால், அவ்வருள் அறியப்படும் என்று அறிவித்தவாறு காண்க. (உ)

[இங்ஙனம் சகல கேவலங்கள் தன்னால் அறியப்படுதலின், அவற்றைத் தன்னால் நீக்கக்கூடாதோ? எனின், மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

சகலமுங் கேவலமுந் தாக்கறுப்பான் றானே
பகல்விளக்கோ டுச்சிப் படிகம் - தகவைத்தூழ்
ஊட்டி யுறக்குவது நாமேநம் முட்கலப்பு
நாட்ட மொழி யென்றருளி னான்.

(இ-ள்.) தானே சகலமும் கேவலமும் தாக்கு அறுப்பான் பகல் விளக்கோடு உச்சிப் படிகம் தக வைத்து ஊழ் ஊட்டி உறக்குவதும் நாமே எ-து,—(நமதருளை முன்னிட்டுக்கொண்டு சகல கேவலங்களைத் தன்னுள் தாக்காது அறுப்பதே அன்றி) தானே சகலத்தையும் கேவலத்தையும் தன்னுள் தாக்காது அறுப்பான், ஆதித்தன் சந்நிதியில் தற்சேட்டை அற்றிருந்த விளக்குப்போலும், உச்சிக்காலத்துப் பஞ்சவன்னங்களையும் கவராதிருந்த படிகம்போலும் (எமது சந்நிதியில் உனது தற்போதம் சீவியா திருக்கவும் எமது சந்நிதியை நீ அங்ஙனம் நீங்கா திருத்தலின் கருவிகள் உன்னைத் தாக்கா திருக்கவும்) தகைமைபெற வைத்து உனது ஊழ்வினைப்படி உனக்கு ஊட்டி உறக்குவிப்பதும் நமதருளே; (இங்ஙனம் வீட்டின்பங் கொடுப்பது நமதருளே என்றறிந்து இவ்விருவகை இடத்தும் உன்போதஞ் சிறிதேனும் சீவியாது விற்பின் நம்மிருவர்க்கும் தாமே இரண்டற்ற ஐக்கியங் கூடும்); (இஃதன்றி,)

நம்முள் கலப்பு நாட்டம் ஒழி என்று அருளினான் எ-து,—(யாம் உன்னை வந்து கூடுதலும் நீ நம்மை வந்தடைதலும் ஆகிய கருத்து உன்பால் எழின் ஐக்கியங்கூடாது ஆகலின் நாமிருவரும் வந்து) நம்முட் கலப்பதாகிய நாட்டத்தை நீ ஒழிதி என்று (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எனக்கு) அருளிச்செய்தார், (இவ்வாறே நீயும் அறிதி எனின், அவரது திருவடிக்கண் ஐக்கியம் உனக்கும் கிடைக்கும்), எ-று.

எதிரிட்டுத் தடித்த போதம் எதிரிடாது அசைவற நின்று தேய்ந்தபோது ஆன்மாவிற்கும் சிவத்திற்கும் ஐக்கியம் தாமே

Digitized by Google

கூடும் ஆகலின், "சம்முட்கலப்பு காட்டமொழி என்றருளினான்" என்றார். தமதாசாரியர் தமக் கருளிச்செய்த முறைமை ஈதென்று மாணாக்கனுக்கு அறிவித்தவாறு காண்க.

இத் திருவெண்பாவால் சகலகேவலங்களை அருட் போதத்தால் அன்றி ஆன்மபோதத்தால் நீக்கப்படாதென்று அறிவித்தவாறு காண்க. (௫)

[இங்ஙனம் கருதி நின்று திருவருளைக் கூடுதல் அரிதாயினும் இன்னும் ஒருபாயம் மேற்கூறுகின்றார்.

சாக்கிரத்திற் போதச் சலனையெல்லாஞ் சொப்ப
னம்போல்,—ஆக்கு மருட்போத ராகுவோர் - நீக்
கும்,—பரயோகர் சுத்தர் பரமசுகா நந்தர்,—துரிய
கதி யின்புகடந் தோர்.

(இ-ள்.) சாக்கிரத்தில் போதச் சலனை எல்லாம் சொப்பனம் போல் ஆக்கும் அருட்போதர் ஆகுவோர் எ-து,—சாக்கிராவத்தையில் தோன்றும் போதச் சேட்டையும் (மற்றும் உண்டாகிய தேகாதி பிரபஞ்சங்கள்) எல்லாமும் (இவை யாவை என்ன எதிரிட்டுப்பார்த்து, அப்போதச் சேட்டை விடயங்களைச் சார்ந்த இடத்துத் தோன்றிய விடயபோதம் என்றும், தேகாதி பிரபஞ்சங்களெல்லாவற்றையும் மாயையில் தோன்றி அழிவதென்றும் இவற்றிற்கெல்லாம் தாரகமாய் உட்புறம்பாய்ப் பரிபூரணமாய் நிற்பது அருளென்றும் கண்டு, பின்னர் அப்பரிபூரண மாகிய அருளே மெய்யென்று, அதனை நாடிநின்று, இவ்விடயபோதத்தையும் இப்பிரபஞ்சங்களையும்) சொப்பனம்போலப் பொய்யாக்கும் அவர் (இவற்றை உள்ளபடி நீங்கி) அவ்வருட்போதரே ஆகுவர்; (அஃதன்றி அவரே,)

நீக்கும் பராயோகர் சுத்தர் பரமசுகாநந்தர் துரியகதி இன்பு கடந்தோர் எ-து,—(அவ்வருளையும்) கடந்து செல்லும்

Digitized by Google

பரயோகரும் (தற்சுதந்தரமற்ற) பரிசுத்தரும் அப்பரமசுகமாகிய ஆநந்தத்தை உடையரும் நின்மல துரியத்தில் தோன்றும் பரமசுகாநந்தாதீதரும் ஆவர், எ-று.

இங்ஙனம் விடயபோகத்தையும் தேகாதி பிரபஞ்சங்களையும் பொய்யென்றும், தமக் கன்னியமென்றும் கண்டு, இவற்றி குள்ளும் புறம்பும் பரிபூரணமாகிய திருவருளையே நாடி நி போர் இப்பொய்களை நீங்கி அம்மெய்யாகிய திருவருளே வ வாவர் ஆகலின், "சொப்பனம் போலாக்கு மருட்போதரா வோர்" என்றும், அங்ஙனம் அருள்வடிவாய காலத்து அவ்வ ருளையுங் கடந்து பரயோக முதலியன அவர்க் கெளிதில் உண்டாம் ஆகலின், அவரையே பரையோக முதலியன உடையரொன்றுங் கூறினர். அவர் என்னுஞ் சுட்டுப்பெயர் எஞ் சிநின்றது.

இத்திருவெண்பாவால் கருவிகளை உள்ளபடி கண்டறியில் திருவருள் நிலைகாண வருமென்றும், அங்ஙனம் வரின் பரை யோக முதலிய பேறுளவாமென்றும், அறிவித்தவாறு காண்க.

[இங்ஙனம் விடயபோகத்தையும், தேகாதி பிரபஞ்சங்களை யும் நீங்கி, அருளைப் பெறுவதே அமையாதோ? அதற்குமேல் நீர் பரயோக முதலியன கூறியது என்னை? எனின், மேற் கூறுகின்றார்.]

தத்துவம்போய்க் கேவலம்போய்த் தான்போயரு ள்கழன்று,— சுத்தபரை யாய்த்தன் சுதந்தரம்போ ய்ச் - சத்தி,—ஒழிவிலே போதம்போ யொன்றாகா வொன்றின்,—அழிவிலே யின்பவதீ தம்.

(இ-ள்.) தத்துவம் போய்க் கேவலம் போய்த் தான்போய் அருள் கழன்று சுத்த பரை ஆய்த் தன் சுதந்தரம் போய்ச் சத்தி ஒழிவிலே போதம் போய் எ-து,—(நினைப்பாய்நின்ற) தத்து வம் முப்பத்தாறையு நீங்கி அவற்றின் மேல் மறப்பாய் நின்ற

Digitized by Google

கேவலாவத்தையும் நீங்கி (அத்தத்துவங்களையும் கேவலாவத்தையையும் இவை என்றறிந்து நீங்கி நின்ற அறிவு தான் எனத் தன்னை அறிந்து அவைகளை அறிந்து நீங்கவும் தன்னை அறியவும் வந்தது திருவருள் அறிவிக்க அறியவந்ததென்று அறிந்து) தானறிந்தேன் என்பது நீங்கி, (தனக்கறிவித்த அவ்வருளைத் தரிசித்து) அவ்வருளையும் கழன்று நின்மலமாய் உள்ள பரையே தானாகி (அப்பரையை அறிந்த இடத்து இது அது என்று தான் காண்பானும், காட்சியுமாய் அறிந்துவந்த) தற்சுதந்தர அறிவு நீங்கி அப்பராசத்தி நீக்கத்திலே தற்போதம் ஒழிந்து (ஆநந்தாநுபவம் பெற்று அதன்பின்னர்);

ஒன்று ஆகா ஒன்றின் அழிவிலே இன்ப அதீதம் எ-து,—(இங்ஙனம் கூறியவற்றுள்) ஒன்றும் தானாகாத ஒன்றாயிருந்த சிவத்தில் தான் இரண்டறக் கலந்து போதவாசனையும் இறந்த இடத்தில் சுகாதீதம் இச்சுகாதீதமே (உண்மைநிலை என்று அறுதி,) எ-று.

பரையோகத்தில் ஆன்மாவினது தற்சுதந்தர அறிவு கெடும் ஆகலின், "சுதந்தரம்போய்" என்றும், அப்பராசத்தி நீக்கத்தில் போதம் இறந்து ஆநந்தாநுபவம் உண்டாம் ஆகலின், "சத்தி யொழிவிலே போதம்போய்" என்றும் ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்த விடத்துப் போதவாசனை ஒழிதலானும் இவ்விடஞ் சுகாதீதம் ஆகலானும் "ஒன்றாகாவொன்றினழிவிலே யின்பவதீதம்" என்றுங் கூறினார். இன்பாதீதம் என்றமையால் இன்பப்பேறு வருவிக்கப்பட்டது. தத்துவ முதலியன போக்கப் போவன ஆகலின், போயென்பது நீங்கி என்று கூறப்பட்டது.

இத்திருவெண்பாவால் உண்மைநிலை ஈதென்று அறிவித்தவாறு காண்க. (௫)

[இவ்வாநந்தப்பேறு பெறும் ஆறு எங்ஙனம்? எனின், மேற்கூறுகின்றார்.]

Digitized by Google

போதப் புரவி புருட னதிலைந்து
வீதிப் பவனி விறிசாகும் - போதப்
புரவியருளேறிற் போக்குவர வற்ற
பரமசுக மாங்காணப் பா.

(இ-ள்.) போதம் புருடன் புரவி அதில் ஐந்து வீதி விறிசு பவனி ஆகும் எ-று,—போதமாகிய அறிவு புருடனாகிய புரவிமேல் ஏறிக்கொண்டு பஞ்சேந்திரிய வீதிகளில் விடயங்களாகிய காட்சிகளைக் கண்டுகொண்டு சுழல் விறிசுபோலப் பவனி செல்வதாகும்;

போதம் புரவி அருள் ஏறில் போக்கு வரவு அற்ற பரம சுகம் ஆம் அப்பா காண் எ-து,—போதமாகிய புரவி மேல் அருளாகிய அறிவு ஏறின் (அப்போது) போக்குவரவு அற்றுநின்ற மௌனானந்தம் உண்டாம் இதனை மாணாக்கனே நீ அறிதி, எ-று.

போதம் புருடனோடு கூடிப் பஞ்சேந்திரிய வழிச்சென்று விடயங்களைப்பற்றும், அங்ஙனம் பற்றாது அவற்றை நீங்கி அப் போதத்தை உள்ளே அடக்கித் திருவருளை நாடவே இவ்வருள் அப்போதத்தைக் கீழ்ப்படுத்தித் தான் மேலீடாய்ப் பிரகாசிக்கும். அப்போது ஆநந்தோதயம் உண்டாம் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினார். போதவிடயாநந்தம் பெறுதற்கு ஏதுவாய் நின்றது புருடன் ஆகலின், இப்புருடனைப் புரவியாக்கினார். சொரூபாநந்தம் பெறுதற்கு ஏதுவாய அருளைப் போதமுன்னிட்டுக்கொண்டு சேறலின், இப்போதத்தைப் புரவி யாக்கினார். இந்தநாட்டம் வைத்தால் அந்தநாட்டம் மறந்துசுழலும், அந்தநாட்டம் வைத்தால் இந்தநாட்டமறந்து அசைவற்றிருப்பதுங் காண்க. ஒருவன் அட்டாவத்தானம் செய்தல் முதலியன இப்புருடனது வேகமெனக் கொள்க. இதற்கு உதாரணம். சிவப்பிரகாசம்.—"ஐவகையா லறுபயன்க

Digitized by Google

ணுகரவருங் கால மதுபுருட தத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர்'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க. (௩)

[அறிவும் ஆநந்தமும் பெறுதற்கு உபாயங் கூறினீர், இனித் துறவினது இலக்கணம் யாது ? எனின், மேற்கூறுகின்றார்.]

அறிந்தழுந்தி யாராய்ந் தகம்புறமாய்த்தேடி
மறந்தவனுய்த் தானுய் மயங்கிப் - பிறிந்து
சுகதுக்க மாய்ப்பதறிச் சுட்டுத் தொழில்போய்ப்
பகைகெட் டதுதுறவப் பா.

(இ-ள்.) அகம் புறம் ஆய் ஆராய்ந்து தேடி அறிந்து அழுந்தி மறந்தவன் ஆய்த் தான் ஆய் மயங்கிப் பிறிந்து சுகதுக்கம் ஆய்ப் பதறி எ-து,—(தற்போதத்தால் விடயங்கள் எவ்விதத்தால் உண்டாம் என்று) உள்ளும் புறம்புமாய் விசாரித்துத் தேடியும், (அவ்விடயங்கள் கிடைத்த காலை அவற்றை ஞானேந்திரியங்களான்) அறிந்து (கன்மேந்திரியங்களால் பற்றி அந்தக்கரணங்களால் அவற்றுள்) அழுந்தியும், (அவ்விடயங்களைக் கேவலத்தில்) மறந்தவனுயும், (சகலத்தில் அவ்விடயங்களை) தானுய் மயங்கியும் (விடயங்கள் தன்னைப்பிரியாது நின்றவிடத்து அவற்றில்) சுகரூபியாய்ச் (சென்றுபற்றிப்) பதறியும் (அவைதன்னைப் பிறிந்து நீங்கியவிடத்துத்) துக்கியாய் நின்று பதறியும்;

சுட்டுத் தொழில் போய்ப் பகை கெட்டது துறவு அப்பா எ-து,—இங்ஙனம் மயங்கிநின்ற சுட்டுப்போதமுங் கெட்டு அவ்விடயங்களாகிய உயிர்ப்பகையும் கெட்டதுவே துறவு (என்று அறிதி) மாணுக்கனே, எ-று.

"அறிந்தழுந்தி யென்றதனுல்" பற்றி என்பது இடையே வருவிக்கப்பட்டது. துறவு கூறினமையால் விடயம் வருவிக்கப்பட்டது. அகத்துத் தேடியென்றது, அவ்விடயங் கிடைத்தற்கு உபாயம் நாடுதல். சுகங்கூறினமையால் விடயம் பிறி

Digitized by Google

யாது நின்றவிடத்து என்பது வருவிக்கப்பட்டது. விடயம் பிறியாதபோது அதன்மேல் விரைந்து சேறலானும், பிறிந்த போது உளம் பதைத்தலானும், இருமைக்கும் பொதுவாய் "பதறி" என்றார். 'மயங்கிச் சுழல்வதனால்' போதத்தைத் தொழில் என்றார். இம்மை மறுமைகளினும் உயிர்க்குத் துன் பந்தருவது ஆகலின், அவ்விடயங்களை "பகை" என்றார். (எ)

[அறிவும் துறவும் இவை என்றறிவித்தீர், இனிச் சிவயோ கமாவது யாது? எனின், மேற்கூறுகின்றார்.]

நடந்ததெல்லா நீயே நடப்பழிய நின்ற
இடஞ்சிவநீ யென்றிருக்க வெண்ணில் - அடங்கின்
மயக்கி மலமழுத்து மாயையிது வாரா
அயர்ப்பருளா லாஞ்சிவயோ கம்.

(இ-ள்.) நடந்தது எல்லாம் நீயே நடப்பு அழிய நின்ற இடம் நீ சிவம் என்று இருக்க எண்ணில் அடங்கின் மலம் மயக்கி அழுத்தும் எ-து,—(கருவிகளை இது இது என்று அறிந்து) சென்றதெல்லாம் உன் தற்போதமேயாம், (ஆகலின், இது சிவ யோகம் அன்று, அக்கருவிகளை அறிந்து) சென்றது ஒழிய நின்ற இடத்தை நீ சிவயோகம் என்று இருக்கக் கருதினை எனின், (அக்கருவிகள்) அடங்கின் (உன்னை) ஆணவமல மயக் கித் தன் வயப்படுத்தும்; (ஆகலின், அக்கருவிகள் ஒழியநின்ற இடம் சிவயோகம் அன்று, ஆயின் சிவயோகம் யாதினால் உண்டாம் எனின்,)

மாயை அயர்ப்பு இது வாரா அருளால் சிவயோகம் ஆம், எ-து,—(உன்னால் அறியப்படும் கருவிகள் எல்லாம்) மாயை, (அக்கருவிகள் ஒழிய நின்றவிடத்து) மறப்பாய் நின்றது ஆண வமலம், ஆகலின், (அம்மாயையும் இவ்வாணவமும் வந்தடாத (சுத்தத்தின்கண் தோன்றும்) திருவருளால் சிவயோகம் உண் டாம் (என்றறிதி), எ-று. (அ)

Digitized by Google

[இச்சகல கேவலங்கள் அற்றபோது தற்போதம் அறுதோ? இவற்றின்மேலும் போதம் உளதென்று நீர் கூறியது என்னை? எனின், மேற்கூறுகின்றார்.]

அருளும் பரையு மருக்கன்மதி போன்ற
இரவுபக லற்ற விடத்தே - பரமநிலை
சத்திக் கழற்றியிலே சச்சிதா நந்தமய
சுத்தநிலை நீயற்ற து.

(இ-ள்.) அருக்கன் மதிபோன்ற அருளும் பரையும் பகல் இரவு அற்ற இடத்தே பரமநிலை எ-து,—அருக்கனு மதியும் போன்ற அருளும் பரையும் ஆகிய பகலும் இரவும் அற்றவிடத்தே பரமாநந்தாநுபவநிலை ஆம்;

சத்திக் கழற்றியிலே சச்சிதாநந்தமய சுத்தநிலை நீ அற்றது எ-து,—(அப்பரமாநந்தாநுபவமாகிய அநுபவ) சத்தி நீக்கத்தில் சச்சிதாநந்த வடிவாயிருந்த சிவமாகிய சுத்தநிலை (இச்சுத்தநிலையே) உன் தற்போதம் (சிறிதுந்தோன்றாது) அற்றநிலை (என்றறிதி), எ-று.

அருள் ஆன்மாவிற்குப் புலப்படத் தோற்றலானும், அப்பரையினுந் தடிப்பாகலானும், அவ்வருளை அருக்கனென்றும், அவ்வருளைக் கடந்தது பரையாகலானும், இப்பரையை மதியென்றும், பகலிரவு கண்ணிற்குத் தோற்றுதல்போல் அருளும் பரையும் ஆன்மாவிற்கு அநுபவமாய்த் தோற்றலான் "பகலிரவென்று" கூறினார். பிரகாசம் உட்டணம் சோபை என்னும் இம்மூன்று குணத்தையும் உடைய சூரியனைப்போல் அருள் பரை ஆநந்தம் என்னும் இம் மூன்று இலக்கணத்தையும் உடையது சிவம் ஆகலின், "சச்சிதாநந்தமய சுத்தநிலை" என்றார். ஆநந்தம் அளவும் ஆன்மாவால் அநுபவங் கூறப்படும்; அவ்வாநந்தா தீதத்தில் அநுபவங் கூறப்படாது; ஆகலின், "சுத்த நிலை நீயற்றது" என்றார். (கூ)

Digitized by Google

[இனிப் பஞ்சமலங்களும் அறுநெறி எங்ஙனம்? எனின் மேற்கூறுகின்றார்.]

தாமருந்தல் போலத் தமைச்சிவனுக் கூணாக்கித்
தாமருளா லுண்டுபரை தாமாகித் - தாமழிய
அஞ்செழுத்தா லர்ச்சித் தடியார்க் கடிமைசெயின்
பஞ்சமலக் கொத்தறுமப் பா.

(இ-ள்.) தாம் அருந்தல் போலத் தமைச் சிவனுக்கு ஊண் ஆக்கித் தாம் அருளால் உண்டு பரை தாம் ஆகித் தாம் அழிய எ-து,—(தமக்கு ஊணாயிருந்த அன்னாதிகளை) தாம் அருந்தல் போல, (தற்போதஞ் சீவியாதுநின்று) தம்மைச் சிவனுக்கு ஊணாய் உண்ணக்கொடுத்து, (பஞ்சவிடயங்கள் வந்தடுப்பினும் அவற்றைத் தற்போதத்தால் சென்று பற்றி அவற்றில் அழுந்தாமல் அருளை முன்னிட்டுக்கொண்டு அவ்வருள்தர வாங்கி உண்கின்றோம் என்னும் ஞாபக மறவாமல்) அவ்வருளால் வாங்கி உண்டு, (இங்ஙனம் அவ்வருளால் அறிகின்றோம் என்னும் போதமுஞ் சுருங்கி) பரையே தாமாகி (தற்சுதந்தர அறிவுகெட்டுப் பின்னர் ஆநந்தாநுபவத்தில்) தாமழியவே;

பஞ்ச மலக் கொத்து அறும் அஞ்செழுத்தால் அர்ச்சித்து அடியார்க்கு அடிமைசெயின் அப்பா எ-து,—ஆணவம் மாயை காமியம் திரோதை மாமாயை என்னும் பஞ்சமலக் கூட்டங்களும் அறும், (அங்ஙன நிட்டைகூடி இப்பஞ்ச மலங்களை நீக்கக் கூடாதாயின்) சிவம் முன்னாக விதிப்படி உச்சரிப்பதாம் பஞ்சாக்கரத்தால் சிவனது திருவடியை அருச்சனைபண்ணி (அத்திருவடியை அடைந்த) மெய்யடியார்க்கு அடிமைபூண்டு பணிவிடை செய்யின், (முற்கூறிய அநுபவங்கள் எல்லாம் கைகூடும் பஞ்சமலங்களும் அறும் என்று) மாணாக்கனே அறிது) எ-று.

Digitized by Google

தமதுடல் அருந்தும் ஊண் அவ்வுடலுக்கு உண்ணக்கொடுத்து நிற்கவே அதனை அவ்வுடல் சிறுகச் சிறுக உண்டு தான் பருத்தல்போல், தற்சேட்டை அற்றுத் தம்மைச் சிவனுக்கு ஊணாகக் கொடுத்து நிற்கவே, அச்சிவம் தம்மைச் சிறுகச்சிறுக உண்டு தான் பூரணமாய் விளங்கும். ஆகலின், தாமருந்தல் போலத் தமைச் சிவனுக் கூணாக்கி என்றார். விடயங்கள் வந்தடுக்கும்போது தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டு, அவ்வருளால் அவ்விடயங்களை அறிந்துபற்றி அவற்றை அனுபவிக்கும்போதும் அவ்வருளை முன்னிட்டு நின்று அநுபவித்து, அவற்றால் ஆன்மசந்தோடம் பிறக்கும் போதும் இச்சந்தோடம் அவ்வருளால் உண்டாயதென்று அவ்வருளுக் காக்கி நிற்கவேண்டும், ஆகலின், "தாமருளாலுண்டு" என்றார். சகல கேவலங்களை நீக்கிச் சுத்தாவத்தையில் நின்று தம்மைச் சிவத்திற்கு ஊணாக்கி நிற்றலான், முன்னர் இதமாய்த் தோன்றிய விடயபோகமும் அகிதமாய்த் தோன்றும். ஆகலின், அதனை ருசிப்பித்து நின்ற திரோதை சத்தி நீங்கும். அத்திரோதை சத்தி நீங்கவே, இருவினைப் பயன்களும் சமமாய்த் தோன்றும். இவை சமமாய்த் தோன்றவே இவ்விருவினைப் பயன்கட் கீடாய்ச் சிவன் சுத்த மாயையில் நின்று செய்யும் பஞ்சகிருத்தியங்களும், அச்சுத்த மாயையும் நீங்கும். அவன் அவள் அது என்னும் மூன்னிலைச் சுட்டொழிந்து, அவ்விருவினைப் பயன்களைத் தருவது அருளென் றறிந்து, அவ்வருளின் மறைந்துநின்று, அவ்விருவினைப் பயன்களையும் அவ்வருளால் தாமுண்ணுதலால் கன்ம மல நீங்கும். இங்ஙனம் நீங்கவே பரையோகம் உண்டாம், இப்பரையோகத்தால் இவ்வுடம்பும் தாம் அன்றென்று நீங்க வரும். இவ்வுடம்பு நீங்கவே மாயை நீங்கும், ஆநந்தாநுபவத்தில் தற்போதங் கெடும். இத்தற்போதங் கெடவே இப்போதத்திற்குத் தான் அல்லாத உடம்பைத் தானென்றும், தனதல்லாத போகத்தைத் தனதென்றும் மாறுபாடாய்க் கருதப்

Digitized by Google

பண்ணி நின்ற ஆணவங் கெடும். ஆகலின், "தாமழியப் பஞ்சமலக்கொத்தறும்" என்றார். இங்ஙனங் கூறியவாறு நிட்டைகளால் பஞ்சமலங்களையும் நீக்கக்கூடாதவர் நகாரமாகிய திரோதையையும் மகாரமாகிய மலத்தையும் பின்னிட்டு, சிகாரமாகிய சிவத்தையும் வகாரமாகிய அருளையும் முன்னிட்டு, யகாரமாகிய தான் நகார மகாரமாகிய பாசத்திற்கும், சிகார வகாரமாகிய பதிக்கும் நடுநின்று, வகாரமாகிய அருளைக் கூடிச் சிகாரமாகிய சிவாநுபவத்தில் வகாரமாகிய அருளுங் கழலாது, யகாரமாகிய தற்போதங் கழல, இங்ஙனம் அவ்வருளே நாவாகச் செபியாமற் செபித்து, சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படுத்துவது பஞ்சாக்கர தரிசனம். இங்ஙனம் பஞ்சாக்கர தரிசனமும் பண்ணி, மெய்யடியார்க்குப் பணிவிடை செய்யின், முற்கூறிய நிட்டைகளும் கைகூடிப் பஞ்சமலங்களும் அறும். ஆகலின், "அஞ்செழுத்தாலர்ச்சித் தடியார்க் கடிமை செயின், பஞ்சமலக் கொத்தறும்" என்றார். இங்ஙனம் பஞ்சாக்கர தரிசனம் பண்ணுதல் சிவனுக் கருச்சனையாகலின், "அஞ்செழுத்தா லர்ச்சித்து" என்றார். (௧௦)

[தேவரீர் அருளிச்செய்த சுத்தத்தை அடியேன் பெறுவது எந்நாள்? என்று இரங்கிய மாணாக்கனை நோக்கி, மேல் அருளிச் செய்கின்றார்.]

கருவியுதிப் பிற்சகல கேவலத்தைக் காட்டி
அருளுதிப்பு மங்கதுபோ லாக்கி - இரவுபகல்
தாக்காத சுத்தத் தலத்துநாம் வைக்கநீ
ஆக்கா தெமக்குப் பரம்.

(இ-ள்.) கருவி உதிப்பின் சகல கேவலத்தைக் காட்டி அருள் உதிப்பும் அங்கு அதுபோல் ஆக்கி எ-து,—கருவிகள் முப்பாத்தாறுங் கூடிநின்ற சாக்கிரத்தில் (உனதறிவின் விகற்பமாய் வந்தடுப்பது சகலமென்றும், மயக்கமாய் வந்தடுப்பது கேவலமென்றும் உனக்கறிவித்த) சகல கேவலங்களை (நீங்க

ப்பண்ணி உன்னை உள்ளபடி) அறிவித்து, (இங்ஙனம் உன்னை அறிவித்தபின்னர்த் தோன்றும்) திருவருள் தரிசனத்திலும் (இவ்வருளைச் சகலமென்றும் இது கழன்றதோன்றும் பரையோகத்தைக் கேவலமென்றும்) கூறியசகல கேவலங்களைப் போல் (உனக் கநுபவமாய்த்) தரிசிப்பித்துப் (பின்னர்);

பகல் இரவு தாக்காத சுத்தத்தலத்து உனை நாம் வைக்க எமக்குப் பரம் ஆக்காது நீ எ-து,—(அச்சகல கேவலங்களும் இச்சகலகேவலங்களும் ஆகிய) பகலிரவுகளும் தாக்காதுநின்ற (சுகாதீதமாகிய) சுத்தநிலையிடத்து உன்னைநாம் கொடுசென்று வைக்க எமக்குப் பரம், (ஈண்டுகூறிய இருவகைச் சகலகேவலங்களினும் உன் தற்போதத்தை முன்னிட்டு) உண்டாக்காது (எம்மை முன்னிட்டுக்) கொண்டு செல்வது உனக்குப் பரம், இங்ஙனஞ் சென்றியேல் உனக்கு அச்சுத்தநிலை வருமென்று நீ (அறிதி), எ-று.

ஆன்மபோத எதிரீட்டினும் எதிரீடற்ற விடத்தும் தோன்றும் சகல கேவலங்களைப்போல், இவை நீங்கித் தன்னை அறிந்த இடத்தில் தோன்றும் திருவருளையும் பரையையும் எதிரீடாயும் எதிரீடற்றும் தரிசித்தலின், "அங்கதுபோலாக்கி" என்றார். "எமக்குப்பரம்" என்றமையால் உனக்குப் பரம் என்றது வருவிக்கப்பட்டது. ஞாநாசாரியர் மாணாக்கனுக்கு உபதேசிக்குங்கால் தம்மைச் சிவமாகக் கூறவேண்டும். ஆகலின் எமக்குப் "பரம்" என்றார்.

கருப்ப நிலத்தைக் கறண்டுதிரி வார்க்குச்
சருக்கரையே வாயிற் சனித்தாங் - கிருத்திவிடும்
எந்தலைமை யென்பிரா னீனர்வாக் கென்னவே
தந்தலைமை மாண்ட தலம்.

(இ-ள்.) கருப்ப நிலத்தைக் கறண்டு திரிவார்க்குச் சருக்கரையே வாயில் சனித்தாங்கு இருத்திவிடும் எ-து,—

Digitized by Google

(சுவையை விரும்பிக் கரும்பறுத் தொழித்த) அக்கருப்பநிலத்தை (தமது பற்கொடு) கறண்டுகொண்டு திரிவோர்க்கு (தெய்வகதியாய்) சருக்கரை தானேவந்து அவரது வாயில் தோன்றிய முறைபோல, (வீட்டின்பத்தை விரும்பித் தற்போதத்தைக்கொண்டு சரியாதிகளைச் செய்வோர் இந்நூலிற் கூறிய முறையே சரியாதிகளை விட்டு நீங்கி, தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டுச் சென்றா எனின், இவ்வருட்போதமே அவரை அவ்வீட்டின்பத்தின்கண்) அழுத்திவிடும் (ஆகலின்;)

ஈனர் வாக்கு என்னவே எம் தலைமை என்பீரால் தம் தலைமை மாண்ட தலம் எ-து,—(ஓர் காரியம் செய்யுமிடத்து எமது வலியினாற் செய்வோமென்று கூறும்) அறிவீனர் வாக்குப்போல (அவ்வீட்டின்பத்தை) எமது போதவலியாற்சென்று அடைவோமென்று கருதிச் சொல்வீரானால் (அங்ஙனம் நீர் கருதிச்செல்வதே) உமது ஞானமேம்பாடற்ற இடம் (என்று அறிந்து நீரும் இந்நூல் நெறிமுறையே செய்வீர்), எ-று.

சரியாதிகளைவிட்டு இந்நூல்நெறிச் சென்றால் போதம் ஒழியும், இப்போதம் ஒழியில் ஆநந்தந் தானே தோன்றும், ஆகலின், "கருப்ப நிலத்தைக் கறண்டு திரிவார்க்குச், சருக்கரையே வாயிற் சனித்தாங்கு" என்றுவமை கூறினார். உந்தலைமை என்பதுதந்தலைமை என்று முன்னிலைத்தன்மை தழீஇ வந்தது. பன்னூல்களையும் விட்டு இந்நூல் நெறிச்சென்றார்க்கே இன்பங் கிடைக்கும் என்பதும் ஆம்.

போதப்புறவி என்னும் திருவெண்பாமுதல் இவ்வேழு திருவெண்பாவானும் ஆநந்த அறிவுநிலையும், துறவு நிலையும், சிவயோகநிலையும், சுத்தநிலையும், பஞ்சமலம் அறுக்கும் பஞ்சாக்கரநிலையும், முத்திநிலையும், இந்நூல்நெறிச்சென்றார்க்கே வீட்டின்பங் கிடைக்குமென்னும் முடிபுநிலையும் அறிவித்தவாறு காண்க. (௧௨)

Digitized by Google

கண்மணியினுகாய நீழல்கலந்தாற்போல்
உண்மையைநீ யுண்டென் றெனையுணர்த்தித் - துண்
[ணெனவே
பார்த்திருந்தசித்திரம்போற் பார்த்தானைநாம்பரவித்
தோத்திரஞ்செய் யாப்பிறவாச் சொல்.

இத்திருவெண்பாவின் அருத்தம் இந்நூலினை நன்குணரும் நெறியினது நல்லறிவாளர்க்குத் தானே விளங்கும் எனக் கொள்க.

சமரபுரி யாறுமுகன் றானேயென் னுள்ளத்
தமரவிருந் திந்நூற் கருத்தம்—திமிரமறக்
காட்டினான் பொல்லாக் கடையேனைச் சீர்வீட்டில்
நாட்டினான் பேரருளி னால். (௧௩)

கையினுறை பாலின்பங் காட்டுவிர லேகசிவ
மெய்யருளாம் பாதமிடு மென்பதுகை—துய்ய
இருட்கே வலசகல மெந்தைசம் பந்தன்
திருக்கோலங் கொண்ட சிறப்பு. (௧௪)

அரவுவிடந் தீர்க்கு மமணருடன் மாய்க்கும்
திரகதியி லெண்ணிலரைச் சேர்க்கும்—புரமயிலை
என்பைப்பெண் ணாக்கிவிடு மேழையே னேழ்பிறவித்
துன்பத்தை நீக்குவான் சொல். (௧௫)

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளான்மலர்த்தாட்லைமேல்வைத்துளைத்தான்—உள்ள
தழிவிலடுக் குந்தேனை யன்பொலா முண்ண [த்
ஒழிவி லொடுக்கநூ லோர்ந்து. (௧௬)

Digitized by Google

பொதுவிலுப தேசத்தி லறுபான் மூன்று
புகழ்சத்தி பதியொழிவி லிருபத் தெட்டு
கதியோகங் கருமஞ்ச ரியைக் கழற்றி
கருதுமுப்பான் பதினாறு பதினா லாகும்.
துதிவிரத்தி விளக்கந்துற வவத்தைத் தன்மை
தொகைபதின்மூன் றிருபத்தைந் தாறே ழாகும்
மதிதருவா தனைமாண்டார் தன்மைநிலை யியல்பு
வழங்குமொன் பான்பதின்மூன் றுய்வகுக்கும்பாவே

பொற்புறுநற் போரூர்ப் பொலிந்த சிதம்பரத்தே
விற்பொலியும் வேலர் வியனருளால்—தற்போ
தொழிவிலுறு மாநந்தத் துள்ளொடுங்கச் செய்த
ஒழிவிலொடுக் கத்துரைமுற் றும். (௧௮)

நிலையியல்பு-முற்றிற்று.

ஆக அதிகாரம் ௧௦-க்கு திருவெண்பா - ௨௫௩.

ஒழிவிலொடுக்கவுரை முற்றிற்று.

சு

கடவுள் துணை.

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அக்கினிதேவர்	கசக	அறிவுக்கறிவெ	கOரு
அங்கக்காரன்	உகூஎ	அறிவுபறி	உருஅ
அஞ்சனக்கண்	உஎஎ	அறிவுமறிவா	கOO
அஞ்சுமொழி	சO	அறுசமயத்	கஎஎ
அடங்கத்து	உகூகூ	அறைந்தபறை	உஉ
அடைப்புள்	உகூஎ	ஆகாயத்தே	கஉஎ
அட்டமாசித்தி	கOஎ	ஆகாயம்	கசச
அண்டமுத	அச	ஆசைமுதலா	உகூஉ
அதிபக்குவத்	எக	ஆசையிணு	உOக
அரசற்குடை	உசகூ	ஆலிங்கனத்தி	உO
அரியிரமரிந்	உஅரு	ஆணைக்கை	சஉ
அருணனுத	கூஎ	ஆணைமதப்	எO
அருளாலே	சக	இதுவென்ற	ருஉ
அருளும்	கூகக	இருட்கேவல	ககூச
அலைநோட்டஞ்	அகூ	இரும்பை	கூகூ
அவரவரைப்	உஎஅ	இம்மை	உOஅ
அழிப்பேயவ	கருச	இருளிற்சுட	கஉ
அறிந்தழுந்	உகஎ	இன்பேயறி	கசுசு
அறிந்ததுவாய்	கOச	உடம்புள்ள	கஎக
அறிந்தவெல்லா	ககூக	உடலாலுழை	ககூக
அறிந்தவிடத்	கஎகூ	உடலிருந்தெ	கஎஉ
அறிந்துபற்றி	கஅகூ	உடல்பொறி	கூஅ
அறியாமை	எஉ	உடற்குயிர்	கஅ
அறியார்	கூOக	உடற்போகம்	உஎO
அறிவடங்கா	கOஅ	உடுக்கைமற	உகூரு
அறிவாலே	கருக	உட்புறம்பா	ககூகூ
அறிவாயிரீர்	கஉக	உண்டொழித்	உசரு
அறிவித்தா	ருகூ	உதயந்தொ	உOகூ
அறிவுக்கறிவா	ககூஎ	உதித்தொடுங்	கஉரு

Digitized by Google

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
உதியாதனதா	௯௧	காலமறை	௮
உபதேசப்	௧௧௩	காலமுடன்	௨௮
உருகுபரம	௨௯0	காலனுக்கு	௬௪
உரையொடுங்	௨௪௯	கால்வந்த	௨௫௯
உலகத்தை	௧௯0	கிரியைக்கிளை	௧௪0
உளையுணர்த்	௩௩	கிரியையான்	௧௪௭
உனக்கு	௧௮0	கின்னரியை	௭௫
ஊமைமணி	௨0௪	குடையுஞ்	௧௫௨
ஊர்க்குருவி	௧௯௫	குட்டித்திரட்	௬
ஊன்றினி	௪௭	கும்பிட்டுங்	௨௩௯
எங்கும்பரி	௧௭0	குரங்கிற்	௨0௯
எட்டுருவுமை	௯௨	குரங்கை	௧௩
எந்தனூர்ந்	௧௬௨	குருட்டரிப்ப	௭
எல்லாச்சமய	௨௯௧	குறங்குகுத்தி	௧௧௫
என்னுணே	௧௭௫	குறும்பாட்டு	௨௫௫
ஒட்டாதிரு	௧௧௮	குன்றமுலி	௨௭
ஒருகுடைக்கீழ்	௯0௨	கூட்டிற்குர	௧௧௯
கடல்சிவநீரா	௯௮	கூரிருளின்	௧௮௬
கட்டியநாண்	௧௨௧	கூவித்தொழி	௫
கட்டுசெகிழ்	௨௯௪	கேடுஞ்சகமு	௨௯௩
கண்மணி	௯௨௫	சகலமுங்	௯௧௨
கயிற்றரவு	௧௭௪	சத்தாதிதத்	௬௧
கருப்பநில	௯௨௩	சத்தியமிர்	௧௫
கருமந்திரி	௨௪0	சரியாதி	௭௪
கருவிகழல	௨௫0	சரிதைகிரியை	௧0௬
கருவியுதி	௯௨௨	சரியையுடல்	௨௪
களையடுக்க	௨௯௫	சன்மார்க்க	௯
கல்லையுரு	௯௨	சாக்கிரத்திற்	௩௧
கல்வியாய்	௧௬௪	சாக்கிரத்தே	௧௧
கவிப்பயனு	௧0௯	சாத்துவிக	௨௪
கன்னனைப்	௨௯௧	சாயாபுருட	௧௩
கன்னிக்கதலி	௪௪	சாலோகமா	௨௮
காணுமறிவு	௧௫௭	சாவேபெரு	௨௮௮
காமாதிவிட்	௨௭௯	சிந்தையய	௬௩

Digitized by Google

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
..றறிவனாய்	௧௮௧	தாக்கற்ற	௧௫
..ாதீதம்	௧௪௮	தாமருந்தல்	௩௨0
..க்கில்லை	௨௮௪	தானல்லர்	௬௮
..டுப்போ	௧௨௬	தின்னிற்றிமி	௧௩௯
சுந்தரனார்	௩0௭	துக்கஞ்சுகமா	௨௩௬
சும்மாவிரு	௧௫௧	தேடப்படும்	௧௩௪
சும்மாதே	௭௬	தேட்டந்திரண்	௮௭
சுருதிகுரு	௧௯	தேனுண்டுமி	௧௧
சூலையும்	௨௬௫	தொடும்போ	௩0௪
செகஞ்சிரிக்க	௨௫௯	தொடைதட்ட	௩0௫
செத்தவரை	௨௬௯	தொழிலிறுதி	௧௪௯
செத்துப்பிற	௩௧0	நடந்ததெல்லா	௩௧௮
செல்வமிள	௨00	நடந்துங்குளி	௧௬0
ஞானக்கிரியை	௧௬௫	நடைதளர்ந்து	௨௫௪
ஞானமிலா	௨௩௭	நாடுநகர்வீடு	௧௩௭
ஞானிக்குல	௨௭௪	நாயலகை	௨0௭
தண்டுகுடை	௨௮0	நாயேறிவீழ்ந்	௬௬
தத்துவத்தா	௬௪	நித்திரைசெய்	௨௩௩
தத்துவத்தின்	௨௩௨	நினைப்புமறப்பறு	௧௮௩
தத்வத்தை	௧௩௯	நினைப்புமறப்	௫௯
தத்துவமுட்	௧௧0	நீர்க்குப்பதமு	௧௨௨
தத்துவம்	௩௧௪	நீர்க்கும்வழி	௧௪௩
தத்துவாதீத	௫௭	நெய்யினிழற்	௧௧௧
தந்திரகலை	௧௭	நெய்யுண்ட	௩0௯
தம்மாலறி	௬௫	நெருப்பில்	௧௪௬
..ம்மையருளா	௨௭௨	பஞ்சமலமு	௭௯
..நவனமென்	௨௭௧	பட்டினத்து	௧௩௬
..நுவாதி	௨0௫	பதியிறக்கக்	௩0
..ஏனறிவு	௯	பரிசித்துஞ்	௮௮
..ர்மையுமுன்	௫0	பழக்கங்கொடி	௧௨௮
..ன்னிழப்பை	௩	பழுதையைப்	௪௩
தன்னையறி	௩0	பற்றுதபோது	௧௨0
..ன்னையறியார்	௩௬	பற்றியது	௪௮
தன்னையிழப்	௧0௯	பாசங்கழன்	௧௭௯

Digitized by Google

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
பிறவாதயோ	௨௬௧	மாயாவிகாரம்	[illegible]
புளிசேர்பழமா	௧௫	மாயாபோகத்	௯[illegible]
பூசிமுடிப்பன	௬௯	மாலயனு	௨[illegible]
பூரணவாநந்த	௯௭	மாற்றுப்பல	[illegible]
பெண்ணுணவி	௨௮	மூலைமுதிராகா	௭
பெருநோவு	௨௮௨	மூலையுண்ணி	௨
பேயைப்பெ	௨௫௨	மூர்க்கனநா	௨௭
பேரின்பமுன்	௧௬௭	மெய்யாகத்	௧௮
பொய்போகப்	௧௦	மேலைச்சுகம்	[illegible]
பொய்போல	௧௦௨	மோனிகளை	௨௪
பொய்யென்ற	௧௧௯	வணங்காவுளை	௨[illegible]
பொன்மலை	௨௯௮	வதுவைச்சட	௧௫
போதப்புர	௯௧௬	வாசகத்துங்	௨[illegible]
போதம்பதை	௫௬	வாசிக்குச்சா	௧௭
போதவொழி	௨௯	வாடன்மணம்	௨௧
மகவான்கண்	௭௨	வாதிவடத்தின	௮
மணிப்பாம்	௧௩௧	வாயுமனங்	௧௧[illegible]
மண்ணுதிசத்தா	௩௯	வாலேமுகமாய்	௧௧௪
மண்ணைமலை	௧௨௪	விடாதவத்தை	௯௪
மயலற்றூர்	௮௧	விடயமுதித்	௧௬௮
மாப்பாவை	௯௪	விபரீதப்பூணு	௨௬௦
மருண்மூகர்	௨௮௯	வெண்ணையுறு	௯௪
மருந்துபிணி	௧௫௫	வெற்றவெறுமா	௫௮
மலட்டுமக	௨௫௯	வேட்டியுங்	௧௯[illegible]
மலமாயை	௫௪	வேண்டா	௧௯௨
மலையேறிப்	௫௧	வோதாகமப்	[illegible]
மறப்புநினைப்பு	௧௩௭	வேதாந்தம்	[illegible]
மறவாததம்மை	௪௬	வேர்க்குங்கண்	[illegible]
மனவாக்குக்	௧௧௭	வேர்க்கும்மி	௨[illegible]
மனையிழக்கி	௩௦௦		

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

முற்றிற்று.

Digitized by Google